# பிரம்மமுனி வைத்திய சூத்திரம்

## பாகம் II

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
**சரசுவதி மகால் நூலகம்**
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண்.: 480

# பிரம்மமுனி வைத்திய சூத்திரம்

[தேரையர் சுவாமி வைத்தியம் - 500]

**பாகம் II**

டாக்டர் **கே. மருதமுத்து**
சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர், சென்னை.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

**தஞ்சாவூர்.**

2006

விலை ரூ. 100-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | பிரம்மமுனி வைத்திய சூத்திரம் பாகம் II |
| பதிப்பாசிரியர் | : | டாக்டர் கே. மருதமுத்து |
| வெளியிடுபவர் | : | இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம்,<br>தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 480 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2006 |
| தாள் | : | TNPL 18.6 கி.கி. |
| நூல் அளவு | : | 21 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : | 284 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சு<br>சரசுவதி மகால் நூலகம் |
| புத்தகக்கட்டு | : | ராப்பர் கட்டு |
| பொருள் | : | மருத்துவம் |
| விலை | : | ரூ. 100-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

பிரம்மமுனி வைத்திய சூத்திரம் (தேரையர் சுவாமி வைத்தியம் 500) பாகம் 2 எனும் இந்நூல் சித்த வைத்திய சாத்திரத்தின் அடிப்படை நூல்கள் வரிசையில் இடம் பெற்றுள்ள ஒரு முக்கிய நூலாகும். பிரம்மமுனி என்ற சித்தரின் சித்த வைத்தியக் குறிப்புகளை பின்வந்த தேரையர் போன்ற சித்தர்கள் சுவடிகளில் தொகுத்துத் தந்ததாகக் கூறுவர். இப்பதிப்பில் தேரையர் சுவாமி வைத்தியம் 500, மூலிகை அட்சரம், வைசூரி சாத்திரம் எனும் அம்மை நோய் மருத்துவம் ஆகியவை அடங்கும். வைசூரி சாத்திரம் எனும் இப்பகுதியில் பதினொரு வகையான அம்மை நோய்கள் பற்றியும், அம்மை நோய்க்கான மருந்துகள் பற்றியும் குறிப்பிடப்பெற்றிருப்பது சிறப்பு அம்சமாகும். டாக்டர் கே. மருதமுத்து அவர்களின் இந்நூற் பதிப்புப்பணி பாராட்டுதலுக்குரியதாகும். சித்த மருத்துவர்களுக்கும், மருத்துவம் பயில்வோர்க்கும், பொது மக்களுக்கும் பயன்தரும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

இரண்டாம் பதிப்பாக தற்போது வெளிவரும் இந்நூலினைச் சிறப்பாக அச்சிடுவதற்கு உறுதுணையாகத் திகழ்ந்த நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம், வெளியீட்டு மேலாளர் முனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன் ஆகியோர்க்கும், பதிப்புத்துறை பணியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூலினை அச்சிட நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மா. வீரசண்முகமணி**, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

**தஞ்சாவூர்**
**8-3-2006**

# அணிந்துரை

பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து

நாட்டைப்பற்றிக் கூறுமிடத்து நோயில்லாமல் வாழ்வதையே முதலில் கூறுகிறார். வீடு நலம் பெற வேண்டுமானால் நோயற்ற வாழ்வு இன்றியமையாதது. அதனால்தான் மண்ணுயிர் எல்லாம் இன்புற்று வாழ நோயற்ற வாழ்வு இன்றியமையாதது.

உலக மொழிகளில் மிகப் பழமையானது தமிழ்மொழி. தமிழ் மருத்துவ மொழியும் அத்தகைத்தே. இம் மருத்துவ முறைகளைத் தோற்றுவித்தவர். சித்தர்கள் எனப்படுவர். ஆகையால் இம் மருத்துவத்திற்குச் சித்த மருத்துவம் என்று பெயர் அமையலாயிற்று. அச்சான்றோர்கள் தாம் கண்ட உண்மைகளையும், மருத்துவ நுணுக்கங்களையும், மருந்துச் சரக்கு குணம் முதலானவைகளையும் மாணவர்கள் பலரை ஏற்று ஓதியும், ஓதுவித்தும், பற்பல ஏடுகளில் பதிவு செய்தும் உலகோர்க்கு உதவி செய்து தம் மருத்துவ முறைகளைப் பரப்பி வந்தார்கள்.

காலப்போக்கில் சிறிது சிறிதாய் இயற்கையின் நிலநடுக்கம், கடற்கோள் போன்ற சீற்றம் காரணமாகவும். வெளிநாட்டார் படையெடுப்பு, சிதலை, இராமாயணம் போன்றவைகளின் தாக்குதலாலும் பல ஏடுகள், அதில் அழிந்தவை போக மிகுந்தவைகளில் சில மேலை நாட்டு நூல் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டனவெனக் கூறப்படுகின்றது இன்னும் எஞ்சியுள்ள ஏடுகளாலும், அம் மருத்துவக் கலையைத் தொன்று தொட்டுக் கையாண்டு வரும் மருத்துவர்கள் வாயிலாகவும், பல நூற்றாண்டுகளாக அதன் அடிப்படை உண்மை, தனித்தன்மை காரணமாகவும் சித்த மருத்துவம் அழியாது நிலை பெற்றிருக்கிறது.

தஞ்சையையாண்ட மராட்டிய மன்னர் சரபோஜி அவர்களின் ஆட்சிக் காலத்தில் சித்த, ஆயுர்வேத,யுனானி மருத்துவ ஏடுகள் எல்லாம் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் அரியணை ஏறின. மருத்துவப் புலவர்களின் அனுபவங்கள் ஏடுகளில் ஏறி ஏமமுற்றன.

மருத்துவம், செய்முறையில் நோய்கள் தீர்க்க, அவர் ஏற்படுத்திய தன்வந்திரி மகாலில் மறுமலர்ச்சியுற்றன. அவர் ஆட்சிக்குபின் சித்த மருத்துவம் அரசு ஆதரவிழந்து பழையபடி குடிமக்களின் ஆதரவு கொண்டு, ஆங்காங்கு இருந்து வரலாயிற்று.

ஆகவே பண்டைய சித்த மருத்துவ ஓலைச் சுவடிகளையும், கையேடுகளையும், ஒருமுறை அச்சாகிப்பின் விற்பனைக்குக் கிட்டாத புத்தகங்களை, சேகரிக்கவும், மருந்து செய்முறை அட்டவணைத் தயாரிக்கவும், தஞ்சை மகாராஜா சரபோஜி சரசுவதி மகால் நூல் நிலையம் பழைய சித்த மருத்துவ நூல்களையும், அரிய சுவடிகளையும், ஆய்ந்து கையெழுத்துப் படி, தட்டெழுத்துப்படி முதலியவைகளை எடுத்து அச்சேற்றி வெளியிட்டு வருவது சித்த மருத்துவ மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் ஓர் அரிய தொண்டாகும்.

நோய் என்பது துன்பம் எனக்கொண்டு, அத்துன்பத்தை நீக்கி, இன்பத்தை ஊட்டுவதே சித்த மருத்துவத்தில் தலையாய நோக்கமாகும். அந்நோக்கத்தை மையமாகக்கொண்டு பார்த்தால் சித்த மருத்துவத்துறை உடலைப் பற்றியனவும், மனதைப் பற்றியனவையுமாகிய நோயைப் போக்குவது மட்டுமல்லாமல் உயிரைப் பற்றியதாகிய ஆணவம், கன்மம், மாயை முதலியவற்றையும் நீக்கக் கூடிய மணி, மந்திர, மருந்து முதலியவைகள் கையாளவேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டது. சுருங்கக் கூறுவோமேயானால் அறிவு அல்லது ஆத்மா அல்லது உயிர் தன்னைத்தான் இன்புற்றிருக்க வேண்டும் என்பது அதனுடைய இயற்கைப் பண்பாகும். ஆனால், பாசம், துன்பம், நோய் ஆகியவைகளை அந்நோக்கத்தை அடைய முடியாதபடி செயல்புரிந்து கொண்டிருக்கின்றன.

நோய் என்னும் போர்க்களத்தில் மருத்துவம் என்னும் படைகொண்டு உயிரை பேரின்ப நிலையாகிய மேலான நிலையை அடையச் செய்வது சித்தர்களது உட்கருத்து.

இந்நோக்குடனே காயகல்பத்தையும், நோய் தீர்க்கும் மருந்துகளையும் சித்தர்கள் உணர்த்தினர் என்பது வெளிப்படையாகும். இம்முடிவான இலக்கிற்குப் பலதரப்பட்ட முன்னேற்றப் பாதையில் இருக்கின்றோம்.

இந்நூலில் முதல் பாகத்தில் பிரம்மமுனி வைத்திய சூத்திரம் 390ம் இரண்டாம் பாகத்தில் 1. தேரையர் சுவாமி வைத்தியம் 500 2. மூலிகை அட்சரம் 100. 3. அம்மை நோய் மருத்துவம் ஆகிய நூல்களின் பாடல்களை சீர்படுத்திப் பொருள் எழுதி ஆசிரியர் விளக்கி இருப்பது மிகவும் பாராட்டுதலுக்குரியதாகும்.

மேலும், இந்நூலில் முப்பு முறையும், முப்பின் விளக்கம், சவுக்கார எண்ணெய் நீங்குவதற்குரிய முறையையும், மேகராஜாங்க எண்ணெய், ஐந்து எண்ணெய்த் தைலம், பீனிச நோய்களுக்குத் தைலம், கபநோய்களுக்கு எண்ணெய், கஸ்தூரி எண்ணெய், பற்பம், செந்தூரம், சூரணம், லேகியம், எனத் தனித் தனித் தலைப்புகள் அமைத்து விளக்கியிருப்பதும் மருந்துக்குத் தேவையான சரக்குகளையும், செய்முறை, உட்கொள்ளும் முறை, குணமாகும் நோய் இவைகளைத் தெளிவாக விளக்கியிருப்பதும் வரவேற்கத் தக்கது.

அம்மை நோய்களின் வகைகளையும், அவை தீர்க்கும் மருந்து வகைகளையும் தெளிவாக விளக்கப் பட்டதே மக்களுக்குப் பயனுடையதாகும்.

இந்நூல் தமிழ் மக்களுக்கும், சித்த மருத்துவத் துறையில் இருப்பவர்களுக்கும், சித்த மருத்துவமுறை படிப்பவர்களுக்கும் பயன்படும் என நம்புவதுடன் இந்நூலை எழுதிய திரு டாக்டர் கே. மருதமுத்து அவர்களுக்கும் எனது நல்வாழ்த்துக்கள். இப்பணிக்கு உறுதுணையாக இருந்து நூல் வெளிவர ஊக்கமூட்டி ஆக்கப் பணி புரிந்த சரசுவதி மகால் இயக்குநர் மு. சதாசிவம், எம், ஏ., எம்.லிட்.,, அவர்களுக்கும் நூலகர் திரு அ. பஞ்சநாதன், M.A., B.Lib.Sc., அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சித்த மருத்துவக் கலைஞர்
பிரம்மஸ்ரீ **டாக்டர் மு. சௌரிராசன்**
சித்த மருத்துவ ஆராய்ச்சியாளர்
சென்னை - 600 030

சென்னை
05-06-1970

# ஆசிரியர் உரை

தமிழ் மொழியும், தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவமும் உலகில் மிகப் பழமைவாய்ந்தவை. சித்த மருத்துவம் துவக்க காலம் எப்போது என்பதனை நாம் அறுதியிட்டுக் கூறவியலாது. திருவள்ளுவர் காலம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னென ஆராய்ச்சியாளர்களின் முடிவு. அவர் தம் திருக்குறளில் "மருந்து" எனும் அதிகாரத்தில் (முதல் குறள்) "மிகினும் குறையினும் நோய் செய்யும் - நூலோர் வளி முதலாக வெண்ணிய மூன்று" எனக் கூறுவதால் அவர்தம் காலத்திற்கு முன் காலத்தைக் கணக்கிட இயலாத அளவு தொன்மை வாய்ந்தது நமது சித்த மருத்துவம் என்பதற்கு வேறு சான்று தேவையில்லை.

சிறப்பு வாய்ந்த நம் தமிழகத்தில் தோன்றிய சித்தர்களுள் "பிரம்மமுனி" என்பவர் மிக முக்கியமானவர் என்பது அவர்தம் நூல் வாயிலாக அறிய முடிகிறது. நூலின் தலைப்பில் "பிரம்மமுனி சூத்திரம் 390" என இருப்பினும் 392 பாடல்களைக் கொண்டிருக்கிறது. வாதம், வைத்தியம், முப்பு முதலானவற்றின் சிறந்த முறைகளைக் கொண்டது. நூலில் கூறப்பட்டுள்ள பற்ப, செந்தூரங்களும், இரசாயணம் முதலானவைகளும் மிகச் சிறப்பு வாய்ந்தவை என்பதனை இதனைக் கண்ணுறும் அனுபவமிக்க சித்த மருத்துவர்கள் நன்கு உணர்வர்.

நூலின் கண்ணுள்ள பாடல்களில் நான்கு அடிகள் கொண்ட பாடல்கள் மிகுந்திருப்பினும், சில பாடல்கள் ஐந்து அடிகள் கொண்டதாகவும், ஒரு சில பாடல்கள் மூன்று அடிகள் கொண்டதாகவும் அமைந்திருக்கின்றன. மருந்து செய்முறையில் தவறு ஏற்படாவண்ணம் பாடல்களை மூலப்படியில் உள்ளபடியே எழுதி அதற்குப் பொருள் எழுதியுள்ளேன்.

இந்நூலில், பிரம்மமுனி சூத்திரம் 390 - தேரையர் சுவாமி வைத்தியம் - 500, மூலிகை அட்சரம், வைசூரி சாத்திரம் என்ற நூல்கள் அடங்கியுள்ளது.

தேரையர் பெயரால் பல சிறந்த நூல்கள் உள்ளன என்பதைச் சித்த மருத்துவர்கள் நன்று அறிவர் எனினும், இந்நூலின் கண் உள்ள "தேரையர் சுவாமி வைத்தியம் - 500" சிறந்த தமிழ் நடையில் அமைந்திருப்பதுடன், அதன் கண்ணுள்ள பற்பம், செந்தூரம், லேகியம், எண்ணெய், சூரணம் , பதங்கம் முதலியன் மிகச் சிறந்தனவாகும். நூலின் தலைப்பில் 500 வென இருப்பினும் 433 பாடல்களே இது கொண்டுள்ளது.

இந்நூலில் அடங்கியுள்ள மூலிகை அட்சாரம் 67 பாடல்களைக் கொண்டுள்ளதாகவும், வைசூரி சாத்திரம் 82 பாடல்களைக் கொண்டுள்ளதாகவும் அமைந்துள்ளது. இதில், மூலிகையின் சிறப்பான தன்மைகளை அறிந்து சித்த மருத்துவர்கள் எளிதில் கையாளத் தக்க முறையில் அமைந்துள்ளது சிறப்பானதாகும். வைசூரி சாத்திரத்தைப் பொறுத்தவரை நோயின் எண்ணிக்கை அதற்குரிய குணம், மருத்துவம், இவைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்நூலைப் படித்து அனுபவ ரீதியாகப் பயன்படுத்தி இன்புறும் சித்த மருத்துவர்கள் அனைவரும் இந்நூலின் பெருமைகளை உணர்ந்து கொள்வார்கள் என்பது நிச்சயம்.

இந்நூலை வெளியிடப் பொருளுதவி புரிந்த மத்தியஅரசுக்கும், இதனைப் பதிப்பிக்க அனுமதி தந்த சரசுவதி மகால் இயக்குநர் பன்மொழிப்புலவர் திரு எம். சதாசிவம், எம். ஏ.,எம்.லிட்., அவர்களுக்கும் நூலக நிருவாக அலுவலர் திரு கே. இராமநாதன் அவர்கட்கும் வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர் திரு அ. பஞ்சநாதன், எம்.ஏ., பிலிப்.எஸ்சி., அவர்கட்கும், நூல் சிறப்புடனமைய உறுதுணையாயிருந்து உதவியும், அணிந்துரை அளித்தும் சிறப்பித்த சித்த மருத்துவக் கலைஞர் பிரம்மஸ்ரீ டாக்டர் மு. செளரிராஜன் அவர்கட்கும், நன்முறையில் அச்சிட்டுத் தந்த அபர்ணா அச்சகத்தார் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை-30
28-7-90

இங்ஙனம்
**டாக்டர் கே. மருதமுத்து**

## தேரையர் சுவாமி வைத்தியம்

# பொருளடக்கம்


| பெயர் | பக்கம் |
|---|---|
| கடவுள் வாழ்த்து | 1 |
| துருசு செந்தூரம் | 2 |
| வெள்ளி வித்தை | 3 |
| லிங்க மெழுகு | 4 |
| பொன் வித்தை | 5 |
| விலாரித் தைலம் | 5 |
| சிவனார் வேம்பு (குழித்) தைலம் | 6 |
| லிங்கக் கட்டு | 8 |
| தாளகக்கட்டு செந்தூரம் | 9 |
| தாளகக்கட்டு | 10 |
| பாஷாணக் கட்டு | 10 |
| பூவரச எண்ணெய் | 11 |
| மேக ராசாங்க எண்ணெய் | 12 |
| மேகத்துக்கு எண்ணெய் | 13 |
| சூலைக் கிரந்திக்கு எண்ணெய் | 14 |
| மேகங்களுக்கு சிலாசத்து | 15 |
| கலைக்கொம்பு பற்பம் | 16 |
| சூதக வாய்வுக்கு | 20 |
| சூதக வாய்வுக்கு லேகியம் | 21 |
| பேதிக்கு இரத்தனாதிக் குழம்பு | 23 |
| லிங்கக் குழம்பு | 24 |
| பேதி மெழுகு | 25 |
| அண்ட வாதத்துக்கு | 25 |
| கெந்தக சர்க்கரை | 27 |
| பரங்கிப்பட்டை பதங்கம் | 28 |
| போர்மாந்த சுழிமாந்த எண்ணெய் | 29 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| குலை எரிவுக்கு லேகியம் | 31 |
| காசநோய் லேகியம் | 32 |
| தேள் விடத்திற்கு மருந்து | 36 |
| பயித்தியத்துக்கு மருந்து | 36 |
| கருவங்கப் பற்பம் | 37 |
| வெள்வங்கப் பற்பம் | 38 |
| கருவங்கப் பற்பம் | 38 |
| அப்ரகச் செந்தூரம் | 41 |
| ஐந்துப்புச் செந்தூரம் | 42 |
| மஞ்சள் காமாலைக்கு மருந்து | 42 |
| காமாலைக்குக் கலிக்கம் | 46 |
| வெள் ஓக்காளத்துக்கு மருந்து | 49 |
| அந்தர வாயுவுக்கு இரத்தப் பித்தத்துக்கு | 51 |
| ஈளை சுவாசத்துக்கு | 51 |
| அஷ்டகுன்மத்துக்கும் லேகியம் | 53 |
| வயிற்றுக் கடுப்பிற்கு | 55 |
| பொருமல் பெருவயிறு சோகை பாண்டு | 60 |
| மூக்கு லேகியம் | 61 |
| முகவாதத்தைலம் | 62 |
| நீரடைப்புக்கு மருந்து | 63 |
| ஈளை இருமல் தீர புகை | 63 |
| இருமலுக்கு மருந்து | 65 |
| விப்புருதி, அரையாப்பு, கண்டமாலை இவைகட்கு பற்று | 66 |
| வாந்தி விக்கல் தீர | 66 |
| இடுப்பு வலிக்கு | 66 |
| பித்த எரிச்சல், காந்தல், கண்ணெரிவு தீர | 68 |
| மூலக்கடுப்புக்கு மருந்து | 68 |
| மூலத்துக்கு மருந்து | 69 |
| கால், கை நடுக்கத்துக்கு | 71 |
| சூடு, கடுப்பு, வெள்ளை முதலியவைகட்கு ஏரண்ட எண்ணெய் | 72 |
| எலிவிஷத்துக்கும் இருமலுக்கும் | 73 |
| ஓரண்ட வாதத்துக்கு | 74 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| அண்ட வாய்வுக்கு | 74 |
| கண் சிவப்பு நீர் பாய்ச்சலுக்குத் தைலம் | 75 |
| மேகத்துக்கும் எலும்புருக்கிக்கும் பொரிமா அவிழ்தம் | 76 |
| வல்லாதி லேகியம் | 77 |
| சிந்தாதி லேகியம் | 79 |
| மலசலம் கட்டினால் | 83 |
| முறைக் காய்ச்சலுக்கு | 84 |
| அறுவகை மூலத்திற்கும் பற்பம் | 85 |
| மூலநோய் மருந்து | 86 |
| குஷ்டத்திமிர் மூலத்திற்குச் சூரணம் | 87 |
| வெங்கார சஞ்சீவி செந்தூர மாத்திரை | 88 |
| நாகபற்பம் | 89 |
| செவிடு, செவியிரைச்சல், பீனிசத்திற்கு | 91 |
| பிரமியம் வெள்ளை உஷ்ண நோய் தீர | 92 |
| சிவதை வேர் சூரணம் | 93 |
| திருநீலகண்ட மெழுகு (பேதிக்கு) | 94 |
| பேதிக்கு லிங்க மெழுகு | 95 |
| பேதி மாத்திரை | 96 |
| கலிங்காதி மெழுகு | 97 |
| பேதிக்கு சதுர்வித மெழுகு | 98 |
| சன்னிதோடத்திற்கு கண்டாவிழ்தம் | 98 |
| கண்டாத்திரி லேகியம் | 99 |
| சிவதை வேர்ச் சூரணம் | 100 |
| அமிர்த சஞ்சீவி எண்ணெய் | 101 |
| புஷ்டிக்கு | 103 |
| வராகத்தின் நெய் | 104 |
| கடி விஷம், கரப்பான் புண்ணுக்குத் தைலம் | 105 |
| மூர்ச்சைக்கு | 106 |
| திருநீலகண்ட மெழுகு | 107 |
| அண்டவாதத்திற்கு - வேறு - குடிநீர் ஒத்தடம் | 108 |
| கிரந்திக்கு எண்ணெய் மருந்து | 109 |
| அரையாப்புக்கு எண்ணெய் - பற்று | 111 |
| வெப்பு நோய் மருந்து | 112 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| நீர்க்கட்டுக்குக் குடிநீர் | 113 |
| குளிர் சுரத்துக்குப் பூ நாகக் குடிநீர் | 114 |
| இஞ்சிச் சூரணம் | 115 |
| அச்சரத்திற்குக் குடிநீர் (கஷாயம்) | 115 |
| தாளகப் பற்பம் | 116 |
| அப்ரகச்செந்தூரம் | 117 |
| பூ நாகப் பற்பம் | 118 |
| மேகராாசாங்க எண்ணெய் | 119 |
| பீனிசத் தைலம் | 126 |
| எண்ணெய் தேய்த்துத் தலை முழுகும் நாட்களின் பயன் | 131 |
| மகாக் கோடா சூரிக் குளிகை | 132 |
| வளர்ச்சியில்லாத பெண்களுக்கு | 142 |
| குன்மத்துக்குச் சூரணம் | 143 |
| சுராங்கிசக் குளிகை | 144 |
| கண்காச மாத்திரை | 145 |
| கண்ணில் பூ விழுதலுக்கு | 146 |
| தொந்தசுரம் அஸ்திசுரக் குடிநீர் | 147 |
| தாப சுரத்துக்கு | 148 |
| நீரிழிவுக்கு | 149 |
| நீர்க்கடுப்புக்கு | 150 |
| மேகம் 21க்கும் அமிர்த லேகியம் | 151 |
| நீர் எரிச்சலுக்கு மருந்து | 151 |
| மேக கிரந்திக்கு | 152 |
| ார்பகம் பெருக்கவும் சுருங்கவும் மருந்து | 152 |
| பெருவயிறுக்கு மருந்து | 153 |
| இருமலுக்கு எண்ணெய் | 154 |
| கட்டிப் புண்களுக்கு மருந்து | 155 |
| நிலாவாரைக் கற்பம் | 156 |
| அனுபானங்கள் | 156 |
| வாதங்களுக்குத் தாளிசம் | 157 |
| நீர்க்கடுப்பு, எரிச்சல், பித்தம், கைகால் கடுப்புக்குக் கியாழம் | 159 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| பிடிப்பு வெள்ளை, கிரந்தி, அரையாப்பு குடைச்சல் இவைகட்குவெள்ளெண்ணை | 160 |
| சித்திர வல்லாதி | 161 |
| முகத்தில் வரும் வங்குக்கு மருந்து | 163 |
| காதிரைச்சல், காதில் குத்தல், முதலியவற்றிற்கு மண்டைநோய் தைலம் | 164 |
| வில்வாதித் தைலம் | 166 |
| மகாசந்தனாதித் தைலம் | 169 |
| சீழ்மூலம், இரத்தமூலம், வயிறுகடுப்பு ஆசனக்கடுப்பு, உள்காய்ச்சல், உள்மூலம் வெளிமூலம் இவைகட்கு | 172 |
| மூலநோய்ச் சூரணம் | 174 |
| மூலநோய் லேகியம் | 175 |
| பெருநோய் - குஷ்டம் - வண்டுகடிஇவைகட்கு குழித்தைலம் | 175 |
| மேல்தடவி முகர பேதியாகும் மருந்து | 176 |
| நெல்லிக்காய்த் தைலம் | 179 |
| கருங்கோழிச் சூரணம் | 179 |
| கருங்கோழிச் சூரணம் | 180 |
| திருட்டுக் கண்டுபிடிக்க | 182 |
| கண்ணில் பூப் படலத்துக்குத் தைலம் | 183 |
| கரியுப்புச் செந்தூரம் | 184 |
| குன்மத்துக்கு மருந்து | 185 |
| மதன விந்தாதி லேகியம் | 185 |
| குமரித்தைலம் | 190 |
| தாமிரச் சுத்தி | 192 |
| தாமிரப் பற்பம் | 193 |
| ஏலாதித் தைலம் | 194 |
| சயராச செந்தூரம் | 198 |
| மூலிகை அட்சரம் | 202 |

### வைசூரி சாத்திரம்

# பொருளடக்கம்


| பெயர் | பக்கம் |
|---|---|
| கடவுள் வாழ்த்து | 234 |
| வைசூரி நோயின் விளக்கம் | 234 |
| வைசூரி நோயின் வகைகள் | 234 |
| பனைமுகரி அம்மையின் குணம் | 236 |
| பாலம்மையின் குணம் | 236 |
| மொழுக்கன் அம்மையின் குணம் | 237 |
| வரகுதிரி அம்மையின் குணம் | 237 |
| கல்லுதிரி அம்மையின் குணம் | 238 |
| உப்புதிரி அம்மையின் குணம் | 238 |
| கடுகம்மையின் குணம் | 239 |
| கரும்பனை அம்மையின் குணம் | 239 |
| வெந்தய அம்மையின் குணம் | 240 |
| பாசி பயித்தம்மையின் குணம் | 240 |
| கொள்ளம்மையின் குணம் | 241 |
| விச்சிருப்பு அம்மையின் குணம் | 242 |
| நீர்க்குளுவான் அம்மையின் குணம் | 242 |
| தவளை என்ற அம்மையின் குணம் | 243 |
| வைசூரி அதிகம் ஆகாமல் தடுக்க | 244 |
| இரத்தக் கடுப்பு நிற்க | 251 |
| அதிசாரங் கட்ட | 252 |

| | |
|---|---|
| மன்னைக் கட்டுக்கு | 253 |
| வைசூரி சுரம் கண்டால் | 253 |
| நேத்திர ஒத்தடம் | 256 |
| வாயில் இரத்தங் கண்டால் | 257 |
| சூலைக் கட்டு | 259 |
| புண் ஆறுவதற்கு | 259 |
| சுரத்துக்குக் கியாழம் | 263 |
| மேதிக்கிடாரி சாணி | 264 |
| பத்தியம் | 265 |
| அவபத்தியம் | 266 |
| விழியில் பூ விழுந்தால் | 267 |

ஹரிஓம் நன்றாகக் குருவாழ்க

குருவே துணை

# தேரையர் சுவாமி வைத்தியம் - 500

1. ஆதியாம் சிவசக்திப் புதல்வர் போற்றி
அரிஅயன் தேடறிய பராபரனே போற்றி
சோதியாம் சரஸ்வதிதன் பாதம் போற்றி
சொற்பெரிய பொதிகைமுனி பாதம் போற்றி
வாதியாஞ் சித்தாதிப் பாதம் போற்றி
மகத்தான நாதாக்கள் பாதம் போற்றி
ஓதியான் வயித்தியநூல் ஐந்து நூறு
உத்தமனே தேரையன் சொல்லுறுதி பாரே.

(இ-ள்.) முதற் கடவுள் கணபதியைப் போற்றுவாம். அரி, அயன் தேடற்கு அரிய பராபரனைப் போற்றுவாம். சரஸ்வதி, அகத்தியர், சித்தர்கள், நவநாதர்கள் முதலியவர் பாதம் போற்றி தேரையரின் வைத்திய நூல் ஐந்நூறு தன்னை உரைக்கின்றேன்.

2. பாரப்பா செந்தூரம் குளிகை வேது
பற்பஞ்சூரணம் கிருதத்தயில மெண்ணை
நேரப்பா திராவகம் நெய்கற்கம் கிருதம்
நேத்திரமே அஞ்சனமை மருந்து கற்பங்
கோரப்பாக் குழித்தைலம் புகையாக் கிராணங்
கூழ்பாண்டந் துவரெண்ணை குடிநீர்ப் பிட்டு
சேரப்பா மெழுகுகண் டாவிழ்தம் பற்று
செவித்தைலம் மூலிகையுமந் தொழிந்து போற்றே.

(இ-ள்.) செந்துரமா, குளிகை, வேது, பற்பம், சூரணம், கிருதம், தயிலம், எண்ணெய், திராவகம், நெய், கற்கம், கிருதம், நேத்திரமை, அஞ்சனம் மை, கற்ப மருந்து, குழித்தைலம், புகை ஆக்கிராணம், கூழ்பாண்டம் முதலிய லேகியம், துவரெண்ணை, குடிநீர், பிட்டு மெழுகு, கண்டாவிழ்தம், பற்று, காதுக்குத் தைலம், மூலிகையும்.

3. போற்றிடாய் நசியம்ரசாயனம் கியாழம் பூச்சு
பதங்கள் கலிக்கம் தூவாலை பாலை
கார்த்திடாய் குழம்புலேகியம் கபாடங் கட்டு
கட்டுமாத்திரை காளிபச்சிலை காண வித்தை
பார்த்திடாய் தோஷாமிர்தம் மென்று வாய்ந்து
பாங்கான வயித்தியரே பிசகா தொன்றும்
தோற்றிடாய் சிவசக்தி பூசை தன்னை
சுக்கிரவார மறவாமற்றான் செய்யே.

(இ-ள்.) நசியம், இரசாயணம், கியாழம், பூச்சி, பதங்கம், கலிக்கம், துவாலை, சிகித்சை (வாத நோய்க்கு சூடு பறக்கத் தேய்க்குமோர் சிகிச்சை) பாலை (குழந்தைகட்கு உண்டாகும் தோஷம்) குழம்பு, லேகியம், கபாடங்கட்கு (பேதியைக் கட்டுவதற்கான மாத்திரை) கட்டு மாத்திரை, காளி பச்சிலைக்கான வித்தை (மூலிகைகளைக் கொண்டு), செம்பிலிருந்து காரிம்பு நீக்கும் வகார வித்தை, தோஷாமிர்தம் முப்பிணியாகிய ஜன்னிக்கு அமிர்தம் போன்ற மருந்துகள் என முறை தவறாது ஆராய்ந்து சொல்லப்பட்டவைகளை சிவசக்தி பூசை செய்து சுக்கிரவாரத்தில் தவறாமல் செய்யவும்.

## துருசு செந்தூரம்

4. செய்யப்பா துருசுகளஞ்சு எடைதான் ரெண்டில்
திறமாக உத்தாமணிப் பாலூட்டி ஆட்டி
வையப்பா மூழ்கியபின் வளமே கண்டு
பதறாதே கதிரொளியில் ஊறப் போட்டு
மெய்யப்பா அவ்விலைச்சாற்றா லாட்டி வில்லை
மேலுலர்த்தி யிலையாட்டிக் குகையே பண்ணி
வையப்பா குகையுள்ளே மருந்தை யிட்டே
மண்சீலை செய்துலர்த்திப் புடத்தைப் போடே.

(இ-ள்.) இரண்டு கழஞ்சு துருசு எடுத்து உத்தாமணிப் பாலில் ஊறவைத்து ஆட்டி மீண்டும் பாலில் மூழ்கவிட்டு சூரிய வெளிச்சத்தில் உலரவைத்து மேற்கண்ட உத்தாமணிச் சாற்றாலாட்டி

வில்லை செய்து உலர்த்திய பின் உத்தாமணியிலையால் குகை செய்து அதனுள் வில்லையை வைத்து சீலை மண் செய்து உலர்த்திக் குக்குடப் புடத்தில் போட்டெடுக்க

5. போட்டடாக் குக்குடத்திற் செந்தூரிக்கும்
புகழான கொக்குமந்தாரைப் பூச் சாற்றால்
நாட்டடா செம்புவிராக னெடையும் பத்து
நலமாக ஏழுவிசைக் காய்ச்சித் தோய்த்து
ஆட்டடாக் குகைக்குள்ளே வைத்துருகும் போதில்
அப்பனே கழஞ்சி எடைச் செந்தூரம் போடு
தேட்டடா வுருகுவெள்ளி கண்விட்டாடும்
தெளிவாக செய்திடில்ஐந் தநுவாகும் மாத்தே.

(இ-ள்.) செந்தூரமாகும் செம்பு ஒரு வராகனிடை எடுத்து கொக்கு மந்தாரைப் பூச்சாற்றில் ஏழு தடவைக் காய்ச்சித் தோய்த்து எடுத்துக் குகையில் வைத்து உருகும் போது கழஞ்சி எடை மேற்சொன்ன துருசு செந்தூரம் போட்டு உருக்க வெள்ளியது கண்விட்டாடும் கவனமுடன் செய்ய ஐந்து மாற்றாகும்.

## வெள்ளி வித்தை

6. மாத்திது வாதமுளை வகையோ சத்தி
வடிவான துருசு கழஞ்செடை தான் ரெண்டில்
போத்திது சீலைசமம் நிம்ப பழஞ்சாற்றாலாட்டி
பொறுத்திடவே கவசந்தீ வெதுப்பத்தூளாம்
மேத்திது நல்லெண்ணை விட்டு வைத்துவாய்
இருநாழிக் குகையுள்வைத் தெரிசெய்த பால்
நீத்திது வாணிவடி வாகத்தானே
நிலையான துருசினிட குருவைப்பாரே.

(இ-ள்.) வாத முறை வகையாவது - சத்தி வடிவான துருசு கழஞ்சு இரண்டில் மனோசிலை சமம் சேர்த்து நிம்ப பழச் சாற்றாலாட்டி பொறுத்தமாகக் கவசம் செய்து சிறு தீயில் வெதுப்பி எடுக்கத் தூளாகும். அதனைக் குகையில் வைத்து நல்லெண்ணைத் தீயில் இரண்டு நாழிகை எரித்தெடுக்க நீறும். இதுவே துருசு குருவாகும்.

## லிங்க மெழுகு

7. குருவென்ற துருசுகழஞ் செடைதான் ஒன்றுக்
கொடிகள்ளி பாலுழக்கிலீ வாய் நீராம்
திருவென்ற லிங்கமெடை பலஞ் செந்தீயில்
சிறுவோட்டி லப்பிரேகமிட் டதன்மேல் வைத்து
உருவென்ற நிறமழியா தைந்தாறு நாழி
ஓகோகோ சுறுக்கதுபார் மெழுகே யாகும்
பெருதென்ற தங்கமது விராக னிடை கூட்டு
பேசாதே மெய்யுமிதை வெளி விள்ளாதே.

(இ-ள்.) துருசு குரு ஒரு கழஞ்சியெடை எடுத்து ஒரு உழக்கு கொடிக்கள்ளிப்பாலில் போட நீராகும். ஒரு சிறு ஓட்டில் அப்ரகத் தகட்டை வைத்து அதன்மேல் 35 கிராம் லிங்கத்தை வைத்து சிறுதீயில் எரித்து மேல்கண்ட நீரால் சுறுக்குக் கொடுத்து வரவும். இவ்வாறு ஐந்து அல்லது ஆறு நாழிகை சுறுக்குக் கொடுத்து வர நிறம் குறையாது மெழுகாகும். மெழுகுடன் ஒரு விராகனிடை தங்கத்தைக் கூட்டவும்.

## பொன் வித்தை

8. விள்ளாதே செம்பினெடை யிரு மூன்றொன்று
மேலான வெள்ளியிடை ஒரு மூன்றாக
தள்ளாதே குகையுள்வைத் தணலிட்டூது
சாதகமா யுருகியது கண் விட்டாடும்
துள்ளாதே மெழுகுவிராக னெடையே போடு
சோதெரிந் திடுமாத்தா றாகுமாசை
கொள்ளாதே ஆயிபதம் பூசை பண்ணக்
கூறுகிறேன் குருமொழிப் பொய்யாது மெய்யே.

(இ-ள்.) செம்பு ஆறு விராகனெடை, வெள்ளி மூன்று விராகனெடை ஒரு குகையுள் வைத்து தணலிலிட்டு ஊதி உருகி கண்விட்டாடும் பொழுது மேற்சொன்ன மெழுகு ஒரு விராகன் எடை போட ஆறு மாற்றுடைய தங்கமாக ஆகும். ஆசை கொள்ளாது

சக்தியை பூசை செய்யும். இது பொய்யில்லாத குருமொழியாகும் என்பதை அறிந்து கொள்.

## விலாரித் தயிலம்

9. மெய்யனைக்குந் திமிர்வாதம் வயிறூதுங் கால்
வெடிப்புண்ணீர் வடிமேகம் குஷ்டந் தன்னைப்
பையகத்து விலாரிஎடை பலம்நூற் றெட்டு
பருதிப யிரண்டங்குலத் தோடொக்கக்
கொய்துவைத்து கெந்திஎடை பலம்நூற் றெட்டு
குன்றியின்மேல் லோடகத்திப் பலமுன் னான்கு
மையகத்தும் வல்லத்திப்பிலி முன் னான்கு
மடலிகருந் துவரைவிரை பலமுன் னான்கே.

(இ-ள்.) திமிர்வாதம், வயிறூதல், கால் வெடிப்புப் புண்ணில் நீர் வடிதல், மேகம், குஷ்டம் இவைகள் தீர

விலாரி இலை 3.780 கிராம் எடுத்து வெயிலில் உலர்த்தி இரண்டங்குல உயர அளவுக்கு நான்கு துளையிட்ட ஒரு பானையில் போட்டு அதன் மீது அந்த எடைக்கு கெந்தகத்தை வைத்து, அதனுடன் மேல் தோல் நீக்கிய குன்றிப் பருப்பு 420 கிராம் வைத்து, அரிசித் திப்பிலி பன்னிரண்டு பலம், மலைத் துவரைப் பருப்பு 420 கிராம் இவைகளைவைத்து,

10. நான்கிடு விலாரியான் மேல் கவசமாய்ச் செய்
நாலுதுளைப் பாண்டத்துள் வைத்தோடு மூடி
தாங்கிடு தூமந்தீயிடுக் கல்சமமே வைத்து
தணலோர் திரிபுறமண் சீலை செய்து
வோங்கிடு வீர்க்கெசபுடமா யொன்றே போடு
முறவாகத் தைந்தாறு கடிகை மட்டும்
வாங்கிடு வீரைங்கரனைப் பூசை செய்து
மகத்தான மேகக்குழித் தயில மாமே.

(இ-ள்.) மேலும் விலாரியிலையை கவசம் போல் வைத்து, ஓடு மூடி சீலை மண் செய்து, குழித்தைல முறைப்படி கீழே கலசம்

வைத்துச் சுற்றி சீலை மண் செய்து கெசபுடம் போட்டு ஐந்து அல்லது 6 நாழிகை அளவு சென்று எடுத்து குழித்தைலத்தை ஐங்கரனுக்குப் பூசை செய்து

11. ஆமென்ற தயிலமெடை கழஞ்சி தொன்று
அரிசிபொரி மாவைச்சம னாகக் கூட்டி
தேமென்ற லேகியமிதா கும்வா னோர்
தேவரிஷி சித்தருக்குத் தெரிசித் தாடும்
ஓமென்ற அட்சரத்தைத் தியானஞ் செய்து
வோரிரண்டு போதிருமண்ட லமே கொண்டால்
நாமென்ற திமிர்வாதம் குஷ்டந் தீரும்
நங்கையிடப் பாய்மிதிக்கப் போகாதன்றே.

(இ-ள்.) ஒரு கழஞ்சிஎடை தைலமும், அதற்குச் சம எடை அரிசிப் பொரிமாவு கூட்டி லேகியம் போல் பிசைந்து தினம் இரண்டுவேளை மண்டலம் கொள்ள திமிர்வாதம், குஷ்டம் முதலியன தீரும். பெண் சேர்க்கை கூடாது.

## சிவனார் வேம்பு (குழித்) தைலம்

12. அன்று இருபத்தொருமேகத் தால் வந்த
அழிகுட்டம் வெண்கறுப்பு வெடிப் புண்ணூறல்
லென்றுஞ் சிவனார்வேம்பு பலம்நூற் றெட்டு
ஓரங்குல் மாகக்கொய்து கெந்திபலம் ரெண்டு
கண்டுங் கறுங்குன்றி பருப்பல மூவைந்து
கறும்பொன் னாவாரைவிரைப் பல மூவைந்து
வண்டு மகிழ்வல்லாதிப் பல மூவைந்து
மடவி கறுந்துவரை விரைபல மூவைந்தே.

(இ-ள்.) இருபத்தொரு மேகம், அழிகுஷ்டம் வெள்ளை, கருப்பு புண் ஊரல் முதலியவைகள் நீங்க, ஓரங்குலமாகக் கொய்து எடுத்த சிவனார் வேம்பு 3.780 கிராம் நெல்லிக்காய் கெந்தகம் 70 கிராம் கருங்குன்றிப் பருப்பு 525 கிராம் கரும் பொன்னாவாரை விரை 525 கிராம் சேராங் கொட்டை 525 கிராம், கருந்துவரை விரை 525 கிராம்

13. ஐந்திதுவை யிடிவேம்புங் கவமாய்ச் செய்
தாறுதுளைப் பாண்டத்துள் வைத்தோடு மூடி
திந்தியிடு வந்தாக்கடியிற் கலசம் வைத்து
தணலேரு திரிபுறமண் சீலை செய்து
வந்தனை செய்கெசபுடமாய் ஒன்றே போடு
மறைந்து நாழிகையு மணு கொண்ணாது
செந்தீயது வாரிடலைங் கரனைப் போற்றி
சிவசிவாப் பூசைசெய்து தயிலம் பாரே.

(இ-ள்.) இவற்றை ஐந்தையும், இடித்து, ஆறு துளை செய்த பாண்டத்துள் சிவனார் வேம்பு மேலும் கீழும் கவசமாகும் படி வைத்து ஓடு முடி சீலை மண் செய்து, துளையிட்ட அடிப் பாகத்தில் ஒரு கலசம் வைத்து தணல் ஏறாது. சுற்றிலும் சீலை மண் கவசம் செய்து (குழித்தைல முறைப்படி) கெச புடமிட்டு 30 நாழிகையளவு சென்று எடுத்து ஐங்கரனுக்குப் பூசை செய்து தயிலத்தை எடுத்து,

14. பாமென்ற தயிலமெடை கழஞ்ச தொன்றுப்
பழவரிசிப் பொரிமாவைச் சமனாய்க் கூட்டி
சேரென்ற லேகிய!மிதாகுந் தேவர்
சித்தருக்குஞ் செயமான சிவனார் வேம்பு
யீரென்ற தந்தத்தோ டுறவாகா மல்
இருபோது மண்டலம் ரெண்டிதுவே கொண்டால்
பேரென்ற மேகமது சிதறிப் போகும்
பெண்மயக்கம் தானகற்றிய விழ்தம் பத்தே.

(இ-ள்.) ஒரு கழஞ்சு எடை தயிலத்துடன் சமஎடை பழைய அரிசிப் பொரிமாவு கூட்டி லேகியம் போல் பிசைந்து பல்லில் படாமல் தினம் இரண்டு வேளை வீதம் இரண்டு மண்டலம் கொண்டால் மேக வியாதி யாவும் அகன்று போகும். பெண் மயக்கத்தை நீக்கி மருந்து கொள்ளவும்.

## லிங்கக் கட்டு

15. பத்துநூணாத் தூரிடதோல் ரசமீ ராழி
பழச்சாரா ழாக்குமுலைப் பாலா ழாக்கு
ஏத்துகுரு பூநீறுகழஞ் செடைதான் போடு
யேத்தியெடு செம்பருத்தம் பூவே ழெட்டு
வைத்துவிடு லிங்கமெடைப் பலமோ ரெண்டில்
மாறாமல் சுருக்கிடைந்தார் கடிகைக் கட்டும்
மத்துவிழும் சன்னிசுரந் தோஷந் தீரும்
மனுபான முலைப்பால்விட் டிழைத்து வாங்கே.

(இ-ள்.) நுணா வேர்ப்பட்டை தோல் பிழிந்த ரசம் இரண்டு ஆழாக்கு எலுமிச்சம் பழச்சாறு ஒரு ஆழாக்கு, முலைப் பால் ஒரு ஆழாக்கு, குரு பூநீறு ஒரு கழஞ்சி எடை போட்டு கலக்கி வைத்துக் கொண்டு, ஏழெட்டு செம்பருத்தம் பூவின் மேல் 70 கிராம் லிங்கத்தை வைத்து, சுருக்கக் கொடுக்கவும். லிங்கம் கட்டும். கட்டிய லிங்கத்தை முலைப்பால் விட்டு இழைத்துக் கொடுக்க சன்னி, சுர தோஷம் தீரும்.

## லிங்கக் கட்டு

16. வாங்கப்பா லிங்கமெடைப் பலமோ ரெண்டு
வன்னியிலோ டப்பிரகமிட் டதன்மேல் வைத்து
பாங்கப்பா மேல்வடித்தத் தயிலந் தன்னை
பதறாதே சுருக்கிடைந்தார் கடிகை கட்டும்
மோங்கப்பா குகையுள்வைத் தணலிட்டூது
ஓடாது கம்பியதே யொளி குன்றாது
வாங்கப்பா சன்னிசுரந் தோஷம் தீரு
மானுபானம் முலைப்பால்விட் டிழைத்துப் பாரே.

(இ-ள்.) வன்னி விரகின் மீதில் அப்ரகத் தகட்டை வைத்து அதன் மீது 70 கிராம் இலிங்கத்தை வைத்து மேல் சொன்ன சிவனார் வேம்பு குழித் தைலத்தைக் கொண்டு சுருக்குக் கொடுக்க லிங்கம் கட்டும். கட்டிய லிங்கத்தைக் குகையுள் வைத்துத் தணலிட்டு ஊத

ஒளி குன்றாது. ஓடாது கட்டும். இதனை முலைப்பால் விட்டு இழைத்துக் கொடுக்க சன்னி, சுர தோஷம் தீரும்.

## தாளகக் கட்டு செந்தூரம்

17. பாரடா நெல்கதிரினா ரிசி நாழி
பசைகாண வரைத்துவழித் தெடுத்துக் கேளு
சேரடா தாளகத்துக் கவசஞ் செய்து
தீமூட்டிச் சட்டிவைத்து அப்பதுவே விட்டு
வேரடா புதுவைக்கல் லதனுள் வைத்து
மீதிலிடு மூடியெரி கடிகை ரெண்டு
ஆரடா வெந்திறக்கு மெடுக்கு முன்னே
கேள்மூன்று வாளிபுட மடுத்துப் போட்டே.

(இ-ள்.) நெற்கதிரின் புது அரிசியை நாழியளவு எடுத்து பசைகாண நன்கு அரைத்து வழித்து எடுத்து தாளகத்துக்குக் கவசம் செய்து ஒரு சட்டியில் தண்ணீர் வைத்து அதன் நடுவில் புதிய செங்கல் ஒன்றை வைத்து அதன் கவசித்த தாளகத்தை வைத்து மேல் மூடி இரண்டு நாழிகை எரித்து வெந்து இறக்கி எடுக்குமுன் மூன்று தடவை முன்போல் புடமடுத்துப் போட்டு.

18. போட்டிடவே கருகவெளுத்தி ருகிக் கட்டுள்
புகைகாணும் போதுகதி ராலே குத்தி
யாட்டி எடுத்தாறியபின் கவசம் நீக்கி
அப்பனே உருகிமணி வெளிராம் பாரு
கூட்டிடு தேன்திரிகடுகுக் கியாழ மிஞ்சிக்
கோதை முலைப்பாலிழைத் திருபோதுங் கொள்
ளோட்டுமே சன்னிசுர மிருமல் காசம்
உத்தமனே பத்தியநோ யறிந்து காட்டே.

(இ-ள்.) கருகி வெளுத்திறுகிக் கட்டுமுன் புகை காணும் போது ஒரு கதிரால் குத்தி எடுத்து ஆறிய பின் கவசத்தை நீக்கிப் பார்க்க உருகிய வெள்ளை நிறம் பொருந்திய மணி போல் இருக்கும். அதனை தேன், திரிகடுகுக் கஷாயம், இஞ்சி, முலைப்பால்

இவைகளில் இழைத்துக் கொடுக்க சன்னி சுரம், இருமல், காசம் முதலிய நோய்கள் நீங்கும் என்பதாம்.

**தாளகக் கட்டு**

19. காட்டடா அப்பிரகத்திற் பழச்சாறு விட்டு
கடிகையுட மெட்டாட்டிடவே மயனம் போலா
மாட்டடா தாளகத்துக் கவசம் செய்து
ஆதித்தன் முன்னுலர்த்தி சிறுபாண் டத்துள்
நாட்டடா மணலைசொரிந் ததனுள் வைத்து
நாடியெரி கடிகையுமேழேழ்சி சிந்தூரிக்கும்
சூட்டடா இஞ்சிரசத் தனுபானங் கொள்
சுரஞ்சன்னி இருமலறுந் தோடும் பாரே.

(இ-ள்.) அப்ரகத்தை எலுமிச்சம்பழச்சாறு விட்டு எட்டு நாழிகை நன்கு மயனம் போல் அரைத்து தாளகத்திற்குக் கவசம் செய்து, வெய்யிலில் உலர்த்தி, சிறிய பாண்டத்துள் மணலைக் கொட்டி அதில் கவசம் செய்த தாளகத்தைப் பொதித்து ஏழு நாழிகை எரித்து எடுத்துப் பார்க்க செந்தூரித்திருக்கும். அதனை இஞ்சி, ரசத்துடன் அனுபானமாகக் கொள்ளவும். சுரம், சன்னி, இருமல் நீங்கும்.

**பாஷாணக் கட்டு -**

20. பார்துய்யப் பாஷாணம் பல மொன்றில்
பரிந்திரு சாமஞ்சுருக்கு வராகத்தின் நெய்
சோபையை வந்திரச்சிக் கவசம் போடு
சேர்த்திடி ருச்சட்டியில் மண்சீலை செய்து
மார்சேர் மய்யக்கொக்குபுட மணிபோற் கட்டும்
மைந்தனே மிளகுக்கிஷா யத்திற் கொண்டால்
வேல்செய்ய சன்னிசுர தோஷந் தீரும்
மீறாது பத்தியந்தான் தெரிந்து கூட்டே.

(இ-ள்.) வெள்ளைப் பாஷாணம் பலம் ஒன்று எடுத்து, பன்றி நெய்யில் இரண்டு சாமம் சுருக்குக் கொடுத்து, மீண்டும் அதனைப்

பன்றி இறைச்சியை அரைத்துச் சுருக்குக் கொடுத்த பாஷாணத்திற்குக் கவசம் செய்து சட்டியில் வைத்து, மேல் சட்டி மூடி சீலை மண் செய்து கொக்குப் புடமிட (குக்குடப் புடம்) மணியைப் போற் கட்டும். இதனை மிளகுக் குடிநீரில் இழைத்துக் கொடுக்க சன்னி சுரதோஷங்கள் தீரும்.

## பூவரச எண்ணெய்

21. கூட்டிடு பூவரதம்வேர் பல மோரைந்து
கொள்ள கருஞ்சீரகமும் பல மீரைந்து
நாட்டிடு வெள்ளுள்ளியினிடை பல மீரைந்து
நல்லதொரு பேருரையாள் பல மீரைந்து
மாட்டிடு முத்தெண்ணை படிமிரு மூன்றிட்டு
மாறாமல் கதிர்ப்புட மண்டல மூறியபின்
மூண்டிடு தூபங்கொடுத்துப் பல மொன்றாக
மூவைந்து தினமருந்த முறியும் வாய்வே.

(இ-ள்.) பூவரசம் வேர் 175 கிராம், கருஞ்சீரகம் 350 கிராம், வெள்ளைப்பூண்டு 350 கிராம், வசம்பு 350 கிராம் இவைகளை ஆறுபடி விளக்கெண்ணையில் சிதைத்துப் போட்டு சூரியபுடத்தில் ஒரு மண்டலம் ஊற வைத்துப் பின் எடுத்து தூப தீபங் கொடுத்து 35 கிராம் வீதம் பதினைந்து தினங்கள் (தினம் காலையில் மட்டும்) சாப்பிட்டு வர சகல வாய்வும் தீரும்.

22. வாய்வதிலும் தோள்வாதம் மேகச் சூலை
வாய்வாதம் பல்வாதம் தொண்டைவாதம்
மோய்வதிலுங் குடல்வாதமிடை வாதந்தான்
னுருளையொடுத் துடைவாதஞ் சந்து வாதந்
தேய்வதிலும் குதிவாத முழங்கால் வாதம்
சீரான தனாறாயினங் கெண்டை வாதம்
நோய்வதிலும் சர்வாங்க வாதந் தீரும்
நூகறாதே புளிபுகை சொல்லறிந்து பாரே.

(இ-ள்.) தோள் வாதம், மேகசூலை, வாய் வாதம், பல் வாதம், தொண்டை வாதம், குடல் வாதம், இடை வாதம், உருளை வாதம்,

தொடை வாதம், சந்து வாதம், குதிவாதம், முழங்கால் வாதம், கெண்டை வாதம், சர்வாங்க வாதமும் தீரும். புளி, புகையிலை நீக்கவும்.

**மேக ராசாங்க எண்ணை**

23. பாரப்பா ஊழலாத்திச் சாறீராழிப்
பாங்கான சங்கங்குப்பி சாறீராழி
வேரப்பா ஈருள்ளிச் சாறீராழி
வேசரியின் பச்சைலத்திச் சாறீராழி
வாரப்பா கழற்கொட்டிச் சாறீராழி
வாங்குநுனா வின்கொழுந்துச் சாறீராழி
சேரப்பா நீலியிலைச் சாறீராழி
சேர்முடக் கொத்தான் சாறீராழி கூட்டே..

(இ-ள்.) ஊழலாத்திச் (மரப்பட்டை) சாறு இரண்டு படி சங்கங்குப்பிச் சாறு இரண்டு படி. ஈருள்ளிச்சாறு இரண்டு படி, கழுதையின் பச்சைலத்திச் சாறு இரண்டு படி. கழற்கொட்டியின் சாறு இரண்டு படி நுணாக் கொழுந்தின் சாறு இரண்டு படி, அவுரிச்சாறு இரண்டு படி. முடக்கொற்றான் சாறு இரண்டு படி இவைகளை ஒன்றாகக் கூட்டி

குறிப்பு - ஈறுள்ளி - வெங்காயம்

24. கூட்டடா வெள்ளுள்ளி பலமோ ரைந்து
கொள்ளி கருஞ்சீரகமும் பலமோ ரைந்து
ஆட்டடா மணக்கெண்ணெய் படிநால் விட்டு
அடுப்பில்வைத் தெடுமெழுகு பதமே பார்த்துக்
காட்டடா ஓர் மண்டலம் பலமோ கொண்டால்
கருமேகந் திமிர்பெருநோய் குட்டந் தீரும்
முட்டிடாய் பொரிமிளகு நீரோடன்னம்
உத்தமனே புளிபுகையு மொழியாய்க் கண்ணே.

(இ-ள்.) வெள்ளைப் பூண்டு 175 கிராம், கருஞ்சீரகம் 175 கிராம் இவைகளை நன்கு அரைத்து நான்கு படி ஆமணக்கெண்ணையில்

போட்டு மேல்கண்ட சாறு வகைகளுடன் ஒன்றாகக் கலந்து அடுப்பில் வைத்து எரித்து மெழுகு பதத்தில் இறக்கி வடித்து எடுத்துக் கொள்க. தினம் ஒரு பலம் எண்ணெய் வீதம் ஒரு மண்டலம் சாப்பிட்டு வர கரு மேகம், திமிர் பெரு நோயாகிய குஷ்டம் தீரும். மிளகு ரசம் சாதம் கொள்ளவும். புளி, புகையிலைத் தவிர்க்கவும்.

## மேகத்துக்கு எண்ணெய்

25. கண்ணிலிப் பொற்றிலையுங் குமரிச்சார் வேண்
காக்கையொடு இந்நான்கு மூலத்தை வாங்கி
யுண்ணீலி வெவ்வேறா யிடிசெய் தேதூ
ளுத்தமனே வகைக்கொன்று பல மீரைந்து
பெண்ணிலி வெள்ளுள்ளி பல மீரைந்து
பேரான நல்மிளகு பல மீரைந்து
மண்ணிலி குமரிச்சார் ரசம் விட்டாட்டி
மயனம்போ லானவுடன் வில்லை தட்டே.

(இ-ள்.) பொன்னாங் கண்ணி, பொற்றிலைக் கரிப்பான், குமரி வெள்ளைக் காக்கிணா. இந்த நான்கின் வேரைத் தனித் தனியாக உலர்த்தி இடித்து எடுத்துத் தூள் வகையொன்றுக்கு 350 கிராம் வெள்ளைப்பூண்டு 350 கிராம், மிளகு 350 கிராம் இவைகளை குமரிச் சாறு விட்டாட்டி மயனம் போலானவுடன்

26. தள்ளப்பா கடலைபுளி வித்துபோலுந் தான்
சதிரான கதிரொளியி லுலரச் செய்து
கட்டப்பா காடியிலாமணக் கெண்ணை தானும்
காய்ந்த தொருவில்லை எடுத்ததிலே போட்டு
விட்டப்பா கதிர்புடமண் டலமே வைத்து
மேகமரை யாப்புசிலாச் சூலைக்கும்
மட்டப்பா எண்ணைபல் வில்லை ரெண்டு
வாங்கு புளிப்பாகாது உகந்து கேளே.

(இ-ள்.) கடலை, புளியங்கொட்டை அளவு சிறு பில்லைகளாகச் செய்து கதிரொளியில் உலரவைத்து, சுத்தமான

விளக்கெண்ணெயில் உலர்ந்த பில்லைகளைப் போட்டு. சூரிய புடத்தில் ஒரு மண்டலம் வைத்து எடுத்து எண்ணெய் ஒரு பலத்துடன் இரண்டு வில்லையும் சேர்த்துக் கொடுக்க மேகம், அரையாப்பு, சூலை நோய் நீங்கும். புளிப்புச் சுவை ஆகாது.

## சூலைக் கிரந்திக்கு எண்ணை

27. கேளு நுணாவின் கொழுந்துச் சாறீராழி
கெடியாம் சித்தாமணக் கெண்ணை யீராழி
வேளுநங் கருஞ்சீரகமுங் கழஞ் சோரைந்து
மீறியதோர் பேருரையான் கழஞ் சோரைந்து
தாளுமிது ரேவல்சின்னி கழஞ் சோரைந்து
தட்டிப்போட் டெரிமெழுகு பதத்தில் வாங்கி
நாளுமீ வோர்பலமேழ் தினமே கொண்டால்
நாடுமே சூலைக்கிரந்திப் புண்கள் போமே.

(இ-ள்.) நுணாத் கொழுந்தின் சாறு இரண்டு நாழி, சித்தாமணக் கெண்ணெயில் இரண்டு நாழி, கருஞ்சீரகம் 25 கிராம் வசம்பு 25 கிராம் ரேவல் சின்னிக்கிழங்கு 25 கிராம் இவைகளை தட்டிப்போட்டு எரித்து மெழுகு பதத்தில் வடித்து எடுத்து தினம் 35 கிராம் எண்ணை வீதம் ஏழுதினங்கள் கொள்ள சூலை, கிரந்தி, புண்கள் தீரும்.

28. போமடா சிற்றரத்தை மோடி ஓமம்
புகட்டி மிளகு திப்பிலி போரில்லான் சுக்கு
நேமடா கருஞ்சீரக மதுர முள்ளி
நிறையோர் வகையொன்று பலமே தூக்கு
நாமடா முசுமுசுக்கைச்சாறு வெள்ளாட்டின் பால்
நற்பச்சை மஞ்சளின்சார் வகையோர் நாழி
யாமடா எள்ளெண்ணை படிதா னொன்று
அனலிட்டு யெரித்தெருக்கம் பூவைப் போடே.

(இ-ள்.) சிற்றரத்தை, ஓமம், மிளகு, திப்பிலி, வசம்பு, சுக்கு, கருஞ்சீரகம், அதிமதுரம், நெல்லிமுள்ளி, வகைக்கு 35 கிராம் எடுத்து கற்கமாக செய்து கொண்டு முசுமுசுக்கைச் சாறு, வெள்ளாட்டுப் பால்,

பச்சை மஞ்சள் சாறு வகைக்கு ஒரு நாழி எள்ளெண்ணெய் ஒரு படியில் கலந்து கற்கத்தையும் சேர்த்து எரித்து எருக்கம் பூவை எண்ணெயின் மேல் போடவும்.

29. பொடித்தேப் பொரிந்துமலர்ப் பொன்னாம் போது
பிடித்துப்பார் மெழுகுபதம் வடித்தே மூழ்க
வோடிதேப் பீனிசங் கபால சூலை
ஓகோகோ நேத்திரசூலை யொழியும் பாரு
நாடிதே நொச்சியிலை வென்னீ ராகும்
மாலமில்லா வாய்வுபதார்த் தங்கள் தள்ளி
தேடிதே எட்டிரண்ட டுத்து மூழ்க
சேராது சென்னியின்நோய் நீங்கும் காணே.

(இ-ள்.) எருக்கம் பூ பொன்னிறம் ஆகும் போது மெழுகு பதம் பார்த்து வடித்து எடுத்து மூழ்கிவர, பீனிசம், கபாலசூலை, நேத்திர சூலை, முதலியன ஒழிந்து போகும். குளிப்பதற்கு நொச்சியிலை வென்னீர் சிறந்தது. வாய்வு பதார்த்தங்களை நீக்கி வாரம் இருமுறை மூழ்கிவர சிர நோய்கள் யாவும் தீரும்.

## மேகங்களுக்கு சிலாசத்து

30 காணப்பா சலாசத்துப் பலமோ ரெட்டுக்
கவசமிடு காஞ்சோரமண் சீலை செய்து
சாணப்பா வரட்டியெழு மூன்றுத் தொன்று
தாக்குபுடம் நீறுமரைக் களஞ்சித் தூக்கி
சேணப்பா ஆவாரத்தளிர் சமனா கப்பூ
சேரவரைத் தீர்களஞ்சு கவசஞ் செய்து
தோணப்பா நாளொருபத் திருபோதுங் கொள்
சொற்பெரிய மேகமது வொழியும் பாரே.

(இ-ள்.) 280 கிராம் சிலாசத்துக்கு காஞ்சோரியை அரைத்துக் கவசம் செய்து அதன் சீலை மண் செய்து இருபத்தொரு வரட்டியில் புடமிட்டெடுக்க நீறும். ஆவாரம் தளிரும் பூவும் சேர்த்தரைத்து அரைக் கழஞ்சு பற்பத்துடன் சேர்த்து பத்து தினங்கட்கு இரு

வேளையும் சாப்பிட்டு வர சொல்வதற்கரிய மேகவியாதி எல்லாம் தீரும்.

31. பாரகத்திப் புகையிலையு மிதிப்பாகற் காய்
பழையதுமோர் தயிர்பால் பூசனிக்காய்ச் சந்து
தூரகத்தி சிறுபயராவின் நெய்யன்னநீ
துடர்ந்துண்ண வெள்ளாட்டிறச்சி வெண்டைக்காயாம்
சீரகத்தி னெடைபலங்கால் வறுநீர் விட்டு
சேரவெரித் தரையாமாக் கிறக்கிக் கொண்டு
ஆரவைத்து கற்கண்டும் நெய்யும் சேர்த்து
கொள்ள மோகந்தள்ளு தள்ளு கண்டிடாயே.

(இ-ள்.) அகத்திக் கீரை, புகையிலை, பாகற்காய் இவை ஆகாது. பழையது, மோர், தயிர், பால், பூசணிக்காய், சிறுபயறு, பசுநெய் இவைகள் சேர்ந்த சாதம் சாப்பிடவும். வெள்ளாட்டிறைச்சி, வெண்டைக்காய் ஆகும். 9 கிராம் சீரகத்தை வறுத்து நீர் விட்டுக் காய்ச்சி பாதியாகச் சுண்ட வைத்து இறக்கிக் கொண்டு கற்கண்டும் நெய்யும் சேர்த்துக் கொள்ள மேகங்கள் ஓடி மறைந்து விடும்.

## கலைக் கொம்பு பற்பம்

32. கண்டிடுவாய் கலன்கொம்பு பலமீரைந்து
கறணையாய்க் கொய்துசிறாய் போலே வாங்கி
கொண்டிடு நாவலிலைச் சிறாய்க்குக்கவசஞ் செய்து
குறையாமற் கெசப்புடம் போட்டெடு நீறாகும்
திண்டிடுங் கல்வத்திலிவை யேத்திப் பின்பு
திறமாகச் சண்ணியரைத்துக் கடிகை யாறு
வெண்டிடு மூங்கிற்குழ லதனுள் வைத்து
மேலான மேகபதி பற்ப மாச்சே.

(இ-ள்.) மான் கொம்பு 350 கிராம் எடுத்து, சிறு கரணைகளாக்கி, சிறாய் போல உடைத்துக் கொள்ளவும். நாவலிலையை அரைத்து சிராய்க்குக் கவசம் செய்து கெசப்புடமிட்டெடுக்க நல்ல பற்பமாகும்.

மீண்டும் அதனைக் கல்வத்திலிட்டு ஆறு நாழிகை அரைத்து மூங்கில் குழலில் அடைத்து வைக்க மேக வியாதிகட்கு உயர்ந்த பற்பமாகும்.

33. ஆச்சப்பா பற்பமெடை கழஞ்சி தூக்கி
யந்தயிடை யாவாரைத்தளி ராவின் நெய்யிற்
தேச்சப்பா மத்தித்திம் மூன்றுங் கூட்டி
தினகரனைப் பூசனைசெய் திருபோதுந் தான்
மூச்சப்பா யிப்படி மண்டலமே கொண்டால்
முனைகெட்டுப் பிரமியமோ ரெட்டுந் தீர்ந்து
போச்சப்பா யிச்சா பத்திய மேகாறுப்
பொல்லாத பாய்மிதிக்கப் போகா துள்ளே.

(இ-ள்.) கலைக் கொம்பு பற்பம் ஒரு கழஞ்சு, ஆவாரந் தளிர் ஒரு கழஞ்சு, அரைத்து எடுத்துக் கொள்க. ஆவின் நெய் ஒரு கழஞ்சு இவை மூன்றையும் ஒன்றாகக் கூட்டித் தினம் இருபோது ஒரு மண்டலம் கொண்டால் பிரமிய ரோகம் எட்டும் முனை கெட்டு ஓடிவிடும் என்பதாம். புளி, புகை, பெண் சேர்க்கை கூடாது.

34. உள்ளத்தே காந்தலறுங் கமலம் புண்ணா
யுருகியநெய் பெருகிவிழும் வெடிமேகம் போம்
வெள்ளைச் சீந்தில்கொடி மங்கள வாரத்தில்
மேலுள்ள சவ்வகற்றிப் பல மீரைந்து
துள்ளச் சேத்திடியாவின் பாலா ழாக்கு
துடியாக வடிசெய்தீ ராழாக்காக
கொள்ளச்சே சீனிபல மதிலே போடு
குடித்திடுவ ாய் நாளாறில் குணமி தாமே.

(இ-ள்.) உட்கார்ந்தால் நீங்குதற்கும், உந்திக் கமலம் புண்ணாகி நெய் போல் உருகி விழுகின்ற வெடிமேகம் தீருதற்கும், சீந்திக்கொடி, மங்கள வாரத்தில் எடுத்து மேல்தோல் அகற்றி பத்து பலம் எடுத்து நன்கு இடித்து பாலாழாக்கு விட்டு இடித்துப் பிழிந்து இரண்டு ஆழாக்காக எடுத்து சீனி 35 கிராம் அதில் போட்டுக் கலக்கிக் குடிக்கவும். இவ்வாறு ஆறு தினங்கள் செய்ய மேற்கண்ட நோய் நீங்கும்.

35. குணமென்ற பத்தியமென்னக் கூறக் கேளிர்
கோதையுட பாய்மிதிக்கப் போகாதிவ் வாறுங்
கணமென்று மெய்யசை வொட் டாதேமேக
கலசத்தில் பலவரிசி யன்னம் பொங்கி
மனமென்றுஞ் சிறுபயறுவறு செய்து கொள்வாய்
யோசைக்குக் கதிரொளியும் வாய் வாகாது
சீனமொன்றும் புகையிலையும் புளிக் கல்லுப்புஞ்
சேராதே யிளவென்னீர் சாதங் கூட்டே.

(இ-ள்.) பெண் சேர்க்கை, மெய்யசைத்தல் கூடாது. பலவரிசிப் பொங்கல் செய்து சிறுபயறு வறுத்து தொகையல் செய்து கொள்க. வெய்யில் வாய்வு பதார்த்தம், கோபம், புளி, புகையிலை, உப்பு இவைகள் கூடாது. வென்னீர் சாதம் சேர்த்துக் கொள்க.

36, கூட்டு மிருதார்சிங்கிக் களஞ்சிடைதான் மூன்று
கூறிய வெண்மொச்சைக் களஞ்செடைதான் மூன்று
மாட்டுக் கரிமிளகுக்களஞ் செடைதான் மூன்று
வகைவேறுத் தூளதுசெய் வடியிட்டே பின்
தேடவே வகையொன்று விராக னெடையன்ன
தெளிவதுவிட் டாழாக்கிற் தினமூன்றுங் கொள்
ளோட்டு மிதுமேகமதை யணு கொட்டாமல்
உத்தமனே உப்புபுளிப் புகையுந் தள்ளே.

(இ-ள்.) மிருதார்சிங்கி கழஞ்சு மூன்று, வெண்மொச்சை கழஞ்சு மூன்று, குருமிளகு கழஞ்சு மூன்று இவைகளைத் தனித்தனியே பொடி செய்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும். இவை வகையொன்றுக்கு ஒரு வராகனெடை எடுத்து நீராகாரத்தெளிவு நீர் ஆழாக்கிற் கலந்து மூன்று தினங்கள் கொள்ள மேக வியாதி நீங்கும். உப்பு, புளி, புகை கூடாது.

37. தள்ளி கொடிக்கள்ளி துளிர்பலந்தா னொன்று
தாக்குக் குருமிளகுகழஞ் சிடைதா னொன்று
கொள்ளு முடியுள்ளிகழஞ் சிடைதா னொன்ற
கூட்டியரைத் துணையினா லொண்டே போக்கி

யுள்ளிமிடில் மூன்றுமிசை யவிழ்தத்தோடே
உத்தமனே யடைக்காய்வெள் ளிலைமோர் நாழி
துள்ளுவடி மேகமருந்தின் மூன்றுங்கொள்
துடர்ந்தன்னஞ் சிறுபயறுநெய் யுறவாந்தீதே.

(இ-ள்.) கொடிக் கள்ளித் துளிர் ஒரு பலம், மிளகு ஒரு கழஞ்சு, உள்ளி ஒரு கழஞ்சு இவைகளைக் கூட்டியரைத்து அதனுடன் பாக்கு, விளா இவைகளையும் அரைத்துக் கூட்டி, நாழி மோருடன் கலந்து மூன்று தினம் கொள்ள மேக நோய் தீரும். சிறு பயறு, நெய் சேர்ந்த அன்னம் கொள்ளவும். பெண் உறவு கூடாது.

குறிப்பு - வெள்ளிலை - விளா
அடைக்காய் - பாக்கு

38. தீத்தத்துச் சாரணைவேர் மூக்கா வேளை
சமூலமே யிடித்துவடி யிட்டே பின்பு
சித்தித்துக் கருங்குறுவை யரிசி நாழி
தொள்ளுமா யிடித்திரண்டுஞ் சமனாய் சேர்த்து
மத்தித்துக் களிநாள்மூன் றுண்ணத் தீரும்
மல்லாமல் செம்பருத்த மிலையும் புஞ்சும்
குத்தித்துச் சாறுவுறிக் குழம்பாய் வாங்கு
கூட்டுசம னெலிமிச்சம் பழச்சார் தீரே.

(இ-ள்.) சாரணை வேர், முக்கா வேளை சமூலம் இவைகளை இடித்துப் பிழிந்து எடுத்து, கருங்குருவையரிசிமாவு இரண்டையும் சமனாய் சேர்த்துக் களிபோல் செய்து மூன்று தினங்கள் உண்டு வர மேகம் தீரும். அதுவுமன்றி செம்பருத்தி இலையும் பிஞ்சும் சேர்த்து இடித்துப் பிழிந்து எடுத்துச் சாறுடன் சமனாக எலுமிச்சம் சாறு சேர்த்துக் கொடுக்கவும்.

39. தீருவது கேளிலுப்பைப் பட்டை தன்னை
தெள்ளுபொடி செய்தொருநாழிச் சார்வாங்கி
கூறுவது ஐங்கரனைப் பூசை செய்து
கொடுக்கிடுவாய் நாள்மூன்றிற் குணமேயாகும்
சீறுவது பெரும்பாடு குருதி காணுஞ்
செயமாகக் கொள்வோர்க்கு செயமேயாகும்
தேறுவது இளவென்னீர் சாதம் கொள்ளு
நேராதே புளிபுகையுப் பதுவுந் தள்ளே.

(இ-ள்.) இலுப்பைப் பட்டை தன்னை இடித்து எடுத்த சாறு ஒரு நாழி மூன்று தினங்கள் கொடுக்கப் பெரும்பாடு என்னும் இரத்தப் பெருக்கு குணமாகும். இளவெந்நீர் சாதம் கொள்ளவும். புளி, புகையிலை கூடாது.

40. தள்ளுபனைச் சாறதிலே பலமெட்டாலுந்
தன்விழுது தளிர்பலநா லதினா லாட்டிக்
கொள்ளு செந்தின்மெழுகு சூதகத்தின் வாய்வு
குடிவிட்டு மலட்டுவலி மலட்டுப் பூச்சித்
துள்ளுமிது மாண்டுமலத் தோடே வீழுஞ்
சோதித்து இம்முறை தப்பாது பாரு
விள்ளுவது பத்தியந்தா னறியக் கேளு
மீறாதே புளிபுகையை யருந்திடாடே.

(இ-ள்.) பனையின் குருத்துச் சாறு பலம் எட்டு. ஆலம் விழுதின் தளிர் பலம் நான்கு எடுத்து, மேற்சொன்ன சாற்றினாலாட்டி மெழுகு போல் எடுத்துக் கொடுத்து வர சூதக வாயு, சூதக வலி தீரும். மலடு, மலட்டுப் பூச்சி இவைகள் மலத்துடன் வீழும். முறை தவறாது. புளி, புகைத் தள்ளவும்.

**சூதக வாய்வுக்கு**

41. அருந்த வெள்ளுள்ளிஎடை பலந்தானொன்று
அப்பனே கறியுப்புக் கவசஞ் செய்து
பொருந்த மண் சீலைரெண்டில் தயவாகக் கூட்டி
புடம்வாளி மூன்றதுட்டெடு தோல்போக்கி

தெரிந்து நல்லிஞ்சிரசம் யரை யாழாக்குத்
தெளிவாக விட்டரைத்துத் தினமூன்றுங் கொள்
சரிந்து சூதகத்தின்நோய் தவறுண்டேபோம்
தப்பாது புளிபுகையைத் தள்ளிப்போடே.

(இ-ள்.) எட்டு பலம் வெள்ளைப் பூண்டுக்கு கறியுப்புக் கவசம் செய்து இரண்டு தடவை சீலை மண்செய்து புடமிட்டெடுத்து மேல் தோல் போக்கி மூன்று துட்டெடை எடுத்து இஞ்சிரசம் அரை ஆழாக்கு விட்டரைத்து மூன்று தினம் சாப்பிட்டு வர சூதக நோய் தவறாது போம். புளி, புகை கூடாது.

## சூதக வாய்வுக்கு லேகியம்

42. போட்டப்பா சித்திரமூலியின் வேர்ப் பட்டைப்
புதியதாய் மூன்று பலம் நிறுத்து வாங்கித்
தேடப்பா திரிபலையும் மிளகு சுக்கு
திப்பிலி நற்சீரகஞ் சித்தரத்தை ஓமம்
நாட்டப்பா தாளிசபத்திரி கார் போகம்
நலமான வாய்விளங்கம் கிராம்பு கோஷ்டம்
மாட்டப்பா குரோசாணி யக்கிறாகாரம்
அரத்தை கருஞ்சீரகந் தேக்கதுவும் பாரே.

(இ-ள்.) சித்ர மூல வேர்ப்பட்டை, மூன்று பலம், திரிபலை, (நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய்) மிளகு, சுக்கு, திப்பிலி, நற்சீரகம், சிற்றரத்தை, ஓமம், தாளிசபத்திரி, கார் போக அரிசி, வாய்விளங்கம், கிராம்பு, கோஷ்டம், குரோசாணி ஓமம், அக்கிரகாரம், பேரரத்தை, கருஞ்சீரகம், சிறுதேக்கு,

43. பாரடா சதகுப்பை நறுக்கு மூலம்
பாங்காக வகையொன்றுக் கழஞ்சி ரெண்டு
சேரடா ப்ளாகாரம் பலமரைதான் மூன்று
திறமாக யிடிச்சவுடன் வடியிட்டே பின்

சோரடா சீனிஎடை பல மூவைந்து
கோதியிட்டுப் பாகஞ்செய் ததனுள் போட்டு
நேரடா தேனதிலே பலமாராவின் நெய்
பலமாறு விட்டுடன் லேகியமாய்க் கிண்டே.

(இ-ள்.) சதகுப்பை. திப்பிலி மூலம் இவைகள் வகை ஒன்றுக்கு கழஞ்சு இரண்டு, அப்ளாகாரம் (அப்பளத்திற்கு உபயோகிக்கும் சோடா உப்பு) 52½ கிராம் இவைகளை இடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து, சீனி (வெள்ளை சர்க்கரை) 525 கிராம் சுத்தம் செய்து மேற்கண்ட சூரணத்துடன் போட்டு நன்கு பிசைந்து தேன் 210 கிராம் ஆவின் நெய் 210 கிராம் விட்டு லேகியமாகக் கிண்டவும்.

குறிப்பு -சர்க்கரை பாகு செய்து சூரணத்தை விட்டுக் கிளறி தேன், நெய் விட்டு லேகியம் போல் கிளறவும்.

44. கிண்டப்பா தூபமொடு தீபம் காட்டி
கெசமுகனை மனதுள்ளே தியானஞ் செய்து
கொண்டப்பா பாக்களவு இருபோதுந் தான்
குறையாமல் மூவைந்துதினமே கொண்டால்
விண்டப்பா நளவாய்வு யோனி சூலை
வெளிகாணா துதிரஞ்சூதக வாய்வின் நோய்
உத்தமனே குருமொழி தப்பாது செய்யே.

(இ-ள்.) தூபதீபம் காட்டி கணபதியை தியானம் செய்து, கொட்டைப் பாக்களவு காலை மாலை பதினைந்து தினங்கள் சாப்பிட வாய்வு யோனி சூலை, சூதக வாய்வு, உதிரம், தடை படல், முதலிய நோய் காணாதோடும்.

## பேதிக்கு இரத்தினாதி குழம்பு

45. செய்யடா பேய்க்குமட்டிக்காய் இரண்டே தோல்
சீவியேவித் தகற்றிப்பயறு போல் கொய்து
வைய்யடா பீங்கானுள் பலமிந்துப்பு
மாறாமல் கதிரொளியால் உலர்த்திட் டேபின்
நைய்யடா கலுவத்தில் அரைத்து வாங்கி
நாட்டமாய் ஓர் கழஞ்சிப் பனை வெல்லத்துள்
பைய்யடா தாதுவின் குணமுங் கண்டு
பல்நாவிலுண் வாகாக தெரிந்து வுண்ணே.

(இ-ள்.) பேய்க்குமட்டிக் காயைத் தோல் சீவி, விதையை நீக்கி சிறு பயறு போல் நறுக்கி எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் போட்டு 35 கிராம் இந்துப்பு பொடித்துப் போட்டு வெயிலில் வைத்து உலர்த்தி, கலுவத்தில் நன்கு அரைத்து வைக்கவும், அதில் கழஞ்சியளவு பனை வெல்லத்துள் வைத்து தேக பலமறிந்து கொடுக்கவும்.

46. உண்ணவே வாந்திதரும் வயிர் பேதிக்கும்
மோகோகோ கிருமியெல்லா முழன்று வீழும்
கண்ணவே சிறுபயறு வறு செய்தோடு
போக்கிபச்சரிசி ரெண்டுமுறை வாய்ப் பொங்கி
திண்ணவே மலக்கட்டும் பித்தம் போக்கும்
சீரகஞ் சுக்கொடுக் கியாழம் கொள்ளு
குண்ணவே வெந்நீரால் கைகால் சுத்திக்
கூறுகிறேன் சமுச்சயமொன் றில்லைக் காணே.

(இ-ள்.) வாந்தி உண்டாகும். பேதியாகும். குடற்புழுக்கள் எல்லாம் சுழன்று வீழும். சிறுபயறு தோல் நீக்கி அதனுடன் பச்சரிசியும் சேர்த்துப் பொங்கி உண்ண மலம் கட்டும். பித்தம் போகும். சீரகம், சுக்கு இரண்டும் சேர்த்து கியாழம் செய்து சாப்பிடவும். வெந்நீரால் கை, கால் சுத்தம் செய்யவும்.

## லிங்கக் குழம்பு

47. காணப்பா வாளமிடை பலந்தான் சாணங்
கரைத்திட்டு இருகடிகை யெரியிட்டே பின்
தோணப்பா மேலோடு போக்கி நஞ்சைத்
துலைத்து நெய்ச்சட்டி சிறிகீரை சேர்த்து
வூணப்பா வறுசெய்தா மணக்கின் முத்தை
உடைத்துப் பருப்பெடுத்துவிடுக் கழஞ்சி ரெண்டு
பேணப்பா லிங்கமொரு கழஞ்சிட் டாட்டு
பிசகாமல் மெழுகுபதஞ் சிமினிற் கொள்ளே.

(இ-ள்.) 70 கிராம் வாளத்தை எருமைச்சாணிப் பாலில் போட்டு இரண்டு நாழிகை அடுப்பில் வைத்து எரித்துக் கழுவி எடுத்து, மேல் ஓடு போக்கி பருப்பில் உள்ள நஞ்சை நீக்கி, நெய்ச்சட்டிக்கீரை, சிறுகீரை இரண்டையும் சிறிது எடுத்து வாளப் பருப்புடன் சேர்த்து வறுத்து எடுத்துக் கொள்ளவும். லிங்கம் ஒரு கழஞ்சு இவைகளைக் கல்வத்திலிட்டு மெழுகு போல் நன்கு அரைத்து எடுத்து சிமிழிற் பத்திரப்படுத்துக.

48. கொள்ளவே குண்டுமணி பிரமாணந் தான்
கொடுத்திடுவாய் பனைவெல்லங் கவசங் செய்து
துள்ளவே நொந்துநொந்து உயிர் பேதிக்மும்
துடியாக மூன்றுவிசை பித்தம்போக்குங்
தள்ளவே வெந்நீரால் கைகால் சுத்தி
சத்தியமாம் நித்திரையைத் தான்செய்யாமல்
மெள்ளவே தயிர்பாலோ டன்ன முண்ணு
மேலான சுக்குகஷா யத்தை வாங்கே.

(இ-ள்.) ஒரு குன்றிமணி அளவு பனைவெல்லத்தில் பொதித்து விழுங்கவும். வயிறு பேதியாகும். மூன்று தடவை பித்தம் போகும். வெந்நீரால் கை, கால், சுத்தம் செய்யவும். நித்திரை செய்யாமல் இருக்கவும் தயிர், பால், அன்னம் சாப்பிடவும். இரவு சுக்கு கஷாயம் சாப்பிடவும்.

## பேதி மெழுகு

49. வாங்கப்பா நேர்வாளத் தோடு போக்கி
வலுவான நஞ்சையொடு கழஞ்சோரைந்து
பாங்கப்பா சுக்குபொடி கழஞ் சோரைந்து
பழையதொரு பனைவெல்லம் கழஞ் சோரைந்து
ஓமப்பா கல்வத்தோர் சாம மாட்டி
யுத்தமனே மெழுகதுபோல் சிமிளிற் கொண்டு
தங்கப்பா குன்றியிசை தேனிற் கொள்ள
தறியாது பித்தம் வயிர் பேதிகேளே.

(இ-ள்.) ஓடு போக்கி, நஞ்சு நீக்கி சுத்தி செய்த நேர்வாளப் பருப்பு ஐந்து கழஞ்சு, சுக்குத்தூள் ஐந்து கழஞ்சு, பழைய பனைவெல்லம் ஐந்து கழஞ்சு இவைகளை ஒன்று சேர்த்து கல்வத்திலிட்டு ஒரு சாமம் நன்கு அரைத்து மெழுகுபோல் செய்து சிமிழில் அடைக்கவும். ஒரு குன்றிமணி அளவு தேனிற் கொள்ள பித்தம் போகும். வயிறு பேதியாகும்.

50. கேளடா வயிற்றுவலி தீரும் தீரும்
கொடியான வாய்வுவஸ்து வெல்லாம் தள்ளி
தாளடா சிறுபயரோ டண்ண முண்ணு
தம்பிக்கும் வாந்திவயிர் பேதி கட்டும்
மாளடா வென்னீரால் கைகால் சுத்தி
அப்பனே சயனந்தானா காதாகா
வாடா சுக்கொடுசீர கமுங் கூட்டி
வாங்கிடும் கஷாயமதே ரண்டா தண்டே.

(இ-ள்.) வயிற்று வலி தீரும். வாய்வு வஸ்துவை நீக்கி, சிறு பயறு சேர்த்த அன்னம் சாப்பிடவும். வாந்தி பேதி நிற்கும். வெந்நீரால் கை கால் சுத்தம் செய்யவும். நித்திரைநீக்கவும். சுக்கு சீரகம் இரண்டும் சேர்த்த கஷாயம் இரவில் சாப்பிடவும்.

## அண்ட வாதத்துக்கு

51. அண்டவாதம் வீரைகீழே யிறங்கி யூதும்
அப்பனை வலிகண்டா லவிழ்தங் கேளு
கண்டவே பருத்திப்பா லரை யாழாக்குத்
துடியாகக் கொதியிட்டு ஏழு பொழுதுங் கொள்

எண்டவே சம்புபெருங் கொத்தான் தாளி

யிடித்துவறுத் தொத்தடங் கட்டிடவே தீரும்

தீண்டிடவே வாய்வுவஸ்து ஒன்ற காது

தெளிவான கைமுறை கொள் செவிதானுற்றே.

(இ-ள்.) விரை கீழிறங்கி ஊதச் செய்கின்ற அண்டவாதத்திற்கு பருத்திக் கொட்டைப்பால் அரையாழாக்கு கொதிக்கவிட்டு ஏழு தினம் கொள்ளவும். எலுமிச்சை, பெருங்கொத்தான், தாளி இவைகளின் இலை இடித்து வறுத்து ஒத்தடங் கொடுக்கத் தீரும். வாய்வுப் பண்டம் நீக்கவும். இது தெளிவான அனுபவ முறையாகும்.

52. உத்தகழல் வாதம்விரை யேறும் நோகும்

மூதும் வயிர் பொருமியுடன் சோகம் போடும்

முத்தக்களச் சிப்பருப்பு சுண்ணம் வெல்லம்

முனையாக திப்பிலிவகைக்குக் கழஞ்சு தூக்கி

நித்தமரைத் திப்பிடிநாளன்றே கொள்ளு

நெடியக் களக்கொட்டி வசம்புள்ளி தட்டி

மெத்தவறுத் தொத்திடங் கட்டிடவே தீரும்

மீறாதே வாய்வுவஸ்து தெரிந்து நாட்டே.

(இ-ள்.) கழல் வாதத்தில் விரையேறும். நோவெடுக்கும். வயிறு பொரும் சோகம் போடும். இவைகட்டு கழற்சிப் பருப்பு, சுண்ணம். வெல்லம் திப்பிலி வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் எடுத்து அரைத்து தினம் காலையில் அரைத்துக் கொள்ளவும். கழற்சியிலை, வசம்பு, உள்ளி இவைகளை இடித்து வறுத்து ஒத்தடங் கொடுக்கவும். வாய்வு வஸ்து சாப்பிடலாகாது.

53. நாட்டத்திப் பிஞ்சுகழஞ்சிடைதான் ரெண்டு

நல்புளியின் வித்துக்கழஞ் சிடைதான் ரெண்டு

கூட்டத்திப் பூதமஞ்சிடை தான் ரெண்டு

குறையாம லாட்டிருபோ தினமூன்றுங் கொள்

ளாட்டத்தி யோடிகத்தின் சாணத் தோடு
வரிந்துகளக் கொடியிலை வறுத்திட் டொத்தி
மாட்டத்திக் கட்டிடவேக்கழல் வாதம் போம்
வாங்காதே புளிபுகையி தாதி யாமே.

(இ-ள்.) அத்திப் பிஞ்சு இரண்டு கழஞ்சு, புளியம் வித்து இரண்டு கழஞ்சு, ஆலம் பிஞ்சு இரண்டு கழஞ்சு இவைகளை ஒன்றுபட அரைத்து தினம் இரண்டு வேளை வீதம் மூன்று தினம் கொள்ளவும், எருமை சாணத்தோடு கழற்சிக்கொடியிலையை சேர்த்து வறுத்து ஒத்தடமிட விரைவாதம் போகும். புளி, புகையிலை கூடாது.

**கெந்தக சர்க்கரை**

54. ஆதியடா கெந்தகந் தான் எட்டு
அப்பனே சுத்திசெய் யாவின் பாலில்
பேதியடா வெண்சங்கம் பழச்சார் விட்டு
பிசகாமல் சாமமோ ரெட்டே யாட்டி
சோதியடா கதிர்புடம்வைத் திருக்கும் போது
துடர்ந்தரை ஈருள்ளிரச மிருநால் சாமம்
சாதியடா கல்வத்தோடு லர்த்திட்டே பின்
தவறாது கெந்தகசர்க் கரையிதாமே.

(இ-ள். கெந்தகம் 280 கிராம் ஆவின் பாலில் சுத்தி செய்து, வெண் சங்கம் பழச்சாறு விட்டு எட்டு சாமம் அரைத்து சூரிய புடம் வைத்து இருக்கும் போது வெங்காயச் சாறு விட்டு எட்டு சாமம் அரைத்துக் கல்வத்தோடு உலர்த்தி அரைத்து எடுக்க கெந்தக சர்க்கரையாகும்.

55. ஆமப்பா நாளொருபத்திரு போதுந் தான
ரையாகுங் கழஞ்சி.யிடைத் தேனிற் கொண்டால்
போமப்பா சூசலையொடு கிரந்தி வாய்வு
புண்ணுகை கால் குடைச்சல் மார்நோ யெல்லாம்

போமப்பா அட்சரத்தைத் தியானம் செய்வாய்
உத்தமனே ஈசனுமைக் குரைத்த வாறு
தாமப்பா வாய்வுவஸ்து வொன்றா காது
தப்பில்லை நோயகலும் சாதிப் பாயே.

(இ-ள். தினம் இரண்டு வேளை பத்து தினங்கள் அரைக் கழஞ்சு எடை வீதம் தேனுடன் சாப்பிட்டுவர, சூலை, கிரந்தி, வாய்வு, புண், கை கால், குடைச்சல், மார்பு நோய் இவைகள் நீங்கும். திருவைந்தெழுத்தை தியானம் செய்து வரவும். வாய்வுப் பண்டங்களை நீக்கவும்.

56. சாதிப்பாய் மாவிலிங்கப் பட்டைச் சுக்கு
சாரிசவேர்ப் பிரம்பின்வேர்ப் பரங்கிப் பட்டை
சோதிப்பாய் புனல்தண்டு சங்கம் வேரும்
சிற்றரத்தை வகைக்குயிரு பலமே தூக்கி
பாதிப்பாய் கல்வத்திலிட் டரைத்து
பாக்களவு இருபோதுமுத் தினமே கொள்ள
வாதிப்பாய் வாய்வுபிடிக்கு டைச்சல் தீர்க்க
வேண்டாதே புளிபுகை உப் பதுவுந் தள்ளே.

(இ-ள்.) மாவிலிங்கம் பட்டை, சுக்கு, நன்னாரி வேர்ப்பட்டை, பிரம்பின் வேர், பரங்கிப்பட்டை, புனல் தண்டு, சங்கம் வேர் சிற்றரத்தை வகைக்கு 70 கிராம் எடுத்து கல்வத்திலிட்டு மைபோலரைத்து பாக்களவு இருபோது மூன்று தினங்கள் கொள்ள, வாய்வுப் பிடிப்பு, குடைச்சல் தீரும். புளி, புகை, உப்பு கூடாது.

**பரங்கிப்பட்டை பதங்கம்**

57. தள்ளயே ழாறுபலம் பரங்கிச் சக்கை
தன்னை உலர்த்திதிடித்து வடியிட்டே பின்
விள்ளப்பா பாண்டத்தை அடுப்பில் வைத்து
மேலான லிங்கப்பொடி பலமைந் திட்டு

வுள்ளாய் தன்னிலொடு சீலை சுற்றி
தீராமல் சூரணம்வைத் திடுவாய் மூடி
துள்ளச் சாமமெரிக்கப் பதங்க மாச்சு
சத்தபுதுக் கலசத்துள் பதனஞ் செய்யே.

(இ-ள்.) நாற்பத்திரண்டு பலம் பரங்கிச் சக்கையை, உலர்த்தி, இடித்து வஸ்திரகாயஞ் செய்து ஒரு பாண்டத்தில் 175 கிராம் லிங்கத்தைப் பொடி செய்து வைத்து, வாய்ப்புறத்தில் சீலை சுற்றி அதன் மீது சூரணத்தை வைத்து மேல்மூடி சீலைமண் செய்து ஒரு சாமம் எரித்து எடுக்கப் பதங்கமாகும். இதனை புட்டியில் பத்திரம் செய்க.

58. செய்யப்பா பலமிடைதானி ருபோதுங் கொள்
சிவசிவா மண்டலத்தில் தெரிக்கும் வாய்வு
மெய்யப்பா மேகமறுஞ் சூலை யோடு
வெடிகண்ட மாலையறும் பிடிப்புத் தீரும்
முய்யப்பா தயிரிறைச்சி பால்மோர் மச்சம்
முகராதே புகையிலையை மனம் வையாதே
பெய்யப்பா பழையதோடு புளியை தள்ளுப்
பறந்திடுமே நோய்களெல்லாம் அறிந்திடாயே.

(இ-ள்.) 35 கிராம் இருபோது கொள்ள, வாய்வு, மேகம், சூலை, கண்டமாலை,வெடிமேகம் இவை நீங்கும். வாய்வுப் பிடிப்பு தீரும். தயிர், பால், மோர், இறைச்சி, மீன் இவைகள் ஆகா.

குறிப்பு - அளவுஒரு பலம் எனக் குறிப்பிட்டிருப்பினும் ஒரு வேளைக்கு 3 அல்லது 4 குன்றியளவு கொள்ளுதல் சிறப்பு.

## போர் மாந்த சுழிமாந்த எண்ணெய்

59. அரிந்திடு வேப்பெண்ணை எடை பல மோரைந்து
ஆமணக்கெண் ணெய்எடை பலம் நாலைந்து
கரிந்திடாடு கோபுரத்தைத் தாங்கியூட் டப்பா
சமூலமிடித் துச்சாறு சமனாய்க் கூட்டி

பரிந்திடு வெள்ளுள்ளி கருஞ் சீரகந்தான்
பாங்குவசம்பு வகைக்குப் பலமாட்டிட்டு
வரிந்திடு போய்க்குமட்டிக்காய் இரண்டு வாங்கி
வரகுவைக் கோல்கவசமிட்டு புடத்தைப் போடே.

(இ-ள்.) வேப்பெண்ணை 175 கிராம் ஆமணக்கெண்ணை 350 கிராம், ஆடாதோடை, கோபுரந்தாங்கி, கண்டங்கத்திரி இவைகளை மூலம் இடித்துப் பிழிந்து எடுத்த சாறு வகைக்கு சமனாய்க் கூட்டி (எண்ணெயின் அளவுக்கு - 1050 கிராம்) வெள்ளுள்ளி,கருஞ்சீரகம், வசம்பு, வகைக்கு 35 கிராம் அரைத்து எடுத்துக் கொள்க. இரண்டு பேய்க் குமட்டிக்காயை வரகு வைக்கோல் கவசமிட்டுப் புடமிட்டு,

குறிப்பு - ஆடு - ஆடாதோடை
பூட்டுக்கனி - கண்டங்கத்திரி

60. போட்டிடவே சரியவெந் தளரும் போது
போக்கிடுதோ லுளச்சதையைப் பயர்போல் கொய்து
நாட்டிடவே எண்ணெயிலிட் டடுப்பி லேற்றி
நாடியெரி மெழுகுபதம் பிடித்துப் பாரு
மாட்டிடவே சூடகற்றிப் பீங்கா னுள்ளே
அப்பனே வைத்துபல மரைபோதுங் கொள்
ளூட்டிடவே போர்மாந்தம்சுழி மாந்தம் போம்
முகராதே புளியுப்பு முறிந்து போமே.

(இ-ள்.) வெந்த பதத்தில் எடுத்து மேல்தோல் சீவி பயறு போல் சிறுக அரிந்து மேல்கண்ட எண்ணெயில் இட்டு அடுப்பிலேற்றிக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி சூடகற்றி பீங்கானில் பத்திரம் செய்க. 17½ கிராம் அளவு இரண்டு வேளை கொள்ள மாந்தம், சுழி மாந்தம் போகும். புளி, உப்பு கூடாது.

## சூலை எரிவுக்கு லேகியம்

61. போமப்பா வாரெட்டுப் பழச்சாறு தன்னில்
போட்டிடு நல்சீரகந்தான் பலமீ ரெட்டு
ஆமப்பா கதிர்புடம்வைத் துலரச் செய்து
யறிந்திடா யதிமதுரம் வைபோ கேலம்
வாமப்பா மிளகுசன்ன ராஷ்டஞ் சுக்கு
வால்மிளகு தாளிசப் பத்திரி கிராம்பு
தாமப்பா வகைக்குக்கால் பலமே தூக்கித்
தானிடித்துத் தூள்வடிசெய் திதமாய்க் கூட்டே.

(இ-ள்.) நாற்பத்தெட்டு எலுமிச்சம் பழச்சாறு தன்னில் நற்சீரகம் பதினாறுபலம் போட்டு சூரிய வெளிச்சத்தில் வைத்து உலரச் செய்து, அதிமதுரம், இலவங்கப்பத்திரி, ஏலம், சிற்றரத்தை, சுக்கு, வால்மிளகு, தாளிசப்பத்திரி, கிராம்பு, வகைக்கு 9 கிராம் எடுத்து இவைகளை இடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து எடுத்துக் கொண்டு

குறிப்பு - வைபோகசாதி - இலவங்கப்பத்திரி

62. கூட்டப்பா இஞ்சிரசமா ழக் கொன்று
கூர்பனையின் கற்கண்டு பல மீரெட்டு
மாட்டப்பா தேனதிலே பல மோரைந்து
மத்தனையுஞ் சட்டியிலிட் டடுப்பி லேற்றி
மூட்டப்பா செந்தணலைப் பாகு செய்து
முன்பொடியைத் தூவிநெய்யாற் பல மிட்டாட்டி
ஊட்டப்பாப் பாக்களவு குலையெரிச்ச லுகந்து கேளே.

(இ-ள்.) இஞ்சிச் சாறு ஒரு ஆழாக்கு, பனங்கற்கண்டு 560 கிராம், தேன் 175 கிராம் இவைகளை ஒரு சட்டியிலிட்டு அடுப்பிலேற்றி எரித்து பாகு பதத்தில் முன்சொன்ன சூரணத்தைத் தூவி கிண்டி நெய் 210 கிராம் நன்கு கிளறி லேகியமாய் எடுத்து பத்திரப்படுத்தவும். பாக்களவு இரு போது சாப்பிட்டு வர குலையெரிச்சல் ஒழிந்து போகும்.

## காசநோய் லேகியம்

63. கேளப்பா சிற்றரத்தை மிளகுக் கிராம்புக்
கெடியான வதிமதுரம் பரங்கிப் பட்டை
தாளப்பா சீரகஞ்சாதிப் பத்திரி தேக்கு
தாளிசப்பத்திரி யக்கிராகாரம் கோஷ்டம்
வாளப்பா திப்பிலியே றரத்தை சோம்பு
வால்மிளகு வகையிலொரு பலமேதூக்கி
யாளப்பா கைத்திறமா யிடித்துத் தூளாய்
யப்பனே சீலைவடி செய்து கொள்ளே.

(இ-ள்.) சிற்றரத்தை, கிராம்பு, மிளகு, அதிமதுரம், பரங்கிப்பட்டை,, சீரகம், சாதிப் பத்திரி, சிறு தேக்கு, தாளிசப் பத்திரி, அக்ராகாரம், கோஷ்டம், திப்பிலி, பேறரத்தை, சோம்பு, வால் மிளகு வகைக்கு 35 கிராம் எடுத்து இடித்து தூள்செய்து சீலையில் வடிகட்டி (வஸ்திரகாயம்) எடுத்துக் கொள்ளவும்.

64. கொள்ளடா யாகாசத்தாமரை இஞ்சிச் சாறு
கூட்டுமுசு முசுக்கைச்சாறு வகை யாழாக்கு
வுள்ளடா கதண்டுத்தேன் ஆழாக் கொன்று
உத்தமனே கற்கண்டு பலம் நாலைந்து
மள்ளடா பாகஞ்செய் தூளைப் போடு
மீறியதோர் பசுவின்நெய் பலம் நால்விட்டு
தெள்ளடா அடிப்பற்றித் தீய்ந் திடாமல்
சாதனைசெய் அருகிருந்து சாம மாட்டே.

(இ-ள்.) ஆகாசத் தாமரைச் சாறு, இஞ்சிச்சாறு, முசுமுசுக்கைச் சாறு வகைக்கு ஒரு ஆழாக்கு இவைகளை ஒன்று கூட்டி அதனுடன் நல்ல தேன் ஒரு ஆழாக்கு, கற்கண்டு 700 கிராம் சேர்த்து அடுப்பிலேற்றி பாகு பதத்தில் மேல்கண்ட சூரணத்தைச் சிறிது சிறிதாகப் போட்டுக் கிளறி பசுவின் நெய் 140 கிராம் விட்டுக் கலந்து லேகியத்தைப் பத்திரம் செய்க.

குறிப்பு - அடுப்பில் தீப்பற்றி தீய்ந்திடாமல் அருகிருந்து கவனமுடன் செய்க.

65. ஆட்டுவாய் லேகியம்போ லாக் கிண்டி
யப்பனே பாக்களவு இருபோதுந் தான்
மூட்டுவாய் மண்டலமொன் றிதுதப் பாமல்
மூடிவணங்கி இருமலது முனை கெட்டோடும்
கூட்டுவாய் காஞ்சொரிவேர் ஆவின் பாலில்
கொதியிட்டு யிதைவடிசெய் இரவிற் கொள்ளு
நாட்டுவாய் மலிகையைத் தியானம் செய்து
நாடாதே திரேதாயி மானார் சூதே.

(இ-ள்.) பாக்களவு தினம் இருபோது ஒரு மண்டலம் தவறாது சாப்பிட்டுவர இருமல் நோய் நீங்கிவிடும். மருந்துண்ணும் காலங்களில் ஆவின் பாலில் காஞ்சொரி வேரையிட்டுக் காய்ச்சி வடிகட்டி இரவில் கொள்ளவும்.

66. சூதமுள்ள வெள்ளைப்பாஷாணம் கெவுரி கெந்தி
தொட்டிப் பாஷாணமனோ சிலைமால் தாரம்
நாதமுள்ல கார்த்திகையின் கிழங்கு வாளம்
நல்லரிசித் திப்பிலியோ டக்கிராக் காரம்
நீதமுள்ள நிறுவிஷமும் கருஞ் சிராவும்
நித்திரை யொன்றுவகை விராகனெடையே தூக்கி
வீதமுள்ல படிமிளகு சமனாய்ச் சேர்த்து
ஈரேழு சாமமரைத் தெடுத்து வாங்கே.

(இ-ள்.) சுத்தி செய்த இரசம், வெள்ளைப் பாஷாணம், கவுரி பாஷாணம், கெந்தகம், தொட்டிப் பாஷாணம், மனோசிலை, தாளகம், கலப்பைக் கிழங்கு, வாளம், அரிசித்திப்பிலி, அக்கிராகாரம், சுத்தி செய்த கறுநாவி, கருஞ்சீரகம், கண்டங்கத்திரி இவை வகைக்கு ஒரு விராகனெடை எடுத்துக் கொண்டு இவைகளுக்கு சம எடை மிளகு சேர்த்து பதினான்கு சாமம் அரைத்து பத்திரப்படுத்துக.

குறிப்பு - நித்திரா - கண்டங்கத்திரி

67. வாங்கியதோர் ரசமாம் பண்மை தூக்கி
மைந்தனே இஞ்சிச்சாத் தனுபானங் கேள்
ஓங்கியதோர் காக்கைவலி சுவாச காசம்
முனைப்பு வாய்வுக்குடைச்ச லிலைப்புத் தீரும்
நீங்கயதோர் மேனிரசத் தனுபானங் கொள்
நில்லரிது எலிவிஷம் நிலை கெட்டோடும்
பாங்கியதோர் இம்முறை தப்பாது செய்தால்
பத்தியமும் காத்திடுநோ யறிந்து கூட்டே.

(இ-ள்.) பணவிடை இஞ்சிச் சாற்றில் கொடுக்க காக்கைவலி, சுவாச காசம், வாயுக் குடைச்சல், இளைப்பு தீரும். குப்பைமேனிச் சாற்றில் கொடுக்க எலி விஷம் நில்லாதோடும். நோயின் தன்மை கண்டு பத்தியம் கொள்ளவும்.

68. கூட்டப்பா பாஷாண கழஞ் சோரைந்து
கொடியமனோ சிலையினிடை கழஞ் சோரைந்து
நாட்டடா கெந்தியியை கழஞ் சோரைந்து
நலமான மிளகுகழஞ் சிடை மூவைந்து
ஆட்டடா வலுவாகச் சாமமைந்து
யனுபானம் பணவிடைவெள் ளிலையின் சாற்றில்
நீட்டடா ஆடாதோடைச் சார் தன்னில்
நில்லரிது பலவிஷநோய் சொல்லு வேனே.

(இ-ள்.) சுத்தி செய்த வெள்ளைப் பாஷாணம் ஐந்து கழஞ்சும், மனோசிலை ஐந்து கழஞ்சு, கெந்தகம் ஐந்து கழஞ்சு, மிளகு பதினைந்து கழஞ்சு இவைகளைக் கல்வத்திலிட்டு ஐந்து சாமம் நன்றாக அரைத்து பத்திரப்படுத்துக. பணவிடை எள்ளு இலைச் சாற்றில் ஆடாதோடைச் சாற்றில் கொடுக்க பலவித விஷ நோய்கள் நீங்கும்.

குறிப்பு - வெள்ளிலை - எள்ளுச் செடியின் இலை

69. சொல்லுவது பால்தனைக் கேளு கேளு
சூதமடா கழஞ்சியிடை யொருநா லைந்து
வெல்லுவது மைப்பொடிதான் கழ்ஞ் சோரைந்து
மேலான செங்கல்மாக் கழஞ் சோரைந்து
மல்லுவது பசுமஞ்சள் கழஞ் சசோரைந்து
வைத்துவருக் களிப்பாக்கு கழஞ்சோ ரைந்து
மெல்லுவது கல்வத்திலிவை யேற்றிப் பின்
மெத்தனப்பேய் பீர்க்குப்பழச் சார்விட் டாட்டே.

(இ-ள்.) இருபது கழஞ்சி எடை இரசம் கல்வத்திலிட்டு, ஒட்டடை, செங்கல் தூள், பசுமஞ்சள் இவற்றைத் தனித்தனியே இரசத்துடன் சேர்த்து அரைத்து ஊதி எடுக்க இரசம் பால் போல் சுத்தியாகும். பின்னர் பேய் பீர்க்கின் சாறு விட்டரைத்து

70. ஆட்டுவாய் பதினாறு சாமம்பாலை
யப்பனேயெடுத் துடன்பேய்ப் பீர்க்கில் கூட்டி
மாட்டுவாய் மணலளைத்து மேல் மூடிட்டு
வைய்யப்பா மண்டலமோ ரசை வொட்டாமல்
போட்டுவர சீலைதன்னில் வடியிட்டே பின்
பொன்பணத் தினிடைதூக்கி யனுபானங் கேள்
நாட்டுவாய் வித்தகரைசூரணம் நெய் தன்னில்
உத்தமனே கெழுகதுபோ லுள்ளுக்கீயே.

(இ-ள்.) பதினாறு சாமம் அரைத்து எடுத்துப் பேய்ப்பீர்க்கங்காய்க்குள் வைத்து அரைத்து மணலில் மூடிப் புதைக்கவும். ஒரு மண்டலம் வரை வைத்து எடுத்து சீலையில் வடிகட்டி எடுத்து பணவிடை தகரை நெய் இவை கலந்து மெழுகுபோல் செய் இதனை உள்ளுக்குக் கொடுக்க.

குறிப்பு - தகரை - செடி

71. ஈந்திடவே காசமொடு ஈளை வாய்வு
இளைப்பு கண்டமாலை கிரந்திப் புண்ணோடும்
நேர்ந்திடவே எள்ளெண்ணை தித்திப்பாகா
நிலையில்லா வாய்வுவஸ்து தான் சோதாகா

சேர்ந்திட்ட மச்சமிறைச்சி யொன்று மாகா
திறமான நெய்புளிப்போ டுப்புக் கூட்டி
யாந்திடவே நரைமாறுந் தேகங் கெட்டி
யப்பனே பூசைபண்ணு மாதித் தோதே

(இ-ள்.) காசம், ஈளை, வாய்வு, இளைப்பு, கண்டமாலை, கிரந்திப்புண், இவை தீரும். வாய்வு பதார்த்தம் புளி, ஆகாது. மீன், இறைச்சி இவை ஆகா. மருந்து முடிந்தவுடன் நெய், புளிப்பு, உப்பு சேர்த்துக் கொள்க. நரை மாறும். தேகம் கெட்டியாகும்.

## தேள்விடத்திற்கு மருந்து

72. ஆதித்த வாரமமாவாசைக் கிராண மன்று
யதிவெள்ளை யெருக்கினுந்திப் பூசை பண்ணி
சோதித்து வடதிசைவேர் தன்னைக் கொய்து
சொற்கழற்சி வித்துத்தா மரையின் வித்துப்
பேதித்த நற்சசலம்விட் டரைதான் செய்து
பெருங்குன்றி போல் திரட்டி யுள்ளுக் கீத்து
சாதித்த வாய்தனிலும் குளிரப் பூசில்
தரியது தேள்விடந் தப்பாது பாரே.

(இ-ள்.) ஞாயிறு வார அமாவாசைக் கிரணமன்று வெள்ளெருக்கன் செடிக்கு பூசை செய்து, வடதிசை வேரைத் தோண்டி எடுத்து, கழற்சி வித்து, தாமரையின் வித்து இவற்றை ஒன்று சேர்த்து தண்ணீர் விட்டு நன்கு அரைத்து பெரிய குன்றியளவு மாத்திரைகளாகச் செய்து, உள்ளுக்குக் கொடுத்து, தேள் கொட்டிய இடத்திலும் பூசிவிட தேள்விடம் உடன் தீரும்.

## பயித்தியத்துக்கு மருந்து

73. பாரியே பேய்ப்பீரக்கின்விரை முலைப்பால் விட்டு
பஞ்சுபோற் தட்டியிழைத் துணியிற் கட்டி
பூரிய பின்நசியந்தா னுடனே விட்டு
உத்தமனே எலுமிச்சம்பழதாதை நாலாய்க்

கீரியபின் தேத்தான்வித் திழைத்துள் வைத்துக்
கெட்டியாய் பேயத்தியிலை யைச்சுற்றி
மீரியபாண் டத்தினில் வலுவாயிட்டே நீர்
ம்தமாக விட்டதனுள் நடுவுள் வையே.

(இ-ள்.) பேய்ப் பீர்க்கன் விரையை முலைப்பால் விட்டு பஞ்சுபோல் தட்டி ஒரு துணியில் கட்டிநசியமிடவும். எலுமிச்சம் பழத்தை நான்காய்ப் பிளந்து, தேத்தான் வித்தையிழைத்து அதனுள் வைத்து பேயத்தியிலையைக் கெட்டியாகச் சுற்றி வலுவாக காற்று புகாதவாறு சீலைமண் செய்து நீர் மிதமாக விட்டு அதன் நடுவில் வைக்கவும்.

74. வையடா பாண்டத்தைப் பெருந்தீ யிட்டு
மாறாமல் எரித்திடுவாய் சாம் ரெண்டு
கொய்யடா துணுக்குரெண் டிருபோதுந் தான்
கொண்டிடவே மண்டலத்தில் பயித்திய மோடுங்
கையடா கயிற்றினால் பின்கட்டா நீர்
கடினமாய் விடுமூச்சுவிட வொடே டாமல்
செய்யடா சனிவாரந் தேவால யத்தில்
தேக்கு பித்தமெள்ளுந் தீப மேற்றே.

(இ-ள்.) பின்னர் அதனை அடுப்பில் வைத்துப் பெருந்தீயிட்டு இரண்டு சாமம் எரித்து எடுக்கவும். சிறிதளவாக (சிறு துண்டு) தினம். இருபோது ஒரு மண்டலம் கொள்ள பயித்தியம் நீங்கும். பயித்திய நோயுற்றவனை கைகளை பின்கட்டாக கயிற்றினால் கட்டி, மூச்சுத் திணறும்படியாக தேவாலயத்தில் வைக்கவும். எள்ளெண்ணெய் தீபம் ஏற்றவும்.

### கருவங்க பற்பம்

75. யேத்தியிடு கருவங்கம் பல மோரைந்து
யிதமாகத் தகடாக்கிக் குருவைப் போற்றி
டாத்திடு மருதனையாட் டதனுள் வைத்து
பதறாமல் போடுபுடங் கசமே முக்கால்

லாத்திடும் பற்பமிடை பலமே தூக்கி
யனுபானம் நெய்யுடனே யறிந்து கூட்டி
சேத்திடுமே நாளிருபோதுங் கொள்வாய் நீதான்
தீராத நோய்பலவுந் தீரும் பாரே.

(இ-ள்.) கருவங்கம் (காரீயம்) 175 கிராம் தகடாகத் தட்டி, மருதோன்றியிலையை அரைத்து அதனுள் வைத்து கெசபுடம் மூன்று தடவை போட்டு எடுக்கப் பற்பமாகும். பற்பத்தை அளவுடன் நெய்யில் கலந்து கொடுக்க தீராத நோய் யாவும் தீரும்.

குறிப்பு - பற்பமிடை பலமே தூக்கி என இருப்பினும் குன்றியளவு கொள்ளுதலே சிறந்ததாகும்.

## வெள்வங்க பற்பம்

76. பாரப்பா வெள்வெங்கம் பலமோ ரைந்து
பாங்காகப் புளியிலைபோல் தகடு தட்டி
நேரப்பா வேப்பிலையைக் கோணி தகட்டில்
நிகழாமல் மஞ்சள்தூள் தூவித் தூவி
சேரப்பா தகடதிலே பரப்பி சுத்தித்
திறமாகக் கட்டிகெச புடத்திற் பற்பம்
மாரப்பா பணவிடைதான் நெய்யோடுங் கொள்
வாங்காத நோய்பலவும் மரித்துப் போமே.

(இ-ள்.) வெள் வங்கம் (வெள்ளீயம்) 175 கிராம் புளியிலை போல் தகடு தட்டி ஒரு கோணியில் வேப்பிலையைப் பரப்பி அதன மேல் மஞ்சள் தூளைத் தூவி அதன் தகடுகளைப் பரப்பி சுருட்டிக் கட்டி கெசபுடமிடப் பற்பமாகும். பணவிடை நெய்யுடன் கொள்ள நோய் பல தீரும்.

## கருவங்க பற்பம்

77. போமப்பா கருவங்கம் பலமோ ரைந்து
போட்டடித்து வலுவான தகடு தட்டி
யாமப்பா வாடாதோ டிலையை யாட்டி
யப்பனே பிசகாமல் கவசஞ் செய்து

தாமப்பா தேங்காய்கொட் டாங்கச்சிக்குள்
தவறாமல் வைத்துடனே மேல் மூடிட்டு
நேமப்பா கெசபுடத்தில் பற்ப மாச்சு
நெடிய பணவிடைநெயி லருந்திப் பாரே.

(இ-ள்.) கருவங்கத்தை வலுவான தகடுதட்டி, ஆடாதோடையிலையை அரைத்துக் கவசஞ் செய்து தேங்காய் கொட்டாங்கச்சிக்குள் வைத்து மேல்மூடி கெசபுடம் போட்டு எடுக்கப் பற்பமாகும்.

78. பாருநீ வெள்வங்கம் பலமோரைந்து
பாங்காகக் குண்டதுபோல் திரட்டி வாங்கி
நேருநீ குப்பைமுள்ளி தன்னை யாட்டி
நெகிழாமல் குண்டதின்மேல் கவசஞ் செய்து
யேருநீ கெசபுடத்திற் பற்ப மாச்சு
யியம்புகிறேன் பணவிடைதான் நெய்யோடுண்ணு
தேருநீ பாய்மிதிக்க யாகா தாகா
சேராது நோய்பலவுந் தெளிந்து காணே.

(இ-ள்.) சுத்தித்த வெள்வங்கம் 175 கிராம் குண்டு போல் திரட்டி எடுத்து, குப்பைமுள்ளி சமூலத்தை அரைத்து குண்டிற்குக் கவசம் செய்து கெசபுடமிட்டெடுக்கப் பற்பமாகும். பல நோய் தீரும்.

79. காணப்பா கருவங்கம் பலமோரைந்து
கனத்ததோர் சட்டியிலிட் டடுப்பி லேற்றி
பூணப்பா துத்தியிலைக் கூடப் போட்டு
உத்தமனே வறுத்திடுவாய் இருநால் சாமம்
தோணப்பா செம்பொனிறம் செந்தூரிக்கும்
தோணபொற் பணவெடைதான் அனுபானங் கேள்
போணப்பா பசுவின்நெய் யுடநாட்டிக் கொள்
பிரியாத நோய்பலவும் பிரியும் தானே.

(இ-ள்.) சுத்தி செய்த கருவங்கம் 175 கிராம் ஒரு சட்டியிலிட்டு அடுப்பிலேற்றி, துத்தியிலையைப் போட்டு எட்டு சாமம் வறுத்து எடுக்க செம்பொன்னிறமாகச் செந்தூரமாகும். பணவெடை பசுவின் நெய்யுடன் கலந்துண்ண நோய் பலவுந் தீரும்.

80. தானென்ற கருவங்கம் பலமோரைந்து
தவறாம லாயிபதம் பூசை பண்ணி
மானென்ற இலுப்பைநெய் யதிலே யூற்றி
வளமான சட்டியிலிட் டடுப்பி லேற்றி
நானென்ற குமரியுடவேர்க் கண்டித்து
நயமாக பரிதிமுன்னு லர்த்திட்டே பின்
நெனென்ற விலாரிவிற கெரிநாற் சாமம்
மிதமாக வறுக்கச் செந்தூரங் கேளே.

(இ-ள்.) இலுப்பை நெய்யில் உருக்கி ஊற்றி சுத்தம் செய்த கருவங்கம் 175 கிராம் சட்டியிலிட்டு அடுப்பிலேற்றி விலாரி விறகால் எரித்து இரவியில் உலர்த்தி எடுத்த குமரிவேர்த்துண்டால் நான்குசாமம் வறுத்து எடுக்கச் செந்தூரமாகும்.

81. கொள்ளப்பா பொற்பணத்தினிடை தூக்கி கூட்டு
புனிதமுடநெய் யனுபானத்தாலே மேகந் தீரும்
மள்ளப்பா தேனிலிழை நாள் மூவைந்து
மீறியதோர் பக்கசூலை வாதந் தீரும்
மெள்ளப்பா சீனியுறவாகக் கொண்டால்
உத்தமனே பித்தத்தோ டூரல் போகும்
தள்ளப்பா பத்தியந்தா னொன்று மில்லை
தப்பாது இம்முறையைச் சாதிப் பாயே.

(இ-ள்.) பணவிடை நெய்யில் கலந்துண்ண மேகம் தீரும். தேனில் கலந்து பதினைந்து தினங்கள் கொடுக்க பக்க சூலை, வாத நோய் தீரும்

குறிப்பு - சீனி கலந்துண்ண பித்தம், ஊரல் போகும். பத்தியம் இல்லை.

## அப்பிரக செந்தூரம்

82. சாத்தித வப்ரேகம் பலமோ ரைந்து
தாடித்துக் கொடிக்கள்ளி சார்விட் டாட்டி
பேதித்த வில்லைதன்னை உலர்த்திக் கொண்டு
பிசகாமல் கெசபுடமிட் டிப்படியே போட்டு
சோதித்த சிறுகீரைசாற் றாலாட்டி வில்லை
சுக்குபோ லுலர்த்திகெட புடமே போடு
தீதித்த அருணனைப்போல் செந்தூரிக்கும்
சிவசிவா தேவிபதம் பூசைபண்ணே.

(இ-ள்.) ஐந்து பலம் அப்ரகத்தை சுத்தி செய்து முறைப்படி நவனீதம் செய்து எடுத்து கொடிக் கள்ளிச் சாறு விட்டு அரைத்து, வில்லை செய்து உலர்த்தி கெசப்புடமிட்டெடுக்கவும். மீண்டும் சிறுகீரை சாற்றாலாட்டிச் சிறு வில்லை செய்து சுக்கு போல் உலர்த்திக் கெசபுடமிடவும். சூரிய உதயம் போல் செந்தூரமாகும்.

83. பண்ணடா செந்தூரம் பணமே தூக்க
பசுவின்நெய் திரிகடுகு கஷாய மிஞ்சி
எண்ணடா தேனிலது பானஞ் செய்
இருபோது மண்டலமிப்படியே கொண்டால்
மெண்ணடா காசமொடு ஈளை குன்மம்
மீறியதோர் சன்னிசுர மிளைப்பு வாய்வு
மொண்ணடா நில்லாதுநிலை கெட்டோடும்
உத்தமனே இச்சாபத்தி யமே தேடே.

(இ-ள்.) பணவிடை செந்தூரம் எடுத்து, பசுவின் நெய், திரிகடுகு கஷாயம், இஞ்சிச் சாறு, தேன் இவைகளில் நோய்க்குத் தக்கவாறு மண்டலம் கொள்ள காசம், ஈளை குன்மம், சன்னி, சுரம், வாய்வு இவை தீரும். இச்சாபத்தியம் இருக்கவும்.

## ஐந்துப்பு செந்தூரம்

84. தோட்டடா வைந்துப்பு பலமோரைந்து
திறமான வன்னிப்பட்டைச் சார்விட் டாட்டி
யாட்டடா வில்லைபிடித் துலர்த்திச் சக்கை
யப்பனே கீழ்மேலுமதிர் கவசஞ் செய்து
போட்டடா கெசபுடத்தில் செந்தூரிக்கும்
பூசித்த்க் கழஞ்சியெடையொன்று தூக்கி
நாட்டடா தேனிலிழை குன்மம் வாய்வு
நாடாது இச்சாபத்தியம் மாகா துண்ணே.

(இ-ள்.) ஐந்துப்பு (ஐந்துவகை உப்புகள்) கல்லுப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, கறியுப்பு, இவைகள் 175 கிராம் வன்னிப் பட்டைச் சாற்றாலாட்டி வில்லை செய்து உலர்த்தி (வன்னிப் பட்டையின் சாறு எடுத்த) சக்கையால் கவசம் செய்து கெசப்புடமிட்டெடுக்கச் செந்தூரமாகும். கழஞ்சி எடைதேனில் கலந்துண்ண குன்மம் வாய்வு தீரும். இச்சாபத்தியம் இருக்கவும்.

## மஞ்சள் காமாலைக்கு மருந்து

85. உண்ணப்பா மாம்பட்டை சாறா ழாக்கு
உத்தமனே ஆவின்தன் பாலா ழாக்கு
அண்ணப்பா இரண்டுசேர்நத் தெழுபோதுங் கொள்
அப்பனே மஞ்சன்கா மாலை தீரும்
திண்ணப்பா ஆவின்பாலே அன்னம்
சேராதே புகையிலையும் புளியோடுப்புக்
கண்ணப்பா சொல்லுகிறேன் முறை பொய்யாது
காணலா மின்னமொரு சீந்தில் தண்டே.

(இ-ள்.) மாம்பட்டைச்சாறு ஒரு ஆழாக்கை, ஆவின்பால் ஒரு ஆழாக்கு இரண்டுஞ் சேர்த்து ஏழு நாட்கள் கொள்ள மஞ்சள் காமாலை தீரும். ஆவின் பால் சேர்த்த அன்னம் சாப்பிடவும். புளி, உப்பு நீக்கவும். புகையிலை கூடாது. மற்றும் ஒரு முறை கூறுகின்றேன். சீந்தில் தண்டு (இடித்துப் பிழிந்த)

86. தண்டடாச் சாராழாக்காவின் பாலா ழாக்கு
சதிரான பழச்சாராழாக் கிம் மூன்றுங்
கிண்டடா மத்தித்துநா லேழுங் கொள்ள
கெடியான மஞ்சள்கா மாலை தீரும்
முண்டடா பத்தியமொன்றா காதாகாது
முத்தமனே ஆவின்பால னனங் கொள்ளு
திண்டடா மணிக்கட்டில் வீக்கம் பண்ணும்
நில்லரிது நோயகலு மதியுத்தாடே

(இ-ள்.) சாறு ஒரு ஆழாக்கு, ஆவின் பால் ஒரு ஆழாக்கு, எலுமிச்சம் பழச்சாறு ஒரு ஆழாக்கு இம்மூன்றையும் மத்தித்து ஏழுதினங்கள் கொள்ள மஞ்சள் காமாலை தீரும். ஆவின் பாலன்னம் சாப்பிடவும். புளி, உப்பு, புகையிலை நீக்கவும். மணிக்கட்டில் வீக்கம் செய்விக்கின்ற காமாலை நீங்கும் என்பதனைஅறிந்து செய்.

87. உத்த நிம்பப்பழ சாரீராழாக்கு
வோகோகோ ஈருள்ளிச் சாராழாக்கு
முத்த கையான்தகரைச் சாரீராழி
முதலான நீர்முள்ளிச் சாரீராழி
சித்த சங்கங்குப்பிச் சாராழாக்கு
சேர்த்திடும் வாதமடக்கிச் சாராழாக்கு
வித்த கோவின் நீர் எருமைநீரு
வெள்ளாட்டு நீரீராழாக்குக் கூட்டே.

(இ-ள்.) எலுமிச்சம் பழச்சாறு இரண்டு ஆழாக்கு, ஈருள்ளிச் சாறு ஒரு ஆழாக்கு, கையான் தகரைச் சாறு இரண்டு ஆழாக்கு, நீர் முள்ளிச் சாறு இரண்டு ஆழாக்கு சங்கங்குப்பிச்சாறு ஒரு ஆழாக்கு தழுதாழைச்சாறு ஒரு ஆழாக்கு, பசு மூத்திரம், எருமை மூத்திரம், வெள்ளாட்டு மூத்திரம் வகைக்கு ஒரு ஆழாக்கு இவைகளை ஒன்று சேர்த்து,

88. கூட்டிடு பொற்கடுக்காய் பல மோரைந்து
கொடிதான் அரப்பொடியும் பல மோரைந்து
மாட்டிடு மஞ்சளிடை பலமோ வொன்று
மகத்தான கிட்டமிடைப் பல மோரைந்து
நாட்டிடு வோருள்ளிப் பலமோ வொன்று
நலமான சுக்கினிடைர் பலமோ வொன்று
போட்டிடும் காயம்வராக னிடையு மொன்று
போட்டிடித்து வடித்திடுமுன் சாற்றில் சேரே.

(இ-ள்.) பொன் நிறமுள்ள கடுக்காய் ஐந்து பலம் அரப்பொடி 175 கிராம், பசு மஞ்சள் 35 கிராம், கிட்டம் 175 கிராம், ஒரு தலைப்பூண்டு 35 கிராம், சுக்கு 35 கிராம், பெருங்காயம் விராகனிடை ஒன்று இடித்து வடித்து முன் சாற்றுடன் சேர்க்கவும்.

89. சேரப்பா கிளறிக்கதிர் புடமே வைத்து
திறமாகக் கிண்டிடவே களி போலாகும்
நேரப்பா வெறுகடியின் பிரமாணந் தான்
நேமித்து மிருபோது மெழுநாள் கொள்ள
பேரப்பா காமாலை யில்லை யில்லை
பேணாதே புகையிலையும் புளியோ டுப்பு
மோரப்பா பிளித்ததோ டன்னங் கொள்ளு
முறையின்ன முண்டுற்றுப் பார்த்திடாயே.

(இ-ள்.) சேர்த்து அவைகளை சூரிய புடத்தில் வைத்துக் கிளறி விடவும். களி போலாகும். வெறுகடி அளவு (பூனையின் கால் அடி அளவு) இருபோது ஏழு நாட்கள் கொள்ள காமாலை இல்லாதோடும். புளி, புகை, உப்பு நீக்கவும். புளித்த மோர் சேர்த்த அன்னம் கொடுக்கவும். இன்னமும் முறைகள் உண்டு. கேட்பாயாக.

90. பார்த்திடுவாய் சிறுமல்லிச் சாரீராழி
பாங்குகையான் தகரைச்சா ரதுபீராழி
சேர்த்திடு வெள்ளரியின் சாரீ ராழி
திறமாகச் சட்டியிலிம் மூன்றுங் கூட்டி

மாத்திடு கிட்டமிடைப் பலமோரைந்து
வளமான அரப்பொடியும் பல மோரைந்து
யேத்திடு மிளகுசுக்கு உள்ளிமூன்று
மிடைவகைக் கோர்பலமுன் சாற்றாலாட்டி

(இ-ள்.) சிறுமல்லியிலைச் சாறு (முல்லையிலை) இரண்டு ஆழாக்கு கையான்தகரைச் சாறு இரண்டு ஆழாக்கு வெள்ளரியிலைச் சாறு இரண்டு ஆழாக்கு இவைகள் மூன்றையும் ஒரு பாத்திரத்தில் விட்டு இரும்புச் சிட்டம் 175 கிராம், அயப்பொடி 175 கிராம், மிளகு, சுக்கு, பூண்டு இவை வகைக்கு 35 கிராம் எடுத்து முன் சாற்றால் அரைத்து,

91. ஆட்டடா மயன்போ லாகும் போது
அப்பனே முன்வைத்த சாற்றில் போட்டு
காட்டடா பரிதியுடன் கிண்டிக் கிண்டி
களிபோல யிருகிப்போ மரிசிப்பொங்கி
நீட்டடா எள்ளெண்ணை யதிலே குத்தி
நேருவெறு கடிமருந்து கூடப் போட்டு
ஊட்டடா நாளெட்டு வயிர் பேதிக்கு
மொழியுமே காமாலை தெரிந்து கேளே.

(இ-ள்.) மை போல் ஆகும் போது முன் வைத்துள்ள சாற்றில் போட்டு வெய்யிலில் வைத்துக் கிண்டி, களி போல் இறுகிப் போகும் பதத்தில் எடுத்து அரிசிப் பொங்கல் செய்து எள்ளெண்ணெய் அதில் சிறிது விட்டு பூனையின் காலடி அளவு முன் வைத்துள்ள மருந்தினையும் கூட்டி எட்டு தினங்கள் கொடுக்கவும். வயிறு பேதியாகும். காமாலை ஒழிந்து போகும்.

92. கேளு கையான்தகரைக் கீழ்க்காய் நெல்லி
கெடியான நிம்பப்பழத்தோ டிம்மூன்றுக்கும்
நீளு விடாதச்சாறு வகை யாழாக்கு
நெடிதான அரப்பொடிபொற் கடுக்காய் சுக்குத்

தாளுநீ வகையொன்று பலமோ ரெண்டு
சன்னியரைத் தேடுகலச் துள்ளே வைத்து
நாளு மொருபத்துபதைத் திடு பூமிக்குள்
நாடியெடு பூசைபண்ணு முறுதி யாமே.

(இ-ள்.) கையான் தகரை, கீழ்க்காய் நெல்லி, எலுமிச்சம்பழம் இவைகளின் சாறு வகைக்கு ஒரு ஆழாக்கு, அயப்பொடி, சுக்கு, கடுக்காய் வகைக்கு 70 கிராம் இவைகளை அரைத்து முன் சொன்ன சாற்றுடன் கலந்து ஒரு கலசத்துள் வைத்து மேல் மூடி, பத்து தினங்கள் பூமியில் புதைத்து வைத்து எடுத்துப் பூசை செய்க.

93. ஆமப்பா நாளிருபதிரு போதுங் கொள்
எப்பனே ஊதுகாமா லைநீங்கிப்
போமப்பா மோருஞ்சாதத் தோடு பண்ணுப்
புகழான யீருள்ளியொக் கக் கூட்டி
தாமப்பாப் புகையிலை புலியோ டுப்புசி
சாதிக்க லாகாதுத் தள்ளு தள்ளு
நாமப்பா சொல்லுகிறேன் முறைப பொய்யாது
நன்றானக் கலிக்கமொன்று நாடிக் கேனே.

(இ-ள்.) தினம் இருவேளை இருபது தினங்கள் கொள்ள ஊது காமாலை நீங்கும். மோருஞ் சாதம், வெங்காயம் கூட்டி உண்ணவும். புகையிலை, புளி, உப்பு இவைகள் ஆகா. இம்முறை பொய்யாகாது. மேலும் கலிக்கமொன்று கூறுகின்றேன் கேள்.

**காமாலைக்கு கலிக்கம்**

94. கேளப்பா நலமான தக்காளி வேரைக்
கெடியான பழச்சாறு தனைவிட் டாட்டி
நீளப்பா கயறுநிழ லுலரச் செய்து
நெடியபழச் சாறுடனேஎள் ளெண்ணெய் குத்தி

மூளப்பா உறைத்துஇரு கண்ணில் போடு
முட்டைவெள் ளைக்கருவு போலே வீழும்
நாளப்பா யிப்படியோரைந்து செய்தால்
நாடாது காமாலையுரைத்து துப்பாரே.

(இ-ள்.) தக்காளி வேரை எலுமிச்சம் பழச்சாறு விட்டு மயனம் போல் செய்து கயிறு திரிப்பது போல் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்க. சிறிது பழச்சாறும், எள்ளெண்ணையும் கலந்து மேல் கண்ட மாத்திரையை உரைத்துக் கண்ணில் கலிக்கமிட முட்டை வெண்கருபோல் வீழும். இவ்வாறு ஐந்து தினங்கள் செய்ய காமாலை நாடாது போகும்.

95. பாரடா கீழ்க்காய் நெல்லி சமூலம்
பாங்கான மணத்தக் காளி சமூலஞ்
சேரடா வரைத்துஎலு மிச்சங்காய் போல்
திரட்டியே உண்டை செய்து பூசை பண்ணி
நேரடா நாள்மூன்று வரள் காமாலை
நில்லரிது நில்லரிது முறை பொய்யாது
தேரடா பத்தியந்தா னொன்று மில்லை
செப்புகிறேன் ஆவின்நெய் யன்ன முண்ணே.

(இ-ள்.)கீழ்க்காய் நெல்லி சமூலம், மணித்தாக்காளி சமூலம் இவற்றை நன்கு கல்வத்திலரைத்து எலுமிச்சங்காய் போல் உருண்டைசெய்து மூன்று தினங்கள் கொடுக்க வரள் காமாலை முதலியன நீங்கும். பத்தியம் இல்லை. பசுநெய் சேர்த்து உணவு கொள்ளவும்.

96. உண்ணப்பா சிறுகீரை பொன்னாங் கண்ணி
யோகோகோ நீர்ப்பூலாவேர் சீந்தில் தண்டு
நண்ணப்பா வகையிலொரு பலமே தூக்கி
நிறைபலங் கால்மிளகு வசம்போ டுள்ளி
சிண்ணப்பா வறைநெய்யீ ராழாக் கேடா
தாக்கியடுப் பேற்றியெரித் திறுத்துக் கொண்டு
எண்ணப்பா இருபோது பலம்ரெண் டுண்ண
யிழியும் வரள்காமாலை யிதுதப் பாதே.

(இ-ள்.) சிறுகீரை, பொண்ணாங்கண்ணி, நீர்ப்பூலாவேர், சீந்தில் தண்டு வகைக்கு 35 கிராம் மிளகு, வசம்பு, உள்ளி வகைக்கு 9 கிராம் இவைகளை இரண்டு ஆழாக்கு நெய்யில் போட்டு எடுத்து வடிகட்டி வைத்துக்கொள்க. தினம் இருபோது 70 கிராம் நெய்வீதம் உண்ண வரள் காமாலை நீங்கும்.

97. தப்பாது கண்பருத்துக் கைகா லோய்ந்து
தண்ணீர்வாய் மிகவூறுமே நீர்க்கா மாலை
யப்பாது கையான்தகரை மிளகு மஞ்சள்
ரெண்டு செருப்படை சமனா யாட்டி
மெய்ப்பாக எலுமிச்சங்காய் போற கொண்டு
வெள்ளாட்டு நீறுங்கால்ப் படியோ டூட்டி
யொப்பாக நாள்மூன்று வயிர் பேதிக்கு
மொழியும் நீர்க்காமாலை மோருங் கூட்டே.

(இ-ள்.) கண் பருத்து, கை கால் ஓய்ந்து, வாயில் தண்ணீர் மிகவூறுகின்ற நீர்க்காமாலைக்கு கையான்தகரை, மிளகு, மஞ்சள் இவைகளுக்குச் சமனாய் சிறுப்படை சேர்த்து அரைத்து எலுமிச்சங்காயளவு, வெள்ளாட்டு மூத்திரம் கால் படியுடன் கலந்து மூன்று தினம் கொடுக்க பேதியுண்டாக்கி, நீர்க்காமாலை ஒழியும். மோர் அன்னங் கொள்க.

98. கூட்டப்பா செறுப்பசைச் சாரீரா ழாக்கு
கிளங்கை யான்தகரைச் சாரீர ழாக்கு
மூட்டப்பா மிளகுவசம் புள்ளி தட்டி
மூன்றுக்கும் வகையிலரைப் பலமே போட்டு
மாட்டப்பா வாமணக் கெண்ணை யீராழி
மாறாமலெரித் திறுத்துப் பலமிரண்
ஊட்டப்பா தினமேழு வயிர் பேதிக்கு
மொழிய நீர்க்காமாலை தாக்கு தாக்கே.

(இ-ள்.) செறுப்படைச் சாறு இரண்டு ஆழாக்கு கையான்தகரைச் சாறு இரண்டு ஆழாக்கு, மிளகு, வசம்பு, உள்ளி

வகைக்கு 17½ கிராம் தட்டி ஆமணக்கெண்ணெய் இரண்டு ஆழாக்குடன் கலந்து எரித்து இறுத்து 70 கிராம் எண்ணெய் ஏழுதினங்கள் கொள்ள வயிறு கழிந்து நீர்க்காமாலை ஒழியும்.

99. தாக்குநீர் முள்ளிவிரைப் பலமோ ரெண்டு
தனியவறுத் திடிபொடிசெய் பதனஞ் சுக்கு
தூக்குநீ களிப்பாக்கு கடுக்காய் மஞ்சள்
தொந்தித்து வகைநாலும் விரா கனெட்டு
நோக்குநீ யரைப்பொடியின் விரா கனைந்து
உண்மையாய்க் கூட்டியரைத் துண்டை மூன்று
தோக்குநீ நாள்மூன்று தினமோரு ருண்டை
சோகைஇளைப் போகுமப்பா பகரக்கேளே.

(இ-ள்.) நீர்முள்ளி விரை 70 கிராம் வறுத்துப் பொடி செய்து வைக்கவும். சுக்கு, களிப்பாக்கு, கடுக்காய் மஞ்சள் வகைக்கு விராகனெடை எட்டு எடுத்து ஒன்று படுத்தவும். அயப்பொடி விராகனிடை ஐந்து மேற்கண்ட எல்லாவற்றையும் ஒன்று கூட்டி நன்கு அரைத்து மூன்று உருண்டைகளாகச் செய்து, தினம் ஒன்று வீதம் மூன்று தினம் சாப்பிட சோகை இளைப்பு போகும்.

## வெள் ஒக்காளத்துக்கு மருந்து

100. கேளடா வில்வக்காய் தண்ணீர் குத்திக்
கெடியானக் கல்லிலுரைசுண் டைக்காய் போல்
தாளடா இளவெந்நீரரை யாழாக் குக்கிற்
றாக்கியிந்தப் படிமூன்று நாளுண்டாக் கால்
நீளடா தொந்தமுள்ள வெள்ளோக் களம்
நீங்குமே இம்முறைதப் பாது நீவித்
தூளடா சீலையில்வைத் திரிபோல் செய்து
கூட்டுபுகை வாசனை நாசிக்குக் காட்டே.

(இ-ள்.) வில்வக் காயை தண்ணீர் விட்டுக் கல்லில் உரைத்து சுண்டைக்காயளவு எடுத்து இளவெந்நீர் அரையாழாக்கிற் கலந்து கொடுக்கவும், இவ்வாறு மூன்று தினங்கள் கொடுக்க.

வெள்ளோக்காளம் நீங்கும். அவுரி சமூலச் சூரணத்தை சீலையில் வைத்து திரிபோல் சுருட்டி கொளுத்தி ஊதிவிட்டுப் புகையை நாசியில் இழுக்கவும்.

101. காட்டடா எலுமிச்சம்பழச் சார் தன்னில்
கண்டங்கத் திரியடிவேர்க் கழஞ்சி ரெண்டு
ஆட்டடா மயனம்போ லாகும் பாரு
யப்பனே யிப்படி நாள் மூன்று ஈந்து
ஓட்டடா வெள்ளோக்காளந் தான் நீங்கும்
ஓகோகோ யரிசிப் பொரி மாவிற் றேனை
யூட்டடா மத்தித்து நாவிற் பூசி
உள்ளுங் கொள்வெள்ளோக் காளம்போகும் பாரே.

(இ-ள்.) கண்டங்கத்திரி அடி வேரை இரண்டு கழஞ்சு, எலுமிச்சம் பழச்சாறு விட்டு மயனம் போல் அரைத்து மூன்று தினங்கள் கொடுக்க வெள்ளோக்காளம் நீங்கும். அரிசிப் பொரிமாவில் தேனைவிட்டு மத்தித்து நாவில் பூசி உள்ளுக்குங் கொள்ள வெள் ஓக்காளம் போகும்.

102. பாருமுடக் கொத்தான்வேர்ப் பலமோவொன்று
பாங்கான வுள்ளிபருப்புப் பலமோவொன்று
சேருவெள் ளாட்டுப்பாலா ழாக்கெட்டு
சிறுகத்தீ மூட்டியுழக் காகக் காய்ச்சி
நேருமிதுக் கடைந்திப்படி நாள்மூன்று
நித்தமிரு போதுண்ணத் திறமாம் வாய்வுந்
தீருமிது தப்பாதுமுறை பொய்யாது
சேராதே புளிபுகையோ டுப்புக்கேளே.

(இ-ள்.) முடக்கொற்றான் வேர் 35 கிராம் பூண்டுப் பல் 35 கிராம் இவற்றை வெள்ளாட்டுப் பால் எட்டு ஆழாக்குடன் கலந்து சிறுதீ மூட்டி ஒரு உழக்காகக் சுண்டக் காய்ச்சிக் கடைந்து எடுத்துக் கொடுக்கவும். இவ்வாறு மூன்று தினம் இரண்டு வேளை வீதம் கொடுக்க வாய்வுப் பொருமல் தீரும்.

## அந்தர வாயுவுக்கு இரத்த பித்தத்துக்கு

103. கேளப்பா ரெத்த பித்தம் உஷ்ண ரோகங்
கெடியாகத் தீருதற்கு வகையைக் கேளு
வாளப்பா சந்தனமோ டேலஞ் சுக்கு
வளமான கூவிளம்வேர் சமனாய்க் கொண்டு
தாளப்பா நறுக்கியதில் தண்ணீர் வார்த்து
தவறாமல் எட்டொன்றாய்க் காய்ச்சி வாங்கி
யாளப்பா சீனியுடன் கலந்து கொண்டு
அப்பனே மூன்று நாள் அருந்திடாயே.

(இ-ள்.) உஷ்ணத்தால் எழுந்த வியாதிகட்கும், இரத்த பித்தத்திற்கும் மருந்து கூறுகின்றேன். சந்தனம், ஏலம், சுக்கு, வில்வவேர் இவைகளை சம எடை எடுத்து நறுக்கி எடுத்து பாண்டத்தில் போட்டு தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க்காய்ச்சி எடுத்து அளவின்படி சீனி கலந்து மூன்று தினம் சாப்பிடவும்.

104. அருந்திடவே இருநாலு நேரங் கொள்ள
வடுபடா ரெத்தபித்த மகன்று போகுந்
தெரிந்திடவே கைமுறையாய்ச் சொன்னேன் மக்காள்
தேவிப்பதம் பூசித்துத்தினந் தோறும் தான்
பரிந்திடவே பத்தியந்தா னொன்று மில்லை
பகுந்தபழம் புளியுப்பு வறுத்துக் கொள்ளு
கருந்திடவே திரோதாயி மயக்கந் தள்ளி
கைமுறையாய்க் கொண்டிடவே கழன்று போமே.

(இ-ள்.) தினம் நான்கு வேளை கொள்ள ரெத்தபித்தம் அகன்று போகும். பத்தியம் சுட்ட பழம்புளி, வறுத்த உப்பு சேர்த்துக் கொள்ளவும். பெண் சேர்க்கை ஆகாது.

## ஈளை சுவாசத்திற்கு

105. போமடா ஈளைமுதல் சுவாச காசம்
போத்திருமல் சேத்துமங்க ளிளைப்பு மூச்சே
யாமடா தோடைநொச்சில் வாதம் போக்கி
அப்பனே செம்முள்ளிக் கடையிம் பூரல்

காமடாதூதுதளை கண்டங் கத்திரி
கானகத்தி னருந்துளசி முருங்கை யிண்டு
வோமடா வுசிலம்பட்டை யப்பைக் கோவை
யுறவிடித்துத் தண்ணீரில் பிட்டு வையே.

(இ-ள்.) ஈளை, இருமல், சுவாசகாசத்திற்கு ஆடாதோடை, நொச்சில், தழுதாழை, செம்முள்ளி, இம்பூரல், தூதுவளை, கண்டங்கத்திரி, காட்டுத்துளசி, முருங்கை யிண்டு, உசிலமரப் பட்டை, அப்பக்கோவை இவைகளை கல்லுரலில் இடித்து தண்ணீர் விட்டுப் பிட்டவியல் செய்யவும்.

106. வையப்பா பிட்டவியல் தண்ணீர் தன்னை
வளமான பீங்கானுள் வைத்துக் கொண்டு
செய்யப்பா திரிகடுகு யரத்தை யோமம்
சீரகமீ ரெண்டுடனே கிராம்பு பத்திரி
பொய்யப்பா சொல்லவில்லை யக்கிறா காரம்
புகழ்நறுக்கு மூலமடாகோஷ் டந்தேக்கு
மையப்பா பதிமூன்றும் சமனாய்ச் சேர்த்து
அப்பனே கருகாமல் வறுத்து வாங்கே.

(இ-ள்.) பிட்டவியல் செய்த தண்ணீரை பீங்கானில் வைத்துக் கொண்டு சுக்கு, மிளகு, திப்பிலி, சிற்றரத்தை, ஓமம், சீரகம், பெருஞ்சீரகம் (இரண்டு சீரகம்) கிராம்பு, தாளிசபத்திரி, அக்ரகாரம், திப்பிலிமூலம், கோஷ்டம், சிறுதேக்கு பதிமூன்று சரக்குகளையும் சமனாய்ச் சேர்த்து கருகாமல் வறுத்து எடுத்து

107. வாங்கியே பொடிசெய்து வைத்துக் கொண்டு
வளமான முன்நீரில் விராகன் போட்டு
தேங்கியே தேனதிலே விட்டுக் கிண்டி
திரட்டிடாய் லேகியம் போலி ருபோதுந் தான்

ஓங்கியே இருமூன்று நேரங் கொள்ள
ஓடுமடா சயமிருமல் போகும் பாரு
பாங்கியே புளிபுகையு மிறைச்சி மச்சம்
பாராதே பெண்மயக்கந் தள்ளிப் போடே.

(இ-ள்.) சூரணம் செய்து வைத்துக் கொண்டு முன் சொன்ன நீரில் ஒரு வராகனிடை சூரணத்தைப் போட்டு தேன்விட்டுக் கிண்டி லேகியம் போல் செய்து தினம் இரு வேளை இரண்டு மூன்று தினங்கள் கொள்ள சயம், இருமல் தீரும். புளி, புகை, இறைச்சி, மீன், பெண்மயக்கம் கூடாது.

**அஷ்ட குன்மத்துக்கும் லேகியம்**

108. போடவே வயிற்றுவலி அஷ்ட குன்மம்
போவதற்கு இன்னமொரு அவிழ்தங் கேளு
ஆடவே இஞ்சிரசம் படிதா னொன்று
அப்பனே பழச்சாறும் கொம்புத் தேனும்
தேடவே வரிக்குமட்டிப் பழத்தின் சாறும்
சேர்த்துவிடு வகைக்குக் கால் படியுமாக
நாடவே பாண்டத்தி லிட்டு மூடி
நலமாகப் பாகுபதம் எரித் திடாயே.

(இ-ள்.) இஞ்சி சாறு ஒரு படி, எலுமிச்சம் பழச்சாறு, கொம்புத் தேன், வரிக் குமட்டிப் பழச்சாறு வகைக்குக் கால் படி இவைகளை ஒரு பாண்டத்திலிட்டு அடுப்பிலேற்றி எரித்து பாகு பதம் பார்த்து

109. எரித்திடாய் திரிகடுகு திரி பலாதி
யெடுத்திட்ட சிவதைவேர் தகர மோமம்
பிரித்திட்ட செவ்வியம் திப்பிலியின் மூலம்
பகர்ந்திட்ட கோஷ்டமடா மதுரம் பத்திரி
தரித்திடாய் விளங்குமுஞ் சித்திரையின் மூலம்
கருவான ரோகனியுஞ் சரக்கோ டெல்லாந்
தெரிந்திடாய் ஒவ்வொன்று விராகன் நாலு
சேர்த்துமே இளவறுப்பாய் வறுத்துக் கொள்ளே.

(இ-ள்.) திரிகடுகு, திரிபலாதி, சிவதை வேர், தகரை வேர், ஓமம், செவ்வியம், திப்பிலிமூலம், கோஷ்டம், அதிமதுரம், இலவங்கப்பத்திரி, வாய்விளங்கம், சித்திரமூலம், கடுகுரோகணி முதலிய சரக்குகள் வகைக்கு நாலு விராகனெடை வீதம் எடுத்து இள வறுப்பாய் வறுத்துக்கொண்டு

110. கொள்ளடா இடித்ததனை வடிசெய்தே பின்
முன்செய்த பாகுடனே சிறுகத் தூவி
மெள்ளடாலேகியத்தைப் பதமாய்க் கிண்டி
பதனம் செய்த பாண்டத்தை சீலை செய்து
விள்ளடா குருவைநெல் பாண்டத் திட்டு
மேலிந்த நெல்லிட்டுச் சீலை செய்து
அள்ளடா வெள்ளாட்டுத் தொழுவில் வைத்து
யப்புற மீரைந்து தினம் சென்று வாங்கே.

(இ-ள்.) இடித்து வடிகட்டிய சூரணத்தை முன்செய்த பாகுடன் கலந்து கிளறி லேகியமாக ஒரு பாண்டத்தில் வைத்து மேல் மூடி சீலை செய்து, அதனை குருவை நெல் பாதியளவு கொட்டிய பெரிய பாண்டத்துள் வைத்து, மேலும் நெல்லைக் கொட்டி மேல்மூடி சீலை செய்து, வெள்ளாட்டுத் தொழுவத்தில் வைத்து பத்து தினங்கள் சென்று எடுத்து,

111. வாங்கிக்கொட்டைப் பாக்களவு தின்றாயானால்
வயிற்றுவலி குடல்வாயு வாங்கிப் போகும்
பாங்கிட்டே யிம்மருந்தை யாருஞ் சொல்லார்
பரிவாகயென் னூலில்விரித்துச் சொன்னேன்
தாங்கிட்ட புளிப்புந் தள்ளிப் போட்டு
சாப்பிட்டால் அட்டகுன்மந் தவறுண்டே போம்
மாங்கொட்டைப் புளிப்புடனே சாதங் கொள்ளு
மற்றொன்று மாகாது மறந்தி டாயே.

(இ-ள்.) கொட்டைப் பாக்களவு காலை, மாலை தின்று வர வயிற்று வலி, குடல் வாயு நீங்கும். அட்ட குன்மமும் தீரும். புளி,

உப்பு நீக்கி சாப்பிடவும். மாங்கொட்டைப் புளிப்புடன் சாதம் சாப்பிடவும். மற்றவை ஆகா.

## வயிற்று கடுப்புக்கு

112. மறந்திட்ட கருவொன்று சொல்லக் கேளு
மகத்தான வயிற்றுவலிக் கடுப்பு கண்டால்
வரந்திட்ட நெல்லிமுள்ளி யபின்மாங் கொட்டை
மாதுளையின் தோலுடனே கிராம்பு பத்திரி
கரந்திட்ட புளியின்விரைத் தோலுங் கூட்டி
கடையிலிருஞ் சாதிக்காய் தேத்தான் வித்து
பரந்திட்ட வெங்காயம் இது வெல்லாந்தான்
பாகமாய் சமனெடுத்து அரைத் திடாயே.

(இ-ள்.) வயிற்று வலி, வயிற்றுக் கடுப்பு கண்டால் நெல்லி வற்றல், அபின், மாங்கொட்டை, மாதுளை ஓடு, இலவங்கப் பத்திரி, புளியங்கொட்டைத் தோல், சாதிக்காய், தேத்தான் வித்து, வெங்காயம் இவைகளை சமபாகம் எடுத்து அரைத்து,

113. அரைத்திட்ட மருந்துடனே ஆவின் வெண்ணெய்
அப்பனே கண்டிடைக்குச் சமனாய்த் தூக்கி
விரைத்திட்ட குருபதத்தை மனதில் கொண்டு
விள்ளாதே யொருவருடன் வீண் பாராதே
கரைந்திட்ட இம்மருந்தை கொண்டா யானால்
கடுப்புடனே வயிற்றுளைவு காணா தோடும்
திரைந்திட்ட புளிப்புடனே புகை சேராமல்
சிறுபயறுங் கூட்டியுண்ணத் திறமிதாமே.

(இ-ள்.) மருந்தின் எடைக்குச் சமம் ஆவின் வெண்ணெய் கலந்து சாப்பிட்டுவர வயிற்றுளைவு, வயிற்றுக் கடுப்பு தீரும். புளி, புகையிலைத் தள்ளவும். சிறுபயிறு கூட்டிய அன்னம் உண்ணவும்.

114. திறமான இன்னமொரு அவிழ்தந் தன்னை
செப்புகிறேன் மருந்தொன்று சொல்லக் கேளு
வரமான பெருமரப்பட்டை ஆயிலியப் பட்டை
வளமான மாவிலங்கு வசம்பிந் துப்பு

கரமான நன்னாரி குடசப் பாலை
கடுகுடனே ஆதொண்டைக் காந்தங் காயம்
பரமான அதிவிடயங் கடுக்காய் பூவும்
பகர்ந்திட்ட வெண்காரம் பாய்ச் சிடாயே.

(இ-ள்.) மேலும் ஒரு மருந்து கூறுகின்றேன் கேட்பாயாக. பெரு மரத்துப் பட்டை, ஆயிலியப் பட்டை. மாவிலிங்கப் பட்டை, வசம்பு, இந்துப்பு, நன்னாரி, வெட்பாலையரிசி, கடுகு, ஆதொண்டை, காந்தம், பெருங்காயம், அதிவிடயம், கடுக்காய்ப்பூ, வெண்காரம்.

115. பாய்ச்சடா சமன்கொண்டு பொடியாய்ச் செய்து
பரிவான விளக்கெண்ணை யதிலே விட்டு
காய்ச்சடா மெழுகுபதம் வடித்துக் கொண்டு
கணபதிக்கும் பூசைபண்ணிக் கருணை கூர்ந்து
வாச்சடா இருமூன்று நேரங் கொண்டால்
வயிற்றுவலி குடற்புரட்டு வாங்கிப் போகும்
போச்சடா இம்முறையைச் செய்து பாரு
போக்கென்றுந் தப்பாது புத்தி யோர்க்கே.

(இ-ள்.) இவற்றைச் சம அளவு எடுத்து சூரணித்து விளக்கெண்ணையில் கலந்து மெழுகுபதத்தில் வடித்துக் கொண்டு, கணபதிக்குப் பூசை செய்து தினம் இரண்டு, மூன்று வேளை சாப்பிட வயிற்று வலி, குடற்புரட்டு நிற்கும்.

116. புத்தியுடன் செய்வதற்கு முறையைக் கேளு
புகழான காமாலை சோகை பாண்டு
வித்தியுடன் விஷபாகங் கர்ம ரோகம்
விபரமாய்த் தீருதற்கு மருந்தைக் கேளு
கத்தியுடன் கேசரமாய்க் கருவாய்க் கொண்டு
கருணையுடன் பச்சைலத்தி வாரிக் கொண்டு
யெத்தியுடன் இழைத்துணியில் முடிந்து கட்டி
யியல்பான பாண்டத்தி லிட்டுக் கேளே.

(இ-ள்.) காமாலை, சோகை, விஷபாகம், தோல் வியாதி இவைகளுக்கு மருந்து கூறுகின்றேன் கேட்பாயாக. கழுதை லத்தியை பச்சையாகக் கொண்டு வந்து அவைகளை உதிர்த்து துணியில் முடிந்து கட்டிஒரு பாண்டத்திலிட்டு.

117. கேளப்பா நீர்முள்ளிக் கண்டங் கத்திரி
கெடியான தூதுவளை சங்கம் வேரும்
தாளப்பா வெள்ளருகு சங்கங் குப்பி
தனிக்கையான முள்கொளஞ்சி கோவைத்தண்டு
வாளப்பா சிறுபீளை கீழ்க்காய் நெல்லி
வகையான சாரணையும் பிடங்கைநாரி
கோளப்பா சீறுகீரைப் பழையக் கிட்டம்
கெடியான நன்னாரிவே ருங் கூட்டே.

(இ-ள்.) நீர்முள்ளி, கண்டங்கத்திரி, தூதுவேளை, சங்கம் வேர், வெள்ளறுகு, சங்கங்குப்பி, கொழுஞ்சி, கோவை தண்டு, சிறுபீளை, கீழ்க்காய் நெல்லி சாரணை, பிடங்கை நாரி, சிறுகீரை, பழை.ய இரும்பு சிட்டம், நன்னாரி வேர்.

118. கூட்டடா முருவிலித்தண்டு அமுக்குரா வேர்
குணமான கழற்சியடா கூறக் கேளு
மாட்டடா ஒவ்வொன்றுப் பலமீரைந்து
வகையான தூணிநீர்க் கியாழம் போட்டு
ஆட்டடா எட்டொன்றாய்க் காய்ச்சி வாங்கி
அப்பனே மேல்மருந்தைச் சொல்லக் கேளு
பூட்டடா மண்டூரங் காந்தம் ரெண்டும்
புனிதமாய்ச் செந்தூரம் போட்டி டாயே.

(இ-ள்.) தழுதாழை வேர், அமுக்குரா வேர், கழற்சி இவை ஒவ்வொன்றும் 350 கிராம் வீதம் தூணி நீரில் (இரண்டு மரக்கால்) எட்டொன்றாய்க் காய்ச்சி மண்டூர செந்தூரம், காந்த செந்தூரம்.

119. போட்டிடாய் பவழபற்பம் மூன்றும் சேரு
புகழான கஷாயத்தில் போட்டுக் கொள்ளு
மாட்டிடா ஈரைந்து நேரங் கொண்டால்
மகத்தான விஷபாகம் பித்தம் பாண்டு
ஆட்டிடா இம்மருந்தைச் செய்து பாரு
அப்பனே நோயெல்லா மகன்று போகும்
மூட்டிடாய் பத்தியத்தை யெடுத்துக் காரு
மூவைந்து நாள்வரையில் முரிந்து போமே.

(இ-ள்.) பவழ பற்பம் மூன்றினையும் கஷாயத்துடன் கலந்து வைத்துக் கொண்டு தினம் இரண்டு மூன்று வேளை வீதம் பத்து தினங்கள் கொள்ள விஷபாகம், பித்தப் பாண்டு முதலிய நோயகன்று போகும். பதினைந்து தினங்கள் வரை பத்தியத்துடன் இருக்கவும்.

குறிப்பு - பத்தியம் குறிப்பிடப்படவில்லை. எனினும் உப்பில்லா பத்தியமாகக் கொள்க.

120. முறிந்துபோம் துவாலையிட வீக்கம் போகும்
முறையான நீர்முள்ளி சங்கங் குப்பி
யறிந்துபோம் கருநொச்சி புண்ணாக்கு மூலம்
அப்பனே அமுக்குராச் சாறுங் கூட்டி
பறிந்துபோம் குக்குடத்தி னவரைச் சாறும்
பண்பான வகையொன்று படிகாலாக
நெறிந்துபோம் அடுப்பேற்றி வற்றக் காய்ச்சி
நேராய்ப் பூசிடவே வாங்கிப் போமே.

(இ-ள்.) மகப் பேறு காலங்களில் காணும் வீக்கங்களுக்கு - நீர்முள்ளி, கருநொச்சி, சங்கங்குப்பி, புண்ணாக்கு மூலம், அமுக்குராச்சாறு, கோழியவரைச்சாறு இவை வகையொன்றுக்கு கால்படி.யாக எடுத்து வற்றக் காய்ச்சி வீக்கங்களுக்கு மேல் பூச்சு பூசத்தீரும்.

121. போமடா பெரும்பாடு உதிரங் காணும்
போவதற்கு இன்னமொரு அவிழ்தங் கேளு
ஆமடா வாழைக்கொழுந்து மெருக்கின் மொட்டு
அப்பனே பிரண்டையொடு மிளகுங் கூட
வாமடா இலுப்பையுட கிட்டஞ் சேரு
வகையான பழச்சாற்றா லரைத்து வாங்கி
காமடா அடிவயிற்றில் பூசிப் போடு
கட்டுண்டேப் போகுமெனக் காண லாமே.

(இ-ள்.) மாதத் தீட்டுக் காலங்களில் ஏற்படும் இரத்தப் பெருக்காகிய பெரும்பாட்டுக்கு மேல் மருந்து கூறுகின்றேன். வாழைக்கொழுந்து, மெருகன் கிழங்குச் செடியின் மொட்டு, பிரண்டை, மிளகு, இலுப்பைப்புண்ணாக்கு இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றாலாட்டி அடிவயிற்றில் பூசி விடத் தீரும்.

122. காணப்பா இன்னமொரு அவிழ்தங் கேளு
கடிதான பீனிசமும் மண்டைக் குத்தல்
தோணப்பா கருநொச்சி பச்சை மஞ்சள்
துப்பான வெண்ணொச்சில் சாறுங் கூட்டி
வேணப்பா படி அரைக்கால் வீதம் கூட்டி
வெள்ளாட்டு நெய்ப்படிகால் விட்டுக் காய்ச்சி
பூணப்பா நசியமிட பற்று நேரம்
புளியுப்பு புகையிலையும் போக்கி டாயே.

(இ-ள்.) மற்றொன்று கூறுகின்றேன். பீனிசம், மண்டைக்குத்தல் இவைகட்கு கருநொச்சில், பச்சை மஞ்சள், வெண்ணொச்சில் இவைகளின் சாறு அரைக்கால் படி வீதம் ஒன்றுபடக் கலந்து, வெள்ளாட்டு நெய் படிகால் விட்டுக் காய்ச்சி நசியமிடவும். புளி, புகையிலை நீக்கவும்.

123. போக்கடா பத்தியந்தா னொன்று மாகா
புகழான வென்னீருஞ் சாத முண்ணு
தாக்கடா இம்மருந்தைச் செய்து பாரு
தவறாது போக்கொன்றும் தப்பா துண்மை

வாக்கடாக் கருமுறையாய்ச் சொன்ன நூலில்
வரிசையாய்ச் சொல்லுகிறேன் இன்ன மொன்று
ஆக்கடா வசம்போமந் தகரைக் கொண்டு
அப்பனே நறுக்கியதில் சொல்லக் கேளே.

(இ-ள்.) வென்னீருஞ் சாதம் சாப்பிடவும். வேறு ஒன்றும் ஆகா. மற்றொன்றுகூறுகின்றேன்.வசம்பு, ஓமம், தகரை இவைகளை நறுக்கி,

124. கேளப்பா பொட்டணம்போல் கட்டிக் கொண்டு
கிருபையுடன் மூன்றுநாள் நசியம் பண்ணு
வாளப்பா நல்லெண்ணை தேய்த்துக் கொள்ளு
மருக்காரைப் பட்டைகொண்டு முழுகிவர நீ
ஆளப்பா வொருபானை வென்னீ ரிட்டு
சுருதியுடன் மறுதினத்தில் இரண்டாம் பானை
மூளப்பா மூன்றுநாள் மூன்றாம் பானை
மூழ்கிடவே பீனிசமும் முறிந்து போமே.

(இ-ள்.) பொட்டணம் போல் கட்டி மூன்று தினங்கள் நசியமிடவும். நல்லெண்ணை தேய்த்துக் கொண்டு மருக்காரைப் பட்டைத் தூளை ஒரு பானையில் போட்டு சுடவைத்த ஒரு பானை வென்னீரில் முதல் நாள், இரண்டு பானை வென்னீரில், இரண்டாம் நாள், மூன்று பானை வென்னீரில்மூன்றாம் நாள் முழுகிவர பீனிசம் நீங்கும்.

## பொருமல் பெருவயிறு சோகை பாண்டு

125. போமப்பா விஷபாகங் கவுசை கெண்டைப்
பொருமலுடன் பெருவயிறு சோகை பாண்டு
காமப்பா சொல்லுகிறேன் அவிழ்தங் கேளு
அப்பனே குமட்டிச்சார் படிதான் வாங்கி
வேமப்பா இந்துப்பு மிளகு சுக்கு
விதவிதமாய் விராகனிடை ஐந்து சேர்த்து
வாமப்பா லோகமுடன் வாளம் இரண்டும்
வகையொன்றுக் கீரைந்து விராகன் கூட்டே.

(இ-ள்.) விஷபாகம் கவுசை, பெருவயிறு, சோகை, பாண்டு இவைகளுக்கு மருந்து கேள். குமட்டிச் சார் ஒரு படியில், இந்துப்பு, மிளகு, சுக்கு, வகைக்கு 17½ கிராம் அயப்பொடி, நேர்வாளம் இவைகள் வகைக்கு 35 கிராம் சேர்க்கவும்.

## மூக்கு லேகியம்

126. கூட்டடா கடுக்காய்தன் னெடையைக் கேளு
கூறான வராகனெடை ஒன்ப தாகும்
மாட்டடா சக்கையெல்லாம் பொடியாய்ச் செய்து
அப்பனே பேப்பழச்சார் படிதான் விட்டு
வாட்டடா பனைவெல்லம் ஆறு மூன்று
வகைசேர நறுக்கியதி லுதிர்த்துப் போட்டு
காட்டடா லேகியம்போல் கிண்டிக் கொண்டு
கணபதியைப் பூசைபண்ணிக் கருதிக் கொள்ளே.

(இ-ள்.) ஒன்பது விராகனிடை கடுக்காய்த் தோல் பொடியாகச் செய்து எலுமிச்சம்பழச்சாறு ஒருபடி விட்டு பனைவெல்லம் பதினெட்டு விராகனிடையை அதில் உதிர்த்துப் போட்டு லேகியம் போல் கிண்டி பதனம் செய்து கணபதியை பூசை செய்து

127. கொள்ளவே நோயாளி சரீரம் பார்த்து
கொடுத்துவிடு முள்ளிக்காய் பிரமாணந்தான்
நள்ளவே பேதியது காணுஞ் சொன்னேன்
அப்பனே ஒருநேரஞ் சாதங் கொள்ளு
தள்ளவே புளிபுகையு முப்பா காது
தனிமேதைப் பால்மோரு கரப்பா னாகா
பள்ளவே பத்தியந்தா னுண்டு வந்தால்
பறக்குமடா நோய்களெல்லாம் பறக்கும் பாரே.

(இ-ள்.) நோயாளியின் தன்மையறிந்து சிறுசுண்டைக்காயளவு கொடுக்கவும். பேதியாகும். ஒரு வேளை மட்டும் சாதம் கொடுக்கவும்.

புளி, புகையிலை, உப்பு ஆகாது. இறைச்சி, மோர், பால், கரப்பான் பொருள் ஆகா. இவை நீக்கி உணவு கொள்ள மேற்கண்ட நோய்கள் காணா தொழியும்.

மேதை - இறைச்சி

## முகவாதத் தைலம்

128. பரக்குமடா முகவாதங் கடுப்புத் தீர
பக்குவமாய்ச் சொல்லுகிறேன் பரிந்து கேளு
யிரக்குமடா மண்தின்னும் பூ நாகத்தை
யெருக்கம்பால் நல்லெண்ணை யிம்மூன்றுங் கூட்டி
நிரக்குமடா வொவ்வொன்று படிகாலா
நேரான தேங்காய்பா லிருகால் கூட்டி
யிரக்குமடா கலுவத்திலரைத் துக்கொண்டு
அப்பனே அடுப்பேற்றிக் காய்ச் சிடாயே.

(இ-ள்.) பூ நாகம் எருக்கம்பால், நல்லெண்ணெய், வகைக்குப் படி கால், தேங்காய்ப்பால் படி அரை, இம்மூன்றையும் ஒன்றுபடக் கலந்து பூ நாகத்தை கல்வத்திலரைத்து அதனுடன் கலந்து அடுப்பிலேற்றிக் காய்ச்சவும்.

129. காய்ச்சிடாய் மெழுகுபதம் வடித்துக் கொண்டு
கண்மூக்கு முகமதிலுங் காணுந் தானும்
பாச்சிடா பகடுசெவித் தேய்க்கும் போது
பார்மூன்று தினம்பொழுதுப் பாய்ச்சியாட்டி
மெச்சிடாய் தயிலத்தைக் காணும் போதே
மேதினியில் முகவாதம் எங்கே போச்சு
தாச்சிவார் இம்மருந்தைச் செய்து பாரு
தவறாது போக்கொன்றுந் தப்பாதூட்டே.

(இ-ள்.) மெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு முகவாத, சன்னியால் பாதிக்கப்பட்ட கண், மூக்கு, செவி, கன்னம் முதலிய பாகங்களில் தேய்க்கவும். இவ்வாறு மூன்று தினம் தேய்த்து விடவும்.

தேய்க்கத் துவங்கும் போது தயிலத்தைப் பார்த்தவுடனே முகவாதம் போகுமிடம் தெரியாமல் போகும்.

## நீரடைப்புக்கு மருந்து

130. ஊட்டப்பா நீரடைப்புக் கவிழ்தங் கேளு
வுத்தமனே பொற்கடுக்காய் ஐந்தார் வாங்கி
கூட்டப்பா பொடிசெய்து வைத்துக் கொண்டு
குமரியுட சாற்றினிலே புரட்டி வைத்து
காட்டப்பா ஈருள்ளி படிகால் போட்டு
கட்டாக யிடித்ததிலே பிசைந்துகொண்டு
நாட்டப்பா வடிகொண்டு யிறுத்து வாங்கி
நலமான வெங்காரம் பொரித்துப் போடே.

(இ-ள்.) பொற்கடுக்காய் ஐந்து அல்லது ஆறு எடுத்து கொட்டை நீக்கிப் பொடி செய்து குமரிச் சாற்றில் புரட்டி வைத்து, கால் படி ஈருள்ளிச் சாற்றில் இடித்துப் பிசைந்து கொண்டு பிழிந்து வடிகட்டி வைத்துக் கொண்டு சிறிது வெங்காரத்தைப் பொரித்துப் போட்டு,

## ஈளை இருமல் தீர புகை

131. போட்டேதான் இருமூன்று நேரங் கொள்ள
புனிதமுடன் நீரடைப்புப் போகும் போகும்
வாட்டுடனே சயமீளை யிருமல் கண்டால்
வகையான திரிபுகைதான் சொல்லக் கேளு
பாட்டுடனே பச்சைநொச்சிச் சாறு வாங்கி
பரிவான சீலையிலே துவைத்து வாட்டிக்
காட்டுடனே சூதமரிதார மொன்றுங்
கட்டாகப் போட்டிடித்ததிலே பரப்பிக் கேளே.

(இ-ள்.) தினம் இரண்டு மூன்று நேரங் கொள்ள, நீரடைப்பு நீங்கும். சயம், ஈளை, இருமல் கண்டால் திரிபுகை கூறுகின்றேன்.

நொச்சிச் சாறு எடுத்து சீலையில் துவைத்து துவைத்து உலர்த்தி வைத்துக்கொண்டு ரசம், தாளகம் ஒவ்வொரு விராகனிடை எடுத்து அரைத்து உலர்த்திய துணியில் பரப்பி

132. கேளப்பா திரிகொளுத்தி மூக்கில் வாங்கு
கிருபையுடன் யிருமலங்கே கெதிகெட் டோடும்
வாளப்பா இன்னமொரு திரிதான் சொல்வேன்
வளமான நாய்வேளை மேனிவேரு
மாளப்பா கொடிவேலி சாரணையுங் கூட்டி
அப்பனே வேருவகை சமனாய்க் கொண்டு
தாளப்பா வுள்ளி அரிதாரங் கூட்டி
சமன்கொண்டு வெள்ளாட்டுப் பாலி லாட்டே.

(இ-ள்.) திரிபோல் சுருட்டிக் கொளுத்தி மூக்கில் புகையை வாங்கவும். இருமல் நீங்கும். மற்றும் ஒரு திரி கூறுகின்றேன். நாய் வேளை வேர், குப்பை மேனி வேர், கொடிவேலி வேர், சாரணை வேர் இவைகளைச் சமனாய்க்கூட்டி, உள்ளி, அரிதாரம், இவைகளை சமன் கூட்டி வெள்ளாட்டுப் பால் விட்டரைத்து,

133. ஆட்டியே மயனம்போல ரைத்துக் கொண்டு
அப்பனே யிழைத்துணியில் தடவி வாங்கி
ஊட்டியே உலர்ந்தபின்பு திரியாய்ச் செய்து
வுத்தமான நல்லெண்ணை தீபமேற்றி
நாட்டியே முன்னதாய் மோருஞ் சாதம்
நலமாகப் புசித்தவுடன் குழாயில் வைத்துள்
காட்டியே சுவாசத்தில் புகையே வாங்க
கனமான சுவாசமுடன் இருமல் போமே.

(இ-ள்.) மயனம் போலரைத்து, துணியில் தடவி உலர்ந்தபின் திரியாய்ச் சுருட்டி நல்லெண்ணெய் தீபமேற்றி திரியைக் கொளுத்தி சுவாசத்தில் புகையை வாங்க சுவாசமுடன் இருமல் போகும். புகை பிடிப்பதற்கு முன் மோருஞ் சாதம் சாப்பிடவும்.

## இருமலுக்கு மருந்து

134. போமடா தூதுவளை கண்டங் கத்திரி
புகழ்முசுக்கைச் சாறுவகைக்கு யீராழி வாங்கி
ஆமடா பசுவின் நெய் யீராழி கூட்டி
அப்பனே கதிர்புடத்தில் ஒருநாள் வைத்து
நேமடா மிளகுதிப்பிலி தான்றிக்காய் நெல்லி
முள்ளிசிற் றரத்தைக் கடுக்காய் சுக்கு
தேமடா சிறுநாகப் பூவோ டொக்க
சிறுதேக்கு வாய்விளங்கஞ் செவியங் கூட்டே.

(இ-ள்.) தூதுவளை கண்டங்கத்திரி, முசுமுசுக்கை இவைகள் சாறு வகைக்கு இரண்டு ஆழாக்கு, பசுவின் நெய் இரண்டு ஆழாக்கு இவைகளைக் கூட்டி சூரிய புடத்தில் ஒரு நாள் வைத்து மிளகு,. திப்பிலி, தான்றிக்காய், நெல்லிமுள்ளி, சிற்றரத்தை. கடுக்காய், சுக்கு,சிறுநாகப்பூ, சிறு தேக்கு, வாய்விளங்கம், செவ்வியம்

135. கூட்டுக் கடுக்காயின் திப்பிலியின் மூலம்
கொடிவேலி யதிமதுரம் கொட்டங்காய்
மாட்டு வகைக்கீர்கழஞ்சிப் பொடித்துப் போட்டு
மைந்தனே பக்குவமாய் எரித்து வாங்கி
மூட்டு நிதம்பலமொன்று நாள்மூவைந்துண்ணு
விலகுமே சயங்குத் திருமல்வெட்டை
மீட்டுந் தொண்டைப்புகைச் சலீளை தீரும்
மீறாதே புளிப்புகைச்சல் பத்தியமேகாரே.

(இ-ள்.) கடுக்காய்ப்பூ, திப்பிலி மூலம், கொடிவேலி, அதிமதுரம், தேங்காய் இவை வகைக்கு இருகழஞ்சி பொடித்துப் போட்டு, இறுதி.யில் எரித்துப் பக்குவம் செய்து வைக்கவும். தினம் 35 கிராம் வீதம் பதினைந்து தினங்கள் சாப்பிட க்ஷயம், குத்திருமல், வெட்டை, தொண்டைப்புகைச்சல் ஈளை முதலியன தீரும். பத்தியமாய் இருக்கவும்.

## விப்புருதி, அரையாப்பு, கண்டமாலை இவைகட்குப் பற்று

136. காருவிப் புருதியரை யாப்பு மாலைக்
கழிந்திடவே மருந்தொன்று சொல்லக் கேளு
நேருவெள் சாரணைவேர் பலமே வாங்கி
நிறையாக மஞ்சள்கால் பலமே போட்டு
பாருநிம் பழச்சாற்றி லரைத்துக் கொண்டு
பக்குவமாய்க் கட்டியிற்சுற் றிலுமேபூச
மாருமவ் வேர்நசுக்கி வில்லை தட்டி
மகத்தான வீக்கத்திற் கட்டிடாயே.

(இ-ள்.) வெள்ளைச் சாரணை வேர் 35 கிராம் மஞ்சள் 9 கிராம் எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து, கட்டியைச் சுற்றி பற்றுப் போட்டு சாரணைவேரை நசுக்கி வில்லை தட்டி வீக்கத்தின் மேல் வைத்துக் கட்டவும்.

## வாந்தி விக்கல் தீர

137. கட்டிடவே புண்புரையு மாறிப் போகும்
கனமான வாந்திவிக்கல் கண்டுதானால்
கட்டிடவே சாதிக்காய் கிராம்பு ஏலமந்
தரமான வெண்கார மதுரஞ்சீனி
மாட்டிடவே மாதுளையின் பழமுங்கூட்டி
வளமான விளாம்பழமுங் கடுக்காய் சேர்த்துப்
பூட்டிடவே புங்குபத்திரி வேருங்கூட்டி
புகழான மருந்தெல்லாம் சமனாய்க் கொண்டே.

(இ-ள்.) சாதிக்காய், கிராம்பு, ஏலம், வெண்காரம், அதிமதுரம், சீனி, மாதுளை பழத்தின் முத்துக்கள், விளாம்பழம், கடுக்காய், புங்கம் இலை, புங்கம் வேர் இவைகளை சம எடை எடுத்துக் கொண்டு,

## இடுப்பு வலிக்கு

138. கொண்டப்பா பாண்டத்தில் கஷாயம் போடு
கொத்தான கியாஷத்தை யிறுத்துக் கொண்டு
தண்டப்பா தேனதிலே விட்டுக் கொள்ள
தப்பாது வாந்திவிக்கல் தள்ளிப்போகும்

கண்டப்பா இடுப்புவலிக் கவிழ்தங்கேளு
கனமான அராந்தெள்ளு அமுக்குராவேர்
பண்டப்பா வகையொன்றுப் படிதூளாக
பரிவான நல்லெண்ணைப் படிதான் கூட்டே.

(இ-ள்.) ஒரு பாத்திரத்தில் போட்டு குடிநீராகக் காய்ச்சி இறுத்து எடுத்துக் கொண்டு தேன் கலந்து சாப்பிட வாந்தி விக்கல் தீரும். இடுப்பு வலிக்கான மருந்தைக் கூறுகின்றேன். கேள் நாகமல்லி, எள்ளு, அமுக்குராவேர், வகைக்கு ஒருபடி தூள், நல்லெண்ணை ஒரு படி

குறிப்பு- அராந்தெள்ளு - காட்டு எள் எனக் கொள்ளுவது பொருந்தும்.

139. கூட்டியே யிதுவெல்லாங் கலந்து கொண்டு
குமரவேக் காய்ச்சியிதைக் கிண்டி வாங்கி
மூட்டியே இருமூன்று நேரங் கொள்ள
முதிர்ந்துவந்த யிடுப்புவலி யோடபர வாயுப்
பாட்டியே தசவாய்வுப் பக்க சூலை
பறந்துபோந் தப்பாது பற்றிப் பாரு
ஊட்டியதோர் பத்தியந்தா னொன்று மாகா
உத்தமனே வென்னீரில் பொசித் திடாயே.

(இ-ள்.) இவைகளை ஒன்று கூட்டி கலந்து கொண்டு நன்றாகக் காய்ச்சி கிண்டி எடுத்துக் கொண்டு தினம் இரண்டு மூன்று வேளை சாப்பிட நீண்ட நாட்பட்ட இடுப்புவலி அபரவாய்வு, பத்துவித வாய்வுக்களால் ஏற்படும் தொல்லை, பக்க சூலை இவை தீரும். வெந்நீருஞ் சாதம் சாப்பிடவும். வேறு ஒன்றும் ஆகாது.

## பித்த எரிச்சல், காந்தல் கண்ணெரிவு தீர

140. புசித்தவுடன் நீங்கிப்போம் எரிவு பித்தம்
புகழான வுள்காய்ச்சல் உள்ளங்கை கால்
கசித்தவுடன் எரிவோடுகண் ணெரிவு காந்தல்
கனமான சூலையெரிச்சல் கழன்று போகும்
முசித்தவுடன் சட்டிகொண்டு அடுப்பி லேற்றி
உபாயமாய் பழம்பத்து வதக்கிக் கொண்டு
நசித்தமுடன் பீங்கானில் பிழிந்து கொண்டு
நிறைமூன்றுக் காசிடைதான் மிளகு சேர்த்தே

(இ-ள்.) பித்த எரிவு, உட்காய்ச்சல், உள்ளங் கைகால் எரிவு, கண்ணெரிவு, காந்தல், சூலை இவைகளுக்கு ஒரு சட்டியை அடுப்பிலேற்றி பத்து எலுமிச்சம் பழத்தை வதக்கி எடுத்து ஒரு பீங்கானில் பிழிந்தெடுத்த சாறுடன் மூன்று காசி எடை மிளகு

141. சேர்த்தப்பா மிளகதனை வறுத்துக் கொண்டு
திறமான கலுவத்தில் பொடியாய்ச் செய்து
பார்த்தப்பா சர்க்கரை முன்னீரில் போட்டு
பரிவுடன் இருமூன்று நேரங் கொள்ளு
கார்த்தப்பா அவிழ்தத்தைச் செலுத்திப் பாரு
கருத்துடனே புளிப்புகையுந் தள்ளிப் போடு
மார்த்தப்பா அறிவுகொண்டு செய்தா யானால்
பலவல்ல ரோகமெல்லா மழிந்து போமே.

(இ-ள்.) வறுத்துப் பொடி செய்து போட்டு சிறிது சர்க்கரையும் கூட்டி இருவேளை மூன்று தினங்கொள்ளத் தீரும். புளி, புகை கூடாது. ரோக நோய்கள் தீரும்.

## மூலக் கடுப்புக்கு மருந்து

142. அழிந்துபோ மலமுடன் கடுப்பு வேட்கை
யதிசீதக் கடுப்புடனே ரெத்தம் போக
வொழிந்து போமிதற்குமொரு புகையைக் கேளு
உத்தமனே புளிப்பிராணி கொண்டு வந்து

வழிந்து பெருங்குழிவெட்டி பிட்டை போட்டு
வளமாகத் தீயெரித்து நெருப்புண் டாக்கி
மொழிந்து வருமூங்கிலை வேப்பிலையும் போட்டு
மூர்க்கமுடன் மூலத்திற்குள் புகையே காட்டே.

(இ-ள்.) மலம் போகும் போது கடுப்பு. சீதம், கடுப்பு, இரத்தம் போவது இவை தீர புகையொன்று கேள். புளியம் புறணியைக் கொண்டு வந்து ஒரு குழி வெட்டி அதில் போட்டு எரித்துத் தணலாக்கி மூங்கில் இலையும், வேப்பிலையும் போட்டு வருகின்ற புகையை மூலத்தில் படும்படி செய்யவும். இரண்டு மூன்று தினம் செய்யத்தீரும். கைகண்ட முறை இது.

## மூலத்துக்கு மருந்து

143. காட்டப்பா இருமூன்று நேரம்போதுங்
கைகண்டபடி சொன்னேன் இன்னங் கேளு
மூட்டப்பா மூலத்தின் முலை தான் போக
உள்மூலம் இரத்தமூலம் வெளிமூலந் தான்
காட்டப்பா வராகத்தின் குடலை வாங்கி
சுத்திபண்ணி மூன்று தரம் கழுவிப் போட்டு
ஆட்டப்பா பொடிபொடியாய் அரிந்து போட்டு
அய்யனே பழையசட்டி விட்டுக் கேளே.

(இ-ள்.) உள் மூலம், வெளிமூலம் இவைகளின் முலையை அகற்ற பன்றியின் குடலை சுத்தம் செய்து மூன்று தடவை கழுவி எடுத்துப் பொடியாய் அரிந்து ஒரு பழைய சட்டியில் போட்டு,

144. கேளப்பா அடுப்பேற்றி வறுத்துக் கொண்டு
செடியான ஆட்டுவெண்ணை தேங்காய் மட்டும்
வாளப்பா வதிலிட்டு வேக வைத்து
வளமான குழம்புபோல் பாகங் கண்டு

சூளப்பா அரைத்ததனில் பழச்சார் விட்டு
சுருதியுடன் வேகவைத்துக் குழம்பு போலே
நாளப்பா நாற்பதுநாள் தின்பா யாகில்
நலமாகும் மூலம்போம் நயந்து பாரே.

(இ-ள்.) வறுத்து அதனுடன் ஆட்டு வெண்ணெய், தேங்காய் திருகல் சேர்த்து குழம்பு பதம் வரும் போது அரைத்து அதனுடன் எலுமிச்சம்பழச்சாறு விட்டு வேகவைத்து குழம்பு பதத்தில் எடுத்து நாற்பது நாள் சாப்பிட மூல நோய் தீரும்.

145. பாரப்பா நத்தையோடுத் தானெடுத்து வந்து
பழையதோர் பாண்டத்துள் ளடைத்துக் கேளு
தீரப்பா வாய்மூடி அடுப்பி லேற்றி
தீமூட்டி ஆவிமேலே ழும்பும் போது
யேரப்பா இருகால் பலகை போட்டு
யிருத்திமேற் துளையதிலா சனத்தை வைத்து
நேரப்பா வேதுபிடி நாளீரைந்து
ரெத்தசீழ் மூலமுளை மூலம் போச்சே.

(இ-ள்.) நத்தையோடு கொண்டுவந்து பழைய பாண்டத்திலடைத்து வாய் மூடி அடுப்பிலேற்றி எரித்து ஆவிமேலெழும்பும்போது இரண்டு பலகையை இடைவிட்டுப் போட்டு ஆசனவாயில் ஆவி படும்படி அமரச் செய்யவும். இவ்வாறு 10 தினங்கள் வேதுபிடிக்க இரத்த மூலம், சீழ்மூலம் முளைமூலம் போம்.

146. போச்சடா அவ்விருட்சி வெளியில் வாங்கி
பொடியாகச் செய்தொரு சட்டியிலே போட்டு
பாச்சடா பலகாயம் பசுவின் நெய் தான்
பக்குவமாய் விட்டெரித்துப் புரட்டிக் கொண்டு
மூச்சடா அறைநாலைந் துண்டை செய்து
முனைந்தந்தி சந்தியீரண்டுண்டை கொள்ளு
மாச்சடா ரெத்தஞ்சீழ் வெளியுள் மூலம்
மகத்தான முலைமூலம் வாங்கக் கேளே.

(இ-ள்.) வெட்சிப்பூ (விட்சிப் பூ அல்லது விச்சிப்பூ)வை சிறுக அரிந்து பொடியாகச் செய்துஒரு சட்டியில் இட்டுத் தேவையான அளவு பசுவின் நெய்விட்டுப் புரட்டி எடுத்து அரைத்து நாலைந்து உருண்டைகளாகச் செய்து அந்தி சந்தி இரண்டு உருண்டை வீதம் சாப்பிட இரத்த மூலம், சீழ்மூலம், உள்மூலம், வெளிமூலம் தீரும்.

147. கேளப்பா குளப்பாசிக் கிழங்கு வாங்கி
கண்டகண்ட மாயரிந்து பலமாரைந்து
பேணப்பா பலகாயம் பசுநெய்விட்டு
புரட்டியே வேகவைத்துப் பலமொன்றாக
தோணப்பா கெசமுகனைப் பூசைபண்ணி
தொந்தித்து அரைத்துத் தினமே கொள்ளு
வாணப்பா ரெத்தஞ்சீழ் வெலியுள் மூலம்
ஒழிந்துபோம் முலைமூலம் நயந்துபாரே.

(இ-ள்.) கொட்டிக் கிழங்குகண்ட கண்டமாக அரிந்து 750 கிராம் எடுத்து தேவையான அளவு பசுநெய் விட்டு புரட்டி வேக வைத்து எடுத்து அரைத்து தினம் 35 கிராம் வீதம் சாப்பிடவும். ரெத்தமூலம், சீழ்மூலம், உள் மூலம் தீரும்.

## கால் கை நடுக்கத்துக்கு மருந்து

148. நயந்துபார் கால்கைகள் நடுக்க மானால்
நன்றாகச் சொல்லுகிறேன் அவிழ்தங்கேளு
நயந்துபார் கானகத்தி லூஞ்சல் தேடி
நலமான இலைபறித்துக் கொண்டு வந்து
பயந்து வரகுகம் பரிசி வாங்கி
நலமாக அதிற்சேர்த்து யிடித்து வாங்கி
நயந்துபா ரொருமூன்று நேரங் கொ ள்ளு
நாடாது முடக்கமெல்லாந் தவழ்ந்து போமே.

(இ-ள்.) காட்டில் உள்ள உசில மரத்தின் இலையைக் கொண்டு வந்து, வரகு, கம்பு, அரிசியினை அதனுடன் சேர்த்து இடித்து எடுத்து தினம் ஒரு வேளை வீதம் மூன்று தினங்கள் சாப்பிடத் தீரும்.

## கூடு, கடுப்பு, வெள்ளை முதலியவைகட்கு ஏரண்ட எண்ணெய்

149. போமடா சூட்டுடனேக் கடுப்பு வெள்ளை
போகத்தாற் வந்தகா்மம் தீரக் கேளு
ஆமடா யெண்ணையேரண்ட திகஞ்சொல் வேன்
ஆமணக்கின் எண்ணெய்படி ஒன்றுக்குள்ளே
காமடா தேங்காய்ப்பால் பழமுஞ் சாறு
கனமான ஈருள்ளிச் சாறுங் கூட்டி
கோரமடா பசுவின் பால் படிகாலாகக்
குறையாமல் படியொன்றுக் கூடச்சேரே.

(இ-ள்.) சூடு. கடுப்பு. வெள்ளை தீர ஏரண்ட எண்ணெய் கூறுகின்றேன் கேள். ஆமணக்கெண்ணெய் படி ஒன்று. தேங்காய்ப்பால், எலுமிச்சம்பழச்சாறு, வெங்காயச்சாறு, பசுவின் பால் இவைவகைக்குக் கால்படி வீதம் ஆமணக்கெண்ணெயுடன் சேர்த்து.

150. சேரப்பா பாண்டத்திலிட் டுக்காய்ச்சி
திறமான மெழுகுபத மிறக்கிக் கொண்டு
கூரப்பா கோரோசனை குங்கும ப்பூ
கூட்டிடுவாய் வகையொன்று விரா கனாக
ஆரப்பா கருகுகாமல் பொடித்துக் கொண்டு
அப்பனே அம்மெழுகில் திரட்டி வாங்கி
காரப்பா குருவினடிப் போற்றி செய்து
காலைசந்தி இருநேரம் கொண்டால் கேளே.

(இ-ள்.) பாண்டத்திலிட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி அதனுடன் கோரோசனை, குங்குமப்பூ வகைக்கு ஒரு வராகனெடை பொடித்துச் சேர்த்து காலை, மாலை,

151. கேளப்பா ஈரைந்து நேரங் கொண்டால்
கெடுதிகெட்டு ஓடுமடா சூடு போச்சு
வாளப்பா புளிபுகையுந் தள்ளிப் போடு
வளமாகக் கொண்டிடவே வாங்கிப் போகுஞ்
சூழப்பா இன்னமொரு அவிழ்தங் கேளு
சுருக்குள்ள எலிவிஷம்போம் இருமல் தீரும்
ஆளப்பா திசவாய்வு பத்தும் போகும்
அம்மேனி இலைபிடிதான் பறித்து வாங்கே.

(இ-ள்.) பத்து தினங்கள் சாப்பிட உஷ்ண நோய் யாவும் தீரும். புளி, புகை தள்ளவும். எலிவிடம், இருமல், பத்துவித வாயுக்கள் தீர குப்பை-மேனி இலையை ஒரு பிடி பறித்து எடுத்து

**எலிவிஷத்துக்கும் இருமலுக்கும்**

152. வாங்கியே மிளகைந்து விராகன் சேர்ந்து
வகையுடனே இரண்டையுந்தா னரைத்து வாங்கி
தேங்கியே புழுங்கரிசி படி காலப்பா
திறமான திப்பிலியின் கியாழத்தாலே
வோங்கியே யோர்க்கால மூரப் போட்டு
உத்தமனே மாவரைத்து மருந்து சேர்த்து
பாங்கியே இருமூன்று அடைதான் தட்டி
பசுநெய்யில்சுட்டுமெள்ள எடுத்துக் கொள்ளே.

(இ-ள்.) அதனுடன் ஐந்து விராகனெடை மிளகு சேர்த்து அரைத்து எடுத்து புழுங்கலரிசி கால்படி திப்பிலி கஷாயத்தில் ஊறப்போட்டு மாவாக அரைத்து மருந்துடன் சேர்த்து ஆறு அடைகளாகத் தட்டி பசுவின் நெய்யில் சுட்டு எடுத்து.

153. கொள்ளடா அடையொன்று நெய்யில் தோய்த்து
குமுரியே தின்னுவாய் நாளாறுந் தான்
தள்ளடா புளிபுகையு மொன்று மாகா
தவறாமலிம் முறையைச் செய்து பாரு

அள்ளடா நோயெல்லா மகன்று போச்சு
அப்பனே இன்னமொரு அவிழ்தங் கேளு
விள்ளடா ஓரண்டவாதம் வந்தால்
விபரமாய்ச் சொல்லுகிறேன் விரும்பிக் காணே.

(இ-ள்.) தினம் ஒரு அடையை நெய்யில் தோய்த்துச் சாப்பிடவும். இவ்வாறு ஆறு தினங்கள் சாப்பிடவும். புளி, புகை கூடாது. ஓரண்ட வாதத்திற்கு மற்றுமொரு மருந்து கேள்.

**ஓரண்ட வாதத்துக்கு**

154. காணப்பா கானகத்தில் முளைத்த சுண்டை
கையாலே ஒருபிடிதான் கொழுந்து வாங்கி
தாணப்பா அரைத்துநன்றாய் முள்ளிக்காய் போல்
துணியான விளக்கெண்ணை விட்டு மத்தி
முண்ணப்பா நேரமதில் கொள்வாயாகில்
முதிர்ந்துவந்த வாதமெல்லா மொழிந்து போகும்
ஊணப்பா பத்தியந்தா னொன்று மில்லை
அப்பனே இன்னமொரு மருந்து கேளே.

(இ-ள்.) காட்டு சுண்டைச் செடியின் கொழுந்தை அரைத்து நெல்லிக்காய் அளவு விளக்கெண்ணை விட்டு மத்தித்துக் காலையில் கொள்ளவும். நாட்பட்ட வாதநோய் அகலும். பத்தியம் ஒன்றுமில்லை.

**அண்ட வாய்வுக்கு**

155. கேளடா அண்டத்தின் வாய்வு வாதம்
கிருபையுடன் போவதற்கு மருந்து கேளு
நாளடா பத்துரெண்டின் புங்கு தேடி
நல்மகனே ஒரு பிடிதான் கொழுந்து வாங்கி
வேளடா வெள்ளுள்ளி மிளகு தன்னில்
விதமுடனே யரைத்துநன்றாய் விரும்பிக் கேளு
கேளடா எலுமிச்சங்காய் போலப்பா
குவிந்தாவின் வெண்ணெயிலே குழப்பிடாயே.

(இ-ள்.) புங்கம் கொழுந்தினை ஒரு பிடி எடுத்து வெள்ளுள்ளி, மிளகு சேர்த்து எலுமிச்சங்காயளவு ஆவின் வெண்ணெயில் குழப்பி

156. குழப்பியே இருமூன்றுநேரங் கொண்டால்
குவிந்துவந்த அண்டத்தின் வாதம் போச்சு
தழும்பியே கறிகரப்பா னொன்று மாக
தனியுப்புப் புளிப்புகையுந் தள்ளிப் போடு
விழும்பியே வென்னீருஞ் சாதங் கொள்ளு
வேறொன்றுஞ் செய்யாதே விரைந்து பாரு
அழம்பியே வாதமென்ற ரோகம் போச்சு
அப்பனே இன்னமொன்று உரை செய்வேனே.

(இ-ள்.) தினம் இரண்டு வேளை மூன்று தினங்கள் சாப்பிட அண்ட வாதம் போகும். கரப்பான் பதார்த்தம் ஆகா. உப்பு, புளி சேர்க்காமல் வெந்நீருஞ் சாதம் கொள்ளவும்.

## கண் சிவப்பு - நீர்ப்பாய்ச்சலுக்குத் தயிலம்

157. உரையான நேத்திரத்தில் சிவப்புத் தண்ணீர்
ஊடுருவி பாயுதற்கு அவிழ்தங் கேளு
நிரையான எண்ணையொன்றுமுழுகச்சொல்வேன்
நிசமான ஆதொண்டை யறுகஞ் சாறு
பரையான நல்லெண்ணை பொன்னாங் காணி
பகர்ந்தகையான் சாறுடனே பசுவின் பாலுங்
குரையான வெள்ளாட்டு நீறுங் கூட்டி
குவிந்தலரும் பெருவாயன் லத்திச் சாறே.

(இ-ள்.) ஆதொண்டைச் சாறு, அருகன் சாறு, நல்லெண்ணெய், பொன்னாங்கண்ணி, கையான்தகரை இவைகளின் சாறு. பசுவின் பால் வெள்ளாட்டு மூத்திரம், கழுதைலத்திச் சாறு,

158. சாரப்பா ஒவ்வொன்று படிதான் வாங்கி
சாதகமாய்ப் பாண்டத்தி லிட்டுக் கேளு
வாரப்பா பசுவின்நெய் படிதான் வாங்கி
வளமான ஆயில்பட்டை மிளகு சேர்க்க
ஆரப்பா வகையொன்று பல மொன்றாக
அப்பனே வால்மிளகு கிராம்பு ஏலம்
காரப்பா கஸ்தூரி மஞ்சள் நெல்லிக்
கருவான வேப்பமுத்துக் கடுக்காய்ச் சேரே.

(இ-ள்.) இவைகள் வகைக்குப் படி ஒன்று வீதம் வாங்கி ஒரு பாண்டத்திலிட்டு பசுவின் நெய் ஒரு படி சேர்த்து, ஆயில் பட்டைமிளகு வகைக்கு 35 கிராம் வால் மிளகு, கிராம்பு, ஏலம், கஸ்தூரி மஞ்சள், நெல்லி வற்றல், வேப்பங் கொட்டைப் பருப்பு, கடுக்காய்

159. சேரப்பா வகையொன்று விராகன் நாலு
சேர்த்துமே அரைத்ததிலே கலக்கிப் போடு
பாரப்பா தீயெரித்துக் காய்ச்சி வாங்கி
பக்குவமாய் மெழுகுபதம் வடித்துக் கொண்டு
கூரப்பா தலையிலிட்டுத் தேய்த்துப் பாரு
குளிர்ந்து சற்றைநேரம் போய்நீர் விட்டாடு
தாரப்பா இத்தயில முழுகிப் பாரு
தவறாது ரோகமெல்லாந் தப்பா தென்றே.

(இ-ள்.) வகையொன்றுக்கு நான்கு விராகனெடை சேர்த்து அரைத்துக் கலக்கி அடுப்பில் வைத்து எரித்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக்கொண்டு தலையில் தேய்த்துக் கொள்ளவும். சற்று நேரம் சென்று குளிர்ந்த நீரில் மூழ்கவும். தவறாது செய்ய மேற்சொன்ன நோயகலும்.

**மேகத்துக்கும் எலும்புருக்கிக்கும் பொரிமா அவிழ்த்தம்**

160. தப்பாது எலும்புருக்கி மேகத் தாலே
தவறாமல் சீழ்ரெத்தம் விழுகும் பாரு
செப்பாதே மருந்தொன்று சொல்லக் கேளு
தேசத்தி லிம்மூலியுரைக் கப்போகா

அப்பாகே ளாவாரை வித்துங் கூட்டி
அளந்தொன்று படியாக வாங்கிக் கொண்டு
ஒப்பாகப் பொரிகம்புப் பொரித்துப் போட்டு
யுத்தமனே படியொன்று அளந்து வாங்கே.

(இ-ள்.) ஆவாரை வித்து ஒரு படி, கம்பு ஒரு படி இவற்றைப் பொரித்து எடுத்து

161. வாங்கியே படியிரண்டு மாவாய்ச் செய்து
வளமாகக் கொண்டிடவே எடுடு நாளில்
ஓங்கியே இருநான்கு நேரங் கொண்டால்
ஓகோகோ எலும்புருக்கி ரோகந் தீரும்
பாங்கியே புளிப்புகையுந் தள்ளிப் போடு
பரிந்துண்ண மேகமெல்லாம் பறந்து போகும்
தேங்கியே யின்னமொரு அவிழ்தங் கேளு
திறமான வல்லாதி சொல்லக் கேளே.

(இ-ள்.) மாவாக அரைத்து இரண்டு படி மாவை எட்டு தினங்களில் எட்டு நேரம் சாப்பிட எலும்புருக்கி நோய் தீரும். மேகநோய் தீரும். புளி, புகை கூடாது. வல்லாதி கூறுகின்றேன் கேள்.

## வல்லாதி லேகியம்

162. சொல்லுகிறேன் வல்லாதிலேகி யத்தைக் கேளு
சொற்பெரிய கிரந்திமுதல்சூலை கட்டும்
வெல்லுகிறேன் சேங்கொட்டைப் பலமைந் தப்பா
வெந்தசுண்ண நீரதிலே வேகப் போட்டு
அல்லுகிறேன் முனைப்போக்கிக் கழுவிப் போட்டு
அப்பனே சாணிப்பால் வேகப் போடு
மல்லுகிறேன் கழுவியதை தெடுத்துக் கொண்டு
மறைப்பசுவி ன் பாலதிலே வேக வைய்யே.

(இ-ள்.) சேங்கொட்டை 175 கிராம் சுண்ணாம்புத் தண்ணீரில் வேகப் போட்டு மூக்கை வெட்டி கழுவி எடுத்துப் பின்னர்

சாணிப்பாலில் வேகவைத்துக் கழுவி எடுத்து பசுவின் பாலில் வேகவைத்து,

163. வையப்பா கழுவியதைக் காயப் போட்டு
வளமான கல்வத்தில் பொடித்துக் கொண்டு
செய்யப்பா எள்ளைந்து பலம் பத்தாக
திறமான பெருவாயன் நீரில் போட்டு
அய்யப்பா இருநேரஞ் சென்ற பின்பு
அப்பனே கழுவியதைக் காயப் போட்டு
வையப்பா இளவறுப்பாய் வறுத்து வாங்கி
பக்குவமாய் பொடிசெய்து கூட்டிச்சேரே.

(இ-ள்.) கழுவியெடுத்து காயப் போட்டு கல்வத்தில் பொடித்துக் கொண்டு எள் 525 கிராம் எடுத்து கழுதை நீரில் போட்டு ஒருநாள் சென்று எடுத்து கழுவி காயப் போட்டு இளம் வறுப்பாய் வறுத்துப் பொடி செய்து மேற்கண்ட சேங்கொட்டை சூரணத்துடன் சேர்க்கவும்.

164. சேரடா பனைவெல்லாம் பலமு வைந்து
தீர்க்கமாய்ப் பொடித்ததிலே பிசரி வாங்கி
தீரடா தினசரிமுள்ளிக் காய் போல்
தின்றுவர இருநேரமீ ரைந்தே நாள்
காரடா பத்தியமா யடுத்துக் காரு
கடுகுபுளிப் புகையுங் காணப் போகா
ஆரடா பசுவின்நெய்யில் சாதங் கொள்ளு
ஆமடா கிரந்திமுத லகன்று போமே.

(இ-ள்.) பனை வெல்லம் 525 கிராம் பொடி செய்து சூரணத்துடன் சேர்த்துப் பிசைந்து நெல்லிக்காய் அளவு தினம் இருவேளை வீதம் பத்து தினங்கள் கொள்ளவும். கடுகு புளி புகை நீக்கவும். பசுவின் நெய் சாதம் சாப்பிடவும். கிரந்தி முதலியன தீரும்.

165. போமடா பெருவயிறு பித்தஞ் சோகை
பொருமலுடன் வயிறுகெண்டை யுதிரப் பாண்டு
ஆமடா காமாலை பரங்கி சூலை
யானைசொறி குன்மமடா இளைப்பு மூலம்
காமடா சூலையொடு மேகஞ் சன்னி
கடுப்புடனே வாதநீர் யோனிச் சூலை
சாமடா பவுத்திரமும் சத்தி வாந்தி
தணிவிக்க லிருமலுடன் கூடுமாச்சே.

(இ-ள்.) பெருவயிறு, சோகை, வயிறு, கெண்டை, பாண்டு, காமாலை, பரங்கிசூலை, குன்மம், இளைப்பு, மூலம், மேகம், சன்னி கடுப்பு, யோனிசூலை, பவுத்திரம், வாந்தி முதலியவை தீரும்.

## சிந்தாதி லேகியம்

166. கூடுமிஞ்சிப் பிரமியமாம் முழங்கால் வாதம்
சுகபோகத்தால் விளைந்த அண்ட வாதம்
ஆடுமிறஞ்சி நோய்கொண்டு அழிந்து போனால்
அப்பனே அறிவுகெட்டுப் போனா ரைய்யே
காடுமிஞ்சிப் போகாமல் சொல்லக் கேளு
கண்ணுக்கு ளொளிபோலக் காணச் சொன்னேன்
தேடுசிந்தாதி லேகியத்தைக் கண்டால்
திரைகடல் போய்புக்கிவிடும் ரோகந் தானே.

(இ-ள்.) அதிக சூட்டால் ஏற்படும் நோயாகிய பிரமியம், முழங்கால் வாதம், அண்ட வாதம் முதலியவை தீர சிந்தாதி லேகியம் கூறுகின்றேன்.

167. தானென்ற மருந்தினுட விபரங் கேளு
சாதகமாய் புளியிலையும் பழச் சாரப்பா
நானென்ற இருமூன்று மாதம் சென்ற
காடியுடனே சேருபடி மூன்றாக

தேனென்ற பாண்டத்தி லிட்டுக் கேளு
திறமான இரும்புனுட கட்டி வாங்கி
பானென்ற பலம்ரெண்டு நிறுத்தப் பின்கேளு
பாங்கான பாண்டத்திலிட்டு வையே.

(இ-ள்.) புளியிலையும், எலுமிச்சம் பழச் சாற்றையும் வகைக்குப் படி ஒன்று, மூன்று மாதக் காடிநீர் படி ஒன்று இவைகளை ஒன்று சேர்த்து ஒரு பாண்டத்திலிட்டு 70 கிராம் எடை இரும்புத் துண்டு அதில் ஒன்றைப் போட்டு வைத்து,

168. வைய்யப்பா வேடுகட்டி பதனம் பண்ணி
வளமாக இருமூன்று நேரஞ் சென்றால்
பையப்பா இரும்பதனை எடுத்துப் போட்டு
பார்மகனே வடிகொண்டு இறுத்து வாங்கி
செய்யப்பா சீனியெடைப் பல மீரைந்து
திறமான முன்னீரில் போட்டு மூடி
அய்யப்பா அதன் பிறகு சொல்லக் கேளு
அப்பனே கடைசரக்கு விவரங் காணே.

(இ-ள்.) வேடுகட்டி ஆறு தினங்கள் சென்று இரும்புத் துண்டை எடுத்து விட்டு வடிகட்டி எடுத்து அதில் சீனி 350 கிராம் போட்டு மூடி வைக்கவும். பின்

169. காணடா சீனிப்பால் பல மீரைந்து
கருதியே யின்னமொரு மூன்றுஞ் சேரு
தோணடா ஆவின்பால் வேகவைத்து
சுருதியுடன் ரவிதனிலே காயப் போட்டு
ஆணடாக் கல்வத்தில் தூளா யாட்டி
அப்பனே வடிகட்டி வைத்துக் கொண்டு
தூணடா சாதிக்காயைந் துங் கூட்டி
துஞ்சான சமுத்திராப் பழமு மைந்தே.

(இ-ள்.) பரங்கிச் சக்கை 455 கிராம் எடுத்து பசுவின் பாலில் வேகவைத்து வெயிலில் காயவைத்து இடுத்து வடிகட்டிச் சூரணமாகச் செய்து சாதிக்காய் 175 கிராம் சமுத்திராப் பழம் ஐந்து

170. அஞ்சான பெருங்காயம் கிராம்பு ஏலம்
அதில்ரெண்டு சீரகமாம் வெட்டி வேரும்
கெஞ்சான வாசனைப் பூலாங் கிழங்கு
கிருபையுடன் வகையொன்று பலத்தில் பாதி
செஞ்சான திப்பிலிதான் பல மிரண்டு
செங்கழுநீர்க் கோஷ்டமடா பலமுங்கால் தான்
பஞ்சான கொத்தமல்லி மிளகு ரெண்டு
பாய்ச்சிவிடு வகையொன்று பலமு மைந்தே.

(இ-ள்.) பெருங்காயம், கிராம்பு, ஏலம், நற்சீரகம், சோம்பு, வெட்டிவேர், பூலாங் கிழங்கு இவை வகைக்கு 17½ கிராம் திப்பிலி 70 கிராம் செங்கழுநீர் கிழங்கு, கோஷ்டம் வகைக்குப் பலம் கால், கொத்தமல்லி, மிளகு வெள்ளை மிளகு வகைக்கு 175 கிராம்

171. அஞ்சுடனே சிற்றரத்தைக் கடுக்காய் சுக்கு
அதுமுந்திரி பேரீச்சம்பழமும் ரெண் டாய
பிஞ்சுடனே தான்றிக்காய் வகை யொன்றுக்குப்
பேரான பலமொன்று நிறுத்துப் போட்டு
கஞ்சுடனே பத்திரிதான் விராகன் நாலு
கைமுறையாய்க் கருகாமல் பொடித்து வாங்கி
தஞ்சுடனே வடிகொண்டு பொடியை எல்லாம்
மச்சாற்றிலுமே குழப்பிலே சார்ந்து கேளே.

(இ-ள்.) சிற்றரத்தை, கடுக்காய், சுக்கு, முந்திரி, பேரீச்சம்பழம், கருப்புப் பேரீச்சம் பழம், தான்றிக்காய் வகைக்கு 35 கிராம் சாதிப்பத்திரி நாலு விராகனிடை இவற்றை பொன் வறுவலாக வறுத்துச் சூரணம் செய்து முன் சொன்ன நீரில் கலந்து.

172. கேளப்பா சீனிபல மூன்று சேர்த்துக்
கிருபையுடன் பாகுபோல் காய்ச்சி வாங்கி
வாளப்பா பசுவின்நெய் தேனுங் கூட்டி
வகையொன்று படியரைதான் விட்டுக் கிண்டி
தாளப்பா திறந்துவிட்டே னினிமேல் என்ன
தாயான மனோன்மணியைப் பூசை பண்ணு
தேளப்பா கொட்டுதல்போல் கூறுக்காம் பாரு
தேவிசக்திக் கணபதியைத் தியானம் பண்ணு.

(இ-ள்.) சீனி 105 கிராம் சேர்த்துக் காய்ச்சி பாகு பதத்தில் எடுத்துப் பசுவின் நெய்யும் தேனும் வகைக்கு அரைப்படி விட்டுக் கிண்டி எடுத்து வைக்கவும். மனோன்மணி. கணபதி, சக்தி பூசை செய்து

173. பண்ணப்பா லேகியம்போல் கிண்டிக் கொண்டு
பதறாமல் நவதானியப் புடத்தைப் போடு
எண்ணப்பா ஈரெட்டு நேரஞ் சென்றால்
என்மகனே பூசைசெய்து எடுத்துக் கொள்ளு
திண்ணப்பா கருமத்தை நிவர்த்தி செய்யும்
செலுத்திவிடு புன்னைக்கா யளவு தானும்
அண்ணப்பா ஈரைந்து தினமே கொண்டால்
அப்பனே பின்பத்து நாளா காதே.

(இ-ள்.) லேகியம் போல் கிண்டி எடுத்து நவதான்ய புடத்தில் பதினாறு நாட்கள் வைத்து எடுத்துக் கொள்ளவும். புன்னைக்காயளவு பத்து தினங்கள் கொள்ளவும். அடுத்து பத்து தினங்கள் விட்டு,

174. ஆகாது நாள்பத்து சென்ற பின்பு
அப்பனே பின்பத்து அவிழ்தங் கொள்ளு
போகாத நோய்களெல்லாம் ஒழிந்து போகும்.
புளிப்புகையும் பழையகறி கிழங்கு மாகா

வேகாத சங்கினிலைச் சாறு வாங்கி
விபரமாய் வுப்பரைத்து வில்லை தட்டி
நோகாத குழிவெட்டி எருமேல் வைத்து
நுணுக்கமாய்ப் படம்போட்டு எடுத்துக்கொள்ளே.

(இ-ள்.) பத்து தினங்கள் சாப்பிடவும். சகல நோயும் தீரும் புளி, புகை, கரப்பான் பதார்த்தக் கறி, கிழங்கு இவை ஆகா. சங்கனிலையும் உப்பும் சேர்த்து அரைத்து வில்லை தட்டி அதனை குழிப்புடம் போட்டு எடுத்து,

175. கொள்ளப்பா மேனிபுங்கு பால் விட்டாட்டி
குமரியே புடம்போட்டுஎடுத்துப் பாரு
அள்ளப்பா மறுபடியும் தேசிநீரா லாட்டி
வில்லைதட்டி முன்போலப் புடத்தைப் போடு
விள்ளப்பா உப்பதனை யுடைத்துக் கொண்டு
விபரமுடன் சோறுகறியில் இட்டுக் கொள்ளு
பள்ளப்பா யிப்படியே தினந்தோ றுண்ண
பரந்துபோம் நோய்களெல்லாம் பாரு பாரே.

(இ-ள்.) பின்னர் குப்பை மேனிச் சாறு, புங்கம் பால், குமரிச்சாறு இவைகளில் புடமிட்டெடுத்து மீண்டும் எலுமிச்சம் பழச்சாரில் புடமிட்டெடுத்த உப்பையே சோறு கறியில் சேர்த்து தினம் உணவு கொள்ளவும்.

## மலசலம் கட்டினால்

176. பாரடா மலசலங்கட் டிற்றானால்
பார்மகனே அடிவயிற்றைப் புண்ணாய் நோகும்
நேரடா மருந்து ஒன்று சொல்லக் கேளு
நிமிடத்தில் மலசலத்தை நிகழ்த்திப் போடும்
தேரடா பனைவெல்லம் விராகன் ரெண்டு
திறமான வெடியுப்புஞ் சமனாய்க் கொண்டு
காரடா ரெண்டையுந்தா னரைத்து வாங்கி
கனிந்தசுண் டைக்காயளவு உருட்டிப்போடே.

(இ-ள்) பனை வெல்லம் இரண்டு விராகனிடை, அதற்குச் சமமாக வெடியுப்பு இரண்டையும் நன்குஅரைத்து சுண்டைக்காயளவு மாத்திரைகளாக உருட்டிப் போடவும்.

177. உருட்டியே உண்ணிருபோது தினமே மூன்று
உத்தமனே வேறொன்று மாகா தப்பா
திருட்டியே பசுவின்மோர் சாதங் கொள்ளு
சிவசிவா புளிப்புகையு ஞ் சேரப் போகா
தருட்டியே குடல்வாய்வுப் பொருமல் தீரும்
வரிசையாய் சொன்னகுரு முறை தப்பாது
செருட்டியே யிம்மருந்தைச் செய்யும் போது
சிவசத்திப் பூசைதனைத் திறமாய்ச் செய்யே.

(இ-ள்.) தினம் காலை, மாலை மூன்று தினங்கள் ஒவ்வொரு உருண்டை வீதம் சாப்பிடவும். பசுவின் மோர், சாதம் சாப்பிடவும். புளி, புகை ஆகாது. குடல்வாயு, பொருமல் முதலியன தீரும்.

**முறைக் காய்ச்சலுக்கு**

178. செய்யடா முறைக்காய்ச்சல் வந்த தானால்
தீர்க்கமாய்ச் சொல்லுகிறேன் மருந்தைக் கேளு
பைய்யடா இலந்தையடி சுற்றி வந்து
பார்மகளே நோயாளி பேரைச் சொல்லி
அய்யடா சாம்பிராணி தூபங் காட்டி
அப்பனே பிடியிலைதான் பறித்துக் கொண்டு
வைய்யடா மரத்தடியில் முன்பெயர் சொல்லி
வந்தனை செய் மறுபிடிதான் பறித்து வாங்கே.

(இ-ள்.) இலந்தை மரத்தைச் சுற்றிவந்து நோயாளியின் பெயரைச் சொல்லி சாம்பிராணி தூபங்காட்டி ஒரு பிடியிலையை

பறித்துக் கொண்டு, முன்போல் நோயாளியின் பெயரைச் சொல்லி மரத்திற்கு வந்தனை செய்து மறுபிடியிலையைப் பறித்து வாங்கி,

179. வாங்கியே வெள்ளுள்ளி வசம்பு கூட்டி
வளமான மிளகேழு அரைத்து வாங்கி
ஓங்கியே இருமூன்று நேரங் கொண்டால்
உத்தமனே முறைக்காய்ச்ச லொழியும் பாரு
தேங்கியே பத்தியமாய் இருந்து வந்தால்
தேகத்தில் பிணிகளெல்லாஞ் சித்திப் போகும்
பாங்கியே இன்னமொரு அவிழ்தஞ் சொல்வேன்
பரிவான இம்முறையைப் பாரு பாரே.

(இ-ள்.) வெள்ளுள்ளி, வசம்பு இவற்றை கூட்டி ஏழு மிளகு சேர்த்து அரைத்து தினம் மூன்று வேளை கொள்ள முறைக் காய்ச்சல் தீரும். பத்தியமாய் இருந்துவரின் உடலில் உள்ள எல்லாப் பிணிகளும் விலகும்.

## அறுவகை மூலத்துக்கும் பற்பம்

180. பாரப்பா திரிகடுகு சூதம் லிங்கம்
பாங்காக சிற்றாமணக்கின் பிண்ணாக்குடன்
வேரப்பா வகையொன்று விராகன் தூக்கி
வெண்காரம் நாலுவிராக னிடையைக் கூட்டி
மாரப்பா வாளமது விராக னேழு
வாழைப்பூச் சாற்றிலரை வில்லைதட்டிச்
சேரப்பா சட்டியிலிட் டடுப்பேற்றி மண்
சீலைசெய்து சட்டியை மல்லாத்தி மூடே.

(இ-ள்.) சுக்கு, மிளகு, அரிசி திப்பிலி, ரசம், லிங்கம், சிற்றாமணக்கின் பிண்ணாக்கு வகைக்கு ஒரு வராகனெடை வெங்காரம் நாலு விராகனெடை சுத்தி செய்த வாளம் ஏழு விராகனெடை இவைகளை வாழைப்பூச் சாற்றிலரைத்து வில்லைதட்டி சட்டியிலிட்டு மேல் சட்டியை மல்லாத்தி மூடி சீலை மண் செய்து.

181. மூடியே மேல்சட்டியில் நற்சலம் போடிட்டு
மூட்டியெரி கடிகையுமேழ் பற்பமாச்சு
நாடியெரித் தாறியபின் தூபங்காட்டி
நற்குன்றி யெடைதூக்கிட் டனுபானங்கேள்
தேடியதோர் களக்கொட்டி பருப்புங்கு துளிர்
கடுக்காய்த் தயிரேழ் இராப் போதுங்கொள்ள
ஓடிடுமே ஆறுவகை மூலம்பாரு
ஓகோகோப் புளிப்புகையும் ஒழியக்கேளே.

(இ-ள்.) மேல் சட்டியில் நல்ல தண்ணீர் விட்டு அடுப்பிலேற்றி ஏழு நாழிகை எரித்து எடுக்க பற்பமாகும். குன்றியெடை எடுத்து கழற்சிப் பருப்பு, புங்கன் துளிர், கடுக்காய் இவைகளை அரைத்து தயிரில் கலந்து அதில் மேற்கண்ட பற்பத்தை குன்றியெடை கலந்து சாப்பிட ஆறுவகை மூலநோயும் தீரும்.

## மூலநோய் மருந்து

182. கேளப்பா கொடிவேலி ஆடாதோடை
கெடியான வெள்ளறுகு சிவனார் வேம்பு
வேளப்பா சாரணைவேர் நிலயாவாரை
மேனியப்பைக் கிழங்குச் சமனாய்ச் சேர்த்து
தாளப்பா நிழலிலுர்த்தி இடித்துக் கொண்டு
தனியான தேனிற்கால் பலமேபோட்டு
நாளப்பா மண்டலமோரிரு போதுங்கொள்
ளைந்துகடி திமிர்குட்ட மூலம் போமே.

(இ-ள்.) கொடி வேலி, ஆடாதோடை, வெள்ளறுகு, சிவனார் வேம்பு, சாரணைவேர், நிலாவாரை, குப்பைமேனி, அப்பங் கோவைக் கிழங்கு இவைகளை சமனாய்ச் சேர்த்து நிழலில் உலர்த்தி இடித்து சூரணித்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும். தேனில் கால் பலம் சூரணம் கலந்து காலை மாலை ஒரு மண்டலம் சாப்பிட திமிர்குஷ்டம் மூலம் தீரும்.

## 18 குஷ்டத் திமிர் மூலத்திற்குச் சூரணம்

183\. போமடா அயச்செம்பு உருக்குக் காந்தம்
பித்தளைவெங் கலம்ரசம் வெங்காரங் கெந்தி
ஆமடா மனோசிலை திப்பிலியின் மூலம்
அரிதாரம் பொடிவகைக்குப் பலமே தூக்குத்
தாமடா குமரிரசம் நாள்மூன் றாட்டி
சகடைபோல் வில்லைதட்டி யுலர்த்திக் கொண்டு
நேமடா சட்டியின்மேல் சட்டி மூடி
நெகிழாமல் சீலைமண்ணே ழடவாய்ச் செய்யே

(இ-ள்.) இரும்பு, செம்பு, எஃகு, காந்தம், பித்தளை, ரசம், வெங்காரம், கெந்தகம், மனோசிலை, திப்பிலி மூலம், அரிதாரம் இவைகளின் தூள் வகைக்குப் பலம் ஒன்று வீதம் எடுத்துக் கல்வத்திலிட்டு குமரிரசம் விட்டு மூன்று நாள் அரைத்து வில்லை செய்து உலர்த்திச் சட்டியிலிட்டு மேல்மூடி வலுவாக சீலைமண் ஏழுதடவை செய்து.

184\. செய்யப்பா அடுப்பேற்றி ஈராறு சாமம்
செந்தணல் மூட்டருணன்போல் செந்தூரிக்கும்
பையப்பா பணமரைதா னிறுத்து வாங்கி
பாங்காய்த் தேனுள்ளியனு பானஞ்சீனி
மெய்யப்பா மண்டலமோ ரரைதான் கொள்ளு
கல்லடைப்புச் சதையடைப்புப் பாண்டு ரோகம்
கொய்யப்பா சூலைதந்த வாய்வு பித்தங்
கொழிப்புக் காமாலை உஷ்ணந்தீரே.

(இ-ள்.) அடுப்பிலேற்றி பன்னிரண்டு சாமம் எரித்து எடுக்க அருணன் போல் செந்தூரமாகும். அரை பண விடை தேன், சீனி இவைகளில் கலந்து அரை மண்டலம் கொள்ள கல்லடைப்பு, சதையடைப்பு, பாண்டுநோய், சூலை நோய், தந்த வாய்வு, பித்தம், காமாலை, உஷ்ண நோய் தீரும்.

## வெங்கார சஞ்சீவி செந்தூர மாத்திரை

185. தீரடா பெருவயிறு விஷபாகந் தான்
சேத்துமம் பெருநோய் கண்சிவப்பு வாய்வு
மாரடா பிரமியமே கட்டும் குங்கிலியம்
வங்கார சஞ்சீவியிற் பலமோ டொக்க
பாரடா கருநாவி கழஞ்சு தூக்கிப்
பசுநீரி லாறுதினம் ஊறப்போட்டு
சேரடா வுலர்த்தியே திப்பிலி மூலந்தான்
திறமாகத் தூக்கியிரு பலமுங் கூட்டே.

(இ-ள்.) பெரு வயிறு, விஷப் பாண்டு, சேத்தும நோய், பெரு நோய். இவைகள் தீர வெங்காரம்35 கிராம், பசுவின் நீரில் ஒரு நாள் ஊறப்போட்டு எடுத்து, உலர்த்திய கருநாவி ஒரு கழஞ்சு, திப்பிலி 70 கிராம் இவை.

186. கூட்டப்பா கல்வத்தில் மூன்றொன் றாகக்
கொடுத்திடுவாய் வெள்ளுள்ளி தைலம் வாங்கி
ஆட்டப்பா மயனம்போ லரைத்துக் கொண்டு
அப்பனே பயரதுபோலு ருட்டிக் கொண்டு
வாட்டப்பா நிழலுலர்த்தி யனுபானங் கேள்
வருமிளகு திப்பிலி சூரணமே செய்து
ஊட்டப்பா யிஞ்சிரசம் மூன்றுங் கூட்டி
உத்தமனே மாத்திரையொன் றிழைத் திடாயே.

(இ-ள்.) மூன்றையும் ஒன்றாகக் கூட்டி கல்வத்திலிட்டு வெள்ளுள்ளி தைலம் விட்டு மயனம் போல் அரைத்து எடுத்துக் கொண்டு பாசிப் பயிரளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும். மிளகு, சூரணம், திப்பிலி, சூரணம், இஞ்சி ரசம் மூன்றையும் கூட்டி அதில் ஒரு மாத்திரையை இழைத்து,

187. இழைத்திடு நாளொருபத் திருபோதுந் தான்
யிதமாகக் கொண்டிடவே மூவாறு சன்னி
துளைத்திடுமே நாளிருப் திருநாள் வாதஞ்
சுனைகெட்டு வோடுமடாக் கிருச்சு வாதம்

உளைத்திடு வாய்வுவஸ்து வொன்றா காது
உத்தமனே இச்சாபத்திய மே காரு
தளைத்திடுமே யிம்மருந்து பொய்யா தப்பா
தவறாது தவறாது சாதிப் பாயே.

(இ-ள்.) பத்து தினங்கள் தினம் காலை, மாலை கொடுத்து வர பதினெட்டு வித சன்னி, வாதம் தீரும். வாய்வு பதார்த்தம் நீக்கவும். இச்சா பத்தியமாய் இருக்கவும்.

## நாக பற்பம்

188. சாதிப்பாய் நாகமிடைபலந் தா னொன்றுத்
தனமான அயச்சட்டி தன்னிற் போட்டு
சோதிப்பாய்க் கொல்லுலையில் லுலரும் போது
தூக்கிவிடு எள்ளெண்ணெய் சுத்தி யாச்சு
வாதிப்பாய்த் திரும்பசட் டியிலே போட்டு
மாறாமலூ துருகும் பால் பால் துத்தம்
பேதிப்பாய் மூன்றுபலம் பொடியே செய்து
போடுசமன் தூளதின்மேல் மூடிப் போடே.

(இ-ள்.) நாகம் 35 கிராம் அயச்சட்டியில் இட்டு உருகி வரும் போது சிறிது எள்ளெண்ணையை தூக்கிவிட சுத்தியாகும் அதனைத் திரும்ப ஒரு இரும்பு சட்டியிலிட்டு ஊ தி உருகும் போது பொடி செய்து எடுத்த 105 கிராம் பால்துத்தத் தூளில் 35 கிராம் தூளைப் போட்டு மேலேமூடி விடவும்.

189. போடப்பா யிருகடிகை கரியிட் டூதிப்
போட்டுமுன் தூளதனை மேலோடு மூடி
நாடப்பா திரும்பயிரு கடிகை யூதி
நல்லெண்ணை குத்தியெரித் தாறப் போட்டு
தேடப்பா பொற்பணத் தினெடையே தூக்கித்
திறமான எள்ளெண் ணெயிலிருபோதுந் தான்
சாடப்பா மண்டலமிப் படியே கொண் டால்
தரியாது ஈளைசயங் காசம் பாரே.

(இ-ள்.) பின் இரண்டு நாழிகை கரியிட்டுத் தீப்போட்டு முன் தூளதனைப் போட்டு மூடிவிடவும். திரும்பவும் இரண்டு நாழிகை ஊதி நல்லெண்ணை குத்தி எரித்தாரப் போடவும். பணவிடை மருந்தினை எள்ளெண்ணெயில் கலந்து தினம் இரண்டு வேளை கொள்ள ஈளை காசம் தீரும்.

190. பாராடப் பிரண்டைச்சா றாழாக் கொன்றில்
பழவரிசி யாழாக்கிட் டூறப் போட்டு
சேரடா அதிவிடயங் காசிக் கட்டித்
திறஞ்சாதிக் காயிலவங்கம் சாதிப்பத்திரி
வேரடா வகையொன்று விராகன் தூக்கி
மீறாமல் கலுவத்தி லேற்றிக் கொண்டு
நேரடா அரைத்தடை மூன்றதுவே தட்டி
நெய்யில்சுட் டைந்துதினம் யிருபோ துண்ணே.

(இ-ள்.) பிரண்டைச் சாறு ஒரு ஆழாக்கு எடுத்து அதில் பழைய அரிசியை ஊறப் போட்டு. அதிவிடயம், காசுக்கட்டி, சாதிக்காய், இலவங்கம், சாதிப்பத்திரி வகைக்கு ஒரு விராகனெடை எடுத்து எல்லாவற்றையும் கல்வத்திலிட்டு அரைத்து மூன்று அடைகளாகத் தட்டி நெய்யில் சுட்டு தினம் இருவேளை வீதம் ஐந்து தினங்கள் உண்ணவும்.

191. உண்ணப்பா அதிமதுரம் இலவங்கப் பட்டை
உத்தமனே வகைக்கு விராக நாலைந்து
சண்ணப்பா கொட்டியொரு பாண்டத் துள்
நீர்தாக்கி டிருபடிகடிகை யைந்தா றூரில்
அண்ணப்பா குடிநீரில் படி காலாக
அவிழ்தத் தோடிருநேரங் கொள்ளும் போது
துண்ணப்பா சுரைத்துளிர் தூதுவளை வற்றல்
சுண்டவற்றல் நெல்லிவடை தயிராம் பாரே.

(இ-ள்.) அதிமதுரம், இலவங்கப்பட்டை வகைக்கு விராகனெடை இருபதை ஒரு பாண்டத்துள் போட்டு இரண்டு படி

தண்ணீர் விட்டு முப்பது நாழிகை ஊறப்போட்டு, அந்தக் குடிநீரில் கால் படியில் முன் மருந்து சேர்த்து தினம் இரண்டு வேளை சாப்பிடவும். சுரைத் தளிர் தூதுவளைக்காய் வற்றல், சுண்டவற்றல் நெல்லி வடை, தயிர் முதலியவை சேர்த்துக் கொள்ளவும்.

## செவிடு - செவியிரச்சல் - பீனிசத்திற்கு

192. பாரு கையான்தகரை மணத் தக்காளி
பசுமஞ்சள் மிதிபாகல் பொன்னாங் காணி
சேரு முசுமுசுக்கைவேர் குல்லை வெண்ணொச்சி
திறமாக வகைக்குச்சாறு படிகால் வாங்கி
வேரு திப்பிலிமிளகு செவியஞ் சுக்கு
மேலான ஈசுரவேரக் கிராக் காரம்
பாரு சித்திரமூலம் லவங்கப் பட்டை
வட்டத்திருப்பி இலவங்கப் பத்திரி கூட்டே.

(இ-ள்.) கையான் தகரை, மணத் தக்காளி, பசுமஞ்சள், மிதி பாகல், பொன்னாங்காணி, முசுமுசுக்கை வேர், துளசி, வெண்ணொச்சில் இவை வகைக்குக் கால் படி சாறு எடுத்து, திப்பிலி மிளகு, செவியம், சுக்கு, ஈசுர மூலிவேர், அக்கிரகாரம், சித்திரமூலம், இலவங்கப் பட்டை, வட்டத் திருப்பி, இலவங்கப் பத்திரி.

193. கூட்டப்பா சதகுப்பை தேக்கு மஞ்சள்
கோஷ்டஞ் சீரகம் வ கைக்குப் பலங்கால் தூக்கி
யாட்டப்பா முன் ரசத்தி லரைத்துப் போட்டு
அப்பனே யெள்ளெண்ணைப் படிதான் விட்டு
மூட்டப்பா சிறு கத்தீ யடுப்பிலேற்றி
மூன்றுநாள் யெரிமெழுகு பதம் பாரத்தித்
தோட்டப்பா யெட்டினில் ரெண்டடுத்து மூழ்க
செவியிறைச்சல் பீனிசமும் தீரும் பாரே.

(இ-ள்.) சதகுப்பை, சிறுதேக்கு, மஞ்சள், கோஷ்டம், சீரகம் வகைக்குக் கால் பலம் நிறுத்து எடுத்துக் கொண்டு முன் சாற்றிலரைத்து எள்ளெண்ணெய் ஒரு படி விட்டு அடுப்பில் வை த்து சிறுதீயாக மூன்று தினங்கள் எரித்து மெழுகு பதத்தில்

வடித்து எட்டு தினங்கட்கு இரண்டு முறை தேய்த்து முழுக செவியிரைச்சல் பீனிசம் தீரும்.

## பிரமியம், வெள்ளை , உஷ்ண நோய் தீர

194. பாரப்பா சுக்குபுளிப் பிராணி சாம்பல்
பாங்கான நெல்லிமுள்ளிப் பரங்கிச் சக்கை
சேரப்பா வகைக்காறு பலமே தூக்கி
திப்பிலிமூலங் கடுக்காய் சிறு நாகப்பூ
மீரப்பா தாளிசபத்திரி தான்றிக் காய்
மிளகேலஞ் செவ்வியந் திப்பிலி எட்டொன்று
மாரப்பா வகையொன்று வராகன் ரெண்டு
மைந்தனே மோடிநற்சீ ரகமுங்கூட்டே.

(இ-ள்.) சுக்கு, புளியம் புறணி சுட்ட சாம்பல், நெல்லி முள்ளி, பரங்கிச்சக்கை வகைக்கு 20 கிராம் எடுத்து திப்பிலி மூலம், கடுக்காய், சிறுநாகப்பூ, தாளிசபத்திரி, தான்றிக்காய், மிளகு, ஏலம், செவ்வியம், அரிசிதிப்பிலி ஆகிய ஒன்பதும் வகைக்கு இரண்டு விராகனெடை, மோடி, நற்சீரகம்.

195. கூட்டடா வெட்டி விலாமிச் சஞ்சங்கு
கொத்தமல்லி பச்சிலைசிற் றரத்தை எட்டும்
நாட்டடா வகையொன்று பலமுமொன்றே
நல்பிரப் பங்கிழங்கு பலமிரண்டு
வாட்டடா சட்டியிலிட் டடுப்பி லேற்றி
வகையொன்றுக் கருகாமல் வறுத்துக் கொண்டு
ஆட்டடா யிடித்துத்தூள் வடியிட்டே பின்
நாலுபலம் பழவெல்லம் கேளே.

(இ-ள்.) வெட்டிவேர், விளாமிச்சை வேர், சங்கம் வேர் கொத்தமல்லி, பச்சிலை, சிற்றரத்தை இவை எட்டும் வகைக்குப் 35 கிராம், பிரப்பங் கிழங்கு 70 கிராம் இவற்றைத் தனித்தனி சட்டியிலிட்டு,அடுப்பிலேற்றி கருகாமல் பொன் வறுவலாக வறுத்து இடித்து சூரணித்து துணியில் வடிகட்டி 140 கிராம் வெல்லம்

196. கேளடா பாகுபிடித்துத் தூளைப் போட்டுக்
கிண்டடா நெய் பலமா றதிலே விட்டு
தாளடா தான்றிக்காய் பிரமாணந்தான்
தவறாமல் மண்டலமோ ரிருபோதுங் கொள்
நாளடா பிரமியமெட் டதும்போம் வெள்ளை
நன்மகனே பாதம்வெளுப் புஷ்ணவாயு
நீளடா அக்கினிபுஷ்டி யில்லா மஞ்சள்
நீர்வெளுத்தே குளிர்ந்து நீங்கப் போமே

(இ-ள்.) பாகு செய்து சூரணத்தைப் போட்டுக் கிண்டி 210 கிராம் நெய்விட்டுக் கிண்டி வைத்துக் கொள்க. தான்றிக் காயளவு இருவேளை ஒரு மண்டலம் சாப்பிட பிரமியம், வெள்ளை, பாதஎரிவு, வெளுப்பு நோய், உஷ்ணவாயு, உடல் புஷ்டியில்லாதிருத்தல், நீர் மஞ்சள் இவை நீங்கும்.

## சிவதை வேர் சூரணம்

197. போமப்பா சிவதையின் பலமோ ரெட்டுப்
பொடியாகக் கொய்தாவின் தன் பாலாக
ஆமப்பா படியரைதான் அதிலே விட்டு
அப்பனே வேகவைப்பாய் சுத்தி யாச்சு
தாமப்பா வாய்விளங்கம் லவங்கப் பத்திரி
தாக்கு ரோகணிவகைக்குப் பல மொன்றாக
நேமப்பா மிளகுபலங் கடுக்காய் சுக்கு
நிறைகாணும் வகைநாலு பலமே தூக்கே.

(இ-ள்.) சிவதை வேர் 280 கிராம் சூரணம் செய்து ஒரு சட்டியில் அரைப்படி பசுவின் பால்விட்டு வேடுகட்டி சூரணத்தை வைத்து மூடி வேகவைத்து (புட்டவியல்) எடுத்து வாய் விளங்கம், இலவங்கப்பத்திரி, கடுகுரோகணி வகைக்கு 35 கிராம் கடுக்காய் சுக்கு வகைக்கு 140 கிராம்.

198. தூக்கடா யிடித்தனை வடியிட்டே பின்
தூளதிலே வெறுகடியின் பிரமாணந்தான்
தாக்கடா சீனிசமனாகச் சேர்த்துத்
தான்கொள்ளும் போது வெந்நீர் சத்தே கூட்டு
போக்கடா பேதியுமாம் இளைப்பொன் றில்லைப்
பூச்சிவிழும் கைகால்வெந் நீரால் சுத்தி
தேக்கடா மிளகுடனீரன் னங் கொள்ளு
சொல்லரிய சுக்குக்கிஷா யத்தைக் கூட்டே.

(இ-ள். இவற்றைச் சூரணம் செய்து எல்லாவற்றையும் ஒன்று படக் கலந்து வைத்துக் கொண்டு பூனையின் காலடி அளவு சூரணமும் சமம் சர்க்கரையும் சேர்த்து வெந்நீருடன் அருந்தவும் பேதியாகும். மலத்திலுள்ள கிருமிகள் விழும் ரசம் சாதம் சாப்பிடவும். இரவு சுக்கு கஷாயம் சாப்பிடவும்.

## திருநீலகண்ட மெழுகு (பேதிக்கு)

199. கூட்டப்பா நேர்வாளத் தோடு போக்கி
கொடிதான நஞ்சகற்றிக் கழஞ்சு மூன்று
நாட்டப்பா சுக்குப்பொடிக் கழஞ்சு மூன்று
ஆட்டப்பாக் கல்வத்தலிரு சாமந் தான்
அப்பனே மெழுகதுபோல் உருட்டிக் கொள்ளு
மூட்டப்பா குன்றிமணிப் பிரமாணந் தான்
மூன்றுவிசைவாந்திவயறு பேதி யாமே.

(இ-ள்.) சுத்திசெய்த வாளப்பருப்பு மூன்று கழஞ்சு, சுக்கு சூரணம் மூன்று கழஞ்சு, பழைய வெல்லம் மூன்று கழஞ்சு இவற்றைக் கல்வத்திலிட்டு மெழுகு போல் அரைத்து உருட்டி வைத்துக் கொள்க. குன்றியளவு காலையில் கொள்ள மூன்று விசை வாந்தி செய்வித்து பேதியும் ஆகும்.

200. ஆமடா அவிழ்தமடுத் தடுத் துண்ணாதே
யைந்து தினந் தள்ளொருநாள் விழ்தங் கொள்ளு
தாமடா முறையைந்திப் படியே கொண்டால்
தரியாது வயிற்றுவலி தவறிப் போகும்

நேமடா பொரிமிளகு நீரோடன்னம்
நேராக கீரையின் வென்னீராகும்
வோமடா குருவாக்கு முறைபொய்யாது
உத்தமனே சுக்குக்கஷாயத்தைக் கொள்ளே.

(இ-ள்.) ஐந்து தினங்கள் சென்ற பின்னர் மீண்டும் ஒரு நாள் மருந்தைச் சாப்பிடவும். வயிற்று வலி தீரும். புளியில்லாத ரசம் சாதம் சாப்பிடவும். இரவு சுக்கு குடிநீர் சாப்பிடவும்.

## பேதிக்கு லிங்க மெழுகு

201. கொள்ளப்பா வாளமிடை பலஞ் சாணத்தில்
கொதிக்க யிருகடிகை யெரியிட்டேபின்
கள்ளப்பா வுடைத்திடுமே லோடு போக்கி
சவ்வெடுத்து நெய்ச்சட்டி சிறுகீரையிட்டு
மெள்ளப்பா வறுசெய்தா மணக்கின் முத்து
மேலோடு போக்கி நாளொன் றுங்கூட்டி
தென்னப்பா லிங்கமரைக் கழஞ்சி தூக்கி
சேர்த்தரை செய்மெழுகுபதஞ் சிமிளிற்சேரே.

(இ-ள்.) 35 கிராம் வாளத்தை சாணத்தில் இரண்டு நாழிகை கொதிக்க வைத்து எடுத்து மேலோடு போக்கி, பருப்பை சவ்வு நீக்கியெடுத்து, நெய்ச்சட்டி கீரை, சிறுகீரை சேர்த்து வறுத்து எடுத்துக் கொண்டு அதனுடன் மேலோடு போக்கி சுத்தம் செய்த ஆமணக்கின் பருப்பு 175 கிராம் கூட்டி, லிங்கம் அரைக் கழஞ்சு சேர்த்து கல்வத்திலிட்டு அரைத்து மெழுகு பதத்தில் சிமிழில் பத்திரம் செய்யவும்.

202. சேரடா பெருங்குன்றிப் பிரமாணந்தான்
திரட்டியே பனைவெல்லம் கவசஞ் செய்து
நேரடா உள்ளுக்கீய வயிறுபேதிக்கும்
நெஞ்சனத்தி மூன்றுவிசைப் பித்தம் போக்கும்
சாரடா வென்னீரால் கைகால் சுத்தி
சதியாகும் நித்திரையைத் தான் செய்யாமல்
மீரடா தயிர்பயிரோ டன்னங் கொள்ளு
மேலான சுக்குகுக்கஷா யத்தைத் தாக்கே.

(இ-ள்.) பெரிய குன்றிமணி அளவு பனைவெல்லம் கவசம் செய்து சாப்பிடவும். பித்தம் வாந்தியாகும். பேதியாகும். நித்திரை கூடாது. தயிர், பாசிப்பயறு சேர்ந்த அன்னம் சேர்க்கவும். இரவு சுக்குக் குடிநீர் சாப்பிடவும்.

## பேதி மாத்திரை

203. தாக்கடா வாளமதுபல மோ ரெண்டு
தனிமேதைச் சாணமெடுயதின் மேற் சுத்தி
போக்கடா மேலோடு உள் கத்தாளை
பூரியெடுத்துச் சுளையும் பருப்புங் கூட்டி
நோக்கடா சட்டியிலிட் டடுப்பி லேற்றி
உண்மையாய் செம்பொன்னிறம் வறுத்து வாங்கி
தேக்கடா மிளகோமமக் கிராக் காரம்
சுக்குடனே தாளிசப்பத் திரியுங் கூட்டே.

(இ-ள்.) 70 கிராம் வாளத்தை சாணிப்பாலில் ஊறவைத்து மேலோடு போக்கி முளை நீக்கிய பருப்பை சட்டியிலிட்டு செம்பொன்னிறமாய் வறுத்து எடுத்து அதனுடன் மிளகு, ஓமம், அக்ரகாரம், சுக்கு, தாளிசப் பத்திரி.

204. கூட்டப்பா சன்னராஷ் டகங் கிராம்பு
கோஷ்டமுடன் வால்மிளகு விளங்கந் தேக்கு
மாட்டப்பா வகையொன்றுக் கழஞ்சி தூக்கி
வறுத்துச் சூரணம்செய்து கரிப்பான் சாற்றில்
ஆட்டப்பா மயனம்போ லாகுங்குன்றி
அப்பனே செய்துலர்த்திச் சிமினிற் கொண்டு
சூட்டப்பா குளிகையிரண் டுறவாஞ் சீனி
சுகபேதி மிளகுநீரன் னந்தாக்கே.

(இ-ள்.) சிற்றரத்தை, கிராம்பு, கோஷ்டம், வால்மிளகு, வாய்விளங்கம், சிறுதேக்கு வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து வறுத்து சூரணம் செய்து சேர்த்து கரிசாலைச் சாறுவிட்டு மயனம் போல்

அரைத்து குன்றியளவு உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்க. இரண்டு குளிகை சீனியுடன் கலந்து கொள்ள சுகமாக பேதியாகும். ரசம் சாதம் சாப்பிடவும்.

## கலிங்காதி மெழுகு

205. தாக்கு பேய்க்குமட்டிக்காய் விரைதோண்டித்
தள்ளியேத் தரிந்திடுவாய் பீங்கானுள்ளே
தூக்கு யிந்துப்புக்கழஞ்சி யெடையீரைந்து
தொந்தித்துக் கதிரொளியி லுலரப் போட்டு
தேக்குக் கல்வத்திலிதை யேற்றிக் கொண்டு
தொடர்ந்தரை யாறுகடிகை வழியிட்டே பின்
நோக்கு விராகனெடைதான் பனை வெல்லத்தில்
துன்னிமையாய்க் கவசஞ்செய் நொடி போதுண்ணே.

(இ-ள்.) பேய்க் குமட்டிக் காயை விரையை நீக்கி சிறுக அரிந்து பீங்கானில் வைத்து, இந்துப்பு பத்து கழஞ்சு சேர்த்துக் கலந்து வெயிலில் உலரப் போட்டு கல்வத்திலிட்டு தொடர்ந்து ஆறு நாழிகை அரைத்து வழித்து வைத்துக் கொள்க. ஒரு விராகனெடை அளவு பனைவெல்லம் கவசம் செய்து சாப்பிடவும்.

206. உண்ணவே வாந்திராமல் வயிறு பேதிக்கு
ஓகோகோ நாக்குப்பூச்சி உழன்று வீழும்
கண்ணவே சிறுபயறு வறு செய்தோடு
கழட்டி பச்சரிசியிரண் டுறவாய்ப் பொங்கி
திண்ணவே மலக்கட்டும் பித்தம் போக்கும்
சீரகம்சுக் கொடுங்கஷா யத்தைக் கொள்ளு
நண்ணவே வென்னீரால் கைகால் சுத்தி
நாடாதே புளிபுகையுந் தள்ளிக் கேளே.

(இ-ள்.) வாந்தியின்றி பேதியாகும். நாக்குப் பூச்சி சுழன்று விழும். பேதி நிற்க - சிறு பயிறு வறுத்து பச்சரிசி சேர்த்த பொங்கல் சாப்பிடவும். சீரகம், சுக்கு கஷாயம் சாப்பிடவும். வெந்நீரில் கைகால் சுத்தம் செய்க. புளி, புகை நீக்கவும்.

## பேதிக்கு சதுர்வித மெழுகு

207. கேளப்பா கொடிமுந்திரிப் பழங் கற்கண்டுக்
கெடியான பேரீச்சம்பழம் நேர் வாளம்
தள்ளப்பா சுத்திசெய்து சமனாய்க் கூட்டிச்
சன்னியரை கலுவத்தில் மயனம் போலாம்
வாளப்பா தூதுவளங்காய்ப் பிர மாணம்
மைந்தனே கொண்டிடவே வயிறு பேதிக்கும்
நாளப்பா பத்தியந்தா னொன்று மில்லை
நற்சீரகஞ் சுக்குக்கஷா யத்தைக் கூட்டே.

(இ-ள்.) திராட்சைப்பழம், கற்கண்டு, பேரீச்சம்பழம், சுத்திசெய்த நேர்வாளம் சம அளவு எடுத்துக் கல்வத்திலிட்டு மயனம் போலரைத்து தூதுளங்காய் அளவு சாப்பிட பேதியாகும். நற்சீரகம் சுக்கு குடிநீர் சாப்பிடவும்.

## சன்னிதோடத்திற்கு கண்டாவிழ்தம்

208. கூட்டப்பா பொன்வெள்ளி பவள முத்துக்
குங்குமப்பூக் கோரோ சனைக் கஸ்தூரி
நாட்டப்பா வகையொன்றுக்குக் கால் கழஞ்சி
நல்வேப்ப முத்துசெந்தா மரையின் வித்து
தீட்டப்பா அதிமதுரம் அக்கிராக் காரம்
சிற்பத்தைக் கலங்கொம்பு புரசம் வித்து
மாட்டப்பா ருத்ராட்சம் வில்வத் தோடு
மகத்தான வெண்சங்கா மணக்கின் வேரே.

(இ-ள்.) பொன், வெள்ளி, பவழம், முத்து, குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி வகையொன்றுக்கு கால் கழஞ்சு, வேப்பம் பருப்பு, செந்தாமரை வித்து, அதிமதுரம், அக்ராகாரம், சிற்றரத்தை, மான்கொம்பு, புரசம் வித்து, உத்ராட்சம், வில்வ ஓடு, வெண்சங்கு வேர், ஆமணக்கு வேர்.

209. வேரடா கோஷ்டமுடன் கிராம்பு சுக்கு
வெவ்வேறாய் வகையொன்றுக் கழஞ்சி தூக்கி
நேரடா முலைப்பால்தேன் கோவைச் சாற்றில்
நேர்த்தியாய் யிழைத்துவழித் தெடுத்துக் கொண்டு
தீரடா தாபசரந்தோ ஷஞ் சன்னித்
தீதுகருதோ ஷஞ் சன்னித்
தீதுகருதோ ஷமும்நா வரட்சி கண்டால்
சேரடா நாவிற்கொண்ட விழ்தந் தன்னை
தேய்த்திடவே நோய்பலவுந் தெரிக்கும் பாரே.

(இ-ள்.) கோஷ்டம், கிராம்பு, சுக்கு, வகைக்கு ஒரு கழஞ்சு, முலைப்பால், தேன், கோவைச் சாறு இவைகளால் இழைத்து வழித்து எடுத்து (அரைத்து) நாவில் தேய்த்து விட சன்னி தோடம், தாபசுரம் கருதோஷம் நாவறட்சி தீரும்.

## கண்டாத்திரி லேகியம்

210. பாரப்பா யிஞ்சியெடை பல மெட்டைந்து
பாங்காகமேல் தோலகற்றிபயர் போல் கொய்து
சேரப்பா சட்டியில் ஆவின் நெய் விட்டு
செம்பொன் நிறமாய்வறுத்துப் பொடியே செய்து
வேரப்பா கசகசாப் பரங்கிப் பட்டை
மேலான பொற்கடுக்காய் லவங்கப் பட்டை
மாராப்பா வகையொன்று பலமோ ரெண்டு
வளமான மிளகுசுக்கு மோடி கேளே.

(இ-ள்.) 1400 கிராம் இஞ்சியை மேல்தோல் சீவி பயறு போல் சிறுக நறுக்கி ஒரு சட்டியில் வைத்து ஆவின் நெய்விட்டு பொன்னிறமாய் வறுத்துச் சூரணம் செய்து, கசகசா, பரங்கிப் பட்டை, கடுக்காய், இலவங்கப்பட்டை வகைக்கு 70 கிராம் சுக்கு, மிளகு, மோடி, (திப்பிலி வேர்)

211. கேளடா கற்கடகசிங்கி தான்றிக் காய்
கிராம்பு கருஞ்சீரகந் திப்பிலி சாதிக்காய்
தாளடா தாளிசபத்திரி போஸ் தாக்காய்
சன்னராஷ்டம் வகைக்குவி ராக னைந்து

வாளடா குங்குமப்பூ சாதிப் பத்திரி
வாங்கிக்கோ ராசனையும் வகை யொன்றுக்கு
நீளடா விராகனெடை யரையாகத் தான்
நிறைசரக் கோடிதெல்லாம் பொடித்துக் கூட்டே.

(இ-ள்.) கற்கடகசிங்கி, தான்றிக்காய், கிராம்பு, கருஞ்சீரகம், திப்பிலி,சாதிக்காய், தாளிசபத்திரி, போஸ்தக்காய், சிற்றரத்தை வகைக்கு விராகனெடை ஐந்து, குங்குமப்பூ, சாதிப்பத்திரி, கோரோசனை வகைக்கு விராகனெடை அரை இவைகளைப் பொடித்துச் சூரணம் செய்து கொண்டு,

212. கூட்டப்பா சர்க்கரைதான் பலம் நாலைந்து
கொதியிட்டுப் பாகுபிடித் தூளைப் போட்டு
ஆட்டப்பா ஈரைந்துபலந் தேன்விட்டு
ஆவின்நெய் ஒக்கவிடு பல மீரைந்து
மாட்டப்பா மத்தீயைந்து கடிகை மட்டும்
வளமாங் கண்டாத்திரி லேகிய மிதாச்சு
ஊட்டப்பா பாக்களவுரு போதுந் தான்
உஷ்ணஞ் சீரணம்விட் டொழிந்து போமே.

(இ-ள்.) 700 கிராம் சர்க்கரையை ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றி எரித்து பாகு பதத்தில் மேல்கண்ட சூரணத்தைப் போட்டுக் கிளறி 350 கிராம் தேன் 350 கிராம் ஆவின் நெய் விட்டுக் கிண்டி எடுத்து வைக்கவும். கொட்டைப் பாக்களவு தினம் இரண்டு வேளை உண்ணவும். உஷ்ணம், அசீரணம் முதலியன போகும்.

## சிவதை வேர்ச் சூரணம்

213. போமடா சிவதைவேர் பலந்தான் மூன்று
புள்ளதுபோல் கொய்தாவின்பால் சேர் விட்டு
ஆமடா சுத்திசெய்து லர்த்திக் கொண்டு
அப்பனே மிளகுசுக்குக் காயமேலந்

தாமடா சீரகமிந்துப் போடோமந்
தாக்கரிசிதிப்பிலி மூலந்தான்
நேமடா வகையொன்று விராகன் ஏழு
நிட்டிக் கதிர் கூட்டிச் சூரணமே பாரே.

(இ-ள்.) சிவதை வேர் 105 கிராம் ஆவின் பாலில் சுத்தி செய்து உலர்த்திக் கொண்டு மிளகு, சுக்கு, பெருங்காயம், ஏலம், சீரகம், இந்துப்பு, ஓமம், அரிசித்திப்பிலி, திப்பிலி மூலம் வகைக்கு ஏழு விராகனெடை எடுத்து சூரணம் செய்து,

214. பாரப்பா சீனிசமனாகச் சேர்த்து
பாங்காக நாளிருபத்தொரு போதுந் தான்
நேரப்பா வெறுகடிப்பிர மாணங் கொண்டால்
நிமிஷத்தில் மூன்றுவிசை வயிர் பேதிக்கும்
தீரப்பா புளிப்புகையுத் தள்ளிப் போடு
சேராதே வாயுவஸ்துத் தினந்தோறுந்தான்
மாரப்பா வாய்வுபித்தம் பறந்து போகும்
வாங்குபரி தீவனந்தான் தீர்க்கங் காணே.

(இ-ள்.) சீனி சம அளவு சேர்த்து வைத்துக் கொண்டு தினம் ஒரு வேளை வீதம் இருபது நாட்கள் இரண்டு விரல் அளவு சாப்பிட மலக்கட்டு நீங்கி, பித்தம் நீங்கி பசி உண்டாகும். புளி, புகை நீக்கவும்.

## அமிர்த சஞ்சீவி எண்ணை

215. காணுசிற் றாமணக்கெண்ணை ஆவின் பால்
கதித்தெழுந்த செவ்விளநீர் வகை யொன்றுக்கு
ஊணுபடி யொன்றதுவா மணத்தக் காளி
உறவாமீ ருள்ளிச்சம வலாலாரைச் சார்
வேணுமரைப் படிசேரு வகை யொன்றுக்கு
வீறுகையாந் தகரைமயிர் மாணிக்கச் சார்
தோண்மு பூவரசின் நல்கோவைச் சார்
தொந்தித்து வகையொன்று படிகால் கூட்டே.

(இ-ள்.) சிற்றாமணக்கெண்ணை, ஆவின் பால், செவ்விளநீர் வகைக்குப் படி ஒன்று. மணித் தக்காளி, ஈருள்ளி, வல்லாரை இவற்றின் சாறு வகைக்கு அரைப்படி கையாந்தகரை, மயிர் மாணிக்கம், பூவரசு, கோவை இவைகளின் சாறு வகைக்குப் படிகால் இவைகளை ஒன்றுபடக் கலந்து.

216. கூட்டுக் கடுக்காய்தான் றிக்காய் மாசிக்காய்
குழிநீர் முட்டான்கிழங்கு வகை யொன்றுக்கு
மாட்டுயிடை மூன்று பலம் இலவங்கப் பத்திரி
வசம்பேலங் கஸ்தூரி மஞ்சள் மஞ்சள்
காட் சீரகம் இலவங்கத்தோடு சாதிக்காய்
கருஞ்சீரகம் வகைக்கு வராகன் மூன்று
மூட்டுநற் சீரகங்கொத்த மல்லி சுக்கு
மிளகுடனே வகையொன்று பலமுஞ் சேரே.

(இ-ள்.) கடுக்காய், தான்றிக்காய், மாசிக்காய், தண்ணீர்விட்டான் கிழங்கு இவைகள் வகைக்கு 105 கிராம், இலவங்கப் பத்திரி, வசம்பு, ஏலம், கஸ்தூரி மஞ்சள், காட்டு சீரகம், இலவங்கம், சாதிக்காய்,, கருஞ்சீரகம் வகைக்கு விராகனெடை மூன்று, நற்சீரகம், கொத்தமல்லி, சுக்கு, மிளகு வகைக்கு 35 கிராம்

217. சேரடா இரண்டும் பலம் பரங்கிப் பட்டை
திறமாக வகையெல்லா வறுத்துக் கொண்டு
நேரடா பொடித்தெண்ணை தனிலே போட்டு
நீங்காம லெரிமெழுகு பதத்தில் வாங்கிக்
கோரடா ஐங்கரனைப் பூசை செய்து
கொடுத்திடாய் துட்டினிடை இருபோதுந் தான்
பாரடா மண்டலமிப் படியே கொண்டால்
பயித்தியம் கிறுகிறுப்பு மேகம் போமே.

(இ-ள்.) பரங்கிப் பட்டை 70 கிராம் இவற்றை வறுத்துப் பொடித்து எண்ணெயில் கலந்து, அடுப்பிலேற்றி எரித்து மெழுகு

பதத்தில் வடித்தெடுத்து கணபதியை பூசை செய்து. காசியெடை தினம் இரண்டு வேளை வீதம் ஒரு மண்டலம் கொள்ள பயித்தியம், கிறுகிறுப்பு போகும்.

218. போமப்பா கெர்ப்பரணம் வாய் வேக்காடு
பெரும்பாடு அஸ்திசுரம் நீர்த்தாரைப் புண்
சாமப்பா எலும்புருக்கி வாய்வு பித்தம்
சடமிளைப்பு கணமாம் பிரமியமோ ரெட்டும்
தாமப்பா தாது பு,ஷ்டி பசியுண்டாகுந்
தவறாது அமிர் தசஞ்சீவி தாணெண்ணை
தாமப்பா வாய்வுவஸ்து திறோதாய மாய்கை
யகற்றியிச்சா பத்தியமே காத்திடாயே.

(இ-ள்.) கருப்பை ரணம், வாய் வேக்காடு, பெரும்பாடு, அஸ்திசுரம், நீர் தாரைப்புண். எலும்புருக்கி, வாய்வு பித்தம், உடலிலைப்பு, கணமாம்பிரமியம் முதலிய எட்டும் போகும். உடல் வலுத்து தாது புஷ்டியாகும். பசியுண்டாகும். வாய்வு, வஸ்து, பெண் சேர்க்கை கூடாது. இச்சா பத்தியமிருக்கவும்.

**புஷ்டிக்கு**

219. காத்திடுவாய் கருவேலின்பசை தானுங் கொள்
கைமுறையாய்ச் சொல்லுகிறேன் பல மிரண்டு
பாத்திடுவாய் சுக்கொடு சர்க்கரைப் பேரீச்சம் பழம்
பாகுவெந்தயம் கொப்பரைத் தீக் காட்டி
சேத்திடுவாய் வகையொன்று பலமே யொன்று
திறமாக வடிசெய்க் கோதும்பைப் பொரிமா
யேத்திடுவாய் பலமெட்டுபனை வெல்லம் தான்
யெட்டுப்பலம் பாகுபிடித் தூளைப் போடே.

(இ-ள்.) கருவேலன் பிசின் 70 கிராம், சுக்கு பூமி சர்க்கரைக் கிழங்கு, பேரீச்சம் பழம், வெந்தயம் கொப்பரைத் தேங்காய் வகைக்கு 35 கிராம் இவற்றை சூரணம் செய்து கொண்டு 280 கிராம் கோதுமைப்

பொரிமாவுடன் கலந்து 280 கிராம் பனை வெல்லத்தைப் பாகு செய்து மேல்கண்டவற்றைத் தூவி கிண்டி

220. போட்டடா லேகியம்போ லாகக்கிண்டி
புகழான ஆவின்நெய் பலம்நால் விட்டு
ஆட்டடா எலுமிச்சங்காய் போலந்தி
அப்பனே மண்டலமோ ரரைதான் கொள்ளு
ஓட்டடா கிரந்திவெள்ளை யிடுப்பு நோய்தான்
உத்தமனே தாதுபுஷ்டி மிகவுண்டாகுந்
மாட்டடா நெய்யன்னம் வெல்லந் தோடுண்
மாதர்மயக் கம்புளிமண் டலமே தள்ளு..

(இ-ள்.) லேகியமாக்கி ஆவின் நெய் 140 கிராம் விட்டுக் கிளறி வைத்துக்கொண்டு எலுமிச்சங்காயளவு காலை மாலை அரை மண்டலம் கொள்ள தாது புஷ்டியாகும், கிரந்தி, வெள்ளை, இடுப்பு நோய் தீரும். நெய், வெல்லம் சேர்த்த அன்னம் கொள்ளவும். புளியை நீக்கவும்.

## வராகத்தின் நெய்

221. தள்ளடா வராகத்தின் நெய் யீராழிச்
சமனாக ஈருள்ளிச் சாறூங் கூட்டி
மெள்ளடா சட்டியிலிட் டடுப்பி லேற்றி
மிதமாக யெரிமெழுகு பதத்தில் வாங்கி
உள்ளடா சீரகஞ்சாதிப் பத்திரியேலம்
உத்தமனே வால்மிளகுக் கிராம்பு
கொள்ளடா சுக்குக்கசகசா சாதிக் காய்
கூட்டுவகைக் கிருகழஞ்சிப் பொடித்துச் சேரே.

(இ-ள்.) பன்றி நெய் இரண்டு ஆழாக்கு, இதற்குச் சமமாக வெங்காயச் சாறு சேர்த்து சட்டியிலிட்டு அடுப்பிலேற்றி மிதமாக எரித்து மெழுகு பதத்தில் சீரகம், சாதிப் பத்திரி, ஏலம், வால்மிளகு, கிராம்பு, சுக்கு, கசகசா, சாதிக்காய் வகைக்கு இரு கழஞ்சு இவற்றைச் சூரணம் செய்து சேர்த்து

222. சேரடா சீனியெடைப் பலமீரைந்து

செவ்வாழைச் சுளைகண்டித் திடுவா யைந்து

பாரடா பரிதிப்புடந் தினமே வைத்துப்

பலமாக இருபோதும் பகுந்துண் டாக்கால்

மாரடா கணத்துடனுள் சூடு மூலம்

வாய்வினால் யெலும்புருக்கி மேகம் வெக்கை

தீரடா வாய்வுவஸ்து புகை யொன்றாகா

திரோதாயி மாய்கைவிடு செலுத்திடாயே.

(இ-ள்.) சீனி 350 கிராம், செவ்வாழைப் பழம் ஐந்தை உரித்து மேல்கண்டவற்றுடன் கலந்து சூரியபுடமாக வைத்து தினம் இரண்டுவேளை 35 கிராம் வீதம் சாப்பிட்டு வர கணச் சூடு மூலம், எலும்புருக்கி, மேகம், உஷ்ணம். இவை தீரும். புளி, புகை நீக்கவும்.

**கடி விஷம். கரப்பான் புண்ணுக்குத் தைலம்**

223. செலுத்தப்பா நீரடிமுத் தோடு போக்கி

திறமான பருப்பினிடைப் பல மீரைந்து

வலுத்தப்பா யரைத்தாறு வில்லை செய்து

வையடா பிட்டவியலெ டுத்தா றாமல்

எலுத்தப்பா கம்பளி யிட்டே சுற்றி

இறுக்கியே கிட்டிகட்டித் தயிலம் வாங்கி

செலுத்தப்பாக் கடிவிஷங்கள் கரப்பான் புண்ணுக்

குதித்தோடும் பத்தியமாய்க் காத்தி டாயே.

(இ-ள்.) நீரடிமுத்து பருப்பு 350 கிராம் எடுத்து அரைத்து ஆறு வில்லைகளாகச் செய்து பிட்டவியல் செய்து சூட்டுடன் எடுத்துக் கம்பளி துணியில் வைத்துக் கிட்டிகட்டிப் பிழிந்து தயிலம் எடுத்து கடி விஷம். கரப்பான் புண் முதலியவைகட்கு உபயோகிக்கத் தீரும்.

## மூர்ச்சைக்கு

224. காத்திடு சங்கங்குப்பி வேர் பலமு மெட்டுக்
கண்டித்தே பாண்டமதி லிட்டுக் கேளு
மாத்திடு நற்சலமாம் படியோ ராறு
மாறாமலெரித் தாறிலொன் றாய்க் காய்ச்சி
பாத்திடு மோடிகழஞ் செடை தான்
பக்குவமாய் வறுத்தாழாக் கியாழந் தன்னில்
சேத்திடு வரைத்தைந்து நாளுண்டாக் கால்
தெரிக்குமே மூர்ச்சைபுளி யுப்புத் தள்ளே.

(இ-ள்.) சங்கங்குப்பி வேர் 280 கிராம் நறுக்கி பாண்டத்திலிட்டு ஆறுபடி தண்ணீர்விட்டு அடுப்பில் வைத்து ஒருபடியாக வற்றும் படி காய்ச்சி, மோடிக்குச்சி ஒரு கழஞ்சியை வறுத்து மேல் கண்ட குடிநீர் ஒரு ஆழாக்கில் அரைத்துக் கலந்து கொள்ளவும். இவ்வாறு ஐந்து நாட்கள் கொள்ள மூர்ச்சை தீரும்.

225. தள்ளவே கெந்திகழஞ் செடையோ நாலு
சதிரான துருசுகழஞ் செடையோ ரெண்டு
மெள்ளவே சூதமெடை கழஞ்சி மூன்று
வெள்ளைப் பாஷாணமெடைக் கழஞ்சி யொன்று
தள்ளவே மூன்றுவகைப் பொடித்துச் சீலைச்
சுற்றியே திரியாக்கி சூதஞ் சட்டிக்
குள்ளவே விடுதிரிவேப் பெண்ணை தோய்த்துக்
கொளுத்தியே மேல்பிடித்துத் தயிலம் வாங்கே.

(இ-ள்.) கெந்தகம் நாலு கழஞ்சு, துருசு இரண்டு கழஞ்சு, இரசம் மூன்று கழஞ்சு, வெள்ளைப் பாடாணம் ஒரு கழஞ்சு இரசம் நீங்கலாக மற்ற மூன்றையும் அரைத்து துணியில் பரப்பி திரியாகச் செய்து கொள்ளவும். இரசத்தை ஒரு சட்டியில் விட்டு, திரியை வேப்பெண்ணையில் தோய்த்துக் கொளுத்தி மேலே பிடிக்க தயிலம் ரசத்தின் மீது விழும்படி செய்து தைலத்துடன்

226. வாங்கப்பா பனைவெல்லம் பலமே போடு
மைந்தனே புரட்டியே யுண்டை செய்து
பாங்கப்பா மூன்றரைநாள் கொண்டே பின்னும்
பச்சைநீர் மூன்றாம்நாள் குளிக்க லாகும்
ஓங்கப்பா எட்டாநாள்முக் கூட்டெ ண்ணை
உச்சியி லிட்டேமுழுகி யுடனே கோழி
பாங்கப்பா கறியில்படி தண்ணீர் விட்டு
யரைப்படியாய்க் காய்ச்சிறுத்து உள்ளுக் கேத்தே.

(இ-ள்.) 35 கிராம் பனைவெல்லம் சேர்த்துப் புரட்டி ஏழு உருண்டைகளாகச் செய்து மூன்றரை நாட்கள் (தினம் இரண்டு வேளை) உட்கொள்ளவும். மூன்று நாள் விட்டு வெந்நீரில் குளிக்கவும். எட்டாவது நாள் முக்கூட்டு எண்ணெய் தேய்த்து முழுகவும். உடன் கோழிக்கறியை ஒரு படி தண்ணீர் விட்டு அரைப்படியாக வற்றக் காய்ச்சி இறுத்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

## திருநீலகண்ட மெழுகு

227. யேத்தடா அவ்விறைச்சி பல காயந்தான்
இதமாகக் கூட்டியடுப் பேற்றிக் காய்ச்சி
மாத்தடா புளியுப்பு வறுத்துப் போட்டு
மாறாமல் சாதமுடன் வென்னீர் கூட்டி
பாத்தடா வுண்ணுகண்ட மாலை சூலை
பவுத்திர மேகங்கிரந்தி மேக வாயுவும்.
சேத்தடா இந்நோய்விட் டகலும் பாரு
திருநீலகண்ட மெழுகதுவாஞ் செய்யே.

(இ-ள்.) அந்த இறைச்சியை வறுத்து புளியும் உப்பும் கூட்டி பக்குவம் செய்து வெந்நீர் சாதத்துடன் சாப்பிடவும். கண்டமாலை, பவுத்திரம், மேகம், கிரந்தி, மேகவாய்வு இவை நீங்கும்.

## அண்ட வாதத்திற்கு - வேது - குடிநீர் - ஒத்தடம்

228. செய்யப்பா சமூலமுடக் கொற்றான் தாளித்
திறமான பாண்டத்துள் திமிர்நீர் விட்டு
வைய்யப்பா மாவிலிங்கம் பட்டை சுக்கு
வாய்விளங்கம் வசம்புள்ளி வாதம் போக்கி
பைய்யப்பா பெருமரத்துப் பட்டை ஓமம்
பாங்காக வகையொன்று பலமோ ரெண்டு
நைய்யப்பா இடித்துடனே நீரில் போட்டு
நழுவாமல் சட்டிமல் லாத்தி மூடே.

(இ-ள்.) ஒரு பாண்டத்தில் கொற்றான் கொடி, தாளிக் கொடி இவைகளைப் போட்டு தண்ணீர் விட்டு மாவிலிங்கம் பட்டை, சுக்கு, வாய்விளங்கம், வசம்பு, உள்ளி, வாதமடக்கி பெருமரத்துப் பட்டை, ஓமம், வகைக்கு 70 கிராம் இடித்து தண்ணீரில் போட்டு.

229. மூடியதோர் சட்டயடித் துவார மேழு
மூச்சுவிடாமல் படிமண் சீலை செய்து
ஓடியதோர் ஆவியடங்கச் சீலை மூடி
உத்தமனே அக்கினியிட்டு யடுப்பி லேற்றி
நாடியெரித் திடுசாமம் மீரைந் தாறு
நடுவோ யெடுத்துநீர் நனைத்துப் போட்டு
ஆடியதோர் அண்டவாதத் தைத் தூக்கி
யசையாமல் வைத்திருந்து வேது வாங்கே.

(இ-ள்.) ஏழு துவாரமிட்ட ஒரு சட்டியை மல்லாத்தி மூடி சீலை மண் செய்து சட்டியின் மேல் ஒரு சீலையால் மூடி அடுப்பேற்றி பத்து சாமம் எரித்து நடுவோட்டினை எடுத்து நீரில் நனைத்த சீலையை அண்டவாதத்தின் மேல் போட்டு ஆவியை அண்டத்தின் மேல் படும்படி வேது வாங்கவும்.

230. வாங்கப்பா வசம்புள்ளித் தாளிக் கொத்தான்
வறுத்தொத்தி மண்டலமொன் றதுவே சுட்டு
ஓங்கப்பா பிரமியிலை காடி வார்த்து
ஊதல்சுருங் கிடவதக்கி மேலோட்டு

பாங்கப்பா சுக்குசிறு தேக்கு மல்லி
பருங்கடுகுப் பேய்ப்புடலுமிவை யோயொட்டித்
தாங்கப்பா வகையொன்றுக் கழஞ்சிக் கூட்டி
சட்டியிலிட்டு சலமீராழி வாரே.

(இ-ள்.) வசம்பு, உள்ளி, முடக்கொத்தான் கொடி, தாளிக்கொடி இவற்றை வறுத்து அண்டத்திற்கு ஒத்தடம் கொடுத்து அதனையே வைத்துக் கட்டவும். இவ்வாறு ஒரு மண்டலம் செய்யச் சுருங்கும் பிரம்மி இலையை காடி வார்த்து வதக்கி ஒத்தடமிட்டுக் கட்டி வர சுருங்கும். சுக்கு, சிறுதேக்கு, மல்லி, கடுகு, பேய்ப்புடல் வகைக்கு ஒரு கழஞ்சு நசுக்கி ஒரு சட்டியிலிட்டு இரண்டு ஆழாக்கு தண்ணீர் விட்டு

231. வாரடா நாலிலொன்றாகக் காய்ச்சி
மண்டலமொன் றிருபோதுமகி ழாதே கொள்ளு
பாரடா வாயுவுவஸ்து பழையவன்னந்தன்
பதார்த்தம் பழம்புளியுப்பு வறுத்துப் போடு
நேரடா பசுவின்மோர் வெந்நீர் அன்னம்
நெய்யுடனே கருங்கோழி யிறைச்சிச் சாரும்
தீரடா திரோதாயிமாய் கைத் தள்ளு
சித்திக்கும் தவாறது செய்து பாரே.

(இ-ள்.) ஒரு ஆழாக்காக சுண்டக் காய்ச்சி தினம் இரண்டு வேளை வீதம் ஒரு மண்டலம் கொள்ளவும். அண்டவாதம் சுருக்கும், வாய்வு பதார்த்தம், பழைய அன்னம் கூடாது. புளி, உப்பு, வறுத்து சேர்க்கவும். பசுவின் மோர், வென்னீர் சாதம் கொள்ளவும். கருங்கோழி இறைச்சி, நெய் இவை கூடும்.

## கிரந்திக்கு எண்ணெய் - மருந்து

232. பாரப்பா சிறுசெருப்படி வெண் ணொச்சி
படர்ந்த பிரமிய வழுக்கை சங்கங் குப்பி
சேரப்பா கருநொச்சி கருஞ்சீரகங் காணி
திறமான அறுகுமஞ்ச னாத்தீருள்ளிச்

சாரப்பா வகைக்குக் கால்படியே வாங்கி
தனிச்சிற் றாமணக்கெண்ணெய் படிதாவொன்று
வாரப்பா வால்மிளகு கிராம்பு மஞ்சள்
வகைக்குப் பலங்காலாய்ப் பொடித்துப் போடே.

(இ-ள்.) சிறுசெருப்படி, வெண்ணொச்சி, பிரமி, வழுக்கை, சங்கங்குப்பி, கருநொச்சி, கரிசாலை, வெள்ளறுகு, மஞ்சணத்தி, ஈருள்ளி,இவற்றின் சாறு வகைக்குப் படி கால், சிற்றாமணக்கெண்ணெய் படி ஒன்றுடன் கலந்து, வால் மிளகு, மிளகு, கிராம்பு, வகைக்கு9 கிராம் அரைத்துப் போட்டு,

233. போட்டடா மெழுகுபதம் வடித்துக்கொண்டு
பிசகாமல் யெண்ணெயெடைப் பலமோ ரெண்டு
தோட்டடா இப்படிநாளெட்டுக் கொண்டால்
தெறிகெட்டு ஓடுமடா கிரந்திப் புண்ணு
நாட்டடா மிளகுள்ளித் துவரை வித்து
நன்மகனே வெந்நீரோ டன்னங்கொள்ளு
விட்டடாப் புளிப்புவெய் யோன்முன்னே
மேவாத பத்தியந்தான் அடுத்துக்காரே.

(இ-ள்.) அடுப்பிலேற்றி எரித்து மெழுகு பதத்தில் வடித்து வைத்துக் கொள்க. தினம் 70 கிராம் எண்ணெய் தினம் ஒரு வேளை வீதம் எட்டு தினங்கள் கொள்ள கிரந்தி புண்தீரும். மிளகு, பூண்டு, துவரைத் துவையல், வென்னீரன்னம் கொள்ளவும். புளி, உப்பு, நீக்கவும்.

234. காரப்பா கருங்குருவை யரிசிசூதங்
கழற்சிச் சாரணைமுருங்கை சங்கங்குப்பி
பாரப்பா இந்நான்கும் துளிரேவாங்கு
பாங்காக வகையொன்று விராகன் மூன்று
நேரப்பா அரைத்தீருண்டை செய்து
நெகிழாம லோராறு தினமே கொள்ளு
தீரப்பா கிரந்தியறும் புளியோ டுப்பு
சேராதே யிளவெந்நீர் சாதங் கூட்டே.

(இ-ள்.) கருங்குருவையரிசி, இரசம், கழற்சி, சாரணை, முருங்கை சங்கங்குப்பி இவைகளின் தளிர் வகைக்கு மூன்று விராகனெடை வீதம் எடுத்து அரைத்து இரு உருண்டை செய்து காலை, மாலை உட்கொள்ளவும். இவ்வாறு ஆறு தினங்கள் கொள்ள கிரந்தி நோய் நீங்கும். புளி, உப்பு நீக்கி இளவென்னீர் சாதம் சாப்பிடவும்.

## அரையாப்புக்கு எண்ணெய் - பற்று

235. கூட்டு எள்ளெண்ணெய் ஆழாக்கு நாலு
கொடிவேலி வசம்பவுரி நத்தைச் சூரி
மாட்டு துருசிகருஞ் சீரக மோராறு
வகையொன்று விராகனெடை வேர் தானாட்டி
போட்டெரித்து மெழுகுபதம் தனிலே வாங்கி
புத்திரனே நாளொன்று பலமோ ரொன்று
மூட்டு நாளாறுகடு குடனே எண்ணெய்
முனைகெட்டுப் போகுமடாயரை யாப்புக் கேளே.

(இ-ள்.) எள்ளெண்ணெய் நான்கு ஆழாக்கு, கொடிவேலி, வசம்பு, அவுரி, நத்தைச்சூரி இவைகளின் வேர், துருசு, கருஞ்சீரகம் வகைக்கு ஆறு விராகனெடை அரைத்து எண்ணெயுடன் கலந்து எரித்து மெழுகு பதத்தில் எடுத்து கடுகு எண்ணெய் இரண்டையும் ஒன்றாகக் கலந்து தினம் 35 கிராம் வீதம் ஆறு தினங்கள் கொள்ள அரைப்புக் கட்டி நீங்கும்.

236. கேளப்பா உப்புடனேவெள் ளறுகு வைத்து
கெட்டியாகத் தான்கசக்கி வில்லை தட்டி
தாளப்பா முன்னெரித்த எண்ணை தன்னை
தடவியே வில்லையும் வைத்திறுகிக் கட்டி
நாளப்பா ஆறுஇந்தப் படியே செய்தால்
நாடாது அரையாப்பு ஓடிப் போகும்
வாளப்பா புளிப்பு வகை மூன்றாகா
மைந்தனே வெந்நீரோ டன்னங் கொள்ளே.

(இ-ள்.) உப்பு, வெள்ளறுகு இரண்டையும் நசுக்கி கெட்டியாக வில்லை செய்து முன் சொன்ன எண்ணெயை வில்லை மீது தடவி அரையாப்புக் கட்டி மீது வைத்து இறுகக் கட்டி விடவும். இவ்வாறு ஆறு தினங்கள் செய்ய அரையாப்புக் கட்டி கரையும். புளி, உப்பு நீக்கவும். வெந்நீர் அன்னம் கொள்க.

237. கொள்ளுவது முப்புறமெரித்தான் லிங்கப் பட்டை
கூட்டுக்கருஞ் சூரையின்வேர் சமனாகத் தான்
துள்ளுகொடிக் கள்ளிலதக்கிச் சார் விட்டு
தொடர்ந்தரை யாறுகடிகை வழித்தெடுத்துக் கொண்டு
தெள்ளுமரை யாப்பிலரைத்திடு நாளாறு
செந்தணலி லிட்ட மெழுகது போலாகும்
விள்ளுமிது யென்குருவின் முறை பொய்யாது
மீறாதே புளிபுகையும் விளம்பக்கேளே.

(இ-ள்.) சிவனார் வேம்பு, மாவிலிங்கப் பட்டை, செங்கத்தாரி வேர் இவைகளை சமனாக எடுத்து, கொடிக்கள்ளியை வதக்கிப் பிழிந்த சாற்றால் ஆறு நாழிகை அரைத்து எடுத்து அரையாப்புக் கட்டிக்கு பற்று போடவும். ஆறு தினங்கள் செய்யக் கரையும். புளி, புகை தள்ளவும்.

## வெப்பு நோய் மருந்து

238. கேளு சிற்றாமணக் கெண்ணை யாழாக்கைந்து
கெடியான புளியையரைச் சார் வேழு
பிரமிய வழக்கைகுருள்ளிச் சார் வெண்
துத்திச்சார் வகையொன்றுக் காழாக் கொன்று
தாளு நிம்பம்பழச்சார் ஆழாக்கு ரெண்டு
சாதிக்காய் வால்மிளகு கடுக்காய் கிராம்பு
வாளுஞ் சீரகம்சன் ராஷ்டகம் மேந்தி
வகையொன்று பலமரைதான் பொடித்துக் கூட்டே.

(இ-ள்.) சிற்றாமணக்கெண்ணெய் ஐந்து ஆழாக்கு, புளியாரைச்சாறு ஏழு ஆழாக்கு, பிரம்மி வழுக்கை, ஈருள்ளி, பால் துத்தி இவைகளின் சாறு வகைக்கு ஒரு ஆழாக்கு, எலுமிச்சம் பழச்சாறு இரண்டு ஆழாக்கு இவைகளை ஒன்றாகக் கலந்து அதில் சாதிக்காய், வால்மிளகு, கடுக்காய், கிராம்பு, சீரகம், சிற்றரத்தை வெந்தயம் வகைக்கு 17½ கிராம் எடுத்துப் பொடி செய்து போடவும்.

239. கூட்டப்பா சட்டியிலிட் டடுப்பி லேற்றி
கொதித்திடவே மெழுகுபதம் வடித்துக் கொண்டு
மூட்டப்பா எண்ணெய்கழஞ் செடைதான் ரெண்டு
முனைந்திந் தப்படியோர் மண்டலமே கொள்ளு
காட்டப்பா காங்கையொடு தவளம் உஷ்ணம்
மகத்தான மேகமறும் பசி யுண்டாகும்
நாடப்பா இச்சாபத் தியமே காரு
நாடாதே பழையதுவும் நயந்து பாரே.

(இ-ள்.) சட்டியிலிட்டு அடுப்பிலேற்றி மெழுகு பதத்தில் வடித்து இரண்டு கழஞ்செடை வீதம் ஒரு மண்டலம் சாப்பிடவும். காங்கை, உஷ்ணம், மேகம் முதலியன தீரும். பசியுண்டாகும். இச்சாபத்தியம் கொள்ளவும்.

## நீர்க் கட்டுக்குக் குடிநீர்

240. பாரடா பேய்த்தும்பை சாரா ழாக்கு
பனைவெல்லம் பலமதிலும் பொடித்துப் போட்டு
கோரடா நாள்மூன்றுயிப் படியே செய்து
கொள்பரங்கிப்பட்டைதும் ராஷ்டகம் சுக்கு
தேரடா வகையொன்றுக்கு விராகன் தூக்கி
செல்லு நீர்விட்டுக் கிஷாயங் கொள்ளு
நீராடக் கட்டுதல் விட் டொழியும் பாரு
நினைவாகப் புளியுப்புப் புகையுந் தள்ளே.

(இ-ள்.) காட்டுத் தும்பைச்சாறு ஒரு ஆழாக்கில் 35 கிராம் பனை வெல்லம் பொடித்துப் போட்டுச் சாப்பிடவும். இவ்வாறு மூன்று தினங்கள் கொள்ளவும். பரங்கிப்பட்டை, பேரரத்தை, சுக்கு, வகைக்கு ஒரு விராகனெடை எடுத்துத் தண்ணீர் விட்டுக் குடிநீர் செய்து சாப்பிடவும். நீர்க்கட்டு நீங்கும்.

## குளிர் சுரத்துக்குப் பூநாகக் குடிநீர்

241. தள்ளப்பா பூநாகம் பலமே தூக்கி
சட்டியினிலிட் டெரித்துச் சாம்பலாக்கி
யுள்ளப்பா நாலாழாக் காவின்பால் விட்டு
உறவாகச் செய்ததொரு ஆழாக்காக் காய்ச்சி
விள்ளப்பா யிப்படிநாள் மூன்றே கொள்ளு
மீறியதோர் குளிர்சுரமும் இல்லை போகும்
கொள்ளப்பா பொரிமிளகு நீரோ டன்னம்
குரியாதே புளிபுகையுந் தள்ளிப் போடே.

(இ-ள்.) 35 கிராம் நாக்குப் பூச்சியை சுத்தி செய்து சட்டியிலிட்டு எரித்துச் சாம்பலாக்கி அதில் நான்கு ஆழாக்கு பசுவின் பால் விட்டுக் காய்ச்சி ஒரு உழக்காகச் செய்து சாப்பிடவும். இவ்வாறு மூன்று தினம் கொள்ள குளிர்சுரம் நீங்கும்.

242. போட்டப்பா வெள்ளெருக்கின் பட்டை சுக்கு
பூண்டுடனே வகைக்குக்கால் பலம் பொடித்து
கூட்டப்பா அப்பிதுா ராழி விட்டு
குடையாமல் நாலிலொன் றாகக் காய்ச்சி
நாட்டப்பா இப்படிநாள் மூன்றே கொள்ளு
நாடாது குளிர்சுரமும் நழுவிப் போகும்
தேட்டப்பா பொரி மிளகு நீரோடன்னம்
சேராதே புளி புகையுந் தெளிந்து கேளே.

(இ-ள்.) வெள்ளெருக்கன் பட்டை, சுக்கு, பூண்டு வகைக்குக் கிராம் 9 இவைகளைச் சிதைத்து இரண்டு ஆழாக்கு தண்ணீர்விட்டு

நாலில் ஒன்றாய் வற்றக் காய்ச்சி காலை, மாலை கொடுக்கவும். இவ்வாறு மூன்று தினம் செய்யக் குளிர் சுரம் நீங்கும். புளி, புகை நீக்கி ரசம் சாதம் கொள்ளவும்.

## இஞ்சிச் சூரணம்

243. கேளப்பா இஞ்சியெடைப் பல மெட்டைந்து
கெடியான தோலகற்றி வில்லை செய்து
தாளப்பா ஆவின்பால் படிதான் விட்டுத்
தவறாம லவித்து நிழலுலர்த்திப் போட்டுத்
தூளப்பா செய்பலமூ வேழு சீனித்
தொந்தித்துப் பலமரைமண் டலமே கொண்டால்
வாளப்பா குலைநோவு வாயிநீர் பித்தம்
வயிற்றுநோய் பொரும லது வாங்கிப் போமே.

(இ-ள்.) 1400 கிராம் இஞ்சி.யைத் தோலகற்றி சிறு வில்லைகளாக அரிந்து, ஒரு படி பசும்பால் விட்டுப் பாத்திரத்தில் வேடுகட்டி புட்டவியல் போல் அவித்து எடுத்து நிழலில் உலர்த்தி 630 கிராம் சீனி கலந்து தினம் 17½ கிராம் ஒரு மண்டலம் கொள்ள குலை நோவு, வாய்நீர் ஊறல், வயிற்று நோய். பொருமல் தீரும்.

## அச்சரத்திற்குக் குடிநீர் (கஷாயம்)

244. போமடா நிலக்குமிழி லையுஞ் சுக்கு
புத்திரனே வகைக்குக்கால் பலமே தூக்கி
ஆமடா சட்டியிலிட் டடுப்பி லேற்றி
அப்புழக்கிட் டரையாழாக் காய்க் காய்ச்சித்
தாமடா இருபோதைந் திருநாள் கொள்ள
தரியாது அச்சரமும் தவறிப் போகும்
நேமடா வென்னீரோ டன்னங் கொள்ளு
நினையாதே புளிப்புகையுந் தள்ளிப் போடே.

(இ-ள்.) நிலக்குமிழ் இலை, சுக்கு வகைக்குக் கால் பலம், சட்டியிலிட்டு உழக்குத் தண்ணிர் விட்டு அரையாழாக்காக சுண்டக்

காய்ச்சி தினம் இருபோது வீதம் பத்து நாட்கள் கொள்ள அச்சரம் நீங்கும். புளி, புகை நீக்கி வெந்நீர் அன்னம் கொள்க.

**தாளக பற்பம்**

245. கொள்ளடா பலமைந்து சுண்ணத்தின் கல்
கூடப்போ டீரைந்துபலம் பாண் டத்தில்
உள்ளடா தாளகத்தின் பலமோ ரைந்து
உத்தமனே தோளாந்திர மாகக் கட்டி
தள்ளடா படிசலமொன் றிடுவாய் சட்டி
தவறாமல் சீலைமண்ணே மூடவாய் செய்து
மெள்ளடாஅடுப்பில்வைத்து எரிநால் சாமம்
மீறாதுகளங் கமறும்சுத் தியாச்சே.

(இ-ள்.) 350 கிராம் சுண்ணாம்புக் கல்லை ஒரு பாண்டத்தில் போட்டு 175 கிராம் தாளகத்தை தோளாந்திரமாகக் கட்டி ஒரு படி தண்ணீர் விட்டு மேல்மூடி வலுவாக ஏழுசீலை மண் செய்து அடுப்பில் வைத்து நான்கு சாமம் எரிக்க சுத்தியாகும்

246. ஆச்சப்பா தொடுசிணுங்கி யமுரி விட்டு
அப்பனே இடித்துரசம் படிதான் வாங்கி
மூச்சப்பா கடிகையைந்தார் கடிகை மட்டும்
முன்னிலையாட் டிக்கவச முழிப்பாய் செய்து
மாச்சப்பா ஐந்தெருவில் புட நீராறு
வைய்யாவின் சாணத்திற் சமனொன் றொன்று
பாச்சப்பா புளிப்புறணி நீரள் ரெண்டு
பக்குவமைந் தார்கடிகை யெரித் திடாயே.

(இ-ள்.) தொட்டால் சிணுங்கியை அமுரிவிட்டு இடித்துச் சாறு ஒரு படி சிறிதாக விட்டரைத்து (முப்பது நாழிகை) முன் இலையால் அரைத்துக் கவசம் செய்து ஐந்தெருவில் 12 புடமிட்டெடுக்கவும், பசுவின் சாணத்தில் இரண்டு புடமிட்டு எடுத்து புளியம்புரணி சுட்ட சாம்பலில் வைத்து மூடி முப்பது கடிகை எரித்து எடுக்கவும்.

247. எரித்திடா யொன்றுமணி ரெண்டு பற்பம்
இருபோதும் பொற்பணத்தி னிடையே தூக்கி
குரித்திடாய் திரிகடுகு தேனிஞ்சிச் சார்
கோதைமுலைப் பாலில்நெய்யோ டனுபானங் கொள்
நிரித்திடாய் சன்னிசுரம் யிரும லீளை
நெஞ்சுறுத்த லுப்பிசமந் தார காசம்
திரித்திடாய் இளைப்புமேல் சுவாசந் தீரும்
தாளிச்சா பத்தியமே காத்தி டாயே.

(இ-ள்.) ஒன்று அல்லது இரண்டு தடவை எரித்து எடுக்க பற்பமாகும். பணவெடை பற்பம் திரிகடுகு, தேன், இஞ்சிச் சாறு, முலைப்பால், நெய் இவைகளை அனுபானமாகக் கொள்ளவும். சன்னி,சுரம், இருமல், ஈளை, மந்தாரகாசம், நெஞ்சுறுத்தல், உப்புசம், இளைப்பு, மேல் சுவாசம் தீரும்.

## அப்பிரக செந்தூரம்

248. காத்திடாய் அப்பிரேகம் பலமோ ரைந்து
கருஞ்சீரங் காணிரசம்விட் டரைநால் சாமம்
பாத்திடாய் மெழுகதுபோல் வில்லை தட்டி
பக்குவமாய் கதிரொளியில் உலரச் செய்து
பேத்திடாய் ஐம்பதெருவிற் புடத்தைப் போடு
யிப்படியீ ரைந்துபடஞ் செந்தூரிக்கும்
ஆத்திடாய் திரிகடுகு தேனிஞ் சிச்சார்
ஆவின்நெய் யனுபான மறிந்து கொள்ளே.

(இ-ள்.) 175 கிராம் அப்பிரகத்தை சுத்தி செய்து கரிசலாங்கண்ணி ரசம் விட்டுநான்கு சாமம் அரைத்து மெழுகுபோல் செய்து வில்லை தட்டி உலர்த்தி ஐம்பது எருவில் புடத்தைப் போடவும். இவ்வாறு பத்து புடம் போட செந்தூரிக்கும். திரிகடுகு, தேன், இஞ்சிச்சாறு, ஆவின் நெய் இவைகள் அனுபானம் செய்யவும்.

249. கொள்ளப்பா பணவிடைதான் விஷெ பாகங்கள்
குத்திருமல் சயமீளை காசங் குன்மம்
மெள்ளப்பா சன்னிசுரம் இளைப்பு மூர்ச்சை
விட்டகலும் என்குருவின் முறை பொய்யாது

தள்ளப்பா புளிப்புகையுந் திரோதாய மாய்கை
சாதிப்பாய் பொரிமிளகு நீர் நெய்யன்னம்
உள்ளப்பா வெந்நீரால் கைகால் சுத்தி
யுத்தமனே ஒன்றாகா தறிந்திடாயே.

(இ-ள்.) பணவெடை கொள்ள விஷபாகம், குத்திருமல், க்ஷயம், ஈளை, காசம், குன்மம், சன்னி சுரம், இளைப்பு, மூர்ச்சை, தீரும். ரசம், அன்னம், நெய் அன்னம் சாப்பிடவும்.புளி புகை நீக்கவும்.

## பூ நாக பற்பம்

250. அறிந்திடு நாகரவண்டோடு பல மோராறு
அப்பனே சத்திச்சாரணை சார் விட்டு
தெறிந்திடுங் கடிகையுமோ ரைந்தா ராட்டி
திரட்டியே மயன்போ லெடுத்துக் கொண்டு
விரிந்திடும் சட்டியில் கிண்ணம் போல் வைத்து
மீறியபூ நாகமெடைபல மூன் றொன்றிற்
சொறிந்திடு பாலிருசாமந் தானூரல்
சுத்தியுமிதாச் செடுத்து கழுவிப் போடே.

(இ-ள்.) பொன் வண்டின் ஓடு ஆறுபலம் எடுத்து சத்திச் சாரணை சாறு விட்டு முப்பது நாழிகை அரைத்து, மெழுகு போல் செய்து கொண்டு ஒரு சட்டியில் கிண்ணம் போல் வைத்துஅதில், பாலில் இரண்டு சாமம் ஊற வைத்துக் கழுவி எடுத்த நான்கு பலம் பூ நாகத்தை,

251. போட்டப்பா முன்னமைத்தக் கவசத் துள்ளே
போட்டவுடனம் மருந்தை மேலேதப்பி
மூட்டப்பா மேலொரு சட்டிவாய் சந்து
மூவொன்று சீலைமண்செய் தெரிநால் சாமம்
வோடப்பா மேல்வெளுத்தால் பற்ப மாச்சு
உத்தமனே பொற்பணத்தி னெடையே தூக்கி
நாடப்பா திரிகடுகுத் தேனிற்கொள்ளு
நாடாது சுரம்சன்னி யறுகும் பாரே.

(இ-ள்.) முன் கிண்ணம்போல் வைத்துள்ள கவசத்தில் வைத்து மேலும் அம்மருந்தை அப்பி மூடி கட்டிக்கு மேலோடு மூடி சீலைமண் செய்து நான்கு சாமம் எரித்து எடுக்க பற்பமாகும். பணவெடை திரிகடுகு தேனில் கொள்ள சுரம், சன்னி தீரும்.

## மேகராசாங்க எண்ணை

252. அறுகு சிவனார்வேம்பு கீழ்க்காய் நெல்லி
யாதண்டை சிவகரந்தை பூந்தி சீந்தி
திறுகுயிலை மடல் சதுரக் கள்ளி
தேள்கொடுக்கி மூக்குரட்டை நாகை வாகை
வறுகுமரி கருவேலா மணத் தக்காளி
வண்டுசொல்லிப் பவழமல்லி வன்னி சின்னி
பெருகு நிலத்தும்பை கிளர் குமிழ் வெள்ளிண்டு
பெருஞ்செறுப் படைசவுரி யறிந்திடாயே.

(இ-ள்.) அறுகு, சிவனார் வேம்பு, கீழ்க்காய் நெல்லி, ஆதண்டை, சிவகரந்தை, பூவந்தி, சீந்தில், திருகுக்கள்ளி, சதுரக்கள்ளி, தேள் கொடுக்கி, மூக்குரட்டை, நாவல், வாகை, குமரி, கருவேலன், மணித் தக்காளி, சீமையகத்தி, பவழமல்லி, வன்னி, சிறுசின்னி நிலத்தும்பை, கோவை,குமிழி, வெள்இண்டு, பெருஞ் செருப்படை சவுரி

253. அரிந்திட்ட மைக்கொன்னை பிரம்மி மேனி
யமுக்குறா கோவைகரு நொச்சில் விச்சி
நெரிந்திட்ட மருக்காரை பூனைக் காலித்
தேத்தான் பொன்னாவாரைக் காரைச் சூரை
சொரிந்திட்ட பொன்முசுட்டைக் குள்கண் சுண்டை
தூதுவளை நாயுருவி நாணா வோணா
விரிந்திட்ட யேரழிஞ்சில் மயிர் மாணிக்கம்
வெள்ளெருக்கு மாவிலிங்கம் விழுது சேரே.

(இ-ள்.) சரக்கொன்றை,பிரம்மி, மேனி, அமுக்குரா, கோவை, கருநொச்சில், விட்சி, மருக்காரை பூனைக்காலி, தேத்தான், பொன்னாவாரை, சாரை கருஞ்சூரை, பொன்முசுட்டை ஆனைச் சுண்டை, தூதுவளை, நாயுருவி, நாணல், பெருமுசுட்டை, ஏரழிஞ்சில், மயிர் மாணிக்கம், வெள்ளெருக்குமாவிலிங்கம், ஆலம் விழுது.

254. சேரப்பா கிளுகிளுவைவினாத் தும்பை வில்வஞ்
சிய்யா செம்முள்ளிகொட்டி வேலி நீலி
பாரப்பா பேய்மிரட்டி கஞ்சாங் கோரை
பாவட்டை வெதுப்படக்கி எட்டி வெட்டி
கோரப்பா முடக்கொற்றான் சிற்றாமுட்டி
குட்டிவிளா மிளகரனை சங்கங் குப்பி
நேரப்பா களக்கொட்டிக் கண்டங் கத்திரி
நீர்முள்ளி செம்பருத்திப் பிறண்டை வாங்கே.

(இ-ள்.) கிளுவை, விளா, தும்பை, வில்வம், கொன்றை, செம்முள்ளி, கொட்டி, கொடிவேலி, அவுரி, பேய்மிரட்டி, கஞ்சாங்கோரை, பாவட்டை, வெதுப்படக்கி, எட்டி. வெட்டி வேர். முடக்கொத்தான், சிற்றாமுட்டி, குட்டிவிளா, மிளகரணை, சங்கங்குப்பி, கழற்சிக்கொடி, கண்டங்கத்திரி, நீர் முள்ளி, செம்பருத்தி, பிரண்டை

255. வாங்கடா பேய்க்குமட்டி நிலா வாகை
மந்தாரை முன்னைபேரா முட்டி கொட்டி
ஓங்கடா வெள்ளருகுமூலி நெய்ச் சுண்டி
யோரிலைத் தாமரை குவளை குரிஞ்சாகஞ்சா
வெங்கடா கொடிமுந்திரிக் கொட்டைக் கரந்தை
விடத்தவரைத் திருயூழ லத்திதுத்தி
ஆங்கடா வெள்ளைச்சாரணை பத்ராட்சம்
ஆடுண்ணா பாளை வரச் சுண்டினோர்க்கே.

(இ-ள்.) பேய்க்குமட்டி, நிலவாகை, மந்தாரை, முன்னை பேராமுட்டி, கொட்டி, வெள்ளறுகு, நெய்ச்சட்டி, ஓரிலைத்தாமரை,

குவளை (நீர்ப்பூங்கொடி) குரிஞ்சா, கஞ்சா, கொடி முந்திரி, கொட்டைக்கரந்தை, விடத்தரை, திருப்பூண்டு,, ஊழலாத்தி, துத்தி, வெள்ளைச்சாரணை, பத்ராட்சம், ஆடுதீண்டாப்பாளை எனும் வரட்சுண்டி.

256. நோக்கப்பா பூவரசு தழுதாழை வெண்ணொச்சி
சிறுகீரை முக்காவேளை தாளை
தோக்கப்பா பொடுதலையோ ரிலைமால் கரந்தி
துய்யத் தாமரைசெங் கத்தாரி சூரி
தாக்கப்பா கடலிறஞ்சி யாடா தோடை
தண்ணீர்முட்டான் கிழங்குக் கொழுஞ்சி இஞ்சி
மேக்கப்பா சிவதையெலிச் சுண்டைச்சாலை
வெண்கட்டுக் கொடிவாடா மல்லியேத்தே.

(இ-ள்.) பூவரசு, தழுதாழை, வெண்ணொச்சி, சிறுகீரை, முக்காவேளை, தாழை, பொடுதலை, ஓரிலைத் தாமரை, விஷ்ணு கரந்தை, வெண் தாமரை, செங்கத்தாரி, நத்தைச்சூரி, கடலிறஞ்சி மரம், ஆடாதோடை, தண்ணீர்விட்டான் கிழங்கு, கொழுஞ்சி, இஞ்சி, சிவதை கோடக சாலை, வெள்ளைக் கட்டுக் கொடி, வாடாமல்லி.

257. யேத்திட்ட குடைமல்லி வில்வம் பீர்க்கன்
யிலந்தைவிறாய் குருந்துழாய் லேபையப்பை
பாத்திட்டப் பெருங் குறிஞ்சா நிலவேம்புத்
தாமணி மருதம் மருள் பொன்னாங் காணி
பாத்திட்ட வனத்துளசி கருக்காயம் மான்
பச்சை கருங்காக்கை கோவாத்தி யித்தி
போத்திட்ட தென்னைபனைகருசிறாய் காணி
பூனைக்காஞ் சோரிபுள் ளடியுங் கூட்டே.

(இ-ள்.) குடமல்லிகை, வில்வம், பீர்க்கன், இலந்தை, விராலி, சிறு துளசி, தக்கோலம், அப்பங்கோவை, பெருங்குறிஞ்சா, நிலவேம்பு, உத்தாமணி, மருதம், பொன்னாங்காணி, காட்டுத்துளசி,

கருக்காமரம், அம்மான் பச்சிரிசி, கருங்காக்கணான், இலந்தை, அத்தி, இத்தி, தென்னை, பனை, கரிசாலை, பூனைக்காஞ்சோரி, சிறுபுள்ளடி.

258. கூட்டப்பா சிறுநங்கைக் குளத்துப் பாசி
செம்முருக் காவாரை கோரை
பூட்டப்பா ஆகாசக ருடனல்லி
புடபத்திரி மகிழ்கருஞ் செம்பை தும்பை
மாட்டப்பா பெருமருந்து திருநீர்ப் பச்சை
வாகை கீழாநெல்லி பேயத்தி அத்தி
நாட்டப்பா புரசு பற்பாடகம் வெப்பாலை
நறுளிகாட்டுத் துவரையு சிலம்பேணே.

(இ-ள்.) சிறியா நங்கை, குளத்துப் பாசி, சிவப்பு, முருக்கன், ஆவாரை, கஞ்சாங்கோரை, ஆகாசக்கருடன், அல்லி, பொன்னூமத்தை இலை, மகிழ் கருஞ்செம்பை, தும்பை. பெருமருந்து, திருநீற்றுப் பச்சை, வாகை, கீழாநெல்லி, பேயத்தி, அத்தி, புரசு, பற்பாடகம், வெட்பாலை, நறுவளி, காட்டுத் துவரை, உசிலம்,

259. பேணப்பா திருவாத்தித் துருஞ்சி நாணல்
பூதகரப்பான் முருங்கை விலாரி நாரி
காணப்பா பெருமரத்தான் பெருங் காய
கத்திரிநாயகம் வரப்பூலா நீர்ப் பூலா
தோணப்பா கிரந்திநாயகம் வல்லாரை
தொடுசிணுங்கி யிம்பூரா செவந்தி நந்தி
ஊணப்பா வேம்பாடஞ் செம்பொன் னாகம்
ஊசிமல்லி வாதறசு சடைச்சி நேரே.

(இ-ள்.) திருவாத்தி, துரிஞ்சி, நாணல், பீநாரி, முருங்கை, விலாரி, நன்னாரி, பெருமரம், பெருங்காயப் பால் மரம், கத்திரி, சன்னி, நாயகம், வரப்பூலா, நீர்ப்பூலா, கிரந்தி, நாயகம், வல்லாரை, தொட்டால் சிணுங்கி, இம்பூரல், சீந்தில், நந்தியாவட்டம், வேம்பாடம், செவ்வலரி, ஊசிமல்லி, வாதராசன், பூண்டு, கீரிப்பூண்டு.

260. நேரடா கடுதுரத்தி சங்கங் குப்பி
நிலப்பனை மின்னெருஞ்சில் நல்லவேளை வேளை
பாரடா பெருங்கொத்தான் கிடார நாரத்தை
பழம்பாசி இலுப்பைமர மஞ்சள் மஞ்சள்
சேரடா ஓதித்தவசு முருங்கை தாளி
சேருகின்ற பசளைப்புனலித் தண்டு யிண்டு
மாரடா ஈசுரவேர் நாக மல்லி
மலைவேம்பு முள்ளிலவு நெருஞ்சிப் போடே.

(இ-ள்) சித்திரப்பாலாடை, சங்கங்குப்பி, நிலப்பனை, நெருஞ்சில், நல்வேளை, தைவேளை, ஆ காசவல்லி, கிடா நாரத்தை, பழம்பாசி, இலுப்பை, மரமஞ்சள், மஞ்சள், ஓதி-தவசு முருங்கை, தாளி, பசலை, புனலித்தண்டு, இண்டன் கொடி, ஈசுர வேர், நாகமல்லி, மலை வேம்பு, முள்ளிலவு, நெருஞ்சில்.

261. போட்டடா எலுமிச்சங் கறுப்புக் குன்றி
புகழான அரசுசரக்கொன் றைபுன்னை
கூட்டடா கானகத்துத் கரணை வெள்ளைக்
குன்றிவிலாம் பிச்சஅரி நெல்லி நெல்லி
சாட்டடா செந்நெருஞ்சி நுணா நல்வேம்பு
தவறாது மருதணை வெள்வேலு ஆலு
தோட்டடா புளியறணை வெள்ளைக் காக்கை
சீந்திக்கும் நிலக்கடம்பு சேர்தி திடாயே.

(இ-ள்.) எலுமிச்சை, கருப்புக் குன்றி, அரசு, சரக்கொன்றை, புன்னை, காட்டுக் கருணை, வெண்குன்றி, விலாமிச்சை, அரிநெல்லி, நெல்லி, சிவப்பு நெருஞ்சில், நுணா, வேம்பு, மருதோன்றி, வெள்வேலன், ஆல், புளியரணை, வெள்ளைக் காக்கினான், சீந்தில் கிழங்கு, நிலக் கடம்பு.

262. சேர்த்திடு புளியாரை நீர்மேல் வன்னி
செங்கமலங் கொள்ளுக்காய் வேளை பீளை
பார்த்திடு தலைச்சுருளி இரவாகும் வேர்
பனைகட லாத்தி யோகா நாலி

யோர்த்திடு துருதிப்பிரப் பங்கி ழங்கு
யெலும்பு ருவியிஞ்சு ருத்தி யாத்தி
போர்த்திடு வேர்வகைப் பலந்தா னொன்று
பூசனை செய்தங்குலங் கொய்திட்டுக் கேளே.

(இ-ள்.) புளியாரை, நீர்மேல் நெருப்பு, செந்தாமரை, கொள்ளுக்காய்வேளை, பீளை, சீந்தில், சோதிவிருட்சவேர், பனை, கடலாத்தி, செங்கத்தாழை, சிற்றேலம், பிரப்பங்கிழங்கு,வாதமடக்கி, இஞ்சி, கருப்புஅத்தி, ஆத்தி இவைகளின் வேர் வகைக்கு 35 கிராம் வீதம் சிறுக துண்டித்து

263, கேளப்பா அதிவிடயம் அக்கிராக் காரம்
மோடிவசம்பு மிளகுகருஞ் சீரா சீரா
தாளப்பா சிறுதேக்குக் காட்டாத் திப்பூ
சதகுப்பை யதிமதுரக் கிராம்பு சோம்பு
வாளப்பா பெருலவங்கப் பட்டை யேலம்
வாய்விளங்கந் திப்பிலியின் மூலம் யேலம்
வேளப்பா கசகசாப் பரங்கிப் பட்டை
ஏலரிசி திப்பிலிவால் மிளகு சேரே.

(இ-ள்.) அதிவிடயம், அக்கிராகாரம், மோடி, வசம்பு, மிளகு, கருஞ்சீரகம், சீரகம், சிறுதேக்கு, காட்டாத்திப்பூ, சதகுப்பை, அதிமதுரம், கிராம்பு, பெருஞ்சீரகம், லவங்கப்பட்டை, ஓமம், வாய்விளங்கம், திப்பிலி மூலம், ஏலம், கசகசா, பரங்கிப்பட்டை, ஏலரிசி, திப்பிலி, வால்மிளகு

264. சேரடா ரோகணிகார் போகஞ் சுக்கு
செவியமுடன் தாளிசபத்திரி சாதிபத்திரி
பாரடா பேரறத்தை சிறு நாகப்பூ
பருசு கடுக்காய் சாதிக்காய் மாசிக் காய்
யேரடா கண்டத்திப்பிலி சேராங் கொட்டை
யிசுபுகோல் வெந்தயஞ்சன்ன ராஷ்டம் கோஷ்டம்
மாரடா கற்கடக சிங்கி தக்கோலம்
வாளங்கோ ரோசனை குரோசாணி யாமே.

(இ-ள்.) கடுகுரோகணி, கார்போக அரிசி, சுக்கு, செவ்வியம், தாளிசப்பத்திரி, சாதிப்பத்திரி, பேரறத்தை, சிறுநாகப்பூ, பெரிய கடுக்காய், சாதிக்காய், மாசிக்காய், கண்டந் திப்பிலி, சேராங்கொட்டை, இசுப கோல் விரை, வெந்தயம், சிற்றரத்தை, கோஷ்டம், கற்கடகசிங்கி, தக்கோலம், வாளம், கோரோசனை, குரோசாணி ஓமம்.

265. ஆமப்பா வெள்ளுள்ளி ஈருள்ளி மல்லி
அப்பனே பலமரைதான் வகை யொன்றுக்கு
தாமப்பா பொடித்தமுன் வேரில் போட்டு
சங்கரனைப் பூசித்தாமணக் கொட் டெண்ணை
நேமப்பா ஒட்டிரெட்டி விட்டே கட்டி
நிழலாகக் கதிர்புடமே மண்டலமே வைத்து
ஓமப்பா எண்ணெய்பல மிருபோதுந் தான்
ஓகோகோ மண்டலமிப் படியே கொள்ளே.

(இ-ள்.) வெள்ளுள்ளி, ஈருள்ளி, கொத்தமல்லி இவைகள் வகைக்கு பலம் அரை வீதம் எடுத்து பொடித்து முன் வேருடன் சேர்த்து சிவனைப் பூசை செய்து சிற்றாமணக்கெண்ணெய் சரக்குகளின் கூடுதல் எடைக்கு இரண்டு பங்கு விட்டு வேடுகட்டி சூரிய புடத்தில் ஒரு மண்டலம் வைத்து எடுத்து 35 கிராம் எண்ணெய் வீதம் தினம் இரண்டு வேளை ஒரு மண்டலம் கொள்க.

266. கொள்ளடா குடல்புரட்டுகைகால் குத்தல்
குதிவாத மிடுப்புதுடைக் கெண்டைவாதம்
மெள்ளடா திமிரபெருநோய்க் குஷ்டம் சூலை
வெடிமேகங் கடுகுடைச்சல் யோனி சூலை
உள்ளடா உதிரஞ்சீழ் முளை மூலந்தான்
ஓடிடுமே காக்கைவலி மூரிச்சை வாய்வு
தள்ளடா புளிப்புகையும் வென்னீரன்னஞ்
சாதிக்க நோய்பலவுந் தவறும் பாரே.

(இ-ள்.) குடல்புரட்டு, கைகால் குத்தல், குட்ட நோய், சூலை வெடி, மேகம், விஷக்கடி, குடைச்சல், யோனிச் சூலை, ரெத்த மூலம், சீழ்மூலம் , முளை மூலம், காக்கை வலி, மூர்ச்சை, வாய்வு முதலியன தீரும் வெண்ணீருடன் சாதம் சாப்பிடவும்.

**பீனிசத் தைலம்**

267. பாரப்பா முசுமுசுக்கை கரிசலாங் காணி
பழம்பாசி கருநொச்சி வன்னி சின்னி
சேரப்பா கருந்துளசி யம்மான் பச்சைத்
திருநீற்றுப் பச்சைப்பொன் னாங்காணி தாணி
நேரப்பா வாதசுர கீழ்க்காய் நெல்லி
நிலப்பனை சிய்யா வுசிலங்காரை சூரை
கேரப்பா அகிலுதீர வேங்கு வேம்பு
குட்டிவிளா வெள்ளறுகு நந்தி கூட்டே.

(இ-ள்.) முசுமுசுக்கை, கரிசாலை, பழம்பாசி, கருநொச்சி, வன்னி சின்னி, கருந்துளசி, அம்மான் பச்சரிசி, திருநீற்றுப் பச்சை, பொன்னாங்காணி, மருதாணி, வாதமடக்கி, கீழ்க்காய் நெல்லி, நிலப்பனை, செழுமலர்க்கொன்றை, காரை, கருஞ்சூரை, அகில், உதிர வேங்கை, குட்டி விளா, வெள்ளறுகு நந்தியாவட்டம்.

268. கூட்டுவாய் பூவரசு வில்வஞ் சங்கு
கோரை கருவேப்பிலை வெண்ணொச்சி விச்சி
மாட்டிடுவாய் மூக்கரட்டை யிலவுதேத்தான்
மாதளை செம்முள்ளி யாதண்டை சுண்டை
மூட்டிடுவாய் வெள்ளெருக்குக் கழற்சி சிற்றா
முட்டிகருக் காமணத் தக்காளி காளி
போட்டிடுவாய் முடக்கொற்றான் விருவம் பீக்கம்
பொன்னாவாரை சடைச்சி வேளை கேளே.

(இ-ள்.) பூவரசு, வில்வம், முட்சங்கு, கஞ்சாங்கோரை, கறிவேப்பிலை, வெண்ணொச்சி, விட்சி, மூக்கரட்டை, இலவு, தேத்தான், மாதுளை, செம்முள்ளி, ஆதொண்டை, சுண்டை, வெள்ளெறுக்கு, கழற்சி, சிற்றாமுட்டி, கருக்காமரம், மணத்தக்காளி, கக்கரி, முடக்கொற்றான் விருவையிலை, எட்டி, பொன்னாவாரை, கீரிப்பூண்டு, வேளை,

269. கேளடா இலந்தை மகிழ் நாக மல்லி
கிளுவை எலுமிச்சைபார் வெட்டி கொட்டி
வாளடா தூதுவளை கண்டங்கத்திரி
வாடாத மல்லிகை வெல்வேலாபூலா
வேளடா செந்நா யுருவி மஞ்சள்
வெண்கொள்ளுக் காவேளை யானாவுனா
தாளடா மிளகரணை சங்கங்குப்பி
தண்ணீர்விட் டாங்கிழங்கு யிம்பூறாவாங்கே.

(இ-ள்.) இலந்தை, மகிழம், நாகமல்லி, கிளுவை, எலுமிச்சை, நன்னாரி, வெட்டிவேர், கொட்டி, தூதுவளை,கண்டங்கத்திரி, வாடாமல்லி, வெள்வேலன், பூலா, செந்நாயுருவி, மஞ்சள், வெள்ளை கொள்ளுக்காவேளை, மிளகரணை சங்கங்குப்பி, தண்ணீர்விட்டான், இன்புறா.

270. வாங்கப்பா தழுதாழை செப்பு நாகை
வாதநாரா யணன்மைக் கொன்னை புன்னை
மாங்கப்பா சிறுகுறிஞ்சா புரசு ஆயில்
பாவட்டை இஞ்சிதுறாய் இலுப்பை யப்பை
ஓங்கப்பா ஆவாரைக் கண்ணீர்ப் பூளை
ஓரிலைத்தாமரைமுக்கா வேளைதாளை
ஆங்கப்பா வெண்குன்றி முன்னைவேளை
யமுக்குறா செம்பருத்திக்கொழுஞ்சி நேரே.

(இ-ள்.) தழுதாழை, செப்பு, நெருஞ்சில், வெற்றிலைக் கொடி, வாதநாராயணன், இஞ்சி, துறா, இலுப்பை, அப்பக்கோவை, ஆவாரை, சிறுபீளை ஓரிலைத்தாமரை, முக்கா வேளை, தாழை,

வெண்குன்றி, முன்னை, தைவேளை, அமுக்குறா, செம்பருத்தி, கொழுஞ்சி.

271\. நேரடா கரும்செம்பை ஊழலாத்தி
நெய்ச்சுட்டி யத்திவண்டு கொல்லிநெல்லி
சேரடா வெண்காக்கைக் குறட்டை எட்டி
சென்னெருஞ்சி துத்திசெங் கத்தாரிசூரி
பாரடா பூவந்தி பூனைக்காலி
பாலை மருக்காரைப் புனலித்தண்டுயிண்டு
மாரடா நீலிபேரா முட்டி கோரை
வகையொன்றுக் கோர்பலம்வேர் வாங்கித் தட்டே.

(இ-ள்.) கருஞ்செம்பை, ஊழலாத்தி, நெய்ச்சட்டிக் கீரை, அத்தி, வண்டுகடி இலை, நெல்லி, வெள்ளைக் காக்கணான், மூக்குறட்டை, எட்டி, சிவப்புநெருஞ்சில், துத்தி, செங்கத்தாரி, நத்தைச் சூரி, பூவந்தி, பூனைக்காலி, பாலை, மருக்காரை, புனலித்தண்டு, இண்டு ,அவுரி, பேராமுட்டி, கஞ்சாங்கோரை, இவைகளின் வேர் வகைக்கு 35 கிராம்

272\. தட்டடா பெரும்பாண்டத்தி லிலிட்டே கேள்
தவறாமல் கணபதியைப் பூசித்தேனான்
வெட்டடா செவ்விளநீர்தனி லூட்டில் ஆட்டி
எரியிட்டுப் படியோரெண் டிறுத்துக்கொண்டு
கொட்டடா ஆவின்பால் படியோ ரெண்டு
கூடச்சே ரெள்ளெண்ணெய் படிதான் ரெண்டு
விட்டடா கதிர்புடத்தி லொரு நாள் வைத்து
மேலோடுங் கடைச்சரக்கு விபரங்கேளே.

(இ-ள்.) இவைகளை ஒரு பாண்டத்திலிட்டு செவ்விளநீர் விட்டு ஆட்டி, அடுப்பிலிட்டு எரித்து இரண்டு படியாக வடித்துக் கொண்டு, ஆவின் பால் படி இரண்டு, எள்ளெண்ணெய் படி இரண்டு, சூரிய புடத்தில் ஒரு நாள் வைத்து இதற்கு மேல் போட வேண்டிய சரக்குகளைக் கேள்.

273. கேளப்பா அதிமதுரம் சிறுநாகப்பூ
கெடியான:மிளகுசன்ன ராஷ்டங்கோஷ்டம்
வாளப்பா சிறுலவங்கப் பட்டை சுக்கு
வால்மிளகு பேருரையாள் கிராம்பு சோம்பு
வேளப்பா கண்டந் திப்பிலி மாசிக்காய்
வெண்மிளகு குரோசாணி ஓமம்
தாளப்பா சிறுதேக்குக் கடுக்காய்ப் பிஞ்சு
சதகுப்பை திப்பிலியின் மூலம் போடே.

(இ-ள்.) அதிமதுரம், சிறுநாகப்பூ, மிளகு, சிற்றரத்தை, கோஷ்டம், சிறுலவங்கப்பட்டை, சுக்கு, வால்மிளகு, வசம்பு, கிராம்பு, சோம்பு, கண்டந்திப்பிலி, மாசிக்காய், வெள்ளை மிளகு குரோசாணி ஓமம், சிறுதேக்கு, கடுக்காய்ப் பிஞ்சு, சதகுப்பை, திப்பிலிமூலம்.

274. போடு கருஞ்சீரகம் பூலாக் கிழங்கு
பூண்டுநற் சீரகம்தக் கோல்ம் ஏலம்
நாடு தாளிசபத்திரி யக்கிராக் கார்போகங்
கூட்டுவாலுழுவை .யரசிக்காட்டாத் திப்பூகொத்தமல்லி
ஆட்டு வகைக்கொன்றுப் பலமரைதான் தூக்கி
அப்பனே பொடித்திட்டு எரித்திடாயே.

(இ-ள்.) கருஞ்சீரகம், பூலாங்கிழங்கு, பூண்டு, நற்சீரகம், தக்கோலம், ஏலம், தாளிசபத்திரி, அக்கிராக் காரம், கார்போக அரிசி, வாலுளுவை அரிசி, காட்டாத்திப் பூ, கொத்தமல்லி வகைக்கு 35 கிராம் எடுத்து சூரணம் செய்து சேர்த்து

275. யெரித்திடுவா யடுப்பேற்றி மெதுவாகத் தான்
இரும்புளி யிலோர் விறகா லிருசாமம்
குரிதிதிடுவாய் மெழுகுபத மெரித்து வாங்கி
குங்குமப்பூ மலாக்காச் சாம் பிராணி

நெரித்திடு கோரோசனை மாஞ்சி சாதிக்காய்
நிறைவகை யோர்ப்பலமரை தான்பொடித்துப் போட்டு
விரித்திடும் நல் பாண்டத்தில் நாளேழிட்டு
மேலோடு வெய்யோனெதிரே வைத் தாட்டே.

(இ-ள்.) அடுப்பிலேற்றி, இரும்புளிமரத்தின் விறகுஒன்றால் எட்டு சாமம் எரித்து, மெழுகு பதத்தில் எரித்து வடித்து குங்குமப்பூ, பால்சாம்பிராணி, கோரோசணை, சடாமாஞ்சி, சாதிக்காய் இவை வகைக்கு 17½ கிராம் பொடித்துப் போட்டு மேல்மூடி ஏழு நாட்கள் சூரியபுடமாக வைத்து எடுத்து

276. ஆட்டடா ஆதிகணேசப் பரனைப் போற்றி
அனுமார் வேதவியாசர் அசுவத்தாமர்
நாட்டடா கிருபையுடன் பரசு ராமர்
நற்குண விபீஷணர்மா பலிச்சக்ர வர்த்தி
தேட்டடா சிரஞ்சீவியேழ் நாமத்தி யானம்
தெளிவாகப் பூமியிலேழ் புள்ளி குத்தி
கூட்டடா நடுவிரலா லொன்றா யாட்டி
கூட்டியே சிரசினில்கைக் குவித்து வையே.

(இ-ள்.) கணபதி, அநுமான், வேதவியாசன், அசுவத்தாமர், பரசுராமர், விபீஷணர், மாபலிச் சக்கரவர்த்தி இந்த எழுவருடைய பெயரைத் தியானம் செய்து நடுவிரலால் பூமியில் தைலத்தினால் ஏழுபுள்ளிகள் குத்தி சிரசினில் கைகுவித்து தைலத்தை வைக்கவும்.

277. வைய்யடா மூன்றுவிசை வலுவாய்த் தேய்த்து
மாறாமல் நலுங்கு வென் னீர்மூழ்கு
செய்யடா புதன்சனிமண்ட லமோ கொண்டால்
செவிடிரைச்சல் சொரிபெரு நோயூரல் குஷ்டம்

பையடா குருதிசல மாரடைப்பு நாரல்
பக்கசிறாய்ப் பீனிசங் கபால சூலை
பொய்யடா சொல்லவில்லை நோயீ ராறும்
போய்விடுமே பெண்மயக்கம் தள்ளிக் கேளே.

(இ-ள்.) மூன்று தடவை வலுவாகத் தேய்த்து, வென்னீரில் புதன், சனி முழுகவும், ஒரு மண்டலம் முழுக காதிரைச்சல், சொரி, பெருநோய், ஊரல், குஷ்டம், இரத்தபீனிசம், நீர்ப்பீனிசம், மாரடைப்பு, நாற்றமுடைய பீனிசம், சிறாய்ப் பீனிசம், பக்க சூலை, கபால சூலை, பன்னிரு வியாதிகளும் சொல்லாமல் போகும். பெண் இச்சை தவிர்க்கவும்.

**எண்ணெய் தேய்த்து தலைமுழுகும் நாட்களின் பயன்**

278. கேளு அருக்கன்பலந் தானழகை மாற்றுங்
கெடியான திங்கள்பலன் பொருளுண் டாகும்
பாளுசெய்வாய் பலந்தான் உயிரை மாய்க்கும்
பாங்கான புதன் பலந்தான் மதியுண்டாக்கும்
தாளுவியாழப் பலன்தான் கருத் தைப்போக்கும்
தப்பாது வெள்ளிபலன் கடனே செய்யும்
நாளுசனியின் பலன்தான் எண்ணெய் மூழ்க
நாற்பொருள் சகதனம்வரும் சாதிப் பாயே.

(இ-ள்.) ஞாயிறு, அழகை மாற்றி விடும். திங்கள் பொருளுண்டாகும். செவ்வாய் உயிரை மாய்க்கும். புதன் அறிவு வளர்ச்சியடையும். வியாழன் கருத்தழியும், வெள்ளி கடன் உண்டாகும். சனி நற்பொருளும், நல்ல நட்பும் உண்டாகும்.

279. சாதிக்கும் கீழ்த்திசை சம்பத் துண்டாண்
தவறாதென் கீழ்த்திசைசஞ் சலமே செய்யும்
ஆதிக்குந் தென்திசையாயுசு விருத் திக்கும்
ஆகாதெனேமற் றிசைக்கைப் பொருளே சேதம்

வாதிக்கு மேற்றிசைமத் திபமே நோயாம்
வடமேற்கு இல்லறம்விட் டதுவே யோட்டும்
சோதிக்கும் வடதிசைமத் திபமே சாவாம்
சொல்லரிய வடகிழக்கு உத்தமன்தான் பாரே.

(இ-ள்.) கிழக்கு நோக்கி உட்கார்ந்தால் சம்பத்துண்டாகும். தென் கீழ்த்திசை சஞ்சலம் உண்டாம். தெற்கு ஆயுள் விருத்தியாகும். தென்மேற்கு திசை கைப்பொருள் சேதம் மேற்றிசை நோயுண்டாம். வடமேற்கு வீட்டை விட்டு ஓட்டும். வடதிசை சாவாம். வடகிழக்கு உத்தமம்.

## மகாக்கோடா சூரிக் குளிகை

280. பாரப்பா அரிதாமிர தம் வெள்ளை
பாஷாணம் துருசுதுத்தம் பச்சை நாவி
சேரப்பா கௌரிலிங்கம் சுரைக்காய் கெந்தி
திப்பிலிவெண் காரமிளகக் கிறாக்காரம்
நேரப்பா இருவிகடுக்காய் தான்றிக்காய்
நெல்லிக்காய் கெந்திஅன்ன பேதி சுக்கு
பாரப்பா கடுகுரோகணி நாலைந்து
வகையொன்றுக் கழஞ்சியெடை நிறுத்துவாங்கே.

(இ-ள்.) தாளகம், இரசம், வெள்ளைப் பாஷாணம், துருசு, பால் துத்தம், வெண் நாவிக் கிழங்கு, கௌரி பாடாணம், லிங்கம், வைப்புக் கெந்தகம், (நாற்றமில்லாத கந்தகம்) அரிசி திப்பிலி, வெண்காரம், மிளகு, அக்கிராக்காரம், இருவி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், கெந்தகம், அன்னபேதி, சுக்கு, கடுகுரோகிணி ஆகிய இருபது சரக்குகளும் வகைக்குக் கழஞ்சியெடை நிறுத்து எடுத்துக் கொள்க.

281. வாங்குவாளங் கழஞ்சியெடை நாலைந்து
மைந்தனே எருமைமலங் கரைத்தோர் சுத்தி
பாங்குசெய்து தோடகற்றுள் முளையும் போக்கி
பசுவின்பால் நீவிடத்து முளையும் மருத்தோடொக்க

ஓங்குவெண் ணொச்சிலைச்சார் நாள்மூன்றாட்டி
ஓகோகோ தும்பைரசம் நாள்மூன்றாட்டி
ஆங்குகையான் ரசத்தில் நாள்மூன்றாட்டி
அடைக்காய் வெள்ளிலைச்சாற்றால் நாள்மூன்றாட்டே.

(இ-ள்.) நேர்வாளம் இருபது கழஞ்சு எருமைசாணத்தில் சுத்திசெய்து மேல் ஓடு போக்கி உள்மூளையும் அகற்றி, பசுவின் பாலில் அவித்து எடுத்து முன் மருந்துடன் சேர்த்து வெண்நொச்சி இலைச் சாறு விட்டு மூன்று நாள் அரைத்து, கரிசாலைச் சாற்றில் மூன்று நாள் அரைத்து,

282. ஆட்டவெண் சீந்திப்பால் அரைநாள் மூன்று
ஆட்டுப்பா லோயாமலரை நாள்மூன்று
கூட்டியாமணக் கெண்ணை சுரத்திற்பூசி
குளிகைடா சிறுபயர்போல் உருட்டிக் கொண்டு
வாட்டிநீ நிழலிலேயுலர் த்திக்கொண்டு
மாககோடா சூரிக்குளிகை யுடனேதூபங்
காட்டிநற் தும்பைரசத் தனுபானங்கொள்
கனமான வாதமெல்லாம் சுழன்றுபோமே.

(இ-ள்.) அமுதவல்லிக் கொடிப் பாலில் மூன்று தினம் அரைக்கவும். ஆட்டுப் பாலில் மூன்று தினங்கள் அரைத்து, கரங்களில் ஆமணக்கெண்ணெயைப் பூசிக் கொண்டு, சிறுபயறு போல், மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தும்பை ரசத்துடன் அனுபானங் கொள்ளவும். கடினமான வாத நோயெல்லாம் அகலும்.

283. போமப்பா கதலிபழமுசுட் டைச்சாறும்
புத்திரனே பால் சீனிக் குளிகையாட்டி
தாமப்பா ஐங்கரனைப் பூசைபண்ணி
சாதிக்க பித்தமது தவறிப்போகும்
ஆமப்பா கொள்ளவென் னீரனுபானங் கொள்
அப்பனே சேத்துமங்கள் அழிந்துபோகும்
நேரப்பா சூரிரசத்தனு பானங்கொள்
நில்லாது வாதசுரம் நீங்கிப்போமே.

(இ-ள்.) வாழைப்பழம், முசுட்டைச்சாறு, பால், சர்க்கரை, இவைகளைக் கலந்து அதில் மகாகோடாரி சூரிக் குளிகையைக் கலந்து சாப்பிட பித்தநோய் நீங்கும். வென்னீரில் கொள்ள சேத்தும நோய் நீங்கும். நத்தைச் சூரி ரசத்துடன் கலந்து உண்ண வாத சுரம் நீங்கும்.

284. போமடா முசுட்டைச்சா ரனுபானங்கொள்
ளத்தினே பித்தசுரம் நிலை கெட்டோடும்
ஆமடா தோடைச்சாத்தி லனுபானங் கொள்
அலரியே சேத்துமத்தின் சுரம் விட்டோடும்
நேமடா முலைப்பால் லனுபானங்கொள்
நில்லரிது சன்னிஎல்லாம் ஓடும்ஓடும்
தாமடா உள்ளிரசத் தானுங்கொள்
தரியாது வாதசன்னி மேலும்பூசே.

(இ-ள்.) முசுட்டைச் சாற்றில் கொள்ள பித்த சுரம் போகும். ஆடாதோடைச் சாற்றில் கொள்ள சேத்தும சுரம் விட்டகலும். முலைப்பாலில் கொள்ள பித்த சுரம் சன்னி நீங்கும். உள்ளி ரசத்துடன் கொள்ள வாத சன்னி நீங்கும்.

285. பூசுநுணாச் சாற்றிலே யனுபானங் கொள்
புலம்பியதோர் பித்தசன்னி போகும் போகும்
மாத்தவதுப் பூசணிநீர் அனுபானங் கொள்
மகத்தான சேத்துமத்தின் சன்னியோடும்
பீச்சுவது துவரைரசத் தனுபானங் கொள்
பிசகாது வெறிசன்னிப் பின் விட்டோடும்
பாச்சுவது வேம்புரசத் தனுபானங் கொள்
பறந்திடும் தாகசன்னி பார்த்தி டாயே.

(இ-ள்.) நுணாச் சாற்றில் அனுபானங் கொள்ள, பித்த சன்னி நீங்கும். துவரை ரசத்துடன் கொள்ள, வெறி சன்னி நீங்கும். வேம்பு ரசத்துடன் கொள்ள தாக சன்னி நீங்கும்.

286. பாத்திட்ட முலைப்பாலி லனுபானங் கொள்
பல்கிட்டும் குளிர் சன்னி பதி விட்டோடும்
பேத்திட்ட மோர்த்தயிர் அனுபானங் கொள்
பிசகாது குன்மமறுந் தீரும் தீரும்
போத்திட்டநல்முருங்கே பட்டை தட்டி
புட்டவித்து நீரதுவிட்டனு பானங் கொள்
சாத்திட்ட வாதகுன்மம் தவறிப் போகும்
தள்ளுதள்ளு புளிப்புகையுஞ் சாதிப் பாயே.

(இ-ள்.) முலைப் பாலில் கொள்ள, பற்கிட்டிய குளிர் சன்னி நீங்கும். மோர், தயிர் அனுபானங் கொள்ள குன்ம வியாதி அகலும். முருங்கைப் பட்டை நசுக்கி பிட்டவியல் செய்து எடுத்த ரசத்தில் வாத குன்மம் நீங்கும். புளி, புகை, இவை நீக்கி பத்தியம் இருக்கவும்.

287. சாதியடா உமிகருக்கில் சலம் விட்டாத்தி
தண்ணீராய் வடியது செய் தனுபானங் கொள்
சோதியடா பித்தகுன்மம் தீரும் தீரும்
சொப்பணத்திலும் புளியம்புகை யுந் தள்ளு
பேதியடா வேளைரசத் தனுபானங் கொள்
பெருங்குளிரின் குன்மமறுந் தற்றுப் போகும்
ஆதியடா பசளைரசத் தனுபானங் கொள்
அன்றெரிவு குன்மமருந் தகலும் பாரே.

(இ-ள்.) உமிக்கருக்கில் தண்ணீர்விட்டு ஆறி வடித்து எடுத்த நீரில் அனுபானங் கொள்ள பித்த குன்மம் தீரும். கனவிலும் புளி புகை சேராதே. வேளைச்சாற்றில் அனுபானம் செய்ய நடுக்கல் செய்கின்ற குன்ம நோய் தீரும். தந்து மேகம் நீங்கும்.பசலைச்சாற்றில் கொடுக்க எரிகுன்ம நோயகலும்.

288. பாரப்பா மாவிலிங்கம் பட்டை தட்டி
பக்குவமாய்ச் சார்பிழிந்தனு பானங் கொள்
பேரப்பா இல்லாது வயிற்று நோவும்
பேர்பெரிய புளிபுகையுந் தள்ளு தள்ளு

வேரப்பா வில்வத்தின் பருத்திக் கம்பு
வென்னீரா லாட்டிற்சத்தனுபானங் கொள்
மாரப்பா சத்திகுன்மம் வாங்கிப் போகும்
மாதர்மயக் கம்புளிபுகை யுந் தள்ளே.

(இ-ள்.) மாவிலிங்கம் பட்டைச் சாற்றில் கொள்ள வயிற்று நோய் இல்லாதொழியும், வில்வம், பருத்தி, கம்பு, இவைகளை வெந்நீராலாட்டிப் பிழிந்தெடுத்து அனுபானங் கொள்ள சத்தி குன்மம் தீரும். பெண் இச்சை, புளி, புகை தள்ளவும்.

289. தள்ளுகரு நொச்சிலைச்சாற் றனுபானங் கொள்
தடுமாறி கவுசைகரைந் தழிந்து போகும்
விள்ளுபெரும் தகரைவிரை அரைத்து வாங்கி
வென்னீர்விட்டுப் பிசைந்து அனுபானங் கொள்
துள்ளுதிரு மேல்வைத்து கவுசை நீங்குத்
தொந்திக்க லாகாது புளி யொடுப்பு
தெள்ளுவது உள்ளிற்சத் தனுபானங் கொள்
தெறிகெட்டு ஓடும்வரச் சூலை கேளே.

(இ-ள்.) கருநொச்சியிலைச் சாற்றில் கொள்ள வயிற்று நோய் இல்லாதொழியும். வில்வம், பருத்தி கம்பு இவைகளை வெந்நீராலாட்டிப் பிழிந்தெடுத்து அனுபானங் கொண்டு, மேலும் பூசிட கவுசை நீங்கும். புளி உப்பு சேர்க்கலாகாது. உள்ளிச் சாற்றில் கொள் வறள். சூலை நீங்கும்.

290. கேளுக்கார் போகமிடித்தனு பானங் கொள்
கெடும்பக்க சூலையறும் புளியுந் தள்ளு
தாருபாக விலைச்சாற்றி லனுபானங் கொள்
சாதித்தால் கெற்பத்தின் சூலை தீரும்
வாருசிறு கீரையுங்கோடக சாலை சேர்த்து
மைந்தனே யிடித்துரசத் தனுபானங் கொள்
வேருநெடுங் கெற்பத்தில் விப்புருதி தீரும்
மீறாதேபுளி புகையும் மீறாமல் கூட்டே.

(இ-ள்.) கார்போக அரிசியை இடித்து அனுபானங் கொள்ள பக்க சூலை நீங்கும். புளி நீக்கவும். பாகலிலைச் சாற்றில் கொள்ள கருப்பை சூலை தீரும். சிறு கீரையும், கோடக சாலையும் சேர்த்து இடித்து எடுத்த சாற்றில் கொள்ள கெற்பவிப்புருதி நோயகலும். புளி, புகை நீக்கவும்.

291. கூட்டப்பா மஞ்சள்மர மஞ்சள் சாற்றில்
கொள்ளவே அடிவயிற்று கவுசை நீங்கும்
மாட்டப்பா பாகெலைச்சாத் தனுபானங் கொள்
வாங்கிப்போம் வெப்பாவை புளியுப்பில்லை
ஆட்டப்பா சந்தனநீரனு பானங் கொள்
அன்று செரியாக் குணங்கள ழிந்து போகும்
காட்டபாபா பீலிகைக்கிப் படியே கொள்ளு
கடிந்தரசன் பிளவைக்கிப் படியே தாக்கே.

(இ-ள்.) மஞ்சள், மரமஞ்சள், சாற்றில் அடிவயிறு கவுசை நீங்கும். பாகலிலைச் சாற்றில் கொள்ள வெப்பு நோய் தீரும். புளி, உப்பு நீக்கவும். சந்தனம் இழைத்த நீரில் கொள்ள செரியாக் குணம் அழியும். இதனையே பீலிகை நோய்க்கும் அனுபானமாகக் கொள்ளலாம். ராஜ பிளவைக்கு இதனையே அனுபானமாகக் கொள்ளலாம்.

292. தாக்கு பொன்னாங்காணி யனுபானங் கொள்
தண்டில்வரும் பிளவையறும் அதுமேல் பூசி
தேக்கு ஊமத்தைரசத் தனுபானங் கொள்
தொந்தித்த மேல்பிளவை யுலர்ந்து போகும்
நீக்குமே தைத்தயிர்விட் டிழைத்துப் பூசில்
நில்லரிது சீழ்ப்பிளவை நீங்கிப் போகும்
போக்கும் நீலிச்சார்விட் டிழைத்துப் பூச
பொரிந்து குதியடிப்பிளவைப் போகுங் காணே.

(இ-ள்.) பொன்னாங்காணி ரசத்தில் கொள்ள முதுகுத் தண்டில் வரும் பிளவை நீங்கும். மேலும் பூசவும். தேக்கு ஊமத்தை ரசத்தில்

குளிகையை தொந்தித்து மேல் பூச பிளவை உலர்ந்துபோகும். தயிர் விட்டிழைத்துப் பூச சீழ்ப் பிளவை நீங்கும். அவுரிச் சாறு விட்டு இழைத்துப் பூச ரெத்தப் பிளவை நீங்கும்.

293. காணப்பா ஓமச்சூர ணமே செய்து
கைகண்ட குளிகையுமொன் றதிலே சேர்த்து
ஊணப்பா யிருபோதிப் படியே கொள்ளு
உத்தமனே கவிழ்தும்பை எருக்கம் பாலும்
தோணப்பா ஆட்டுநீரி னதிலே போடு
தொந்தித்த மேகவெடி துலைந்து போகும்
பேணப்பாஎருமைநீர திலே யாட்டி
பிழிந்திடவே காதெழுச்சிப் போகுங் கேளே.

(இ-ள்.) ஓம சூரணத்தில் ஒரு குளிகையை சேர்த்து தினம் இரு போது கொள்ளவும். கவிழ்தும்பைச் சாறும் எருக்கம்பாலும் ஆட்டுக் கோமயத்துடன் தொந்தித்து மேல் பூச வெடிமேகம் தீரும். எருமை மூத்திரத்தில் குளிகையைக் கலந்து காதில் பிழிந்திட காது எழுச்சி நீங்கும்.

294. கேளப்பா கீழ்க்காய்நெல் லிச்சார் தன்னில்
கெடியான குளிகையொன்று பொடித்துப் போட்டு
நாளப்பா மூன்றிதுவே பிழிந்திட்டாக் கால்
நாடாது செவிப் புழுவுமழிந்து போகும்
தாளப்பா சங்கிலைச்சார் குளிகை யாட்டி
தான்பிழிய காதுவலித் தவறிப் போகும்
வாளப்பா கருவேலம் பட்டைச் சாற்றில்
மகத்தான குளிகையிழைத் திடுமேல் பற்றே.

(இ-ள்.) கீழ்க்காய் நெல்லிச்சாறும் குளிகையும் கலந்து காதில் பிழிந்திட செவிப்புழு அறியும். சங்கிலைச் சாறுடன் குளிகை கலந்து காதில்விட காதுவலி நீங்கும். கருவேலம் பட்டைச் சாற்றுடன் குளிகை கலந்து மேல் பற்றிடவும்.

295. பத்தடா வெள்ளாட்டின் நெய்விட் டாட்டி
பார்த்திடு உண்ணாவிலே சிறுத்துப் போகும்
யேத்தடா குளிகைமனோ சிலையுங் கூட்டி
எருக்கம்பால் விட்டரைத்து துணிமேலூட்டி
சுத்தடா திரிப்புகை உண்ணாவிற் தாவி
சுட்டவுடனே ஙிருமலறுவி சுருங்கிப் போகும்
முத்தடா தோடைச்சாத் தனுபானங் கொள்
முதுந்துவரும் சிலந்தியெல்லா மதிர்ந்து போச்சே.

(இ-ள்.) வெள்ளாட்டு நெய்யுடன் குளிகையைக் கலந்து உள்நாவில் தடவ உண்ணாக்கு சுருங்கும். குளிகை மனோசிலையை எருக்கம் பால் விட்டரைத்து திரியாகச் செய்து உண்ணாவில் திரியைக் காட்ட உண்ணாவில் சுருங்கி இருமல் தணியும். ஆடாதோடைச் சாற்றில் குளிகையைக் கலந்து கொள்ள சிலந்திப்புண் உதிரும்.

296. போச்சப்பா சங்கம்பழச் சார் விட்டாட்டி
புண்ணிலிட அடுத்தடுத்துப் பொரிந்து போகும்
மூச்சப்பா நற்கோழிக்காரஞ் சுட்டு
முன்னொன்று பொன்னூமத்தைச் சாற்றாலாட்டி
பாச்சப்பா குமரகண்டன் வலிக்கும் போது
பக்குவமாய்க் கண்ணிலிடு யிப்படிதான் மூன்று
கூச்சப்பா முலைப்பால்செம் பருத்திப் பாலுங்
கூட்டி நசியம்பிழிந்து நிறுத்துப் போடே.

(இ-ள்.) சங்கம் பழச்சாற்றில் குளிகையை அரைத்துப் புண்ணிலிட ஆறும். கோழி தைலத்தைச் சுட்டு பொன்னூமத்தஞ் சாற்றுடன் கலந்து குளிகையிட்டு குமரகண்ட வலிப்புக்கு கண்ணில் கலிக்கமிட தீரும். முலைப்பாலும் செம்பருத்திப்பாலும் குளிகையும் கலந்து நசியமாக மூக்கில் பிழிந்து விட வலிப்பு நீங்கும்.

297. போட்டப்பா காடியிலேழ் குளிகை கொள்ள
பேதியில் பெண்ணிட்ட மருந்தெல்லாம் வீழும்
கூட்டப்பா சுட்டுக் கடுக்காயின் தூளாம்
குளிகைபத்து உப்புபத்து மிளகு பத்து

நாட்டப்பா ஆவின்வெண்ணெய்க் கூடப் போட்டு
நன்றாக அரைத்தெடுத்துப் புண்ணிற் போட்டு
சுட்டப்பா புருஷர்சிலந் தியும் நில்லாது
தவறிப்போம் சத்தியமென் றரிந்து பாரே.

(இ-ள்.) காடியுடன் ஏழு குளிகை கலந்து கொள்ள பேதியில் பெண்களால் வைக்கப்பட்ட மருந்தீடு விழும். சுட்ட கடுக்காயின் தூள் பத்து குளிகை, பத்து உப்பு, பத்து மிளகு இவைகளை ஆவின் வெண்ணை விட்டரைத்து எடுத்துப் புண்ணில் போட சிலந்தி நோய் தீரும்.

298. பாரப்பா செறுப்படையின் சார்விட் டாட்டி
பக்குவமாய் உள்ளுக்குக்கொடுத்து மேனிச் சாற்றில்
சேரப்பா குளிகையுமொன் றிழைத்துப் பூச
தெறிக்கும் மண்டைக்கரப்பான் செய்தே பாரு
வேரப்பா பிறண்டைச்சார்க் குளிகை யொன்று
இழைத்திடு பல்விப்புருதி விலகிப் போகும்
நேரப்பா நாரத்தபழச் சார் தன்னில்
நசியம்விட் டொருதலையின் வலியை மாற்றே.

(இ-ள்.) செருப்படையின் சாறுடன் குளிகை கலந்து உள்ளுக்குக் கொடுத்து, மேனிச்சாற்றில் குளிகை இழைத்து மேல் பூச மண்டைக் கரப்பான் தீரும். பிரண்டைச் சாற்றுடன் குளிகையிழைத்துப் பூச விப்புருதி நீங்கும். நாரத்தம் பழச்சாற்றில் கலந்து நசியமிட ஒருவலி நீங்கும்.

299. மாத்தடா கரிப்பான்சாற் றனுபானங் கொள்
மண்டலத்தில் கருங்குஷ்டம் வாங்கிப் போகும்.
யேத்தடா நற்கோழிக் காரஞ் சுட்டு
யீரைந்து குளிகைப்பொன்னூமத்தஞ் சாற்றில்
தேத்தடா அரைத்துசிமிளுக் குள்ளே வைத்து
தீட்டுக் கலிக்கம்பேய்பிசா சோடிப் போகும்
பாத்தடா முலைப்பால்செம் பருத்திப் பாலும்
பக்குவம்பின் கண்ணிலிடு பதனஞ் செய்யே.

(இ-ள்.) கரிசாலைச் சாற்றில் குளிகை கலந்து கொடுக்க ஒரு மண்டலத்தில் குஷ்டம் நீங்கும். கோழி மலத்தைச் சுட்டு பத்து குளிகையைச் சேர்த்து பொன்னூமத்தஞ் சாற்றில் அரைத்து சிமிழில் வைத்து கலிக்கமிட பேய் பிசாசு ஓடிப்போகும்.

300. செய்யப்பா மயக்கரவம் தீண்டிற்றா னால்
திறமான விழுதியிலை வேருங் கூட்டி
நெய்யப்பா அரைத்துக்கடி வாயிற் பூசி
நலமான குளிகையினைத் திண்ண் தீரும்
பைய்யப்பா புனவுரியன் தீண்டிற்றா னால்
பத்தாசெருப் படைச்சாற்றி லிழைத்துள் ளீந்து
மெய்யப்பா குளிகையொன் றூமத்தைச்சாற்றில்
வெண்ணெய் போலரைத்துடன் மேல்பூசித் தீரே.

(இ-ள்.) மயக்குவிக்கும் பாம்பு தீண்டினால் விழுதியிலையின் வேருங் கூட்டி அரைத்து கடிவாயில் பூசி குளிகையை தின்னத் தீரும். விரியன் பாம்பு கடித்தால் குளிகையை செருப்படைச் சாற்றிலிழைத்து உள்ளுக்கு கொடுத்து, ஊமத்தைச் சாற்றில் குளிகையை இழைத்து மேல் பூசவும். தீரும்.

301. தீரடா பெருவிரியன் தீண்டிற்றா னால்
செருப்படைச் சாற்றிலிழைத் துள்ளே ஈய்த்து
மாரடா கடிவாயின் மேலே பூசிப்
பக்கென்று விஷமிறங்கிப் பயந்திட் டோடும்
வேரடா உதிமண்டெலி தான் தீண்டில்
விழுதியிலைச் சாற்றிலிழைத் துள்ளே யீய்ந்து
பாரடா கடிவாயில் தடவிப் போட்டு
மகத்தான விஷமிறங்கும் மாற்றிப் போடே.

(இ-ள்.) பெருவிரியன் பாம்பு கடித்தால் செருப்படைச் சாற்றில் குளிகையை இழைத்து உள்ளுக்கும் கொடுத்து கடிவாயில் பூச

விஷப்பாம்பு கடித்தால் விழுதியிலைச் சாற்றிலிழைத்து உள்ளுக்கும் கொடுத்து கடிவாயில் பூச விஷமிறங்கும்.

302. போட்டா சுருட்டையது தீண்டிற்றா னால்
புத்தெருக்குச் சாற்றிலிழைத் திடவே தீரும்
முட்டா துள்பழரசத் தனுபானங் கொள்
மூன்றாம்நாள் முறைக்காய்ச்சல் முனைகெட் டோடும்
நட்டா யிஞ்சிரசத் தனுபானங் கொள்
நாலாம்நாள் முறைக்காய்ச்சல் நடுக்கல் தீரும்
ஆட்டா முறையொன்றுக் குளிகை யொன்று
ஆதிமுத லென்குருவின் முறைதப் பாதே.

(இ-ள்.) சுருட்டைப் பாம்பு, கடித்தால் எருக்கஞ் சாற்றிலிழைத்து உபயோகிக்கத் தீரும். எலுமிச்சம்பழச் சாற்றில் அனுபானங்கொள்ள மூன்றாம் நாள் முறைக் காய்ச்சல் தீரும். இஞ்சிச் சாற்றில் கொள்ள நாலாம் நாள் முறைக் காய்ச்சல் தீரும். ஒரு குளிகையில் பலநோயகற்றும். எனது குருவின் முறை தவறாது.

## வளர்ச்சியில்லாத பெண்களுக்கு

303. தப்பாது நிலக்கடம்பு ரசத்தை வாங்கி
தையலர்கள் கொங்கைமுலைத் தவிரப் பூசி
யப்பாது சார்பிழிந்து தோணியில் விட்டாட்டி
அறிவாயிந் தப்படியே முற்றநாள் மூன்று
வேப்பாது யிருதனமு யிருமல்
விரியுமடா தெள்ளுவனென் றரியா ளைக்கி
மப்பாது வணங்கிஅடிவேர் தான் மூன்று
ஆதித்த நாளிலெடுக் குளிசங் கட்டே.

(இ-ள்.) நிலக் கடம்பு சாற்றை வளர்ச்சியில்லாத பெண்களின் மார்பகங்களில் பூசவும். தவிரவும். பெண் குறியிலும் பூசவும். இந்தப்படியே மூன்று தினங்கள் செய்ய வளர்ச்சியடையும். நிலக்கடம்பின் வேரை மூன்று ஞாயிற்றுக் கிழமைகளில் எடுத்து குளிசமாகக் கட்டவும்.

304. கட்டடா முக்காலுந் தண்ணீ ரோதி
காட்டிமுகத் திலிரைத்து கனுங்கோள் மூட்டித்
தொட்டடா உண்டைத்தூர லரைத்து வாங்கி
சொல்பெரிய யெள்ளெண்ணையிலேகுழைத் துளீயிந்து
சிட்டடா நெய்யிறைச்சி தயிரீருள்ளி
கொத்தன்னம் புளிப்புகையுட் சேரொண்ணாது
விட்டடா யிப்படிநாள் ஒரு மூன்றுள்ளே
விளங்கிடுவ ளுள்ளுக்கு விழுகும் பாரே.

(இ-ள்.) தண்ணீரோதி மூன்று தினங்கட்கு முகத்திலிரைக்கவும். நிலக்கடம்பின் வேரை அரைத்து எள்ளெண்ணெயில் குழைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். தயிர், வெங்காயம், பழையது, புளி, புகை சேராது. மூன்று தினங்கள் செய்யவும்.

## குன்மத்துக்குச் சூரணம்

305. பாரப்பா வெள்ளறுகு யெருக்கம் பூவும்
பக்குவமாய் வகையொன்று பல மெட்டைந்து
நேரப்பா முதிர்ப்பிரண்டை பலம் நாலைந்து
நெடியயெறுக் கம்பழுப்பு பல மீரைந்து
சேரப்பா கல்லுப்பு படிதான் ரெண்டு
தேய்த்தாய்ந்த ஓமமணிப் பலமோ ரைந்து
மாரப்பா யிவ்வகையோ யாறுங் கூட்டி
மகத்தான பசைபோலு மிடித்து வாங்கே.

(இ-ள்.) வெள்ளறுகு, எருக்கம்பூ, வகைக்கு 1400கிராம் முதிர்ந்த பிரண்டை 700 கிராம் எருக்கம் பழுப்பு 350 கிராம் கல்லுப்பு இரண்டுபடி, சுத்தம் செய்து எடுத்த ஓமம் 175 கிராம் இவை ஆறு வகையையும் உரலில் போட்டு பசை போல் இடித்து எடுத்து.

306. வாங்கப்பா யெருக்கிலைஈரேழ் தொன்னை தைத்து
வளமான மருந்தெல்லா மதனுள் கட்டி
ஓங்குபெருங் கெசபுடமிட் டெடு தூளாக்கி
உத்தமனே புதுக்கலசத் துள்ளே வைத்து

பாங்குபெருந் துட்டிடைமுன் னிறுத்துப் போட்டு
பாய்ச்சிடு வெண்ணொச்சிலைச் சார்நல் வேளைச்சார்
ஆங்குகரு நொச்சிலைச்சார் மேனிச் சாற்றில்
அறிந்திடிரு மண்டலமே கொள்ளு கொள்ளே.

(இ-ள்.) எருக்கிலையால் பதினான்கு தொன்னைகள் தைத்து, இடித்த மருந்துகளை அதனுள் கொட்டி, கட்டி புதிய மண் கலசத்துள் வைத்து கெசபுடமிட்டெடுத்து பொடித்துப் பத்திரப்படுத்து. பணவெடை வெண்ணொச்சியிலைச் சாறு, நல்வேளைச்சாறு கருநொச்சியிலைச் சாறு, மேனி இவற்றில் நோயறிந்து இரண்டு மண்டலம் சாப்பிட்டுவர.

307. கொள்ளடா வயிற்றுவலி குடைச்சல் வாய்வு
குன்மமுமோ ரெட்டதுவுங் குத்திட் டோடும்
மெள்ளடா அகத்தியிலைக் குத்திட்டோடும்
மிதிபாகல் பூசணிக்கா யிறைச்சி மச்சம்
தள்ளடா பழையதுபால் புகையும் மோருந்
தவறாது என்குருவின் முறை பொய்யாது
உள்ளடா பத்தியமிப் படியே காத்து
உறவாகக் கொண்டிடநோ யொழிந்து போமே.

(இ-ள்.) வயிற்று வலி, குடைச்சல், வாய்வு, எட்டுவித குன்மம் நீங்கும். அகத்தியிலை, வாழைத்தண்டு, மிதிபாகல், பூசணிக்காய், இறைச்சி, மீன், பழையசாதம், பால், புகை, மோர், இவைகளை நீக்கவும்.

### சுராங்கிஷக் குளிகை

308. போமப்பா மடல்துத்தம் கழஞ்சி ரெண்டு
பொன்னரி தாரத்தினிடை கழஞ்சி ரெண்டு
ஆமப்பா புளுப்புறணி யதனைச் சுட்டு
ஆத்தியெடு சாம்பல்கழஞ் சிடைதான் ரெண்டு

தாமப்பா பொன்னூமத்தைச் சார் விட்டாட்டி
தவறாமல் குளிகைகுன்றி மணிபோல் செய்து
வாமப்பா நிழலதிலே உலர்த்திக் கொண்டு
மைந்தனே சுராங்கிசமாங் குளிகை பாரே.

(இ-ள்.) துத்தம், பொன் அரிதாரம், வகைக்கு இரண்டு கழஞ்சு, சுத்தி செய்து, புளியம் புரணியை சுட்டு ஆற்றி எடுத்த சாம்பல் இரண்டு கழஞ்சி இவைகளை பொன் ஊமத்தம் சாறுவிட்டு நன்கு அரைத்து குன்றிமணியளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

309. பாரப்பா வென்னீரிற்கொள் வெதுப்புத் தீரும்
பருந்துளசி சாற்றிலிட தோஷந்தீரும்
நேமப்பா குளிர்சலத்தில் குளிகைக் கொள்ள
நில்லாது தாபசுரம் நிலைகெட் டோம்
தாரப்பா திப்பிலிநெய் குளிகைக் கொள்ள
சன்னிசுரம் போம்புளிப் புகையுந் தள்ளு
சேரப்பா பொரிமிளகு நீரோடன் னம்
தினமுருங்கை யிலைமிளகும் பொதித்துக் கூட்டே.

(இ-ள்.) வென்னீருடன் மாத்திரயைக் கொள்ள, வெப்புசுரம், துளசிச் சாற்றில் முத்தோஷங்கள் தீரும். குளிர்ந்த நீருடன் கொள்ள சேத்தும சுரம் நீங்கும். திப்பிலி, நெய், இவைகளில் சன்னிசுரம் நீங்கும். புளி, புகை பொரித்த குழம்பு, மிளகுநீர் சாதம் சாப்பிடவும்.

## கண்காச மாத்திரை

310. கூட்டப்பா நெல்லிமுள்ளி திப்பிலியுந் துத்தம்
கொடிதான அதிமதுரம் வகை யொன்றுக்கு
மாத்தடா கழஞ்சியெடை இந்துப் பொன்னு
வகைக்கரைகா கால்கழஞ்சி நிறுத்துப் போட்டு

ஆட்டடா பழச்சாற்றால் சாம மேழு
அப்பனே மயனம்போ லாகும் போது
நீட்டடா மாத்திரையொன் றதிலே செய்து
நிழலாக உலர்த்தியபின் னெடுத்துக்கொள்ளே.

(இ-ள்.) நெல்லிமுள்ளி, திப்பிலி, துத்தம், அதிமதுரம் வகைக்கு ஒரு கழஞ்சு, இந்துப்பு ஒரு கழஞ்சு இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றால் ஏழுசாமம் மயனம் போல் அரைத்து அரைக்கால் கழஞ்சு அளவு மாத்திரைகளாக செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்க.

311. கொள்ளு கையான்தகரகை முலைப்பால் தன்னில்
குறையாம லிழைத்தரை மண்டல் மிட்டாக்கால்
தெள்ளு நேத்திரச்சூலை படலங்காசம்
சிகப்புநீர் முட்டலறும் பிரகாசிக்கும்
துள்ளு பார்பூளைமமுருங்கைச்சார் தன்னில்
துடர்ந்தரை மண்டலமிருபோ திழைத் திட்டாக்கால்
உள்ளு சுடும்புரைச்ச லொழிந்து போகும்
உத்தமனே கைமுறை தப்பாது பாரே.

(இ-ள்.) கையான்தகரைச் சாறு, முலைப்பால் இவற்றில் இழைத்துக் கண்ணிலிடவும். நேத்திர சூலை, கண்படலம், கண்காசம், கண்சிவப்பு, நீர்முட்டல் நீங்கி கண் பிரகாசிக்கும். முருங்கைப் பூச்சாற்றில் தொடர்ந்து இருபோது அரை மண்டலம் கண்களில் போட்டு வர கண்சூடும், புரை வளர்ச்சியும் ஒழிந்து போகும்.

## கண்ணில் பூ விழுதலுக்கு

312. பாரடா நற்தேனில் சங்கா லாட்டி
பருங்குன்றி மணியதுசோ லிரண்டு போதும்
நேரடா மண்டலந்தான் விழியிற் போடு
நில்லாது நில்லரிது பூவிட் டோடும்

மாரடா திரோதாயி மாய்கை தள்ளு
மகத்தான என்குருவின் முறை தப்பாது
சேரடா இளவென்னீர் சாதங் கொள்ளு
சேராதே புளிப்புகையுந் தள்ளிப் போடே

(இ-ள்.) நல்ல தேனில் சங்கு கொண்டு இழைத்து ஒரு குன்றியளவு தினம் இரண்டு வேளை கண்களில் இடவும். ஒரு மண்டலம் போட்டு வர கண்களில் விழுந்துள்ள பூ மறைந்து விடும். பெண் ஆசை நீக்கவும். வென்னீர் சாதம் கொள்ளவும். புளி, புகை நீக்கவும்.

**தொந்தசுரம் அஸ்திசுரக் கஷாயம்**

313. போடப்பா நிலவேம்பு மருட் கிழங்கு
போய்ப்புடலுங் கடுகு ரோகணி பாவட்டை
நாடப்பா நெல்லி முள்ளிசுக் கோடேழும்
நலமாக விரையொன்றுக் கழஞ்சு வாங்கு
தேடப்பா நற்சலமீ ராழி விட்டுத்
தீமூட்டி எட்டிலொன் றாய்க் காய்ச்சி
ஆடப்பா யிப்படிநா ளைந்தே கொண்டால்
அந்திசுரம் விட்டகலு மறிந்து பாரே.

(இ-ள்.) நிலவேம்பு மருட்கிழங்கு, பேய்ப்புடல், கடுகுரோகணி, பாவட்டை, நெல்லி முள்ளி, சுக்கு இவை ஏழும் வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து இரண்டு ஆழாக்கு தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய் சுண்டக் காய்ச்சி காலை மாலை ஐந்து தினங்கள் கொள்ள மாலை சுரம் நீங்கும்.

314. பாரடா சீந்திற்கொடி சாம்பல் செய்து
பாங்கான பெருமரப்பட்டை சேங் கொட்டை
நேரடா பேய்ப்பாற்ச் சோத்தியின் வேரும்
நிலவேம்பு பொற்கடுக்காய் முத்தக் காசு

சேரடா வகைக்கரை விராகன் தூக்கி
தெள்ளுபொடி செய்தொழக்கு நீருங் கூட்டி
கோரடா நாலி லொன்றாகக் காய்ச்சி
கொண்டிரு போதேழுநாள் குணமுங் காணே.

(இ-ள்.) சீந்திற் கொடி சுட்ட சாம்பல், பெருமரப்பட்டை, சேராங்கொட்டை, பேய்ப்பாற்சோற்றியின் வேர், நிலவேம்பு, பொற்கடுக்காய், முத்தக்காசு, வகைக்கு அரை விராகனிடை எடுத்துப் பொடி செய்து உழக்கு தண்ணீர் விட்டு நான்கிலொன்றாய் சுண்டக் காய்ச்சி தினம் இரண்டு வேளை ஏழு தினங்கள் சாப்பிட

315. காணப்பா தொந்தசுரம் நிலை கெட்டோடும்
கனமான அஸ்திசுரம் கழன்று போகும்
வீணப்பா புளிப்புகையுந் தள்ளிப் போடு
மெய்யசையப் போகாது நடை யாகாகது
ஊணப்பா பொரிமிளகு நீரோ டன்னம்
உத்தமனே வழுதலங்காய் பொரியல் கொள்ளு
பேணப்பா என்குருவின் முறை பொய்யாது
புரட்டில்லை நோயகலு மறிந்தி டாயே.

(இ-ள்.) தொந்தசுரம், அஸ்திசுரம் நீங்கும். புளி, புகை நீக்கவும். உடலுக்கு ஓய்வு தரவும். மிளகு நீர் அன்னம் கொள்ளவும்.

## தாபசுரத்துக்கு

316. அறிந்திடும் பூவந்திப் பழங் கல்லுப்பு
அப்பனே எள்ளெண்ணெ யோடிவ் மூன்று
தெறிந்திடும் வகையொன்று விராகன் தூக்கி
திறமாக அரைத்திருபோ தேழ்நாள் கொள்ளு
யெறிந்திடும் தாபசுரம் கழன்று போகும்
யெழுதினமும் புளிப்புகையுந் தள்ளு தள்ளு
பறித்திடு பொரிமிளகு நீரோ டன்னம்
பக்குவமாய் பத்தியமும் காத்தி டாயே.

(இ-ள்.) மணி புங்குப் பழம், கல்லுப்பு, எள்ளெண்ணெய், இவை மூன்றையும் வகைக்கு ஒரு விராகனெடை எடுத்து அரைத்து தினம் இருபோது ஏழு தினங்கள் கொள்ள தாப சுரம் நீங்கும். புளி, புகை நீக்கி மிளகு நீர் அன்னம் கொள்ளவும்.

## நீரழிவுக்கு

317. கரத்திடு பூவந்திவட வேர்ப் பட்டை
கதண்டுதேன் விட்டரைத்து யிருபோதுந் தான்
பாத்திடும் பாக்களவுயெழு போதுங் கொள்
பரந்துபோம் நீரிழிவு புளியுந் தள்ளு
சேத்திடு சிவந்தரி சிவ்விலையுங் கூட்டி
திறமாகயிடித் துக்களிக் கிண்டி வாங்கி
மாத்திடு வெள்ளெண்ணெ யிருபோதுந் தான்
மாறாமல் தோய்த்திடுநாள் மூன்றே கொள்ளே.

(இ-ள.)மணிபுங்கு மரத்தின் வடக்குப் பக்க வேர்ப்பட்டையை கொம்புத்தேன் விட்டரைத்து தினம் இருபோது ஒரு பாக்களவு கொள்ளவும். ஏழு தினங்கள் கொள்ள நீரிழிவு நோய் நீங்கும். புளி நீக்கவும். சிவப்பு அரிசியும் பாகல் இலையையும் சேர்த்து இடித்துக் களிபோல் கிண்டி எள்ளெண்ணெயுடன் தினம் இருவேளை மூன்று தினம் கொள்ள

318. கொள்ளவே பிரமியமெட் டகன்றுபோகும்
கூடாதுபுளி புகையுந் தள்ளு தள்ளு
மெள்ளயிள வெந்நீர் சாதங் கொள்ளு
மீறாதே பாய்மிதியொன் றாகாதாகா
துள்ளவே மெய்யசைவு நடையொன்றாகா
உத்தமனே கதிரொளிவர யோசையைத்
தள்ளவே யென்குருவின் முறை பொய்யாது
சாதிக்க நோய்பலவுந் தவறிப்போமே.

(இ-ள்.) பிரமிய ரோகம் மட்டும் நீங்கும். புளி, புகை நீக்கவும். வென்னீரன்னம் கொள்ளவும். பெண் உறவு, உடல் உழைப்பு, அதிக நடை, கடும் வெய்யில் பெரிய ஓசை இவை ஆகாது.

319. போமடா பசுவின்பாலா ழாகாகொன்றில்
பூந்தியிலை ஈருள்ளியிம் மூன்றுங்கூட்டி
ஆமடா இடித்துரசம் பிழிந்து வாங்கி
அப்பனே நாள்மூன்றே யடுத்தே கொள்ளு
தாமடா புளிப்புகையுப் பதுவும் தள்ளு
தப்பாதிப்படி மறுபத்தியமே காருகாரு
சாமடா பிரமியமெட் டதுவுந் தீரும்
தவறாது என் குருவின் முறை பொய்யாதே.

(இ-ள்.) பசுவின் பால் ஒரு ஆழாக்கு மணிபுங்கின் இலை ஈருள்ளி, இம்மூன்றினையும் கூட்டி இடித்துப் பிழிந்த ரசம் மூன்று தினங்கள் கொள்ள எண்வித பிரமிய ரோகம் நீங்கும். புளி, புகை தள்ளவும்

## நீர்க்கடுப்புக்கு

320. பொய்யது பூவந்திவட வேர்ப் பட்டை
புத்திரனே வென்னீர்விட் டாட்டி யாட்டி
செய்யாது நாள்மூன்று யிருபோதுங் கொள்
சிவசிவா நீர்க்கடுப்புந் தீரும் தீரும்
மெய்யாது புளிப்புகையுப் பதுவுந் தள்ளு
மேலான இளவெந்நீர் சாதங் கொள்ளு
தொய்யாது யென்குருவின் முறை பொய்யாது
சூட்சமது இம்மருந்தை செய்து பாரே.

(இ-ள்.). மணிபுங்கு மரத்தின் வடக்குப் போகும் வேர்ப்பட்டை வென்னீர் விட்டரைத்து தினம் இரு வேளை மூன்று தினங்கள் கொள்ள நீர்க்கடுப்பு தீரும். புளி, புகை தள்ளவும். இளவென்னீர் சாதம் கொள்ளவும்.

## மேகம் இருபத்தொன்றுக்கும் அமிர்த லேகியம்

321. பாரப்பா வால்மிளகு பலந்தா னொன்று
பாங்கான கசகசாபலந் தான் ரெண்டு
சேரப்பா சட்டியொன்று அடுப்பிலேற்றி
தீமூட்டிப் பொன்னிறமாய் வறுத்து வாங்கி
நேரப்பா கல்வத்தில் பொடியாய் செய்து
நேர்த்தியடா பசுவின்பால் பலமோ ரெட்டு
மாரப்பா சீனிஎடை பலமோ நாலு
மைந்தனே பாகுபிடித் ததனைப் போடே.

(இ-ள்.) வால் மிளகு 35 கிராம் கசகசா 70 கிராம் இவற்றைப் பொன் வறுவலாக் வறுத்து அரைத்துப் பொடியாய்ச் செய்து, பசுவின் பால் 280 கிராமுடன் சீனி 140 கிராம் சேர்த்துப் பாகு செய்து சூரணத்தைப் போட்டு

322. போட்டடா நெய்பலமொன் றரைதான் விட்டு
புத்திரனே லேகியம்போல் கிளறிக்கொண்டு
நாட்டடா பாக்களவு இருபோதுந்தான்
நழுகாமல் ஈரைந்து தினமே கொண்டால்
சாட்டடா எழுமூன்று மேகந்தன்னை
தவறாது என்குருவின் முறை பொய்யாது
தேட்டடா பத்தியந்தா னொன்றுமில்லை
செய்திடவே நோய் பலவும் தெரித்துப் போகுமே.

(இ-ள்.) 5½ கிராம் நெய்விட்டு லேகியமாகக் கிளறி எடுத்து பாக்களவு தினம் இரண்டு வேளை பத்து தினங்கள் சாப்பிட இருபத்தோரு மேகநோயுந் தீரும். பத்தியம் ஒன்றும் இல்லை.

## நீர் எரிச்சலுக்கு மருந்து

323. போமடா யிருமூன்று ஈருள்ளிச்சார்
புத்திரனே பலமூன்றுகளக் கொட்டிச்சார்
தேமடா எள்ளெண்ணெய் பலமோராறு
சேர்த்திடு இந்தப்படியே தினமோராறு

நேமடா பத்தியமொன் றாகாதாகா
நேர்த்தியாம் வெண்னீரோ டன்னங் கொள்ளு
ஆமடா நீர்சுருக்கு மேகவெட்டை
அப்பனேநீ ரெரிச்சல கலும் நேரே.

(இ-ள்.) ஈருள்ளிச் சாறு 210 கிராம் களக்கொட்டிச்சாறு 105 கிராம், எள்ளெண்ணெய் 210 கிராம் இவற்றைச் சேர்த்துக் காலை மாலை கொள்ளவும். இவ்வாறு ஆறு தினங்கள் கொள்ள நீர்சுருக்கு, மேகவெட்டை, நீர் எரிச்சல் தீரும். வெண்னீரன்னம் கொள்க. மற்றது ஆகா.

## மேக கிரந்திக்கு

324. நேருநுணா விலைச்சார் பலமோ மூன்று
நீங்காதீ ருள்ளிரசம் பலமோ மூன்று
வாருயெள் ளெண்ணையெடை பலமோ ராறு
மாறாமலோ ராறுதினமே கொண்டால்
பாருமே கிரந்திக்கொ றுக்கு மாந்தை
பரங்கிப்புண் கள்ளிமலர் கிராந்தியோடும்
தீருவுப் புப்புளியும் புகையும் தள்ளு
சேத்தீடி ராவெண்னீரோ டன்னங் கொள்ளே.

(இ-ள்.) நுணா இலைச் சாறு 105 கிராம், ஈருள்ளி ரசம் 105 கிராம், எள்ளெண்ணை 210 கிராம் இவற்றைச் சேர்த்துக் காலை மாலை ஆறு தினங்கள் கொண்டால் கிரந்தி, கொருக்கு, உளமாந்தை, பரங்கிப்புண், கள்ளி மலர்க் கிரந்தி, இவை நீங்கும். புளி, புகை தள்ளி வெண்னீரன்னம் கொள்ளவும்.

## மார்பகம் பெருக்கவும் சுருங்கவும் மருந்து

325. கொள்ளப்பா மூஞ்சூரை நீரதிலே விட்டு
குதித்தாவி நீந்திடும்போ திருதுண்டாக
மெள்ளப்பா கத்தியினால் வீசிப் போடு
மிதந்ததுவும் முழுகினதும் வெவ்வேறே கண்டு

தள்ளப்பா பசுஞ்சாணம் கவசமா செய்து
தவறாமல் புடமிடவே நீறிப் போகும்
விள்ளப்பா பறணியில்புரி வாய்ச்செய்து வைத்து
மெல்லியர்கள் கொங்கையில் தடவிப்பாரே.

(இ-ள்.) மூஞ்சுறு எலியை தண்ணீரில் போட குதித்துத் தாவி நீந்தும்போது கத்தியினால் இருதுண்டாக வீசவும். மிதந்த துண்டத்தையும் மூழ்கிய துண்டத்தையும் வெவ்வேறு எடுத்துப் பசுஞ்சாணத்தில் தனித்தனி கவசம் செய்து புடமிட நீறும்.

326. பாரடா அமுழ்ந்தியதுண் டத்தின் பற்பம்
பாங்காக பூசிடவே சுருங்கிப் போகும்
வேரடா மிதந்ததுண்டு பற்பந்தன்னை
மேலிட்டுப் பூசிடவே பெருத்துக் காணும்
மாரடா இப்படித்தான் செய்து பாரு
மகத்தான என்குருவின் முறை பொய்யாது
சாரடா சிவசக்கிப் பூசைதன்னை
தவறாது தவறாது சாதிப்பாயே.

(இ-ள்.) அமுழ்ந்திய துண்டத்தின் பற்பத்தை பெண்களின் மார்பகத்தில் பூசிவிட சுருங்கிப் போகும். மிதந்த துண்டத்தின் பற்பத்தை மார்பகத்தில் பூசிவிட பெருத்துக் காணும்.

## பெருவயிறுக்கு மருந்து

327. சாதியடா பேயகத்திக் காய்நானாழி
தனாமேதைக் கோமயம் நானாழிவிட்டு
சேதியடா சாமமொன்று அடுப்பிலேற்றி
சுவரே வித்துடனே உலர்த்திக் கொண்டு
ஆதாயடா வெள்ளாட்டுப் பாலாழாக்கு
அப்பனே காய்மூன்று அரைத்துள்ளீய்ந்து
வீதியடா ரெண்டாம்நாள் காய்நாலாட்டி
முன்போலே பாலிலிழைத் துள்ளுக்கேத்தே.

(இ-ள்.) பேயகத்திக் காய் நான்கு ஆழாக்கு, பசு மூத்திரம் நான்கு ஆழாக்கில் விட்டு ஒரு சாமம் அடுப்பிலேற்றி சுவர வேகவைத்து வித்துடன் காய வைத்துக் கொண்டு ஒரு ஆழாக்கு வெள்ளாட்டுப் பாலில் மூன்று காயைஅரைத்துக் கொண்டு இரண்டாவது நாள் நான்கு காயை அரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

328. யேத்தப்பா மூன்றாநாள் காய்தானாலாட்டி
யிதமாக முன்போலே பாலில் கொள்ளு
மாத்தப்பா இம்மருந்து வயிர்பேதிக்கும்
மாறாமல் பலகைவயிற் றினிலேகட்டு
பாத்தப்பா யுழையொடு தவனமானால்
பருப்பாவின் நெய்முருங் கையிலையும் போட்டு
சேத்தப்பா காய்ச்சி றுத்துயிப் படியே கொண்டால்
தீராத பெருவயிறு தீரும் பாரே.

(இ-ள்.) மூன்றாவது நாள் நான்கு காய்களை அரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். பேதியாகும். வயிற்றில் சிறு பலகையை வைத்துக் கட்டவும். ஆவின் நெய்யில் முருங்கையிலையைப் போட்டுக் காய்ச்சி இறுத்துக் கொடுக்கவும். இவ்வாறு மூன்று தினங்கள்கொள்ள பெருவயிறு நோய் தீரும்.

## இருமலுக்கு எண்ணெய்

329. பாருயெள் ளெண்ணெயெடை பலம் நாலைந்து
பரிந்தாடா தோடைச்சார் பலம் நாலைந்து
சேருதூது வளைச்சார் பலம் நாலைந்து
நிறமாங் கையாந்தகரைச் சார்பலம் நாலைந்து
மாருதேத் தான்விரை ஆறைந் தாட்டி
மைந்தனே மெழுகுபத மெரித்து வாங்கி
நேருதிப்பிலி கடுக்காய் வகை யொன்றுக்கு
நிறைமூன்றுக் காசியெடைப் பொடித்துக் கூட்டே.

(இ-ள்.) எள் எண்ணெய், ஆடாதோடைச் சாறு, தூதுவளைச் சாறு கையாந்தகரைச் சாறு வகைக்கு 700 கிராம் இவைகளை ஒன்று

சேர்த்து 30 தேத்தான் கொட்டையை அரைத்து அதனுடன் கலந்து அடுப்பிலேற்றி எரித்து மெழுகு பதத்தில் வடித்து, அதனுடன் அரிசிதிப்பிலி, கடுக்காய் வகைக்கு மூன்று காசியெடை பொடி செய்து கூட்டவும்.

330. கூட்டப்பா தேனதிலே பலமோ ரைந்து
குறையாமல் பருதிபுடமதின் மேல் வைத்து
மாட்டப்பா பலமரைதானிரு போதுந் தான்
மைந்தனே யிருபதுநாள் மகிழ்ந்துண்டாக் கால்
போட்டப்பா குத்திருமல் விலகிப் போகும்
புகழான என்குருவின் முறை பொய்யாது
தாட்டப்பா புளிப்புகையுந் தள்ளிப் போடு
தவறாது தவறாது சாதிப் பாயே.

(இ-ள்.) அதனுடன் தேன் 175 கிராம் விட்டு சூரிய புடத்தில் வைத்து எடுத்துக் கொள்ளவும். தினம் 17½ கிராம் எண்ணெய் காலை, மாலை இருபது நாள் சாப்பிட்டுவர குத்திருமல் விலகிப் போகும். புளி, புகைத் தள்ளவும்.

## கட்டிப் புண்களுக்கு மருந்து

331. சாதியடா கதலிப்பூப்பட்டைச் சறுகு சுட்டு
சாம்பலாய்ச் செய்துடனாமணக் கோடெண்ணை
பேதியடா விட்டுடனோர் விரலாலாட்டி
புறக்குழலை மீதிலிடயுடைந்து போகும்
சேதியடா இம்மருந்தைச் செய்து பாரு
சொல்லரிது என்குருவின் முறை பொய்யாது
வீதியடா புளிபுகையுந் தள்ளிப் போடு
மேலான மிளகுடநீர் விரும்பிக் கொள்ளே.

(இ-ள்.) வாழைப்பூவின் பட்டை உலர்ந்த சருகுகளைச் சுட்டு சாம்பலாய்ச் செய்து ஆமணக்கெண்ணெயுடன் கலந்து புறக் கழலைக் கட்டிகள் மீது போட கட்டி உடைந்து போகும்.

## நிலாவாரைக் கற்பம்

332. கொள்ளப்பா சமூலம்நில யாவாரை
குருகறிந்து நிழலிலே யுலர்த்திக் கொண்டு
தெள்ளப்பா வெறுகடி பிரமாணந் தான்
சேத்திடு மண்டலமிருபோது தேனிற் கொள்ள
வுள்ளப்பா சடமேலிந்து வாதந் தீரும்
ஓராவின் நெய்யினில்மண் டலமே கொண்டால்
மெள்ளப்பா சடம்பெருத் துஅழகுண்டாம்
மீறாதே பாய்மிதியா விளங்கிப் பாரே.

(இ-ள்.) நிலாவாரை சமூலத்தைக் குறுக அரிந்து நிழலில் உலர்த்திச் சூரணம் செய்து இரண்டு விரல் அளவு காலை, மாலை ஒரு மண்டலம் தேனுடன் சாப்பிட்டு வர பெருத்த வாத சரீரம் மெலிந்து காணும். ஆவின் நெய்யில் ஒரு மண்டலம் கொள்ள மெலிந்த உடல் பெருத்து அழகுண்டாகும். பெண்ணாசை விலக்கவும்.

## அனுபானங்கள்

333. பாரடா ஆமணக்கெண்ணை யதினா லாறு
பக்குவமாய் கொண்டிடெலி விஷங்கள் தீரும்
சேரடா சிறுநீரில் ஏழுநாள் கொள்ள
நீங்குங் கீரிப்புழுகும் புகையுந் தள்ளு
சேரடா ஆவின்பாலிலேழு நாள் கொள்ள
திருமேனிப் புழுமரிக்கும் புகையுந் தள்ளு
மாரடா பசுமோரில் ஏழுநாள் கொள்ள
வாங்குஞ் செரியாக் குணமுந் தவறிப் போகும்.

(இ-ள்.) ஆமணக்கெண்ணையுடன் இருபத்து நான்கு நாட்கள் கொள்ள எலிவிஷம் தீரும். சிறுநீரில் ஏழு தினங்கள் கொள்ள கீரிப்புழு நீங்கும். ஆவின் பாலில் ஏழு தினம் கொள்ள நாச்குப் பூச்சி மரித்து விடும். பசுமோரில் ஏழு தினம் கொள் ள செரியாக் குணம் தீரும். புளி புகை, தள்ளவும்.

334. போமடா சிறுநீரில் ஏழுநாள் கொள்ள
பொரிந்துபோஞ் சொரிகிரந்தி புளியுந் தள்ளு
ஆமடா நாளேழ் வெள்ளாட்டுப் பாலில்
அப்பனே கொண்டிடசெவ் வாப்புத் தீரும்
நேமடா மேதிச்சா ணத்தி நீரில்
நிலையாக மண்டலந்தா னிருபோதுங் கொள்
சாமடா விஷபாகம் பாண்டு ரோகம்
தரியாது பெண்மயக்கம் தள்ளிப் போடே.

(இ-ள்.) சிறுநீரில் ஏழுதினம் கொள்ள சொரி கிரந்தி தீரும். வெள்ளாட்டுப் பாலில் ஏழுதினம் கொள்ள சிவந்த கட்டிகள் நீங்கும். எருமைச் சாண நீரில் தினம் இரு போது ஒரு மண்டலம் கொள்ள விஷப்பாண்டு நோய், மயக்கம் தீரும்.

335. போட்டப்பா ஆட்டாங்கொட்டிச்சார் தன்னில்
பூசித்து மண்டலந்தா னிருபோதுங் கொள்
ஆட்டப்பா அழுகுஷ்டம் பொரிந்து போகும்
அப்பனே புளிப்புகையுந் தள்ளிப் போடு
கூட்டப்பா பாகலிலைச்சாற் றில்நாள் மூன்றுங்
கொண்டிட செய் யான்கடிபோம் புளியுப் பில்லை
தேடப்பா மண்டலங் க லெருமைப் பாலில்
சில்லுகடி விஷமறுஞ் சத்தியமா மூட்டே.

(இ-ள்.) ஆட்டாங் கொடிச் சாற்றில் ஒரு மண்டலம் கொள்ள அழுகுஷ்ட நோய் தீரும். புளி, புகை நீக்கவும். பாகலிலைச் சாற்றில் மூன்று தினம் கொள்ள செய்யான் கடிவிஷம் நீங்கும். புளி, உப்பு தள்ளவும். எருமைப் பாலில் ஒரு மண்டலம் கொள்ள சில் விஷம் தீரும்.

## வாதங்களுக்குத் தாளிதம்

336. மூட்டப்பா மூக்கறட்டை அடிவேர் கொய்து
மூன்றுபலம் போட்டுரை ராழிநீர் விட்டு
மாட்டப்பா மிளகுள்ளி வகை யொன்றுக்கு
வாங்குபலங் காலெடைதான் நெரித்துப் போட்டு

நாட்டப்பா யடுப்பேற்றி யனலைத் தாக்கி
நாளொன்றாய்க் காய்ச்சிரு முத்தெண்ணை தாளி
ஆட்டப்பா நாள்மூன்றிப் படியே கொண்டா
லப்பனே பேதிநித மாகும் பாரே.

(இ-ள்.) மூக்குறட்டை அடிவேர் 105 கிராம் மிளகு, ஈருள்ளி வகைக்கு 9 கிராம் இவைகளைச் சிதைத்து இரண்டு ஆழாக்குத் தண்ணீர்விட்டு அடுப்பிலேற்றி நன்றாகக் காய்ச்சி இறுத்து ஆமணக்கெண்ணெயில் தாளிதம் செய்து கொள்ளவும். இவ்வாறு மூன்று தினம் கொள்ள பேதியாகும்.

337. பாரடா மெய்ப்பாதங் கைக் குடைச்சல்
பருத்தொண்டை யுடனிடுப் பின் வாதம்
சேரடா பொரிமிளகு நீரோ டன்னஞ்
சேராதே புளிப்புகையுந் திரோதாய மாய்கை
காரடா பத்தியமற் றொன்றா காது
கைகண்ட தாளிதமாய்க் கருதிப் போற்று
நேரடா வென்னீரில் நாள் மூன்றுக்கும்
நில்லரிது நோயகலும் அறிந்திடாயே.

(இ-ள்.) உடல், பாதம், கை இவைகள் குடைச்சல், தொண்டை வாதம் இடுப்பு வாதம் நீங்கும். மிளகு நீரன்னம் சாப்பிடவும். புளி, புகை, பெண் மயக்கம் ஆகா. மூன்று தினங்களும் வெந்நீரில் உபயோகிக்கவும்.

338. அறிந்திடு முடக்கொத்தான் பலந்தா னொன்று
ஆமணக்கு எண்ணெயிரு கழஞ்சி குத்தி
எரித்திடு அடுப்பேற்றி வதக்கிக் கொண்டு
இருகழஞ்சி மிளகுநற் சீரகமுங் கூட்டி
தெரித்திடு மயனம்போ லரைத்து வாங்கி
சிவசக்திப் பூசைசெய்து யிருபோதுந் தான்
விரித்திடு மண்டலமிப்படியே கொண்டால்
மீறியதோரண்ட வாதத்தின் வாதம் போமே.

(இ-ள்.) முடக்கொற்றான் 35 கிராம் இரண்டு கழஞ்சு ஆமணக்கு எண்ணெய் விட்டு வதக்கி அதனுடன் இரண்டு கழஞ்சு மிளகுக் நற்சீரகமும் சேர்த்து மயனம் போல் அரைத்து சிவசத்தி பூசை செய்து இரு வேளை ஒரு மண்டலம் கொள்ள அண்டவாதம், நீங்கும்.

## நீர்க்கடுப்பு, எரிச்சல், பித்தம், கைகால் கடுப்புக்குக் கியாழம்

339. போமடா சிறுகீரை நெருஞ்சி கண்பீளை
கத்தாழை நாயுருவி துத்தி தானும்
ஆமடா வேர்வகைக்குக் கழஞ்சி ரெண்டு
அப்பனே சீரகங்கால் பலமுங் கூட்டி
வாமடா நற்சலமீ ராழி விட்டு
மாறாமல் காய்ச்சியிறுத் தாழாக் கொன்று
தாமடா நெய்பலங்கால் வெண் கற்கண்டு
சமனாகப் பொடிசெய் முன்னீரில் சேரே.

(இ-ள்.) சிறு கீரை, நெருஞ்சில், சிறுபீழை, சோற்றுக் கற்றாழை, நாயுருவி, துத்தி, இவைகளின் வேர் வகைக்கு இரண்டு கழஞ்சுடன் சீரகம் 9 கிராம் கூட்டி இரண்டு ஆழாக்கு தண்ணீர் விட்டு ஒரு ஆழாக்காக சுண்டக் காய்ச்சி வடித்து அதனுடன் நெய் 9 கிராம், கற்கண்டு 9 கிராம் சேர்த்து,

340. சேரப்பா இருநேரம்நா ளாறு கொள்ள
சிவசிவா நீர்ச்சுருக்கு எரிச்சல் பித்தம்
பாரப்பா கைகால்மெய் யசதி சோம்பல்
பவளவாய்க் கடுப்பணத்தில் பதிவிட்டோடும்
வேரப்பா திறோதாய மாய்கை தள்ளு
வெய்யில் நடையாகாவுற வோசையாகா
தூரப்பா புளிபுதையுங் கருத் தூணாமல்
தொந்தித்து வென்னீரு மன்னங் கொள்ளே.

(இ-ள்.) தினம் இருவேளை ஆறு தினங்கள் கொள்ள நீர் சுருக்கு, எரிச்சல், பித்தம், கை, கால் அசதி, சோம்பல், கடுப்பு, அணத்தல் தீரும். புளி, புகை நீக்கி வெந்நீர் அன்னம் சாப்பிடவும்.

## பிடிப்பு, வெள்ளை, கிரந்தி, அரையாப்பு, குடைச்சல் இவைகட்கு வெள்ளெண்ணெய்

341. கொள்ளடா மணக்கெண்ணை படிதா னொன்று
கூடச்சேர் செம்பருத்திச் சாராழாக்கு
உள்ளடா நேர்வாளம் பூரமேலம்
உத்தமனே வகையொன்றுக் கழஞ்சிரெண்டு
மெள்ளடா கிராம்பு கழஞ் செடைதா னொன்று
முன்சரக்கு சுத்தித்தெல்லாம் பொடித்துப் போட்டு
தள்ளடா கதிர்புடம்பத்திரு நாள் வைத்து
தவறாமல் கசமுகனைப் போற்றி டாயே.

(இ-ள்.) ஆமணக்கு எண்ணெய் ஒரு படியில் செம்பருத்திச் சாறு ஒரு ஆழாக்கு சேர்த்து அதனுடன் பூரம், நேர்வாளம், ஏலம் வகைக்கு இரண்டு கழஞ்சு, கிராம்பு கழஞ்சியெடை இவற்றைச் சுத்தி செய்து பொடித்துப் போட்டு சூரிய புடத்தில் இருபது தினங்கள் வைத்து எடுத்து கணபதி பூசை செய்து,

342. போத்தப்பா வெள்ளெண்ணை பலந்தா னொன்று
புகட்டு மண்டலமரைதான் பிடிப்பு வெள்ளை
ஆத்தப்பா கிரந்திப்புண் கொருக்கு மாந்தை
அப்பனே யரையாப்புக் குடைச்சல் தீரும்
மாத்தப்பா புளிபுகையுந் திறோதாய மாய்கை
மாறாமல் வென்னீரோ டன்னங் கொள்ளு
காத்தப்பா கதிரொளிவா யோசையாகா
கனமான நடையாகா தறிந்திடாயே.

(இ-ள்.) தினம் 35 கிராம் எண்ணெய் வீதம் அரை மண்டலம் கொள்ள பிடிப்பு, வெள்ளை கிரந்திப்புண், கொருக்கு, மாந்தை, அரையாப்பு, குடைச்சல் தீரும். புளி புகை நீக்கவும். வெந்நீர் அன்னம் கொள்ளவும். முழு ஓய்வு இருக்கவும்.

**சித்திர வல்லாதி**

343. அறிந்திடாய் கொடிவேலி சிவனார் வேம்பு
அமுக்குறா வெள்ளறுகு சங்கங் குப்பி
தெருந்திடாய் ஆகாசக் கெருடன் சங்கு
சின்னிவிளஆத்திக் குமிழ்வேர் செங் கத்தாரி
பரிந்திடாய் வெப்பாலை வித்துக் குன்றி
பாங்கான மீள்கறணை யூழாலாத்தி
விரிந்திடாய் பிர்மதண்டித் தூர்நீ ரொட்டி
வெள்ளெருக்குப் பூதகரப்பா னுங் கூட்டே.

(இ-ள்.) கொடிவேலி, சிவனார்வேம்பு, அமுக்குரா, வெள்ளெருக்கு, சங்கங்குப்பி, ஆகாசக் கருடன் கிழங்கு, சங்கு, சின்னி, விளா, குமிழம் வேர், செங்கத்தாரி, வெட்பாலையரிசி, குன்றி காட்டுக் கரணை, ஊளலாத்தி, பிரமதண்டி வேர், ஆரை, வெள்ளறுக்கு, பூதகரப்பான் பட்டை.

344. கூட்டப்பா வாதகரப் பானின் பட்டை
குணமான காட்டுச்சீர கமும் துத்த
மாட்டப்பா சூதமொடு துருசு கெந்தி
வகையொன்று பலமாக நிறுத்து வாங்கு
கூட்டப்பா பலமெட்டுப் பரங்கிப் பட்டை
குமுரவே இடித்துடனே வடியிட்டே பின்
நாட்டப்பா காரெள்ளு பலமோ ரெட்டு
நலமான முதிர்சேராங் கொட்டை நாரே.

(இ-ள்.) வாதகரப்பான் பட்டை, காட்டுசீரகம், பால் துத்தம், ரசம், துருசு, கெந்தகம், இவை வகைக்கு 35 கிராம் பரங்கிப்பட்டை, 280

கிராம் இவைகளை இடித்துச் சூரணம் செய்து எள்ளு 280 கிராம் முதிர்ந்த சேராங்கொட்டை 280 கிராம்,

345. நாரடா வித்தினுடக் குமிழைப் போக்கி
நுண்மையாய் யுதகத்தில் கடிகை ஐந்து
மாரடா ஊறியபின் எடுத்துக் கொண்டு
மைந்தனே சிறுபயறு போலேக் கொய்து
பாரடா உதிர்ந்ததொரு தேங்காய் நெத்தோண
பாங்காக உடைத்துரெண்டுந் திருவிப் போட்டு
சேரடா பனைவெல்லம் பலமோ ரெட்டு
திறமான மருந்தெல்லாம் கூட்டி யிட்டே.

(இ-ள்.) மூக்கை வெட்டி உப்பு சுண்ண செயநீரில் ஐந்து நாழிகை ஊற வைத்து எடுத்து சிறு துண்டுகளாக்கி, முற்றிய தேங்காயை உடைத்துத் துருவிப் போட்டு, பனை வெல்லம் 280 கிராம் எடுத்து, எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து

346. யிட்டடா கைத்திறமா யிடித்து வாங்கி
யீசனாருட னானைமுகனைப் போற்றி
தொட்டடா தூபமொடு தீபங் காட்டி
சொல்பெரிய சித்திரவல் லாதி யாகும்
மாட்டடா பாக்களவு இருபோதுந் தான்
மாறாமல் மண்டலமொன் றதுவே கொண்டால்
கட்டடா கிரந்திசொரி கிரந்தி சூலை
கடுப்புக் கைகால் பிடிப்பு திமிர்பிடிப்புப் போமே.

(இ-ள்.) பக்குவமாய் இடித்து எடுக்கவும். இதுவே சித்திர வல்லாதியாகும். ஒரு பாக்களவு தினம் காலை, மாலை ஒரு மண்டலம் கொள்ள கிரந்தி சொரி, கிரந்தி சூலை, உடல் கடுப்பு, கை கால் பிடிப்பு, திமிர்

347. போமப்பா கையூரல் வெளுப்பு மேகம்
புழுவெட்டு கடிவாதம் உஷ்ணம் குஷ்டம்
ஆமப்பா சடமெலிவு வெடித்தல் கீரல்
அத்திநுணாக் காய்க்கிரந்தி பரங்கிப் புண்ணு
தாமப்பா பொத்துக்கடி மருக் கிரந்தி
சாதிக்க நோய்பலவுந் தவறிப் போகும்
நாமப்பா பத்தியந்தான் சொல்லக் கேளு
நல்பாசிப் பயர்துவரைப் பருப்பு சேர்த்தே.

(இ-ள்.) ஊரல், வெளுப்பு, மேகம், புழுவெட்டு, கடிவாதம், உஷ்ணம், குஷ்டம், உடல் மெலிவு, வெடித்தல், கீறல், நுணாக்காய் கிரந்தி, பரங்கிப் புண், பொத்துக் கடி, மருங் கிரந்தி முதலியன தீரும். பத்தியம் பாசிப்பயறு, துவரம் பருப்பு சேர்த்து.

348. சேத்திடுவாய் வழுதலங்காய் முருங்கைப் பிஞ்சு
தூதுவளைக் கீரை அரைக் கீரை சுண்டல்
ஏத்திடாப் பசுவின் பால்தயிர் மோர் நெய்யும்
யேரிவிரால் குரவைவெள் ளாட்டு வத்தலு
பாத்திடாய் ஆமணக்கு எண் ணெய் தேய்த்து
பாங்கான வென்னீர் சீயக்காய் மூழ்கு
வாத்திடாய் உஷ்ணமது மிகுந்து தானால்
மருந்தப்பா நிறுத்திப்பின் எடுத்துக் கொள்ளே.

(இ-ள்.) கத்தரிக்காய், முருங்கப் பிஞ்சி, தூதுவளைக் கீரை, அரைக்கீரை, சுண்டைக்காய்,, பசுவின் பால், தயிர், மோர், நெய், ஏரி விரால்மீன், குரவை மீன், வெள்ளாட்டு வற்றல் இவை ஆகும். ஆமணக்கெண்ணெய் தேய்த்து, சீயக்காய் கொண்டு வெந்நீரில் குளிக்கவும். உஷ்ணம் மிகுந்தால் மருந்தை நிறுத்திப் பின் எடுத்துக் கொள்ளவும்.

## முகத்தில் வரும் வங்குக்கு மருந்து

349. கொள்ளவே யரிதாரப் பளிங்கு மாகுங்
குறையால் பலமரைதான் நிறையோர் கட்டி
உள்ளவே நற்கோவை ரசத்தைவாங்கி
உறவாக யிழைத்துவழித் தெடுத்துக் கொண்டு

மெள்ளவே ஐந்திருநாள் யிருபோதுந் தான்
விளங்கவே அடுத்தடுத்துப் பூசும் போது
துள்ளவே திருமுகத்தில் படரும் வாங்கும்
தொந்தித்து நில்லரிது துலைந்து போமே.

(இ-ள்.) பளிங்கு போன்ற அரிதாரத்தை 17½ கிராம் ஒரு கட்டியாக இடித்துக் கோவை ரசத்துடன் உறவாகும்படி இழைத்து வழித்து எடுத்துக் கொண்டு தினம் இரு வேளை பத்து தினங்கள் முகத்தில் பூசிவர படர்ந்து வரும் வங்கு ஒழிந்து போகும்.

## காதிரைச்சல் காதில் குத்தல் முதலியவற்றிற்கு மண்டை நோய் தைலம்

350. போமடா காதிரைச்சல் செவியின் குத்து
பொரியோடு புழுவெட்டு செவிகேளாதல்
ஆமடா எழுச்சியொடு மண்டை நோய்கள்
அணுகாமல் போவதற்கு தயிலஞ் சொல்வேன்
யேமடா எள்ளெண்ணெய் படிதான் ஒன்று
யிதமாக முருங்கைப்பூ பலந்தானொன்று
சோமடா நாகப்பூ மொட்டாகத் தான்
சொல்லீரெள் எண்ணெயிலே போடு போடே.

(இ-ள்.) எள்ளெண்ணெய் ஒரு படியில் முருங்கைப் பூ மொட்டு 35 கிராம், சிறு நாகப்பூ மொட்டு 35 கிராம் போட்டு,

351. போடப்பா குளவிந்தம் பலந்தா னொன்று.
புகழான நல்மிளகு பலந்தா னொன்று
போட்டப்பா வலம்புரிக்காய் கழஞ்சி யொன்று
பொன்னான அதிமதுரம் கழஞ்சி யொன்று
போடப்பா தக்கோலங் கழஞ்சி ஒன்று
பொற்தேவ தாரமெடை கழஞ்சி யொன்று
போடப்பா சடைக்கழஞ்சாக் கழஞ்சி யொன்று
பொடித்திடுவாய் மருந்தெல்லாம் எண்ணைக் குள்ளே.

(இ-ள்.) கஸ்தூரிமஞ்சள், நல் மிளகு வகைக்கு 35 கிராம், வலம்புரிக்காய், அதிமதுரம், தக்கோலம், தேவதாரம், சடைக்கஞ்சா வகைக்கு ஒரு கழஞ்சு பொடித்து எண்ணெய்க்குள் போட்டு

352. யெண்ணையிது பதமாக வடித்துக் கொண்டு
மிதமாக வருஷமொன் றரைதான் மூழ்க
யெண்ணையிது செவிக்குள்ளே விட்டுத் தாக்கு
யேகுமே காதிரைச்சல் காது மந்தம்
யெண்ணையிது செவிநோய்க ளெல் லாம் போச்சு
யிசைகேளா செவிநோய்கள் தீரும் பாரு
யெண்ணையிது வன்றியொரு சேதி கேளு
யெள்ளெண்ணை படிகாலிற் சொல்லக் கேளே.

(இ-ள்.) எண்ணெயை பதமாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு ஒன்றரை வருஷம் மூழ்கி வரவும். காதுக்குள் துளிகளாக விடவும். காது இரைச்சல், காது மந்தம், எல்லாவித செவி நோய்களும் நீங்கும். செவிடுநீங்கும். இதுவுமன்றி எள்ளெண்ணெய் கால்படியில்

353. சொல்லுகிறேன் நிலப்பனையின் கிழங்கு வாங்கி
சோராமலரைப் பலந்தான ரைத்துப் போட்டு
மல்லுகிறேன் பதமாகவடித் துக் கொண்டு
மடங்கநாள் பத்துடனே தேய்த்துவா நீ
யல்லுகிறேன் சித்திரமூலத்தின் வேர்த் தோல
லையாதே கழஞ்சியொன்று முலைப் பாலாட்டி
வெல்லுகிறேன் எள்ளெண்ணை படி காலுக்குள்
விளங்கவே கரைத்திட்டுப் பதத்தில் வாங்கே.

(இ-ள்.) நிலப்பனைக் கிழங்கு 17½ கிராம் அரைத்துப் போட்டுக் கலக்கி, காய்ச்சிப் பதமாக வடித்துக் கொண்டு பத்து தினங்கள் தேய்த்து வரவும். இதுவுமன்றி சித்திரமூல வேர்ப்பட்டை ஒரு கழஞ்சு முலைப்பாலால் அரைத்து கால்படி எள்ளெண்ணெயில் கலந்து காய்ச்சிப்பதத்தில் வடித்து.

354. வாங்கியே சிரசுக்குள் நித்தம் தேய்ப்பாய்
மண்டலத்தில் செவிடுநோய்கள் வாங்கிப் போகும்
தாங்கியே இன்னமொரு செய்தி சொல்வேன்
அலையாதே கொள்ளுக்காய் கொழுஞ்சி வேர்த்தோல்
பாங்கியே கழஞ்சியொன்று முலைப் பாலாட்டி
பாராழாக் கெண்ணையன்றி பதத்திலே தான்
தூங்கியே திரியாதே வடி பாகத்தில்
சோதித்து தாக்கிடுவாய் துளி தானஞ்சே.

(இ-ள்.) சிரசில் தினம் ஒரு முறை ஒரு மண்டலம் தேய்த்து வர செவி நோய்கள் தீரும். இதுவுமன்றி, கொள்ளுக்காய் வேர்ப்பட்டை, கொழுஞ்சி வேர்ப்பட்டை ஒரு கழஞ்சு முலைப்பால் விட்டரைத்து ஆழாக்கு எண்ணெயில் கலந்து காய்ச்சி பதத்தில் வடித்து மூழ்கி வரவும். காதுக்குள் ஐந்து துளிகளாய் விடவும். செவி நோய் தீரும்.

## வில்வாதித் தைலம்

355. அஞ்சுமே இந்திரிய விடைய நோய்க
ளடைப்புவிடுஞ் சுத்திபண்ணி வாய்வு வேகம்
பஞ்சுபோல் பறந்ததடா நோய்க ளெல்லாம்
பாழான காதிரைச்சல் எங்கே போச்சு
மஞ்சுமே கபாலத்திற் சூடும் போச்சு
வேதனைகள் செய்கின்ற வாய்வும் போச்சு
வஞ்சுமே நோய்மிகுந்த நீர்த் தோஷங்கள்
அணுகாது வில்வாதித் தைலம் மூழ்கே.

(இ-ள்.) இந்திரிய நோய்களால் உண்டான தடங்கல் நீங்கும். தேகம் சுத்தியாகி நோயகலும். காது இரைச்சல், கபால சூடு, வாய்வு,நீர் தோடங்கள் முதலியன நீங்க வில்வாதி தைலம் மூழ்கவும்.

356. மூழ்கவே வில்வாதி பலமீ ரைந்து
முறைமசக்கி நன்னாரி நத்தைச் சூரி
யாழ்கவே அசுவகெந்தி சித்தா முட்டி
அப்பனே பொன்முசுட்டை சீந்தில் தண்டு

வாழ்கவே முருங்கைவெட்டி விளாமிச்சம் வேர்
வகையொன்று ரெண்டுபலம் வீதம் சேர்த்து
நீள்கவே யிளநீரில் படிதான் எட்டு
நேராகப் பசுவின்மோர் பலமோ ரெட்டே.

(இ-ள்.) வில்வ வேர் 350 கிராம், குப்பை மேனி, நன்னாரி, நத்தைச்சூரி, அசுவ கெந்தி, சிற்றாமுட்டி, பொன்முசுட்டை, சீந்தில், முருங்கை, வெட்டிவேர், விலாமிச்சை வேர் முதலிய வேர் வகைக்கு 70 கிராம், இளநீர் எட்டுபடி, பசுமோர் எட்டுபடி.

357. போட்டாகும் படிபுளித்தக் காடி கூட்டி
பொடியாக வேர்நறுக்கி யிடித்துப் போட்டு
கட்டாகத் திரிகடுகு சிவதை ஓமம்
கார்கோலுங் கஸ்தூரிமஞ்ச ளோடும்
யிட்டாக அரத்தைசிறு தேக்கினோடு
யிருசீரகத் தினோடுலவங் கம் மஞ்சள்
மட்டாக யிலவங்கஞ் செவ்வியம் பத்திரி
மரமஞ்சள் திப்பிலி மூலத்தி னோடே.

(இ-ள்.) புளித்த காடி எட்டுபடி இவைகளை ஒன்றுகூட்டி மேற் சொன்ன வேர் வகைகளை நறுக்கி இடித்துப் போட்டு, திரிகடுகு, சிவதை, ஓமம், கார்போக அரிசி, கஸ்தூரி மஞ்சள், சிற்றரத்தை, சிறுதேக்கு, பெருஞ் சீரகம், நற்சீரகம், இலவங்கம், மஞ்சள், இலவங்கப் பத்திரி, செவ்வியம், மரமஞ்சள், திப்பிலி மூலம்.

358. மூலதான மும்மருந்து யீரைந் தொன்று
மூட்டுவாய் வகையொன்று கழஞ்சி யொன்று
ஞாலமா மிடித்ததனை கூடப் போட்டு
நன்றாகப் பதினாறுக்கொன் றாய்க் காய்ச்சி
பாலதாம் நாலுபடிஎள் ளோடெண் ணெய்
படிரெண்டு பழச்சாறு படிதா னொன்று
சீலதாம் சிறுகீரை பொன்னாங் காணி
சீதேவி செங்கழுநீர் முசுக்கை தானே.

(இ-ள்.) வகைக்கு 35 கிராம் வீதம் எடுத்து நன்கு இடித்து முன் சொன்ன பதினோரு வேர் வகைகளையும் சேர்த்துப் போட்டு அடுப்பிலேற்றி பதினாறுக் கொன்றாய்க் காய்ச்சி வடித்து எள்ளெண்ணை படி இரண்டு, எலுமிச்சம் பழச்சாறு படி ஒன்று, சிறுகீரை, பொன்னாங்காணி, நெய்ச்சட்டி,, முசுமுசுக்கை,

359. தானான வகையொன்றுக் குழக்குச் சாறு
சதிராக வடிசெய்தெண் ணையிலே வாரு
பானான திராபாலையுந் தேவ தாரி
பகற்கோஷ்டம் வங்காளப் பச்சை யோடு
வேணான கிராம்பு வாழைக் கிழங்கு
வெள்ளிச்சி வேம்பாடஞ் செண்பகப் பூ
காணான மருக்கொழுந்து பன்னி ரெண்டு
கைமுறையாய் வகையொன்றுக் கழஞ்சி ரெண்டே.

(இ-ள்.) இவைகளின் சாறு வகைக்கு உழக்குச் சாறு இவைகளை எண்ணெயுடன் கலந்து கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், தேவதாரு, கோஷ்டம், வங்காளப்பச்சை, கிராம்பு, வாழைக்கிழங்கு, கழுதைமான் புள்ளி என்கிற மூலி, வேம்பாடம் பட்டை, செண்பகப்பூ, மருக்கொழுந்து முதலிய பன்னிரண்டும் வகைக்கு ஒரு கழஞ்சு.

360. ரெண்டான வகையெல்லாம் மைபோ லாட்டி
நேராக நாகமல்லிச் சாற்றி னாலே
பண்டான எண்ணெய்லே கரைத்து வாரு
பருவமாய் மெழுகுபத மாகும் போது
கண்டான கோரோசனை குங்குமப்பூ
கற்பூரம் புழுகுசட்டங் கலசத் துள்ளாய்
கொண்டான வடித்ததனை நெல் பானைக்குள்
குணமாக மண்டலந்தான் குறிப்பாய் வைய்யே.

(இ-ள்.) எடுத்து மைபோல் அரைத்து நாகமல்லிச் சாற்றிலே கரைத்து எண்ணெயிலே விடவும். அடுப்பேற்றிக் காய்ச்சி

மெழுகுபதம் வரும் போது வடிக்கவும். வடி பாத்திரத்தில் கோரோசனை, குங்குமப்பூ, கற்பூரம், புனுகுச் சட்டம் இவைகளைப் போட்டு வைக்கவும். வடித்த தைலத்தை நெல்பானைக்குள் ஒரு மண்டலம் வைத்து எடுக்கவும்.

361. குறிப்பான வில்வாதி தயிலஞ் சொன்னேன்
குணமாகும் நோயெல்லாந் தீரவே தான்
மரிப்பான பித்தமொடு சிலேத் பனந்தான்
மைந்தனே கபாலத்திற் சூடுபோகும்
வெரிப்பான பீனிசங்கள் ஐய மேகங்கள்
வெட்டையொடு உஷ்ணத்தின் வாய்வு தீரும்
தெரிப்பான சிரசுநோய் எல்லாம் போகும்
தீராத அரோசிகங்கள் தீர்ந்து போமே.

(இ-ள்.) இவ் வில்வாதி தைலத்தால் பித்த நோய், சேத்தும நோய், கபால சூடு, பீனிச ரோகம், ஐயத்தால் எழுந்த மேக வியாதி, வெட்டைச் சூடு, உஷ்ண வாயு தீரும். சிரநோய் எல்லாம் தீரும். பசியின்மை, ருசியின்மை, தீரும்.

## மகா சந்தனாதி தைலம்

362. போமடா இருபத்தோர் மேக மெல்லாம்
போவதற்கு மகாசந்த னாதி சொல்வேன்
ஆமடா மலாக்காச் சந்தனந்தான் கேளு
அடவாக இடித்தபொடி பலந்தான் பத்து
நாமடா நன்னாரி நத்தைச் சூரி
நாயுருவி வெட்டிவிலாம் பிச்சுஞ் சீந்தித்
தாமடா இருவேலி முத்தக் காசு
தருமதுரம் அமுக்குரா வேருந் தானே.

(இ-ள்.) மேகம் இருபத்தொன்றும் தீர மகாசந்தனாதி தைலம் சொல்லுகிறேன். சந்தனத் தூள் பத்துபலம், நன்னாரி, நத்தைச் சூரி, நாயுருவி, விலாமிச்சை, சீந்தில், வெட்டி வேர், கோரைக்கிழங்கு, அதிமதுரம், அமுக்குரா வேர்.

363. தானென்ற சந்தனதி லாம்பற் காந்தள்
சதாவேரி கூவிளைவேர் தேவ தாரம்
யேனென்ற சாரணைவேர் மாலுங் கொட்டி
யிலவங்கப் பத்திரியும் கருவாப் பட்டை
வானென்ற தக்கோலம் இலவங்கப் பட்டை
வகையொன்று பலமொன்று இடித்துப் போட்டு
பானென்ற பரணிக்குள் ளொருதூணி நீரில்
பாங்காக கோடசத்தொன் றாகக் காய்ச்சே.

(இ-ள்.) அல்லி வேர், கார்த்திகைப் பூ, சதாவேரி, வில்வவேர், தேவதாரு, சாரணை வேர், விஷ்ணு கரந்தை, கொட்டி, இலவங்கப் பத்திரி, சன்ன இலவங்கப்பட்டை, தக்கோலம், இலவங்கப்பட்டை வகைக்கு 35 கிராம் இவைகளை இடித்து ஒரு பாத்திரத்தில் போட்டு நான்கு மரக்கால் தண்ணீர் விட்டு பதினாறில் ஒன்றாகக் காய்ச்சி

364. காய்ச்சியே வடித்தெண்ணைப் படி.யே நாலிற்
கலந்துவிடு முசுமுசுக்கை நெல்லிக் காயும்
தாச்சியே சாறுபடி ஒன்றே வீதம்
தவாகையாந் தகரைச்சார் படிதான் விட்டு
வாச்சியே வால்மிளகுக் கோஷ்டங் குக்கில்
வங்காளம் பச்சையும் பூலாங்கிழங்கு
பாச்சியே யரத்தையடா மாஞ்சில் ஓமம்
பகரவெள்ளிச்சி வேம்பாடம் யேலங் காணே.

(இ-ள்.) வடித்து நான்குபடி எண்ணெயில் கலந்து, முசுமுசுக்கைச் சாறு, நெல்லிக்காய்ச் சாறு வகைக்கு ஒரு படி வீதம் சேர்த்து, வால் மிளகு, கோஷ்டம், குக்கில், வங்காளப் பச்சை, பூலாங்கிழங்கு, சிற்றரத்தை, சடாமாஞ்சில், ஓமம், கழுதை மான்புள்ளி என்கின்ற பூண்டு, வேம்பாடம் பட்டை, ஏலம்.

365. காணப்பா கொத்தமல்லி யபின் சாதிக்காய்
கருஞ்சீரகங் கார்கோல சாதிப் பத்திரி
பூணப்பா மாசிக்காய் செண்பகப் பூ
உருகஞ்சா நாகப்பூ அத்திப் பூவும்

நாணப்பா கிராம்பு கிளியூரல் பட்டை
நற்சீரகங் கோரைக் கிழங்கு
பூணரப்பா வகையொன்றுக் கழஞ்சி ரெண்டு
பொருந்த மைபோலாட்டிக் கரைத்து வாரே.

(இ-ள்.) கொத்தமல்லி, அபின், சாதிக்காய், கருஞ்சீரகம், கார்கோலரிசி, சாதிப்பத்திரி, மாசிக்காய், செண்பகப்பூ, கஞ்சா, சிறுநாகப்பூ, அத்திப்பூ, கிராம்பு, கிளியூரம்பட்டை, நற்சீரகம், கோரைக்கிழங்கு வகைக்கு இரண்டு கழஞ்சு வீதம் மைபோல் அரைத்து மேல்கண்ட எண்ணெயுடன் கலந்து

366. வாரப்பா புங்கம்வேர் பாலாலாட்டி
வளமான மெழுகுபத மாக வாரு
சேரப்பா குளிதாளிக் குள்ளேகேளு
சித்தமாம் புழுகுச்சட்டம் குங்குமப்பூ
கூரப்பா கோரோசனைப் பொடித்துப் போட்டு
குருபூசைக் கணபதியைப் பூசை செய்து
காரப்பா கொழுந்துபிச்சுப் பதத்தில் போட்டு
கைமுறையாய்த் தப்பாமல் வடித்தி டாயே.

(இ-ள்.) மேல் பாட்டில் சொன்ன சரக்குகளை புங்கம் பால் விட்டரைத்துக் கலக்கவும். அடுப்பில் வைத்து எரித்து மெழுகு பதத்தில் வடிக்கவும். வடி பாத்திரத்தில் புனுகுச் சட்டம், குங்குமப்பூ, கோரோசனை இவற்றைப் பொடித்துப் போடவும். கணபதியை பூசித்து,

367. வடித்திட்ட தயிலமது முழுகும் போது
வாய்வுமந்தஞ் சீழ்ப்பாய்தல் மண்டை நோய்கள்
யிடித்திட்ட கபாலவலி நீர்க்குஷ்டங்கள்
யிருகண்ணோய் செவிநோய்கள்வேர்வை தாகம்
துடித்திட்ட பீனிசங்கள் தலைச் சுழற்றல்
தொந்தரோசிகம் விஷபாகங்கள் குன்மம்
அடித்திட்ட ஐயமேகம் பிரமேகங்கள்
அண்டீளைச் சோகைவறட்சி போம் பாரே.

(இ-ள்.) தைலத்தை மூழ்கிவர வாய்வு, மந்தம், சீழ்பாய்தல், சிர நோய்கள், சிரசுவலி, குஷ்டம், கண்நோய், செவிநோய், வியர்வை, தாகம், பீனிசம், தலைச்சுற்றல், அரோசிகம், விஷநோய்கள், குன்மம், சேத்தும நோய், பிரமேகங்கள், ஈளை, சோகை, வறட்சி இவை போகும்.

## சீழ்மூலம், இரத்த மூலம், வயிறுகடுப்பு, ஆசனக்கடுப்பு உள் காய்ச்சல், உள்மூலம், வெளிமூலம் இவைகட்கு

368. பாரப்பா மணக்கெண்ணை பலம் நாலைந்து
பழச்சா ரீருள்ளிச்சாறு கத்தாழஞ் சாறு
மாரப்பா நல்மணத் தக்காளிச் சாறு
வகையொன்றுக் கீரைந்து பலமே வாங்கி
சேரப்பா பலமரைநற் சீரகந் தான்
திறமாக ஆட்டிஎண்ணெயிலே கூட்டி
கோரப்பா மெழுகுபத மெரித்துக் கொண்டு
கொடுத்திடாய் பலமொன்று தினமார்க் கொள்ளே.

(இ-ள்.) ஆமணக்கு எண்ணெய் 700 கிராம், எலுமிச்சம் பழச்சாறு, ஈருள்ளிச் சாறு, குமரிச்சாறு, மணத்தக்காளிச் சாறு வகைக்கு 350 கிராம், நற்சீரகம் 17½ கிராம் நன்கு அரைத்து இவைகளை எண்ணெயுடன் கலந்து, எரித்து மெழுகு பதத்தில் வடித்து எடுத்து தினம் 35 கிராம் வீதம் சாப்பிட்டு வர,

369. கொள்ளடா தினகரனைப் பூசை பண்ணி
கூரியதோர் சீதலமும் இரத்த மூலம்
உள்ளடா கடுப்பாசனக் கடுப்பு
உள்காய்ச்சல் உள்மூலம் வெளிமூலம் போம்
மெள்ளடா புகையுடனே புளி கல்லுப்பு
மீறியதோர் பழையதுமாட் டிறைச்சி மச்சம்
தள்ளடா தயிர்மோர்நெய் வென்னீரன்னஞ்
சாதிக்க நோயகலுந் தெரிந்து போடே.

(இ-ள்.) சீதமூலம், இரத்தமூலம், கடுப்பு, ஆசனக் கடுப்பு, உட்காய்ச்சல், உள்மூலம், வெளிமூலம் போகும். புகை, புளி, உப்பு, பழையது, மாட்டிறைச்சி, மீன் இவற்றைத் தள்ளி தயிர், மோர், வென்னீர் அன்னம் சாப்பிடவும்.

370. போடுமுடக் கொற்றான் மூக் கரட்டை
காட்டுப்புகழ் கருணைக்கிழங்கு மெருகன் கிழங்கு
தேடுகளக் கொட்டியொடு வகை யொன்றுக்கு
சேர்த்திடுவாய் பலமொன்று மைபோ லாட்டி
யாடுசித் தாமணக்கெண்ணை யாழாக்
கைந்துவிடு மெழுகுபத மெரித்து வாங்கி
நாடுநிதம் பலமரைமண் டலமே கொண்டால்
நாடாது ஆறுவகை மூலம் போமே.

(இ-ள்.) முடக்கொற்றான் மூக்கரட்டை, காட்டுக் கருணைக் கிழங்கு, மெருகன் கிழங்கு, களக் கொட்டி வேர் இவை வகைக்கு 35 கிராம் மைபோல் அரைத்து, ஐந்து ஆழாக்கு சிற்றாமணக்கெண்ணெயில் கரைத்து, எரித்து, மெழுகு பதத்தில் வடித்து தினம் அரைப்பலம் வீதம் ஒரு மண்டலம் சாப்பிட்டு வர ஆறு வகையான மூல நோயும் தீரும்.

371. போமப்பா வெப்பாலை யரிசி யோமம்
பாங்கான கொடிவேலி மிளகு காயம்
நேரப்பா சிறுமூலம் சிறுகாஞ் சோரி
நெருஞ்சி வேரதிவிடையம் வெள்வெங் காயம்
சேரப்பா வில்லைப்பத்திரி கடுகோ டானை
திப்பிலி ரோகணிபெரிய மரத்தின் பட்டை
மாரப்பா வகையொன்று கழஞ்சி யொன்று
வளமான அத்திப்பூப் பலமுஞ் சேர்த்தே.

(இ-ள்.) வெட்பாலை அரிசி, ஓமம், கொடிவேலி, மிளகு, பெருங்காயம், திப்பிலி மூலம், சிறுகாஞ்சோரி, நெருஞ்சிவேர், அதிவிடையம், வெள்ளை வெங்காயம், வில்வ இலை, கடுகு,

ஆனைத் திப்பிலி, கடுகுரோகணி, பெருமரப்பட்டை, இவை வகைக்கு ஒரு கழஞ்சு, அத்திப் பிஞ்சு 175 கிராம் சேர்த்து.

372. சேத்திடா மைபோலே யரைத்திட்டே பின்
திறமான எள்ளெண்ணை பல மாரைந்து
வாத்திடாய் மெழுகுபதம் எரித்து வாங்கி
மாறாம லரைப்பலந்தா னிருபோதுங் கொள்
பாத்திடா சீழ்மூலம் இரத்த மூலம்
பற்றியதோர் முளைமூலம் பறந்திட்டோடும்
காத்திடா இச்சாபத்தியமே சொன்னேன்
கவுச்சோடு யிறைச்சிபுகை தள்ளிப் போடே.

(இ-ள்.) மை போலரைத்து, 1050 கிராம் நல்லெண்ணெயுடன் கலந்து எரித்து மெழுகுபதத்தில் வடித்து, தினம் இரண்டு வேளை 17½ கிராம் வீதம் சாப்பிட்டு வர சீழ் மூலம், இரத்த மூலம், முளை மூலம் தீரும். இறைச்சி, மீன், புகை தள்ளவும்.

## மூலநோய்ச் சூரணம்

373. போடுக் காட்டுக்கரணைக் கிழங்கு சுக்கு
புளிகரணை கொடிவேலி மருள் கிழங்கு
நாடுவிருகன் கிழங்கு கரணை முட்டை
நல்மிளகு டரிசித்திப்பிலிப் பிரண்டை
ஆடுவகை யொன்றுபல மிரண்டும் வாங்கி
அப்பனேசூரணஞ் செய்தரைப் பலந் தான்
தேடுநெய் யனுபானமிரு போதுங்கொள்
சிவசிவா முளைமூலந் தெறித்துப்போச்சே.

(இ-ள்.) காட்டுக் கரணைக் கிழங்கு, சுக்கு, புளிகரணை, கொடிவேலி, மருள் கிழங்கு, விருகன் கிழங்கு, கரணைக் கிழங்கு, நல் மிளகு, அரிசி திப்பிலி, பிரண்டை வகைக்கு 70 கிராம் எடுத்துச் சூரணம் செய்து கொள்ளவும். தினம் காலை, மாலை, 17½ கிராம் வீதம் நெய்யுடன் கலந்து சாப்பிட்டு வர மூல நோய் யாவும் தீரும்.

## மூலநோய் லேகியம்

374. போச்சுது சுக்கினெடை பலமோ நாலு
புகழ்பெரிய சோம்பினெடை பலமோ ரைந்து
பாச்சுது திப்பிலியின் பலமோ ரெண்டு
பாங்கான ஏலம்விராக னெடையும் ரெண்டு
ஆச்சுது சாதிப்பத்திரி விராக னொன்று
அப்பனே பொன்னிறமாய் வறுத்து வாங்கி
மாச்சிது இடித்துச் சூரணமே செய்து
வடியிட்டு தேனிலாறு பலமே கூட்டே.

(இ-ள்.) சுக்கு 140 கிராம், சோம்பு 175 கிராம், அரிசி திப்பிலி 70 கிராம், ஏலம் இரண்டு விராகனெடை, சாதிப்பத்திரி விராகன் ஒன்று இவற்றைப் பொன் நிறமாக வறுத்து எடுத்துச் சூரணம் செய்து தேன் 210 கிராம் சேர்த்து,

375. கூட்டடா லேகியம் போல் கிண்டி கிண்டி
கொடுத்திடுவாய் பாக்களவு இருபோதுந்தான்
மாட்டடா ஈரைந்து தினமே கொண்டால்
மைந்தனே சீழ்மூலம் இரத்தமூலம்
காட்டடா வெளிமூலம் உள் மூலம்போம்
கனத்ததோர் முளைமூலங் காணா தோடும்
மூட்டடா பத்தியந்தா னொன்றுமில்லை
முதிர்ந்ததோர் மிளகாயுந் தள்ளிப் போடே.

(இ-ள்.) லேகியம் போல் பிசைந்து வைத்துக்கொண்டு தினமும் காலை, மாலை, பாக்களவு பத்து தினங்கள் சாப்பிட்டு வர சீழ் மூலம், இரத்த மூலம், வெளி மூலம், உள் மூலம், முளை மூலம் காணாது போகும், மிளகாய் சேர்க்காமல் உணவு உட்கொள்ளவும்.

## பெருநோய், குஷ்டம், வண்டுகடி இவைகட்கு குழித் தைலம்

376. பாரு விளாவேம்பு அழிஞ்சில் கொன்றை
பாங்குபெருங் குமிழ்கருங் காலி வச்சை
சேருமா கிலுகிலுப்பைச் சிவனார் வேம்பு
தேங்காயோடு பட்டவகைப் பலமோரைந்து

வேருஞ் சேராங்கொட்டை எட்டி வித்து
வெள்ளாட்டுப் புழுக்கைவகைப் பலமோரைந்து
சேரு செங்கல்கோஷ்டம் பலமோ ரைந்து
நெடுநாவிப் பலமூன்று நிறுத்து வாங்கே.

(இ-ள்.) விளா, வேம்பு, அழிஞ்சில், கொன்றை, பெருங் குமிழ், கருங்காலி, வச்ச நாவி, கிலுகிலுப்பை, சிவனார் வேம்பு, தேங்காய் ஓடு, இவற்றின் பட்டை வகைக்கு1050 கிராம், சேராங்கொட்டை, எட்டி வித்து, வெள்ளாட்டுப் புழுக்கை வகைக்கு1050 கிராம், காவிக்கல், கோஷ்டம் இவை வகைக்கு 175 கிராம், நாவி 105 கிராம் நிறுத்து எடுத்து,

377. வாங்கிடு குழித்தைலங் கழஞ்சி ரெண்டு
மண்டலமோ ரரிசிபொரி மாத்தேன் சீனி
யோங்கிடு மிருபோதிப்படியே கொண்டால்
உத்தமனே சடமெங்குந் தயிலம் பூசி
நீங்கிடுந் திமிர்ப்பெருநோ யூரல் குஷ்டம்
நில்லாது வண்டுகடி படலந் தீரும்
பாங்கிடு பத்திய நோயறிந்து கூட்டு
பாய்மிதியப் போகாது பார்த் திடாயே

(இ-ள்.) முறைப்படி குழித்தைலம் வாங்கி தினம் காலை, மாலை இரண்டு கழஞ்சு வீதம் ஒரு மண்டலம் அரிசிப் பொரி மாவு, தேன் சர்க்கரை இவற்றுடன் சாப்பிட்டு, மேலும் பூசி வர உணர்ச்சியற்ற பெருநோய், ஊரல், குஷ்டம், வண்டு கடி முதலானவை தீரும். நோயின் தன்மையை அறிந்து பத்தியமாய் இருக்கவும்.

### மேல்தடவி முகரப் பேதியாகும் மருந்து

378. பாத்திடாய் சூதமெடைக் கால் கழஞ்சு
பாங்கான கெந்தியெடை யரைக் கழஞ்று
சாத்திடாய் வாளமெடைக் கழஞ்சு யொன்று
சதுர்கள்ளி வித்தினெடைக் கழஞ்சி ரெண்டு

ஆத்திடாய் வெங்காரம் கழஞ்சு மூன்று
ஆமணக்கின் முத்தினெடைக் கழஞ்சு நாலு
சேத்திடாய் சேங்கொட்டைக் கழஞ்சு ஐந்து
சிவதைவேர்க் கழஞ்சுயெடை யாறுங் கூட்டே.

(இ-ள்.) ரசம் கால் கழஞ்சு, கெந்தகம் அரைக்கழஞ்சு, வாளம் ஒரு கழஞ்சு, சதுரக்கள்ளியின் வித்து இரண்டு கழஞ்சு, வெங்காரம் மூன்று கழஞ்சு, ஆமணக்கு முத்து நாலு கழஞ்சு, சேங்கொட்டை ஐந்து கழஞ்சு, சிவதை வேர் ஆறு கழஞ்சு.

379. கூட்டப்பா மருக்கன் விதைக் கழஞ் சீராறு
குணமான இலைக்கள்ளிச் சாற்றா லாட்டி
மாட்டப்பா தேங்காயுள் மருந்தை யெல்லாம்
வைத்துடனே கெசப்புடம் போட் டெடுத்துக் கொண்டு
நாட்டப்பா கவசத்தை உடைத்துக் கேளு
நலமான மருந்தெல்லாம் பரணிக் குள்ளே
யூட்டப்பா உந்தியிலும் தடவப் பேதி
உத்தமனே கழுவிவிடக் கட்டிப் போச்சே.

(இ-ள்.) முருக்கன் வித்து பன்னிரண்டு கழஞ்சு இவைகளை இலைக் கள்ளிச் சாற்றாலாட்டி மருந்தை எல்லாம் (தண்ணியை நீக்கிய) முற்றிய தேங்காயினுள் அடைத்து கெஜபுடம் போட்டு எடுத்து கவசத்தை உடைத்து மருந்தைப் பரணியில் அடைத்து வைத்துக் கொள்ளவும். உந்தியில் தடவ பேதியாகும். கழுவி விட பேதி நிற்கும்.

380. போச்சடா உள்ளங்கால் தன்னில் பூசப்.
போகுமே வயிர்பேதி யொளியாமல் தான்
யாச்சடா நற்சலத்தால் கழுவிப் போடில்
பந்திக்கும் பேதியது பத்தியமாகுந்
தேச்சடா இம்மருந்தை புஷ்பந் தன்னை
செண்டுகட்டி மோந்திடவே வயிர் பேதிக்கும்
ஆச்சடா குளிர்ந்தசலம் முகத்தில் வீச
அப்பனே பேதிகட்டு மறிந்து கொள்ளே.

(இ-ள்.) உள்ளங்காலில் பூச பேதியாகும். கழுவி விட பேதி நிற்கும். பூச் செண்டில் மருந்தைத் தடவி முகர்ந்து விட பேதியாகும். குளிர்ந்த தண்ணீரை முகத்தில் தெளிக்க பேதி கட்டும்.

## நெல்லிக்காய்த் தைலம்

381. கொள்ளப்பா நெல்லிக்காய் பொன்னாங் கண்ணி
குமரிசிறு கீரையொடு கரிசலாங்கண்ணி
விள்ளப்பா நந்திவட்டமல ரெருக்கம் மாறு
வெள்ளிலை முசுக்கையின் நீராவின் பால்
உள்ளப்பா வகைக்குச் சாராழாக் கொண்டு
உத்தமனே எள்ளெண்ணை படிதான் விட்டு
தெள்ளப்பா நறுஞ்சீரக மிளகு மல்லி
சீரகம் வகைக்கு அரைப் பலமே தூக்கி

(இ-ள்.) நெல்லிக்காய், பொன்னாங்கண்ணி, குமரி, சிறுகீரை, கரிசாலை, நந்தியா வட்டம் பூ, எருக்கு, கம்மாறு வெற்றிலை, விளா இலை, முசுமுசுக்கை இவைகளின் சாறு, பசுவின் பால் வகைக்கு ஆழாக்கு ஒன்று, எள்ளெண்ணை ஒரு படி, பெருஞ்சீரகம், மிளகு, மல்லி, சீரகம், வகைக்கு $17\frac{1}{2}$ கிராம் வீதம் எடுத்து,

382. தூக்கடா பொடித்து எண்ணெயிலே போடு
சுண்டவே மெழுகுபதம் எரித்து வாங்கி
தேக்கடா நெல்லிக்காய் தயிலந் தன்னை
தொந்தித்து சிசுள்ளங் காலில் தேய்த்து
நீக்கடா ஆவாரை தளிர் சீயக்காய்
நோகரைத் திட்டொருமண் டலமே மூழ்கு
போக்கடா கைகால்மெய் யெரிவு பித்தம்
புத்திரனே கண்ணெரிவு புகைச்சல் தீரே.

(இ-ள்.) பொடித்து எண்ணெயுடன் கலந்து எரித்து மெழுகு பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு சிரசில் தேய்த்து உள்ளங்காலிலும் தேய்த்து மூழ்கவும். ஆவாரைத் தளிர், சீயக்காய் இரண்டையும் அரைத்துத் தேய்த்து ஸ்நானம் செய்யவும்.

## கருங்கோழிச் சூரணம்

383. தீரப்பா சாதிக்காய் சாதிப் பத்திரி
திப்பிலி முக்கத் தாரிப் பட்டை
வேரப்பா வால்மிளகு விளங்கஞ் சுக்கு
வெள்ளறுகு மிளகரணை சங்கம் பட்டை
சேரப்பா கருஞ்சீரகம் லவங்க மோமம்
திப்பிலிமூலஞ் சிறுதேக்கு தும்பு ராஷ்டம்
மாரப்பா வசம்பு ரேணுகங் குரோ சாணி
வகையைந்து கழஞ்சியெடைப் பாத்திடாயே.

(இ-ள்.) சாதிக்காய், சாதிப்பத்திரி, திப்பிலி, முள்கத்தாரிப் பட்டை, வால்மிளகு, வாய்விளங்கம், சுக்கு, வெள்ளருகு, மிளகரனை, சங்கம் வேர்ப்பட்டை, கருஞ்சீரகம், இலவங்கம், ஓமம், திப்பிலி மூலம், சிறுதேக்கு, பேரரத்தை, வசம்பு, காட்டுமிளகு, குரோசாணி ஓமம் வகைக்கு ஐந்து கழஞ்சு.

384. பாத்திடாய் கொடிவேலிக் கழஞ் சோரைந்து
பரங்கிப்பட்டைக் கழஞ்சியிரு நூற் றைந்து
மாத்திடாய் சூரணித்து வடியிட்டே பின்
வளமான கருங்கோழிக் குள்ளே வைத்து
சாத்திடாய் சதுரக்கள்ளிப் பெருஞ் சட்டிக்குள்
தாக்கிடாய் நாலுபடித் தண்ணீர் விட்டு
போத்திடாய் வேமுகட்டியதின் மேல் வைத்துப்
பொருந்தமேல் மூடிமண் சீலை செய்யே.

(இ-ள்.) கொடிவேலி ஐந்து கழஞ்சு, பரங்கிப் பட்டை இருநூற்று ஐந்து இவைகளைச் சூரணித்து வஸ்திரகாயம் செய்து, கருங்கோழியை வயிற்றைக் கீறி குடல் முதலியவைகளை நீக்கி அதனுள் சூரணத்தை வைத்துத் தைத்து, ஒரு பெரிய சட்டியில் சதுரக் கள்ளியை போட்டு நான்குபடி தண்ணீர்விட்டு வேடுகட்டி அதன்மீது தயார் செய்துள்ள கருங் கோழியை வைத்து மேல்மூடி சீலைமண் செய்து

385. செய்துவேக அழிந்திடவே வெந்தால் வாங்குத்
திறமாக இடித்துடனே எலும்பைத் தள்ளி
வையிது வெயிலுலர்த்திச் சூரணமே செய்து
மைந்தனே துட்டிடைத்தூக் கிருபோதுந் தான்
பையிது மண்டல மிப்படியே கொண்டால்
பவுத்திரஞ் சிலந்திகடி சூலைக் கட்டு
பொயிது சொல்லவில்லைத் தெறிகெட் டோடும்
புத்தியாய் இச்சாபத் தியமே காரே.

(இ-ள்.) அழிய வேகவைத்து எடுத்து எலும்புகளை நீக்கி வெய்யிலில் உ லர்த்திச் சூரணம் செய்து கொள்ளவும். பணவெடை காலை, மாலை இருவேளை ஒரு மண்டலம் சாப்பிட பவுத்திரம், சூலை கட்டு, சிலந்திகடி முதலியன தீரும்.

**கருங்கோழிச் சூரணம்**

386. காரப்பா கொடிவேலிப் பிரண்டைக் காட்டுக்
கரணைச் சாரணைக் கிழங்கு மருள் கிழங்கு
வேரப்பா சிவதையொடு மூக்கு மட்டை
வெண்காக்கை புளிகரணை வகை யொன்றுக்கு
பாரப்பா ஈரைந்துபலம் பொடித்து
பதக்குநீர் விட்டுக்குழம் பாகக் காய்ச்சி
சேரப்பா வாய்விளங்கங் கிராம்பு காயஞ்
சீரகந் திப்பிலிமிளகு செவியங் கூட்டே.

(இ-ள்.) கொடிவேலி, பிரண்டை, காட்டுக் கரணை, சாரணைவேர், மருள் கிழங்கு, சிவதை, மூக்குரட்டை, வெள்ளைக் காக்கணா வேர், புளிகரணை, வகைக்கு 350 கிராம் இவைகளைப் பொடித்துச் சிதைத்து இரண்டு மரக்கால் தண்ணீர் விட்டு குழம்புபோல் காய்ச்சி வாய் விளங்கம், கிராம்பு, பெருங்காயம், சீரகம், திப்பிலி, மிளகு செவ்வியம்.

387. கூட்டு கருஞ்சீரகம் ரோகணி வெள்ளுள்ளி
கொடிவேலி யசமதாகஞ் சிவதை சுக்கு
மாட்டு பஞ்சலவணமுடன் பஞ்ச சாரம்
வகையொன்றுக் கழஞ்சியிரண்டு நிறுத்து வாங்கி

காட்டு வறுத்துப்பொடித்து வ டியிட்டே பின்
கண்டிடாய்மீன் குழம்பில்லப் பிசறிக் கேளு
நாட்டு கருங்கோழியது வளமே செய்து
நலமாக மருந்துவைத் துள்ளே வையே.

(இ-ள்.) கருஞ்சீரகம், கடுகுரோகிணி, வெள்ளுள்ளி, கொடிவேலி, ஓமம், சிவதை, சுக்கு, ஐந்து வகை உப்புகளாகிய இந்துப்பு, கல்லுப்பு, கறியுப்பு, வளையலுப்பு, வெடியுப்பு ஐந்து வகை வகைக்கு இரண்டுகழஞ்சு வீதம் எடுத்து இளவறுப்பாக வறுத்து சூரணம் செய்து வஸ்திரகாயஞ் செய்து மீன் குழம்பு விட்டுப் பிசைந்து, குடல் நீக்கிய கருங்கோழி வயிற்றினுள்ளே வைத்து மூடி

388. வையடா எருக்கிலை யீரேழுஞ் சுத்தி
வழுகாமல் கயறுகொண்டு யிறுக்கிக் கட்டி
மெய்யடா விரிவான பெருஞ் சட்டிக்குள்
மீறியதோர் சதுரக்கள்ளித் தரித்துப் போட்டு
பெய்யடா நாலுபடி சலத்தை விட்டு
பிசகாமல் வேடுகட்டியதன் மேல் வைத்து
பையடா சட்டிகொண்டு மேலே மூடி
பாங்கான மண்சீலைப் பரிந்து போத்தே.

(இ-ள்.) பதிநான்கு எருக்கனிலையால் சுற்றி, இலை வழுகாமல் கயிறுகொண் டு இறுகக் கட்டி, பெரிய சட்டிக்குள் சதுரக்கள்ளியைப் போட்டு நான்குபடி தண்ணீர் விட்டு வேடுகட்டி அதன் மீது தயார் செய்துள்ள கருங்கோழியை வைத்து மேல்சட்டி மூடி சீலை மண் செய்து,

389. போத்திடா எரித்தளிய வெந்தா லஸ்தி
போக்குவாய்க் கைத்திறமா யிடித்து வாங்கி
யாத்திடா யுலர்த்திச் சூரணமே செய்து
அப்பனே துட்டிடை தூக் கிருபோதுந் தான்

பாத்திடாய் மண்டலமிப்படியே கொண் டால்
பற்றியதோர் வாய்வெல்லாம் பறந்திட் டோடும்
காத்திடா இச்சாபத்தியமே சொன் னேன்
கருங்கோழிச் சூரணங்கை முறைதான் நாட்டே.

(இ-ள்.) அடுப்பில் வைத்து எரித்து அழிய வேகவைத்து எடுத்து எலும்புகளை நீக்கி இடித்து எடுத்து, உலர்த்திச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு, பணவெடை காலை, மாலை ஒரு மண்டலம் கொள்ள வாய்வு எல்லாம் பறந்து ஓடும். இச்சாபத்தியம் இருக்கவும்.

## திருட்டுக் கண்டுபிடிக்க

390. நாட்டு சுக்ரவாரம் சோம வாரம்
நார்சதுர்ப்பட மெழுகிக் கணேசன் வைத்து
சூட்டு மாமலரறுகுஞ் சிரசிலே தான்
சொர்ண காணிக்கை தாம்பூலஞ் சாத்தி
காட்டுமுன் அண்டத்தைத் தூபங் காட்டி
கையிலெடுத் தட்சதையும் மேலே போடு
கூட்டு சந்தேகமுள்ள பேரை யெல்லாங்
கூறச்சொல் நாமத்தைக் குறித்துக் காணே.

(இ-ள்.) வெள்ளிக்கிழமை, திங்கட்கிழமை தன்னில் நான் சதுரமாக மெழுகு விநாயகரை வைத்து சிரசில் மலர் அறுகு முதலியவை சாற்றி வெற்றிலையுடன் காணிக்கையாக பொன்னும் வைத்து முட்டை வைத்து தூபங் காட்டி கையிலெடுத்து அட்சதையும் போட்டு சந்தேகப்பட்டவர்களை எல்லாம் பெயரைச்சொல்லக் கேட்டுக் குறித்துக் கொள்.

391. காணுமந் திரமாய்ச் சுவாகா வென்று
கருத்தினி லொருதரஞ் சொல்முட்டை யீந்து
தோணுமைங் கரன்முன்னே வாங்கி வைத்து
சொல்பெரிய அய்யனார்க் கோயில் முன்னே

/ ஊணுபரி முன்வலது காலின் கீழே
யோரடிதான் குழிகெல்லி தண்ணீர் விட்டு
பூணுமணடத்தையத னுள்ளே போடு
பொய்யால் செவிமந்திரஞ் சிட்டு சிட்டே.

(இ-ள்.) மனதில் மந்திரமாய் சுவாகா என்று ஒருதரம் சொல்லி முட்டையைக் கொடுத்துக் கொடுத்து வாங்கி அய்யனார் கோயில் முன் குதிரையின் முன் வலது காலின் கீழ் ஓரடி குழியைத் தோண்டி தண்ணீர் விட்டு முட்டையை அதனுள் போட்டு சிட்டு சிட்டு என்ற மந்திரம் செபிக்கவும்.

392. சிட்டுசிட்டு ஓம்அரிசிவா சிவா னந்தரி
சிவரூபி திட்டுதிட்டு முட்டு முட்டு
கட்டுகட்டு படுபடுசுவா கா வென்று
கருத்தினில் பன்னிரண்டு தரஞ் செபித்து
விட்டு விட்டு மண்ணதில்மேல் போட்டு மூடி
மிகுந்தநீர் விட்டுவரமூன்றாம் நாளில் கண்
கெட்டு கெட்டு சோரம்வெளிப் படு வாரப்பா
நெல்லியெடுத் தண்டத்தை எரித்துப் போடே.

(இ-ள்.) சிட்டு, சிட்டு ஓம் அரிசிவா, சிவானந்தர், சிவரூபி, திட்டு திட்டு, முட்டு முட்டு, கட்டு கட்டு, படு படு, சுவாகாவென்று மனதில் பன்னிரண்டு தரம் சொல்லி மண்ணைப் போட்டு மூடி தண்ணீர் விட்டு வரவும். மூன்றாம் நாள் திருடியவர் கண் கெட்டு வெளிப்படுவர். பின்னர் முட்டையைத் தோண்டி எடுத்து எரித்து விடவும்.

## கண்ணில் பூப்படலத்துக்குத் தைலம்

393. போடப்பா எள்ளெண்ணெய் பலமே ழாறு
புகழ்நந்தி வட்டமலர் பலமே ழாறு
தேடப்பா கிளாவின்மலர் பழமே ழாறு
சேர்பீத ரோகணிக்கால் பலமே தூக்கி

கூட்டப்பா மயனம்போல ரைத்துப் போட்டு
கொழித்திடவே மெழுகுபத மெரித்து வாங்கி
நாட்டப்பா மண்டலமூன் றடுத்து மூழ்க
நாடாது பூப்படலம் நயந்து பாரே.

(இ-ள்.) எள் எண்ணெய் 1470 கிராம் எடுத்து அதில் நந்தியாவட்ட மலர் 1470 கிராம், களா மலர் 1470 கிராம், பீதரோகணி 9 கிராம் இவை மயனம் போல் அரைத்துப் போட்டு எரித்து மெழுகு பதத்தில் வடித்து மூன்று மண்டலம் தொடர்ந்து மூழ்கிவர கண்ணில் விழுந்த பூப்படலம் நீங்கும்.

## கரியுப்புச் செந்தூரம்

394. பாரப்பா கரியுப்புப் பலமோ ரைந்து
பாங்கெருக்கம் பழுப்புச் சாறுதனை விட்டாட்டி
சேரப்பா வில்லைதட்டி உலர்த்திட்டே பின்
திறமான வறிளியுமாற புடத்தைப் போடு
வேரப்பா யிப்படியே புடமூவேழு
வெவ்வேறாய்ப் போட்டிடவே செந்தூரிக்கும்
கோரப்பா விராகனெடை தேன்விட் டாட்டி
கொண்டிடுமூ வேழுதினமும் குணமாய்ப் போமே

(இ-ள்.) கரியுப்பு 175 கிராம், எருக்கம் பழுப்புச் சாற்றாலாட்டி வில்லை தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு சீலை செய்து புடத்தைப் போடவும். இவ்வாறு ஏழு புடமிட்டெடுக்க செந்தூரிக்கும். ஒரு விராகனெடை செந்தூரத்தை தேன்விட்டுக் கலந்து இருபத்தோரு நாட்கள் கொள்ள கீழ்க்கண்ட நோய் குணமாகும்.

395. போமப்பா வற(ள்) வாய்வு பக்கசூலைப்
பொருமலுடன் குடல்வுயு குடல்புரட்டு
ஆமப்பா அசீரணவலி உஷ்ணவாயு
அக்கினிமாந் தம்புளித்தேப் பங்கன் தீரும்

தாமப்பா பத்தியம்நோ யறிந்து கூட்டு
தவறாது திறோதாய மாய்கை தள்ளு
ஓமப்பா அட்சரத்தைத் தாயானம் பண்ணு
உத்தமனே சிவசத்திப் பூசை பண்ணே.

(இ-ள்.) வறள் வாய்வு, பக்க சூலை, குடல் வாயு, குடல் புரட்டு, அசீரணவலி, உஷ்ணவாயு, அக்னிமாந்தம், புளித்த ஏப்பம் தீரும். பத்தியம் நோயறிந்து உணவு கொள்ளவும். பெண் இச்சை நீக்கவும். ஓம் என்ற அட்சரத்தை தியானம் செய்யவும்.

## குன்மத்துக்கு மருந்து

396. பண்ணடா கொள்ளுக்கா வேளை வேரில்
பதமாகப் பலமரைதான் நிறுத்து வாங்கி
பெண்ணடா நாளேழுஇரு போதுந்தான்
பக்குவமாய் வாயில்மென்றி றக்கிட்டாக்கால்
மெண்ணடா வயிற்றுவலி குன்மந் தீரும்
மேலான இச்சாபத்தி யமேகாரு
பொண்ணடா வாகாதுதிரோ நாயமாய்கை
போக்குவாய் குருமூலி மதன் தானாமே.

(இ-ள்.) கொள்ளுக்கா வேளை வேர் 17½ கிராம் எடுத்து சுத்தம் செய்து தினம் காலை, மாலை ஏழு தினங்கள் வாயில் மென்று சாற்றை விழுங்க வேண்டும். இவ்வாறு தின்று வந்தால் குன்மவலி தீரும்,. இச்சாபத்தியம் இருக்கவும். பெண் ஆசை நீக்கவும். குருமூலியாகும்.

## மதன விந்தாதி லேகியம்

397. மதனமிது காமேசுர மதன விந்தாதி
மகத்தான லேகியந்தா னருமை மெத்தச்
சிதனமிது கருணைமருள் விருகு கொன்றை
சீனியொடு முள்ளங்கி வச்சிரவல்லி

யிதனமிதுப் புளிநரளை யசுவமுத்த
யிசைந்ததேத் தாவின்விரைப் பிடிக் கிழங்கு
பதனமிது செறுகிழங்கு உள்ளியல்லிப்
பனக்கொட்டி நெய்லத்தி யறுகு பெண்ணே.

(இ-ள்.) காமேசுர மதன விந்தாதி லேகியத்தின் மகிமை அருமையானது. முறையாவது. கருணைக்கிழங்கு, மருட்கிழங்கு, வருகன் கிழங்கு, கொன்றை, பரங்கிப்பட்டை, முள்ளங்கி, பிரண்டை, புளிநரளை, அமுக்குராக் கிழங்கு, கோரைக்கிழங்கு, தேத்தான் கொட்டை, பிடிக் கருணைக் கிழங்கு, செறு கிழங்கு, வெங்காயம், அல்லிக்கிழங்கு, கொட்டிக் கிழங்கு, வெள் ஆம்பல் கிழங்கு, அத்தி, அறுகு.

398. எண்ண மாதுளவித்து உளுந்தோ டெள்ளு
யிசையான நிலப்பனையும் பூனைக் காலி
மிண்ண நாரிருவிவிரை நத்தைச் சூரி
மீறுகின்ற நல்முருங்கைவிரை வேருந்தோல்
அண்ண நீர்முள்ளிவிரை நெருஞ்சில் வித்து
அகத்திவித் தகரைவிரை பருத்தி வித்து
சொன்ன மாமத்தைவிரை கஞ்சா வித்து
துடியான வில்வவிரை விளாவித்தோடே.

(இ-ள்.) மாதுளை வித்து, உளுந்து, எள்ளு, நிலப்பனைக் கிழங்கு, பூனைக் காலி விரை, நாயுருவி விரை, நத்தைச் சூரி, முருங்கை விரை, முருங்கை வேரின் மேல்பட்டை, நீர் முள்ளி விரை, நெருஞ்சில் வித்து, அகத்தி வித்து, தகரை விரை, பருத்தி விதை, மாம்பருப்பு, ஊமத்தை விரை, கஞ்சாவித்து, வில்வ விதை, விளாவித்து.

399. வித்தான கதலிவிரை கொல்லன் கோவை
விறகுக் குடக்காந்தம் பிறாவின் வித்து
சித்தான முள்ளிவிரை நீலஞ் சோதி
சிறுகீரை கொடிவேலி கீழ்க்காய் நெல்லி

கொத்தான விதைபாகல் விதையங் கோலங்
கோடுங் காட்டுக்கருணை நார்த்தை வித்து
பத்தான கூழ்பாண்டம் வித்து நல்ல
பழுபாகல் கருவேலின் விரையும் பாரே.

(இ-ள்.) வாழை வித்து, (கொட்டை வாழை) கொல்லன் கோவை, குங்கில்யம், காந்தம், பிராய் வித்து, நீர்முள்ளி விரை, திருகுக்கள்ளி, சிறுகீரை, கொடிவேலி, கீழ்க்காய் நெல்லி, கொத்தான் கொடியின் விரை, பாகல் விதை, அழுஞ்சில், சங்கு, காட்டுக்கரணை, நாரத்தை வித்து, வெண் பூசணி வித்து, கொம்பு பாகல், கருவேலன் விதை.

400. பாருநீ காந்தமெல்லாம் சுத்தி செய்து
பாலிலே ஊறவிட்டு நாலாம் நாளில்
சேருநீ சலம்விட்டுக் கழுவிப் போட்டு
சிறப்பாக உலர்ந்தபின்பு மருந்தோ டொக்க
வேருநீ விரைகிழங்கு வகை யொன்றுக்கு
வினைதீர பலமொன்று வீதம் சேர்த்து
சேருநீ சூரணித்து வைத்துக் கொண்டு
நிலையான சாதிக்காய் கிராம்பு கூட்டே.

(இ-ள்.) காந்தத்தைப் பாலில் ஊறப்போட்டு நாலாவது நாளில் தண்ணீர்விட்டுக் கழுவி எடுத்துக் கொள்ளவும். வேர் வகை, கிழங்கு வகை, இவை ஒவ்வொன்றும் 35 கிராம் வீதம் எடுத்துச் சூரணம் செய்து வைத்துக் கொள்ளவும். சாதிக்காய், கிராம்பு,

401. கூட்டுவாய் தாளிசப்பத்திரி தானும்
குங்குமப்பூ கஸ்தூரி கற்பூரந் தான்
நாட்டுவாய் கசகசாப் பருத்திப் பூவும்
நலமான கோரோசனை மிளகு சுக்கு
மூட்டுவாய் திப்பிலியும் மதுரந் சீரம்
முந்திரிகைப் பேரீஞ்சு அபின் வெங் காரம்
சூட்டுவாய் வால்மிளகு கெருடப் பச்சை
கடியான கல்நார்கல் மதமு மாமே.

(இ-ள்.) தாளிசப் பத்திரி, குங்குமப்பூ, கஸ்தூரி,கற்பூரம்,கசகசா, பருத்திப்பூ, கோரோசனை,மிளகு, சுக்கு,திப்பிலி, அதிமதுரம், சீரகம், கொடி முந்திரி, பேரீச்சை, அபின், வெங்காரம், வால் மிளகு, படிகக்கல்,கல்நார், கல்மதம்,

402. ஆமென்ற சலாசத்து வங்க பற்பம்
அப்ரேக பற்பமொடு தாம்பர பற்பம்
வாமென்ற ரசபற்பம் வகை யொன்றுக்கு
வடவாகக் கழஞ்சுயொன்று பொடித்துச் சேரு
ஆமென்ற பற்பமுஞ்சூர ணமுமென்றாய்
யந்தெடைக்கு சீனியுறபாகஞ் சொல் வேன்
ஆமென்ற பொற்கொன்றை பொற்கை யானும்
அரிவாக வெள்ளாட்டுப் பாலுங் கூட்டே.

(இ-ள்.) சிலாசத்து, வங்க பற்பம், அப்ரக பற்பம், தாம்பர பற்பம், ரசபற்பம், வகையொன்றுக்கு ஒரு கழஞ்சு வீதம் எடுத்துச் சூரணம் செய்து சூரணம் பற்பம் இவைகளை ஒன்றாகச் சேர்த்து அதற்குச் சமஎடை சீனி (சர்க்கரை) பொற்கொன்றை, பொற்றிலை கரிப்பான் இவைகளின் சாறு வெள்ளாட்டுப்பால்.

403. கூட்டுவாய் தேங்காய்ப்பால் திருமேனிச் சாறு
குமரிசிறு புள்ளடிச்சாறு செறுப்படைச் சாறு
மாட்டுவாய் தாழையடி விழுதின் சாறு
வளமான செவ்விளநீர்க் கூழ்பாண்டந் தான்
நாட்டுவாய் நற்கதலிக் கந்தச் சாறு
நலமான பொடுதலைச்சாறு வகை யொன்றுக்கு
காட்டுவாய் படிரெண்டு சீனி கேளு
கைகண்ட பலம்நாற் பதுதான் போடே.

(இ-ள்.) தேங்காய்ப்பால், குப்பை மேனிச்சாறு, குமரிச்சாறு, சிறு புள்ளடிச்சாறு, செறுப்படைச் சாறு, தாழை விழுதுச் சாறு, செவ்விள நீர், பூசனிக்காய்ச் சாறு, வாழைக்கிழங்குச் சாறு, பொடுதலைச் சாறு வகைக்கு இரண்டு படி வீதம் எடுத்து 1400 கிராம் சர்க்கரை போட்டு,

404. போட்டதனை யாவாரை விறகுத் தீயைப்
போடுபதம் வரும்நேரம் சூரணத்தை
போட்டதனைக் கிண்டிடுவாய மிர்த சஞ்சீவி
பூமிசர்க்ரைக் கிழங்குபொடி தான் கேளு
போட்டதனைக் கிண்டிடுவாய் பலந்தா னொன்று
புகழாக மிளகதுதான் பலந்தா னொன்றே.

(இ-ள்.) அடுப்பிலேற்றி. ஆவாரை விறகு கொண்டு எரித்து பாகுபதம் வரும் சமயம் சூரணத்தைப்போட்டுக் கிண்டிவரவும். பூமி சர்க்கரைக் கிழங்கு சூரணம் 35 கிராம்பு மிளகு சூரணம் 35 கிராம் சேர்த்துக்கிண்டவும்.

405. ஒன்றாகச் சேகரித்துப் பதமாய் வாங்கு
உத்தமனே ஆவின்நெய் படிதான் நாலு
நன்றாக நற்தேனில் படிதான் நாலு
நலமாக அழிஞ்சிவேர்த் தயிலந் தானும்
மன்றாகப் படியொன்று கூட வாரு
வளமாகப் பதம்வந்து வாய்க்குங் காலம்
கன்றாக முடிகூத்தோன் பூசை பண்ணுக்
கருணை விந்தாதிலேகி யத்தைக் காணே.

(இ-ள்.) பசுநெய் நான்குபடி, நல்ல தேன் நான்குபடி, அழிஞ்சில் வேர்த்தைலம் ஒருபடி இவைகளை விட்டுக் கிளறவும். பதமாகக் கிளறி எடுக்கவும். சிவபிரானை பூசித்து கருணை விந்தாதி லேகியத்தை பத்திரப்படுத்தவும்.

406. காணவே நாள்பார்த்துப் பொருந்தும் நாளில்
கழஞ்சிகொள் ளிருபொழுது கழஞ்சு ரெண்டு
நாளிலே மண்டலந்தான் கொண்டா யானால்
நலமான அயக்காந்தஞ் சத்துத் தங்கம்
பூணவே பற்பமறக் குன்றி வீதம்
புகழாகக் கொண்டுவரில் பலன்தான் கேளு
தோணவே மூன்றுவகைத் தீயில் சூடு
சுழன்றுதே மூலத்திற் சூடும் போச்சே.

(இ-ள்.) நல்ல நாளில் வேளைக்கு ஒரு கழஞ்சு வீதம் தினம் இரண்டு வேளை ஒரு மண்டலம் சாப்பிட்டு வரவும். அயக்காந்த செந்தூரம். தங்க பற்பம் ஒரு குன்றியெடை லேகியத்துடன் சாப்பிட்டுவரின், வாத பித்த சேத்துமத்தில் எழுந்த சூடும் மூலச்சூடும், அகலும்.

407. போச்சுதே அபானனொடு சமானன் றானும்
பொரியான பிராணனுக்குப் பலந்தான் விந்து
வாச்சுதே தன்டோசை நாடி வேக
மாரனுக்கு ரதிபோகம் வாய்க்க லாச்சு
நீச்சுதே புதன்மென்ன பிராணா யந்தா
நிலத்திலே பிலமென்ன சிங்கம் சிங்கம்
ஏச்சுதே நோய்ச்சடலம் எங்கே போச்சு
யிவனைப்பொ லாண்பிள்ளை இல்லை பாரே.

(இ-ள்.) தச நாடிகளை பலம் செய்யும். தாது புஷ்டியாகும். சிங்கம் போன்ற பலம் உண்டாகும் என்பதாம்.

## குமரித் தைலம்

408. பாருநீ குமரனைப்போல் என்றும் வாழ்க
பண்பாகக் குமரியுடதய்லஞ் சொல் வேன்
காருநீ கண்ணிச்சாறு படிதான் நாலு
கருவான செவ்விளநீர்ப் படிதான் நாலு
சேருநீ பொற்கையான் நெல்லி யல்லிச்
சிறப்பான கரிசாலை சம்பீரந் தான்
வாருநீ வகையொன்றுப்படிதான் ரெண்டு
மாட்டுவாய் எள்ளெண்ணெய் படிதான் ரெண்டே.

(இ-ள்.) இளைஞனாகவே வாழ்வதற்கு குமரித்தைலம் கூறுகின்றேன். கேட்பாயாக. பொன்னாங் கண்ணிச் சாறு நாலுபடி, செவ்விளநீர் படிநாலு, பொற்றிலைக் கையான், நெல்லி அல்லி, கரிசாலை, எலுமிச்சம் பழம் இவைகளின் சாறு வகைக்கு படி இரண்டு, எள்ளெண்ணெய் படி இரண்டு.

409. ரெண்டுதான் பசுவின்பால் நிறைய வீசும்
நிறைசாதிக்காய் லவங்கப்பட்டை கோஷ்டம்
வண்டுதாமரை வளையஞ் சிறு நாகப்பூ
வசுவாசி வெட்டிவேர் அகிற் கிராம்பு
கொண்டுதான் கற்பூரம்மது ரம் மஞ்சள்
கூறுசிறு தேக்கொடுதிப் பிலியோ ரெண்டு
கண்டுதான் கழஞ்சியொன்று மைபோ லாட்டி
கரைத்து நீபதத்திருந்து காணே.

(இ-ள்.) பசுவின் பால் படி இரண்டு இவைகளை ஒன்றுபடக் கலந்து சாதிக்காய், லவங்கப்பட்டை. கோஷ்டம், தாமரை வளையம், சிறுநாகப்பூ, சாதிப்பத்திரி, அகிற் கட்டை, கிராம்பு, கற்பூரம், அதிமதுரம், மஞ்சள், சிறுதேக்கு,அரிசிதிப்பிலி, கண்டதிப்பிலி, இவை வகைக்கு ஒரு கழஞ்சி மை போலரைத்து மேற்கண்ட சாறுகளுடன் கரைத்து எரித்து மெழுகுபதத்தில் வடித்துக் கொள்ளவும்.

410. காணுமே தயிலத்தின் விருதஞ் சொல்வேன்
கரையடங்கா நோயெல்லாம் கழன்று போகும்
தீருமே சுரகாசம்தீருள மாந்தை
துணுக்கிட்ட விக்கலொடு பிரமை பித்தம்
நாணுமே பிலஐயங்கள் நேத்திர ரோகம்
நந்தியுறு மூலங்கள் வேர்வை தாகம்
ஊணுமே கெடுத்தரோ சியங்கள் தானு
முன்வினை எல்லாமொழிந்து தாதுண்டாச்சே.

(இ-ள்.) சுரம், காசம், மாந்தை, விக்கல், பிரமை, பித்த நோய், சேத்தும நோய்கள், கண்வியாதி, மூலம் வியர்வை, தாகம்.. அரோசிகம் முதலிய நோய்கள் தீரும்.

411. ஆச்சப்பா தாதுகெட்டு பலமுங்கெட்டு
அங்குலைந்து வாசியதாய்க் கபாலச் சூடாய்
வாச்சப்பா போச்சென்று நோய்க ளெல்லாம்
வாதபித்த மய்யமொடு வாய்வுவேராய்

நீச்சப்பா பெருவெள்ளம் நிலைக்கப் போமே
நிலைப்பதற்கு செந்தூரமொன்று சொல்வேன்
மூச்சப்பா முருங்கைவேர் குவர் கல்லுப்பு
மூன்றுமொரு விளாங்காய்போல் சமனாய் ஆட்டே.

(இ-ள்.) பலம் குறைந்து, தாது கெட்டு, உடல் குன்றி கபால சூடு எழும்புகின்ற நோய்கள், முத்தோடங்கள், வாய்வு, முதலியன தீரும்.

## தாம்பிர சுத்தி

412. ஆட்டியே தாம்பிரத்துட் டொன்றுக்கு
அடவாகக் கவசஞ்செய் புடத்தைப் போடு
வாட்டியே புடமூன்றிப் படியே போட்டு
மைந்தனே மறவாதே சொல்லக் கேளு
மூட்டியே முருங்கைவிரைப் படிதான் நாலு
முழங்குமந்த வேர்ப்பட்டை பலந்தான் நாலு
காட்டியே கைமுறையாய்த் தயிலம் வாங்கு
சாரமிட்டுத் தாம்பிரத்தை யுருக்கிச் சாயே.

(இ-ள்.) முருங்கை விரை நான்கு படி முருங்கை வேர்ப்பட்டை 140 கிராம் இவற்றை முறைப்படி தைலம் வாங்கி அதில் தாமிரத்தை உருக்கிச் சாய்க்கவும்.

413. சாயப்பா யீரைந்துத் தினமே யானால்
தவளம்போல் தாம்பூரம் சுத்தி யாச்சு
வாயப்பா கட்டுதற்கு வகையைச் சொல்வேன்
வளமான மால்தேவி சுத்தி செய்து
நீயப்பா திருமேனிச் சாற்றா லாட்டி
நிசமாக இருபத்து நாலு சாமம்
செய்யப்பா பிறகுபழச் சாத்தால் சாமம்
திண்ணமாய் மெழுகாகும் பதத்தில் வாங்கே.

(இ-ள்.) இவ்வாறு பத்து தினங்கள் செய்யவும். தாமிரம் சுத்தியாகும். சுத்தி செய்த தாளகத்தை குப்பைமேனிச் சாற்றால்

இருபத்து நான்கு சாமம் அரைத்துப் பின்னர் எலுமிச்சம் பழச் சாற்றாலாட்டி மெழுகாகும் பதத்தில் எடுத்து வைத்துக் கொண்டு,

## தாமிர பற்பம்

414. வாங்கியே தாம்பூரந்தா னுருகும் போது
மால்தேவி மெழுகுதனைத் தாக்கு தாக்கு
தேங்கியே ராசியது கட்டிப் போச்சு
சிறப்பாக யிந்தெடைக்கு நிமிளைக் கூட்டி
பாங்கியே கண்டெடைக்குச் சூதம் வாருப்
பாதரதே கண்டெடைக்குக் கெந்தி கூட்டிப்
பொங்கியே பொற்கையான் சாற்றா லாட்டிப்
புகழான மூன்றாநாள் அரைத்துக் கட்டே.

(இ-ள்.) தாமிரத்தை உருக்கி, உருக்கு முகத்தில் மேற்கண்ட மெழுகை சிறிது சிறிதாகப் போட தாமிரம் கட்டும் . தாமிரத்தின் எடைக்கு பொன் நிமிளைக் கூட்டி இந்த இரண்டின் எடைக்குச் சமம் இரசம் சேர்த்து, பொற்றிலைக் கையான் சாற்றாலாட்டி மூன்றாவது நாள் பதத்தில் வில்லை தட்டி,

415. கட்டியதோர் வில்லைதனைக் குகைக்குள் ளாக்கி
கட்டாக மேல்முடி சீலை மண் செய்து
ஒட்டியதோர் மண்மறைவில் புடத்தைப் போடு
உண்மையுடன் ஆறியபின் கல்வத்தி லிட்டு
வெட்டியதோர் மறுக்காணும் பொற்கையான் சாறு
விட்டரைப்பாய் இருசாமம் வில்லை தட்டி
அட்டிதோர் முன்போலே புடத்தைப் போட்டு
ஐந்துபுடமான பின்பு வெளி யில்போடே.

(இ-ள்.) ஒரு குகையில் வில்லைகளை வைத்து மேல்மூடி சீலை செய்து மண் மறைவில் புடத்தைப் போட்டு ஆறியபின் கல்வத்திலிட்டு பொற்றிலைக் கையான் சாறு விட்டு இருசாமம் அரைத்து வில்லை தட்டி முன்போல் குகையில் வைத்துப் புடமிடவும். இவ்வாறு ஐந்து புடமிட்டெடுக்கவும்.

416. போடப்பா செந்தூர மாகு மட்டும்
பொற்கையான் மறவாதே புடந்தோறுந் தான்
ஆடப்பா அருணநிறம் போலே யாகும்
அம்மம்மா அக்கினிக்குப் பூசை பண்ணு
தேடப்பா வைரவர்க்குப் பூசை பண்ணு
சிவயோக மறவாதே செந்தூரந் தான்
நாடப்பா குன்றியெடை மண்டலமே கொள்ள
நலமாக தாது பிரசன் னமாச்சே.

(இ-ள்.) செந்தூரமாகும் வரை வெளியில் புடமிட்டெடுக்கவும். ஒவ்வொரு புடத்திற்கும் பொற்றிலைக் கையான் சாறு விட்டரைத்தல் வேண்டும். அருணன் நிறம் போல் ஆகும். அக்னி, வைரவர், சிவன் இவர்கட்கு பூசைசெய்து குன்றியெடை ஒரு மண்டலம் கொள்ள தாது விருத்தியாகும்.

417. ஆச்சப்பா மூலங்களெல் லாம் போச்சு
அப்பனே குன்மங்களெல் லாம் போச்சு
வாச்சப்பா கழலையொடு புற்றும் போச்சு
வாய்வென்ன பட்டதெல்லா மாண்டு போச்சு
நீச்சப்பா மண்டலமே கொண்டா யானால்
நிலைகெட்ட நோயெல்லா மெங்கே போச்சு
மூச்சப்பா சிவயோக மூழ்க லாச்சு
மோகனமாம் நந்திபிர சன்னமா மடா.

(இ-ள்.) மூல நோய்கள், குன்மம், கழலை, புற்று, வாய்வு முதலான நோய்கள் ஒரு மண்டலம் இம்மருந்தினைச் சாப்பிட்டுவர தீரும். சிவயோக சாதனையாளர்கட்கு நந்தி தோற்றமளிப்பார்.

## ஏலாதி தைலம்

418. ஆமடா ஏலாதி தைலம் மூழ்கு
அல்லாட்டால் தாம்பிரசெந் தூரம் சூடாம்
போமடா ஏலாதித் தயிலஞ் சொல்வேன்
புகழான ஆலரசு அத்திப் பிஞ்சு

சோமடா ஆவாரைக் கடலீ ராஞ்சி
சொல்லாதிக் கருவேலும் வெள்வேல் வேம்பும்
நாமடா சதாவரி உருசு நெல்லி
நல்மருது மாதுளைசெங் கிளுவை பாலே.

(இ-ள்.) தாமிர பற்பம் உண்டு வருபவர்கள் ஏலாதி தைலத்தை மூழ்க வேண்டும். இல்லையேல் அதிக சூடாகும். ஏலாதி தைலமாவது ஆல், அரசு, அத்தி இவைகளின் பிஞ்சு, ஆவாரை, கடலழிஞ்சில், கருவேலன், வெள்வேலன், வேம்பு, தண்ணீர்விட்டான், அதிமதுரம், நெல்லி, மருது, மாதுளை, செங்கிளுவை.

419. பாலான பட்டைசிறு குறிஞ்சா கந்தம்
பாலரசு பூவரசு நீர்க் கடம்பு
மேலான மலைதாங்கி கொண்டை யெட்டி
விளங்குகருங் காலிபுங்கு வெட்பூ லாத்தி
சீலான பிஞ்சுசித்தா முட்டி வேரும்
சீதேவிஅசுவகெந்தி விலாமிச் சோடு
மாலான பேராமுட்டி பொன்னாங் காணி
மால்முத்தம் நன்னாரிதண் ணீர்விட்டான்.

(இ-ள்.) இலவங்கப்பட்டை, சிறுகுறிஞ்சா வேர், காட்டு முருங்கை, பூவரசு, நீர்க்கடம்பு, மலைதாங்கி, இலந்தைக் கனி, எட்டி கருங்காலி, புங்கு, வெட்பூலா, ஆத்திப் பிஞ்சு, சிற்றாமுட்டி வேர், நெய்ச்சட்டி, அமுக்குரா, விலாமிச்சு, பேராமுட்டி, பொன்னாங்கண்ணி,, விஷ்ணு கரந்தை, கோரைக் கிழங்கு, நன்னாரி, தண்ணீர்விட்டான்.

420. நீர்முள்ளித் தாமரைவளையம் அல்லி வேங்கை
நிலவாழைத் தண்டால் மொட்டாழி யோடு
காற்மலர்த் தென்னமலருங்காட்டு மல்லிகைத்
தாழைவில்வ விதைக்கரு வேலோடு

சீற்பிரசார வேருவகை பலமொன் றாக்கி
சீலமுடன் எண்ணிரண்டு நீரே வாரு
பார்நீ நாலிலொன்றாய் சுண்டக் காய்ச்சி
மைந்தனே நிறைபாகஞ் சொல்லக் கேளு.

(இ-ள்.) தண்ணீர்விட்டான், தாமரை வளையம், அல்லி, வேங்கை, கல்வாழைத் தண்டு, கல்வாழை மொட்டு, குன்றி, தென்னம்பூ, காட்டு மல்லிகை, தாழை, வில்வவிதை, கருவேலன் இவை வகைக்கு 35 கிராம் வீதம் எடுத்து பதினாறு படி நீரில் போட்டு நாலில் ஒன்றாக வற்றும்படிக் காய்ச்சி வடிகட்டிய கஷாயம் படி நாலு,

421. சொல்லுகிறேன் ஆவின்பால் படியோ நாலு
சுகமாக யெள்ளெண்ணை படியீரைந்து
வெல்லுகிறேன் கோஷ்டமுடன் லவங்கஞ் சுக்கு
விடையஞ் சீரகமிளகு கூகை நீறு
பல்லுகிறேன் வால்மிளகு கடுஞ்சாதிக்காய்
பச்சைபாக் கேலம்தற் கோலங்குக்கில்
வெல்லுகிறேன் பெருங்குரும்பை விதையைங் கோலம்
வாகான சதகுப்பை மஞ்சள் கூட்டே.

(இ-ள்.) பசும்பால் நான்குபடி, எள்ளெண்ணை பத்துபடி, கோஷ்டம், இலவங்கம், சுக்கு, அதிவிடையம்,, சீரகம், மிளகு, கூகை நீறு, வால்மிளகு, சாதிக்காய், பச்சைப் பாக்கு, ஏலம், தக்கோலம், குக்கில் பெருங்குரும்பை, கருஞ்சீரகம், கடுகு, ஓமம், நிம்பவித்து இலுப்பை விரை, அழிஞ்சில் வித்து, சதகுப்பை, மஞ்சள்

422. கூட்டடா பொற்கடுக்காய் கார்கோல் மாம்பூக்
கூழ்பாண்ட வித்தோடு கஸ்தூரி மஞ்சள்
மாட்டடா லவங்கபத்திரி யோடக்கிரா காரம்
வழலரிசி வெள்ளரிவித்து மஞ்சிஷ்டி

நாட்டடா வகையொன்றுக் கரைப் பலந்தான்
நல்லதொரு கிஷாயத்தி லரைத்துப் போட்டு
மூட்டடா அடுப்பேற்றி சிறுகத் தீயால்
மெழுகுபதம் பாற்பிடித்து வடித்திடாயே.

(இ-ள்.) பொற்கடுக்காய், கார்கோலரிசி, மாமரத்தின் பூ, பூசணி வித்து, கஸ்தூரி மஞ்சள், லவங்கப்பத்திரி, அக்கிரகாரம், விழலரிசி, வெள்ளரிவித்து, மஞ்சிட்டி, இவை வகைக்கு 17½ கிராம் வீதம் எடுத்து அரைத்து மேற்கண்ட கஷாயத்துடன் சேர்த்து அடுப்பிலேற்றி சிறுதீயாக எரித்து, மெழுகு பதத்தில் வடித்தெடுக்கவும்..

423. வடியடா கலசத்தில் புனுகுச் சட்டம்
மகத்தான கோரோசனை வகையொன்றுக்கு
துடியடா முக்கழஞ்சுப் பொடித்துப் போட்டு
சுவாமிகெச முகனிருதாள் போற்றி செய்து
கொடியடா நாள்பத்து மூழ்கினாக் கால்
கிறுகிறுப்பு பீனிசம்பிர மியமோ ரெட்டும்
பிடியடா நீரிழிவு பிரமேகங்கள்
பிலத்ததொரு வாதபித்தம் சிலேத்மம் போமே.

(இ-ள்.) வடிபாத்திரத்தில் புனுகுச் சட்டம், கோரோசனை வகைக்கு மூன்று கழஞ்சு பொடித்துப் போடவும். கணபதியைத் தொழுது பத்து தினங்கள் முழுகிவர பீனிசம், மயக்கம், நீரிழிவு, பிரமேகங்கள், வாத, பித்த, சேத்தும நோய்கள் நீங்கும்.

424. போமென்ற பாண்டுவகை மூலமெல்லாம்
போகுமடா கிராணியொடு சயங்க ளெல்லாம்
வேமென்ற பித்தத்தா லெடுத்த தோஷம்
விஷவாதம் நீர்தோஷங் கண்ணோய் காசம்
ஆமென்ற காதுமந்தஞ் செவிடு குத்தல்
அஸ்திசுரம் சோபையொடு கால்கை காந்தல்
நாமென்ற முகங்காந்தல் பயித்திய மெல்லாம்
நாடாதுமண் டலத்தில் நயந்து காணே.

(இ-ள்.) பாண்டு வகை, மூலம், கிராணி, சயம், பித்ததோடம், விஷவாதம், நீர்த்தோஷம், கண்ணோய், காசம், காதுமந்தம், செவிடு,குத்தல், அஸ்திசுரம், சோகை, கால்கை காந்தல், பயித்தியம் முதலிய நோய்கள் ஒரு மண்டலம் மூழ்கி வரத் தீரும்.

## சயராச செந்தூரம்

425. காணவே சயேந்திரந்தான் சொல்லக் கேளு
கற்பத்தில் விருதஅயக் காந்த மய்யா
பூணவே அயக்கட்டு செந்தூரந் தான்
பூதலத்தி லறியாமல் கெட்டுப் போனார்
தோணவே சொல்வேன் அயப் பொடிதான் நன்றாய்
சுத்திசெய்த காந்தத்தில் தூக்கி வாங்கி
நாணவே பலமொன்று கல்வத்தி லிட்டு
நலமான அரிதாரஞ் சுத்தி செய்யே.

(இ-ள்.) காயகற்பமாகிய சயேந்திர செந்தூரம் சொல்லுகின்றேன். அயக்கட்டு செந்தூரத்தை உலகிலுள்ளோர் சுலபமாக அறியமாட்டார். அயப்பொடியைக் காந்தம் கொண்டு எடுத்து சுத்தி செய்து 35 கிராம் கல்வத்திலிட்டு தாளகத்தை கீழ்க்கண்டவாறு சுத்தி செய்யவும்.

426. செய்யப்பா தாளகந்தான் பலமோரேழு
திருமேனிச் சாரப்பா அரைக் கொட்டைப் பாக்கு
பையப்பா பாண்டத்தில் காடி தானும்
பாங்காகப் படிஎட்டுக் கூடச் சேர்த்து
வையப்பா தோளாந்திரம் எரித்துவாங்கு
வகையாக மூன்றுபலம் வெங்காரந்தான்
கையப்பா நவச்சாரந் துருசு தானுங்
கடியதொரு வீரந்தான் பலந்தா னொன்றே.

(இ-ள்.) 245 கிராம் தாளகத்தை மேனிச்சாறு விட்டு அரைத்து கொட்டைப் பாக்குபோல் உருட்டி. எட்டு படி காடியை ஒரு

பாண்டத்திலிட்டு, உருட்டிய மருந்தை தோளாந்திரமாகக் கட்டி எரித்து எடுத்து 105 கிராம் வெங்காரம், நவச்சாரம், துருசு, வீரம் வகைக்கு 35 கிராம்

427. ஒன்றாக தாரமொடு ஐஞ்சுங் கூட்டி
உத்தமனே மேனிச்சாரீ றாறு சாமம்
நன்றாக வேயரைத்து மெழுகு பாங்காய்
நலமாக வோருண்டைக் கல்வத் திட்டு
சொன்றாகக் குள்ளாட்டிச் செம்மியூது
சிறப்பாக வெங்கலம்போ லுருகி நிற்கும்
குன்றாக இரும்பதுவே கண்விட் டாடுங்
கூறாதே சித்தருக்குக் கள்ளம் பாரே.

(இ-ள்.) தாளகத்துடன் ஐந்துங் (மேற்கண்ட கல்வத்தில் உள்ளஅயத்துடன்) கூட்டி, குப்பைமேனிச்சாறு விட்டு பன்னிரண்டு சாமம் அரைத்து மெழுகு பதத்தில் உருண்டையாக உருட்டிக் குகையிலிட்டு, உலையில் வைத்து ஊத வெங்கலம் போல் உருகி கண்விட்டாடும்.

428. பாரப்பா குகையமுக நன்றாயூது
பதறாதே யுடைத்தயத்தை உண்டை சேர்த்து
சாரப்பா குகையிலிட்டுச் சில்லு மூடி
திறமாக யிப்படியேழு தரமே யூது
காரப்பா ஏழுதரம் ஊதினாக்கால்
கசடற்றுப் பொன்போலே கரியிலாடும்.

(இ-ள்.) குகை அழுக ஊதியெடுத்து உடைத்து எடுத்த அயத்தை உருண்டையாக முன்போல் அரைத்து உருட்டிக் குகையிலிட்டு சில்லுமூடி ஊதியெடுக்கவும். இவ்வாறு ஏழுதடவை ஊதியெடுக்க குற்றம் நீங்கிய பொன்போல் கண்விட்டாடும்.

429. போடப்பா செந்தூர மாகு மட்டும்
புகழான முருக்கம்பூப் போலே யாடும்
ஆடப்பா சுயராசசெந் தூரந் தான்
ஆச்சுதென்று எமதூதாள் காணாப் போவார்

கூடப்பா மோகினியும் குலைந்து போனால்
கூறான சடலமிது வச்சிர காயம்
சாடப்பா தங்கமிட்டு செந்தூரித் தால்
சாவுபொய் யாச்சுதடா தாக்கியுண்ணே.

(இ-ள்.) முருக்கம் பூப்போல் செந்தூரமாகும். இதுவே செயராச செந்தூரமாகும். இம் மருந்தை உபயோகிக்க எமன் காணாமல் போவான். மோகினி குலைந்து போவாள். உடல் வச்சிர காயமாகும். தங்கம் சேர்த்து செந்தூரம் செய்தால் இறப்பு இல்லை.

430. உண்ணப்பா திரிகடுகு வெண்ணெய் கூட்டி
ஒருபோது அரைப் பணந்தான் கொண்டு தேடு
கண்ணப்பா சந்தகமாய்த் தேக மேற்குங்
கண்டுகொள்வாய் கனமாகத் தின்றிடாதே
ஒண்ணப்பா வயிரவர்க்குப் பூசை பண்ணு
ஊரல் செந்தூரம்பொற் கையான் தன்னை
எண்ணப்பா மறக்காதே சிவக்கக் கட்டும்
எட்டுவகை சயரோகம் எங்கே போச்சு.

(இ-ள்.) திரிகடுகு சூரணம், வெண்ணெய் இவைகளில் அரைப் பணவெடை செந்தூரம் சேர்த்து உண்டுவர பசியைத் தூண்டும். பொற்றிலைக் கரிப்பான் சூரணத்துடன் சாப்பிட உடல் சிவந்து எண்வகை சயரோகம் தீரும்.

431. போச்சப்பா பலமரைதான் கொள்ளும் போது
போடுகிற னனுபானம் சொல்லக் கேளு
ஆச்சப்பா பூநாகம் பாலில் சுத்தி
யப்பனே கருகாமல் வறுத்துக் கொண்டு
வாச்சப்பா பலமொன்று இதற்கு நேராய்
வகையாக திரிகடுகு கழஞ்சி யீராற்
பாச்சப்பா சிற்றரத்தைக் கழஞ்சு யொன்றே
பண்பான திரிபலைதான் கழஞ்சி ஒன்றே.

(இ-ள்.) மேலும் அனுபானம் கூறுகின்றேன். பூ நாகத்தைப் பாலில் சுத்திசெய்து உலர்த்திக் கருகாமல் வறுத்து 35 கிராம் எடுத்துக் கொண்டு திரிகடுகு பன்னிரண்டு கழஞ்சு, சிற்றரத்தை கழஞ்சு ஒன்று, திரிபலை ஒரு கழஞ்சு

432. ஒன்றடா கற்கடகசிங்கி தனைச் சேர்த்து
உத்தமனே சூரணித்து வைத்துக் கொண்டு
நன்றிடா தூதுவளை யுலர்த்தியே தான்
நலம்பெறவே சூரணித்துப் பலம் ஒன்றாக
குன்றிடாய் யிவ்விதஞ் சேர்த்துக் கொண்டு
கேளதற்கு வகைசொல்வேன் கூறக் கேளு
சென்றிடாய் சீனியந்த எடைக்குச் சேர்த்து
திறமாகச் சூரணங்கள் ஒன்றாய்ச் சேரே.

(இ-ள்.) கற்கடகசிங்கி ஒரு கழஞ்சு இவைகளை ஒன்று சேர்த்து சூரணம் செய்து அதனுடன் தூதுவளை சூரணம் 35 கிராம் சேர்த்த எடைக்கு சமமாக சீனி சேர்த்து

433. சேரப்பா பூநாகச் சூரணத்தை
சிறக்கவே காராவின் வெண்ணெய் தன்னில்
பாரப்பா அரைப்பணந்தான் அயச் செந்தூரம்
பண்பாகக் கொண்டுவரில் மண்டலம் தான்
காரப்பா பத்தியந்தான் மோரா காது
கசந்த புகைபுளிதள்ளி கடுகா காது
சாரப்பா பாலாகும் நெய்யு மாகுந்
தடையுறவே சுத்திசெய்த உப்பு மாமே.

(இ-ள்.) பூநாகச் சூரணத்தையும் அதனுடன் கலந்து வைத்துக்கொள்ளவும். காராம் பசுவின் வெண்ணெயுடன் அரைப்பணவெடை அயச்செந்தூரமும், சயராச செந்தூரம் சூரணமும் கலந்து ஒரு மண்டலம் சாப்பிட்டு வரவும். மோர், புளி, புகை, பூண்டு, கடுகு இவைகளை நீக்கவும். பால், நெய், சுத்தி செய்த உப்பு சேர்த்துக் கொள்ளவும்.

*ஹரிஓம் நன்றாக*

# மூலிகை அட்சரம்

1. காணவே வசியமுடன் மாரணமோ ரெட்டுங்
கலந்துநின்ற மூலிகைதான் கருவைச் சொல்வேன்
பூணவே ஒவ்வொன்றுக் கெட்டு மூலி
பொதுப்பேரை வெவ்வேறே பிரித்துக் கேளு
தோணவே சீதேவி செங்கழுநீர் வாங்க
சொல்லுகிறேன் மந்திரத்தைச் சொல் கின்றேனே.

(இ-ள்.) வசியம். மாரணம் இவை எட்டு (ஆகர்ஷணம், உச்சாடணம்,தம்பனம், பேதனம், மாரணம், மோகனம், வசியம், வித்வேடணம் என்பன) மூலிகைகளின் கருவைக் கூறுகின்றேன். இதன் ஒவ்வொன்றுக்கும் எட்டுமூலிகைகள் பெயரைவெவ்வேறு பிரித்து (64 மூலிகைகளின் பெயரை) கூறுகின்றேன். இவற்றில் சீதேவி செங்கழுநீர் மூலிகையை வாங்க மந்திரத்தைச் சொல்லுகின்றேன்

2. மந்திரம் ஓம் ஸ்ரீலெட்சுமி தேவி யென்று
மாறாமல் குருகுருமுன் நின்வாய்க் கொண்டு
அந்திரமாய்ச் சொல்லியே ஆணி வேரை
அறாமலே பிடுங்கி அதை தாமரை நூலில்
ஏந்திரமாய் திரியாக்கி வேருங் கூட்டி
இயல்பாக கயிலைநெய்யில் மையைக் கூட்டி
தந்திரமாய் திலகமிட அரச ரெல்லாந்
தாட்சியன்றி வசீகரமா யிருக்குந் தானே.

(இ-ள்.) ஓம் ஸ்ரீ லெட்சுமி தேவி என மாறாமல் நினது வாயால் மெதுவாய் சொல்லி ஆணிவேர் அறுந்து போகாமல் பிடுங்கி அதனை தாமரை நூலில் திரிபோல் சுற்றி பசு நெய்யில் திரியைக் கொளுத்தி மை எடுத்து அதனைத் திலகமிட்டுக் கொள்ள அரசர்கள் வரை வசீகரமாய் இருப்பார்கள்.

3. வசிகரமா மதுமத்தை மூலம் வாங்க
மந்திரத்தைக் கேள்சொல்வேன் மைந்தா நீயே
வசிகரஞ் சோகிறுசனி வருளி யாரே
மாதாநா மீஷ்பரியே வசியம் பவ்வேபவ்வே
வசிகரங் கசக்காயும் பருவன் னோக்க
வந்துநிற்கும் பருவ மதில் சமூலம் வாங்கி
மைந்தனே குப்பியிலே அடைத் திடாயே.

(இ-ள்.) மருள் ஊமத்தை வேரை வாங்குவதற்கு மந்திரம் சொல்லக் கேள். வசீகரஞ் சோகிறு சனி வருளியாரே, மாதா நா மீஷ்பரியே வசியம் பவ்வே பவ்வே பூவுங் காயும் உள்ள பருவத்தில் சமூலத்தை வாங்கி குப்பியில் அடைத்திடுவாய்.

4. அடைத்ததற்கு வகையைக்கேளி பணந்தான் வாங்கி
அதிற்பாதி கற்பூரம் போட்டுத் தேய்த்து
புடைத்த வுருமத்தியிலே திலதந்தீட்டும் போது
வரவேநினைத்த பெண்கள் வந்து சேரும்
விடைத்தபுகள் வெள்ளெருக்குச் சமூலம் வாங்க
வியனறுக்கன் உதயத்திலே கமல நூலால்
உடைத்திடுவாய் தேங்காயுங் காப்புங் கட்டி
யுயர்விஞ்சை காங்கீத - கூங்கே கனவதிநாக்
கெடுத்திடாக் கணபதியே பூலோக மெல்லாங்
கிருபைபுரி பகரவதே யென்று சொல்லே.

(இ-ள்.) அதில் பணவிடை எடுத்து அதிற்பாதி கற்பூரம் போட்டு மையை எடுத்து நன்கு தேய்த்து புருவ மத்தியில் திலதந் தீட்டும் போது நினைத்த பெண்கள் வருவார்கள்.

வெள்ளெருக்கன் சமூலம் வாங்க, சூரிய உதயத்தில் தேங்காய் உடைத்து தாமரை நூலால் காப்புக் கட்டி "காங்கீத கூங்கே சனவதி நாக்கெடுத்திடாக் கணபதியே பூலோகமெல்லாம் கிருபை புருபகரவதே" என சொல்லி முன்போல் செய்ய வசீகரமாம்.

5. ஆமப்பா கருஞ்செம்பை மூலந் தன்னை
அப்பனே கன்னிநூல் தன்னைக் கட்டி
ஓமப்பா சொட்சங்கள் செய்து பின்னை
உருவேத்து மந்திரந்தான் ஓம்ஓம் மென்று
சாமப்பா சியாமளரூபி சாம்பவி
றிங்கிலிங்கி குறியுஞ் சாத்தி
நாமப்பா மூன்றுநாள் சகஸ்திர மூன்று
நாள்சேவித் தேதான் பிடுங்கி வந்து
போமப்பா நிழலுலர்த்தித் தயிலம் வாங்கி
போட்டிடவே சகலகன வசி.ம் பாரே.

(இ-ள்.) கருஞ்செம்பை வேரை எடுக்க, மஞ்சள் நூல் கட்டி பூசை செய்து " சியாமள ரூபி சாம்பவி றிங்சிலிங்கி என்று குறியும் எழுதி ஓம்ஓம் என மூன்று நாள் மூவாயிரம் மந்திரம் செபித்து பிடுங்கி வந்து நிழலில் உலர்த்தி முறைப்படி தயிலம் வாங்கி திலகமிட சகல சனவசியமாகும்.

6. பாரப்பா வெண்குன்றி மூலம் வாங்க
பாங்கான அமாவாசை பூசை செய்து
நேரப்பா மந்திரந்தா னவமம் மவசவச
நிறைமிகு சகவசீகரி ஓமென்று போற்றி
பேரப்பா பிடுங்கியதை வாயி லிட்டுப்
பேசிடவே மிருக வசீகரந்தான் காணும்
ஆரப்பா பொற்றலையைச் சமூலம் வாங்க
ஆச்சரிய விஞ்சை மந்திரத்தைக் கேளே.

(இ-ள்.) வெண்குன்றி வேரை எடுப்பதற்கு அமாவாசையில் பூசைசெய்து "னவமம்மவசவச நீரைமிகு சகவ சீகரி ஓம்" என்று போற்றி பிடுங்கி அதனை வாயிலிட்டுப் பேசிட மிருக வசீகரங் காணும். பொற்றிலைக் கரிப்பான் சமூலத்தை வாங்க ஆச்சரியமான விசை மந்திரத்தைக் கேட்பாயாக.

7. விஞ்சையென்ன வொருவெள்ளிக் காப்புக் கட்டி
வீறாக மறுவெள்ளி வாங்கும் போது
அஞ்சாதே ஓம்கிலீம் சவ்வும் ஐயும்
அட்சரத்தை ஓதியே குளிசம் ஆடி
மஞ்சாரு முடியில்வைக்கத் தன் வசியமாகும்
வகையட்ட மூலியுந்தான் வசியமாகும்
நெஞ்சாறு மோகனமாம் மூலி தன்னை
நிகழ்த்துகிறேன் புத்திரரே நிகழ்த்து கிறேனே.

(இ-ள்.) ஒரு வெள்ளிக்கிழமையில் காப்புக் கட்டி மறு வெள்ளிக்கிழமை வேரை வாங்கும் போது ஓம் கிலீம் சவ்வும் ஐயும் என்ற அட்சரத்தை ஓதி தகடு எழுதி மந்திரித்து வேரை எடுத்து இரண்டு குன்றி எடை முடியில்வைக்க தன் வசீகரமாகும்.

மோகனத்துக்கான மூலிகையைக் கூறுகின்றேன் கேட்பாயாக.

8. நிகழ்த்துகிறேன் மதமத்தைப் பயிர்தான் செய்து
நினைவாக காய்கின்ற பக்கு வத்தில்
நிகழ்த்துகிறேன் உமிழ்நீரால் பூவை யாட்டி
நீயூட்டு மோகினிக்குங் காயுந் தான்
நிகழ்த்துகிறேன் விந்துவிலே ஆட்டி யூத்து
நினைத்தோடி மோகிப்பாள் பிரியாள் தானே.

(இ-ள்.) பொன் ஊமத்தைச் செடியைப் பயிர் செய்து காய் காய்க்கின்ற பக்குவத்தில் பூவை எடுத்து உமிழ்நீர் விட்டு ஆட்டி உபயோகிக்க மோகிக்கும். காய்தனை ரசத்துடன் அரைத்து உபயோகிக்க பிரியமானவள் மோகிப்பாள்.

9. பிரியாக னித்தநிலத் தொலை யாட்டி
பெண்களுக்கு யூட்டிடவே மோக மாகும்
நெறியாக கஞ்சாவை புருஷநோட்டில்
நேர்சமனாய் மண்ணிட்டுப் பயிரே செய்து
குறியாக விளைந்த பின்பு சமூலம் வாங்கிக்
கொண்டுவந்து சட்டியிலே கருக்கிடாயே.

(இ-ள்.) பூமியில் மனித தேகத்திலிருந்து சிந்திய இரத்தத்துடன் கலந்து ஆட்டி பெண்களுக்குக் கொடுத்து விட மோகமாவார்கள். புருஷர் மண்டை ஓட்டுடன் சமன் மண்சேர்த்து அதில் கஞ்சாவை பயிர் செய்து நன்கு விளைந்த சமூலத்தைச் சட்டியிலிட்டுக் கருக்கி,

10. கருக்கியே திலதமிடச் சனங்கள் மோகங்
காணவெள்ளை மதமத்தைத் திலதந் தீட்ட
செருக்குமே சொன்னதொரு மோகந் தானும்
திடனாக அதனிலையை நீரில் போட்டு
பெருக்கியே குளித்திடவே மோகன மாறும்
பேராக மந்திரத்தைச் சொல்லக் கேளு
அருக்கியே மதமோ மத்தோன் மத்தி
ஓம்ஆம் கிலியுஞ்சத்திசிவன் மோகினி யென்னே.

(இ-ள்.) திலதமிடச் சனங்கள் மோகமாவார்கள்,. வெள்ளை ஊமத்தையைக் கொண்டு திலதந் தீட்ட உண்டாகும். மோகனத்தை ஆற்றுவதற்கு அதன் இலையை நீரில் போட்டுக் குளித்திட மோகனம் ஆகும். இதற்கான மந்திரம் " மதமேதா மத்தோன் மத்தி ஓம் ஆம் கிலியுஞ் சத்தி சிவன் மோகினி"என்று சொல்லவும்.

11. மோகியென்ற மருளூமத்தை ஓம்தேவ மோகி
மொழிந்தவுடன் வருகவருக வென்று வாங்கி
தாகமுடன் கருக்கியதை அந்நீர் தன்னில்
தயவாத் திலதமிடத் தெய்வ மோகம்
ஆகமுடனே முனேமுத்தக்காசு நரியோட்டுள்
அப்பனே பயிர்செய்து ஏழா நாளில்
பாகமுடன் நால்களஞ்சிக் குள்ளே யிட்டு
பதஞ்செய் மந்திரத்தைக் கேளு கேளே.

(இ-ள்.) மருளூமத்தை "ஓம் தேவ மோகி" என மொழிந்து வருக வருக என்று சொல்லி எடுத்து கருக்கி மேல்கண்ட தண்ணீரில்

குழைத்து திலதமிட்டுக் கொள்ள தெய்வ மோகம் உண்டாகும். முத்தக்காசு என்னும் கோரை கிழங்கை நரியின் மண்டைக்குள் வைத்து பயிர் செய்து ஏழாவது நாள் எடுத்து நாலு கழஞ்சி அளவு ஓட்டுக்குள் வைத்து பத்திரம் செய்து.

12. கேளப்பா துங்கதுங்க மிருக மோகி
கெச்சிதஞ்சே என்றுசொல்லி வாயி லிட்டு
நாளப்பா பேசிடவே மிருக மோகம்
நயமான ஆலம்விழுதை அருக்க நாளில்
நீளப்பா மகாமோகிசெய்யே சேயென்று
நிகராக மோகிசெய்யே சேயென்று
தாளப்பா பொருவொட்டால் கையிலேந்தி
தயவாக சட்டியிலே பற்பம் பண்ணே.

(இ-ள்.) "துங்க துங்க மிருக மோகி கெச்சி தஞ்சே" என்று சொல்லி வாயிலிட்டு பேசிடவே மிருகங்கள் மோகமாகும். ஆலம் விழுதை ஞாயிற்றுக்கிழமையில் " மகாமோகி நிகராக மோகி செய்யே சேய்" என்று சொல்லி கீழே விழாமல் கையிலேந்தி விழுதை நறுக்கி எடுத்து சட்டியில் போட்டு பற்பமாக ஆகும்படி கருக்கி எடுத்து

13. பற்பமதில் திலதமிட ராசர் மோகம்
பண்பான நன்னாரி தன்னைச் சொல்வோம்
சிற்பமுடன் பொங்கலிட்டு காப்புக் கட்டி
தீபமொடு பலியிட்டு மந்திரத்தைக் கேளு
சொற்பமுறு வடுகனே மோகி மோகி
சொளிசனே மோகியென்று மூலம் வாங்கி
அற்பமென நினையாமல் குளிச மாடி
ஆச்சரியம் சிரசில்வைக்கச் செனமோகங் காணே.

(இ-ள்.) அந்த பற்பத்தில் திலதமிட அரசர்கள் மோகிப்பார்கள். நன்னாரியை சொல்வோம். பொங்கலிட்டு நன்னாரிக்குக் காப்புக் கட்டி தீபமொடு பலியிட்டு "முறுவிடுகனே மோகிமோகி சொழிசனே

மோகி" என்று சொல்லி வேரை வாங்கி உயர்வாக எண்ணி மதித்து குளிசமாடி சிரசில் வைக்க மக்கள் மோகிப்பார்கள் (ஜனவசியம்)

14. காணப்பா கிராம்புதனை திரியில் வைத்துக்
காரெள்ளுச் சாற்றினால் மைஎரித்து
பூணப்பா திலதமிடத் தியானங் கேளும்
புகழுடைய ஓம்ஓம்ஓம்ஓம் ஓமென்று சொல்லி
ஊணப்பா புவியிலுள்ள புருட ரெல்லாம்
ஓகோகோ மோகனமாம் உண்மை யுண்மை
தேணப்பா தம்பனந்தான் மூலி வாங்க
மூலமென்ற மந்திரத்தை முன்னே சொல்லே.

(இ-ள்.) கிராம்பை எடுத்து திரியில் வைத்து கார் எள்ளு எண்ணையினால் மை எரித்து ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் என்று சொல்லி திலதமிட்டுக் கொள்ள புவியில் உள்ள மக்கள் எல்லாம் மோகனமாவார்கள். இது உண்மை. தம்பனத்திற்கான மூலமந்திரத்தை முன்னதாகச் சொல்லவும்.

15. சொல்லவே கட்டுக்கொடி மூலம் வாங்க
முன்சொல்லு மந்திரத்தை முறையாய்க் கேளு
சொல்லவே சிலிசிலாப் பேந்துகிலால் பேந்து
சிவசிவா வென்று சொல்லி சமூலம் வாங்கி
நீவியே நிம்புநெய்யி தன்னில் விட்டு
நிம்புநெய்யு மூலிகையும் வளைய மாடிக்
காலியென்ற ஆசனத்திற் கீழே போட்டு
கலங்காத தண்ணீர் நடுவிருக்கப் பாரே.

(இ-ள்.) கட்டுக் கொடியின் வேரை வாங்குவதற்கு "சிலி சிலாப்பேந்துகிலால் பேந்து சில சிவா" என்று சொல்லி வேருடன் சமூலம் வாங்கி வேப்பெண்ணெயில் விட்டு, மூலிகையும் வேப்பெண்ணெயும் உறவாகும் படி செய்து பின் வளையம் போல்

செய்து உட்காருங் பலகைக்கு கீழே போட்டு தெளிவான தண்ணீரை வளையத்தின் நடுவில் இருக்கும்படி செய்யவும்.

16. இருக்கலாமிந்த நெய்யிற் தீப மேற்றி
என்மகனே மனைதனிலே செல்ல லாகும்
பெருக்கலா மிலையரைத்துச் சலத்திலுட
புறளாமல் திரணவெந்து கட்டி யாகும்
செருக்கிலாந் தின்றுவெந்து கட்டி யாகும்
சிலதம்பனமிது பின்னும் பாரு பாரு
அருக்கலாம் பால்புரண்டி வாழ்வு நாளிவ்
அப்பனே அவசரித்து மந்திரமோதே.

(இ-ள்.) வேப்பெண்ணெயில் தீபமேற்றி மனையின் மீது அமரவும். கட்டுக் கொடி இலையை அரைத்து தண்ணீரில்விட தண்ணீர் கட்டி போலாகும். அதனைத் தின்றுவிட பசியிராது. இ து சில தம்பனமாகும். பால்புரண்டி என்னும் மூலிகையை எடுக்க மந்திரத்தைக் கேள்.

17. ஓதடா நீலிகண்டி விசையா விசைய
வியாத்திற அத்திறருலக டக்குந் தோமா
பாதடா சேவித்து ஆவின் பாலா லாட்டி
மைந்தனே துவளையிட வெட்ட றாது
மாதடா விரையுரைத்துப் பாலில் கொள்ள
மயங்காமல் சுக்கிலந்தம் பிக்கும் பாரே
போதடா பறட்டைதனைச் சமூலம் வாங்க
புகழான மந்திரத்தை புகல் கிறேனே.

(இ-ள்.) "நீலிகண்டி விசையா விசைய வியாத்திற அத்திற ருலகடக்கதுந் தோமோ" என சேவித்து எடுத்து ஆவின் பாலாலாட்டி உடம்பிற்கு துவளையிட இடைவிடாது விதையை அரைத்துப் பாலில் கொள்ள சுக்கிலந் தம்பிக்கும்.

பரட்டையின் சமூலம் வாங்குவதற்கு மந்திரத்தைக் கேள்.

18. உரைக்கிறேன் சிலம்பலம் பளிய காளி
ஓங்காரக் கங்காளி நமாவென்று போற்றி
உரைக்கிறேன் நிழலுலர்த்தி தூர யாட்டி
உயர்குருவை நெல்மாவில் நேராய்க் கூட்டி
உரைக்கிறே னிதுதின்றால் சலக்கழிச்சல் நிற்கும்
ஓயாத கிராணிவகை யாவுந் தீரும்
உரைக்கிறேன் நீர்முள்ளிக் குபகாரஞ் செய்து
உரைதவிரா மந்திரத்தைச் செபித்தி டாயே.

(இ-ள்.) "சிலம்பலம் பளிய காளி ஓங்காலக் காளி நமா" என்று போற்றி எடுத்து நிழலில் உலர்த்தித் தூளாய் ஆட்டி குருவை நெல் மாவு சமனாய்ச் சேர்த்து தின்றால் சலக்கழிச்சல் நிற்கும். நிற்காத கிராணி கழிச்சல் யாவுந் தீரும்.

நீர்முள்ளிக்கு உபசாரஞ் செய்து தவறாது மந்திரத்தைச் செபம் செய்வாய்.

19. சேவிக்கு மந்திரத்தா னுலைமுகநாதா விசுவரூபா
செயமோக தம்பசிலாதம்பா நீயி தான்
ஆவிக்குஞ் சொல்லியே பிடுங்கி வந்து
அரைத்ததனைக் குமித்திடவே விஷங்கள் மீளும்
பாலிக்கும் பாத்திரத்தை அரைத்துக் கொண்டால்
பாண்டுவிஷ பாகமெல்லாம் பதறி யோடும்
தாவிக்கும் விரையரைத்துதக் கொண்டா யானால்
தம்பனமாம் சுக்கிலந்தான் சத்தியந் தானே.

(இ-ள்.) "உலை முக நாதா விசுவ ரூபா செய மோகா தம்ப சிலாதம்பா நீயிதான்" என்று மந்திரித்து, பிடுங்கி வந்து அரைத்து அதை விஷந் தீண்டிய இடத்தில் குவித்து வைத்து விட விஷங்கள் மீளும். இலையை அரைத்துச் சாப்பிட்டால் பாண்டு விஷபாகம் எல்லாம் ஓடிவிடும். விதையை அரைத்துக் கொள்ள சுக்கிலம் கட்டும் தம்பனமாகும்.

20. சத்தியமாய்ச் சொல்லுகிறேன் நத்தைச் சூரி
தானதற்கு சாபமில்லைபெரி யோர் கொள்வார்
சித்தியென்ற எட்டுமதற் குள்ளே யாச்சு
செகமெல்லாம் அதன்பெருமை திறமோ காணார்
சுத்தியென்ற அருக்கனிலே காப்புக் கட்டி
சொல்லுகிவேன் மந்திரத்தை சூட்டுகின்றேன்.

(இ-ள்.) நத்தைச் சூரிக்கு சாபமில்லை எனப் பெரியோர்கள் கூறுவர். எட்டு வகை சித்திகளும் அதற்குண்டாம். உலகத்தினர் அதன் பெருமையைக் காணமாட்டார். ஞாயிறு அன்று காலையில் நத்தைச்சூரிக்கு காப்புக் கட்டி மந்திரம் சொல்லுகின்றேன். கேட்பாயாக.

21. சூட்டுகிறேன் ஓம்வச் சிசரரூபி
சூரிய மகாவீரிச் சுவாகா வென்று
நாட்டுகிறேன் சமூலமே கொண்டு வந்து
நன்றாகச் சூரணம்செய் சீனி நேரே
ஊட்டுகிறேன் கலந்துமண் டலந்தான் தின்றால்
ஒருநூறு இருப்ரதுமோர் நால் தாகும்
மாட்டுகிறேன் பத்திரத்தை வாயி லிட்டு
அப்பனே மலைகளெல்லாம் நொறுக்க லாமே.

(இ-ள்.) "ஓம் வச்சிர ரூபி மகாவீரி சுவாகா" வென்று சொல் சமூலமும் கொண்டு வந்து நன்றாக சூரணம் செய்து சர்க்கரை கலந்து ஒரு மண்டலம் (40 நாட்கள்) சாப்பிட்டு வர நூறு நாட்கள் ஒரு நாளுக்குச் சமமாக ஆயுள் வளர்ந்து நீடிக்கும் என்பதாம். இலையை வாயிலிட்டுக் கொள்ள மலைகளையும் நொறுக்கிவிடலாம்.

22. நொறுக்கலாம் விரையெடுத்துத் தினமும் கொண்டால்
நூறாயுள்ளவு வரையிருக் கலாகும்
நொறுக்கலா மெந்தெந்தத் தொளிகளவும் (தொழில்களை)
நோகாதே மற்றுமொரு கற்ப மென்னும்

நொறுக்கலாஞ் சத்துருவும் வியாதி தானும்
அணுக்கத்தே உலகத்தோர் காணாரப்பா
நொறுக்கலாம் இம்மூலம் சிரசி ல் வைக்க
நோக்காத தேவதைகள் மோதும் பாரே.

(இ-ள்.) விதையை எடுத்துத் தினமும் உட்கொண்டு வந்தால் நூறாண்டுகள் வாழலாம் என்பதாகும். எந்தெந்த தொழில்களையும் நோகாது வென்று விடலாம். காய கற்பமாகவும் ஆகும். சத்ருக்களையும் வியாதிகளையும் வெல்லலாம். பலவீனத்திற்கு சிறந்த மருந்தென்பதை உலகோர் அறியார்.இதன் வேரை சிரசில் வைக்க பார்த்திராத தேவதைகள் வந்து மோதும்.

23. போத்தியென்ற சத்திச்சார ணையை வாங்க
பொருந்தியதோர் சங்கரமா நாளிற் சென்று
உத்தியெனும் நூல்கட்டி மந்திரந் தானும்
உரைத்திடவே ஓமப்பா ரபரமாந்தி
மாத்து மகாசக்தி கமல வல்லி
மாதா என்றுச் சமூலம் வாங்கி
நெத்தியெனும் பொடியாக்கி நித்தம் கொள்ள
நிலைத்தெந்த ஆயுதமும் தைத்திடாதே.

(இ-ள்.) சத்திச் சாரணையை வாங்க தை மாதம் முதல் நாள் (அயனம் முடிவுற்று அடுத்த அயனம் தொடங்கும் நாள்) அன்று பருத்தி நூலைத் தட்டி "ஓம் ரபரமாந்தி மாத்து மகாசக்தி கமலவல்லி மாதா" என்று மந்திரத்தைச் சொல்லி சமூலத்தி வாங்கி சூரணம் செய்து தினம் உண்டுவர எந்த ஆயுதங்களும் உடலில் தைத்திடாது.

24. தையாது இதுமூலி மேதிப் பாலில்
தாள்கொள்ளச் சலதோஷ மெல்லாந் தீரும்
பொல்லாத பூமிசக்க ரையை வாங்க
பூமிதனை வெட்டியே கண்டபோது

மையாறு கஜமுகற்குப் பூசை செய்து
மந்திரந்தான் யான்செபிப்பாய் தெய்யாது ரூபி
எய்யாமல் நமாவென்று வாங்கி வந்து
யுய்யாவின் பாலிலே கொள்ளுந் தானே.

(இ-ள்.) சத்திச் சாரணையை எருமைப் பாலில் கலந்து சாப்பிட சலதோஷம் எல்லாம் தீரும். பூமி சர்க்கரைக் கிழங்கை வாங்குவதற்கு பூமியை வெட்டிப் பார்த்து விநாயகருக்குப் பூசை செய்து "தெய்யாது ரூபி எய்யாமல் நமா" என்று மந்திரத்தைச் செபித்து எடுத்து வந்து பசுவின் பாலில் சாப்பிட்டுவர

25. கொள்ளவே சுக்கிலத்தை மேலே ஏற்றுங்
கொடியபெண்ணைப் புணர்ந்தாலும் விந்து வீழா
தள்ளவே ஆவின்நெய் கற்பங் கொள்ளத்
தசையுருக்கி எலும்புருக்கித் தீரும் தீரும்
வள்ளலே குதிரை வாலி' புல்லுமூலம்
வாங்கவே மந்திரந்தான் வழுத்திக் கேளுந்
தள்ளவே சடாயு சடாயு மதும
சடாய் வென்றுதான் வேரைக் கொள்ளே.

(இ-ள்.) சுக்கிலம் கட்டும். கொடிய பெண்களை புணர்ந்தாலும் வந்து விடாது. பசுவின் நெய்யில் காய கற்பமாக உட்கொண்டுவர தசையுருக்கி எலும்புருக்கி முதலிய வியாதிகள் தீரும். குதிரை வால்புல் மூலம் வாங்க மந்திரம் கூறுகின்றேன் கேள் "சடாய சடாய மதும சடாய்." என்ற மந்திரத்தைச் செபித்து வேரைக்கொண்டு வந்து,

26. கொள்ளவே பலிகொடுத்துக் குளிச மாடிக்
கட்டவே கெற்பந்தம் பித்துக் கொள்ளுஞ்
சொல்லியே தம்பனங்க ளெட்டு மூலி
சேராத தாடணத்தின் மூலி கேளு
வெல்லுமே நரிமிரட்டி அருக்க நாளில்
வேர்வாங்க நூல்கட்டிக் குருநாள் தன்னில்
மல்லுமோர் மந்திரந்தான் சடாயு சடாயது
மதும சடாய்சடாய் மருட்டித்தூதவு நூலே.

(இ-ள்.) பலிகொடுத்த குளிசம் ஆடி கட்ட நீண்ட காலம் தம்பித்துக் கொள்ளும். தம்பனத்தின் எட்டு மூலிகைகள் கூறினேன். தாடணத்தின் மூலிகைகள் கேள். நரிமிரட்டி மூலியின் வேரை வாங்க ஞாயிறு அன்று நூலைக் கட்டி செவ்வாய் 'சடாய சடாயது மதும சடாய்" என்று மந்திரம் செபித்து எடுத்துத் தூள் செய்து தூவி விட

27. தூவிவிடவே மிருகங்கள் துஷ்ட ரெல்லாம்
தூரத்தில் பறந்தோடும் துலை காணாதே
மாவிடவே மான்செவிக் கள்ளிக்கே தான்
மனமகிழ்ந்து கந்தபுஷ்பம் தூப தீபம்
தேவிடவே செய்தபின்பு கன்மம் வாங்கி
செப்புவேன் மந்திரந்தான் எண்ணி
ஓவிடைய ஆங்கார சத்தி தாவி
யுட்சாடி யுட்சாடி வென்று வாங்கே.

(இ-ள்.) மிருகங்கள், துஷ்ட மனிதர்கள் தொலை காணாது ஓடி விடுவர். மான் செவிக் கள்ளிக்கு மனம் மகிழ்ந்து வாசனையுள்ள புஷ்பம் தூபதீபம் செய்தபின்பு சாபம் நீங்கி "ஆங்கார சத்தி தாவியுட் சாடி யுட்சாடி" என்று மந்திரம் செபித்து வாங்கவும்.

28. ஓதியே ஈதுடனே சுடலை நீறு
மொன்றாகக் கிளிகட்டி வைத்து மைந்தா
வாதுசெய்த சத்துருவின் வாசல் கீழே
வைத்திடவே காணாமல் மறைந்து போகும்
தாவுசெய்து நாவடக்கம் வாயில் போட்டால்
தள்ளாதே ஆண்முறிவு வாங்குந் தானும்
போதுடைய ஓம்கார கோர ரூபி
மாயவிபூத யுட்சடாய் சடாய் வென்னே.

(இ-ள்.) இதனுடன் சுடுகாட்டுச் சாம்பலை ஒன்றாக முடிச்சுக் கட்டி வாது செய்த விரோதியின் வீட்டு வாசலில் கீழே வைத்துவிட காணாது மறைந்து போகும். வாயில் போட்டுக் கொண்டால் ஆண்

முறிவு வாங்கும். "ஓம் கார ரூபி மாயவி பூதயுட் சடாய் சடாய்" என்று

29. சடாய்வுவென்ன மொழிந்தேதான் வேரறாமல்
சன்னமுறு எருக்கிலையின் பஞ்சி லூட்டி
விடாய்வென்னத் திரியாக்கி நிம்பநெய்யில்
விளக்கேத்தி வைத்திருக்க பூதமெல்லாம்
மடாய்வுவென்ன வோடிப்போம் திக்குக் கெட்டு
அப்பனே இதுபூதஉச் சாடனமு மாகும்
வடாய்வுக்குச் சுண்டிக்கிக் காப்பு கட்டி
மந்திரந்தான் மொழிந்திடவே மைந்தா கேளே.

(இ-ள்.) மந்திரம் சொல்லி எருக்கன் வேரை அறுந்து போகாமல் எடுத்து எருக்குப் பஞ்சியில் ஊட்டி திரியாக்கி வேப்பம் நெய்யில் விளக்கேற்றி வைத்திருக்க பூதங்கள் எல்லாம் திசைகெட்டு ஓடிப்போகும். இது பூத உச்சாடணமுமாகும். சுண்டி என்கின்ற தொட்டால் சுணங்கிக்கு காப்புக்கட்டி சொல்வதற்கு மந்திரம் கேள்.

30. மொழியங்கோர் சொளிசெட் டாதே
முயங்கலி என்றுசொல்லிச் சமூலம் வாங்கி
அவியாம லுலர்த்தியேசமூலம் வாங்கித் தூளாயாட்டி
அதிற்பாதி கெந்தகப்பொடி கூடக் கூட்டி
பண்ணியத் தன்மாதா முலையில் தூவ
பார்க்குமுன்னே யிருந்ததன் மறையு மோடி
ஒளியாத உயர்க்கண் டங்கத்திரிக்கே
தாவருக் கேட்டைநாளில் காப்புக் கட்டே.

(இ-ள்.) "சொளிகெட்டா தேவி முயங்கலி" என்று சொல்லி சமூலத்தை வாங்கி உலர்த்தித் தூளாய் ஆட்டி அதில் பாதியளவு வாசனைப் பொடியைக் கலந்து செய்த உருவத்தின் மார்பகத்தின் மீது பொடியைத் தூவ பார்ப்பதற்கு முன்னே மறைந்து விடும். கண்டங் கத்திரியை கேட்டை நட்சத்திரத்தில் காப்புக் கட்டு.

31. கட்டியே வராகத்தைப் பலி கொடுத்து
கார்த்திகையின் அன்றைக்கு வாங்கும்போது
ஒட்டியதோர் மந்திரந்தான் தும தும
யுயாரிம நமராச உச்சா டாயா
வெட்டியே வாங்கிவந்து வெட்டுண் றோர்கள்
வீரபல்லுடன் கூட்டிப்பொ டித்துக் கொண்டு
தொட்டியே கிளறியதனைக் கொட்டி வைக்கக்
கோவுகருச் சாடனமாய் கூர்ந்து பாரே.

(இ-ள்.) பன்றியைப் பலிகொடுத்து கார்த்திகை நட்சத்திரத்து அன்று " தும தும யுயாரிம நமராச உச்சாடாயா" என்ற மந்திரத்தைச் சொல்லி பிடுங்கி எடுத்து வெட்டுண்டு இறந்தவர்களின் பல்லுடன் கூட்டிப் பொடி செய்து கொண்டு அதனைப் பிசைந்து கொட்டி வைத்துக் கொள்ள அதுவே உச்சாடணத்துக்கு முக்கியக் கருவாகும்.

32. பாரப்பா தேள்கொடுக்கன் சமூலம் வாங்க
பாடுகிறேன் மந்திரந்தான் ஓம்பட்சிச்சிவ ஓமென்று
பேரப்பா சொல்லியே பச்சை ஓந்திப்
பித்துடனே சேர்த்துவைத்து விஷமானாக் கால்
காரப்பா கண்ணிலிட விஷங் களோடுங்
கறந்தை யொன்றநாரக் கரந்தை வாங்க
ஆரப்பா மந்திரந்தான் அரிஅர வென்று
அடிலோடே பிடுங்கிவந்து நிழலு லர்த்தே.

(இ-ள்.) தேள் கொடுக்கன் சமூலத்தை வாங்குவதற்கு மந்திரம் கேள், "ஓம் பட்சிச் சிவஓம்" என்று சொல்லி எடுத்து பச்சை ஓந்திப் பிச்சுடன் சேர்த்து அரைத்து வைத்து விஷம் தீண்டியவர்கட்குக் கண்ணில் கலிக்கமிட விஷங்கள் நீங்கும். கரந்தை என்ற நாறு கரந்தையின் சமூலம் வாங்க மந்திரம் "அரி அர" என்று சொல்லி அடியோடு பிடுங்கி வந்து நிழலில் உலர்த்தி

33. உலர்த்தியே தூளாக்கி வைத்துக் கொண்டு
ஒருவேளை வெறுகடி வென்னீரில் கொள்ள
அலர்த்தியே நெய்யோடு மண்டலந்தான் தின்ன
ஆச்சரியம் கொட்டக் கரந்தை வாங்கி
நலத்தியதோர் மந்திரந்தான் ஏகிச்சுவ சுவா
நவமோகி வாகாய சீந்தி
நிலத்திலே நின்றுகொண்டு உருவைச் சொல்லி
நிழலுலர்த்த லாயுலர்த்தித் தூளா யாட்டே.

(இ-ள்.) தூள் செய்து வைத்துக் கொண்டு இரண்டு விரல் அளவு எடுத்து வென்னீருடன் நெய்யுடன் ஒரு மண்டலம் சாப்பிட எல்லாவித நோய்களும் நீங்கும். கொட்டக் கரந்தை அவ்வளவு சிறப்புடையது என்பதாம். ஆகாயச் சீந்தில் இருக்கும் இடத்தில் நிலத்தில் நின்று "சுவ சுவா நவமோசி" என்ற மந்திரத்தை செபித்தி ஆகாயச் சீந்திலைக் கொண்டு வந்து நிழலில் உலர்த்தி தூளாய் ஆட்டி

குறிப்பு: இதனைப் பொற்சீந்தில் எனவும், புல்லுருவி எனவும் சொல்வதுண்டு.

34. ஆட்டியே பழச்சாற்றி லுண்டபோது
ஆசையெனு மோகமுடனுச் சாடனமு மாகும்
நாட்டினென்றுட முச்சாடனுமு மெட்டுஞ் சொன்னேன்
நலமான ஏடனையிணை மூலி கேளு
காட்டினேன் கறுத்தகாக் கினையின் மூலம்
கடகராசிதான் சூரியனைத் தீண்டும் போது
மாட்டினேன் மந்திரந்தான் வாவித்து
வேட்சனாயா வரவா யென்னே.

(இ-ள்.) எலுமிச்சம்பழச் சாற்றில் சாப்பிட்டுவர மோகனமும் உச்சாடணமுமாகும். உச்சாடணம் எட்டும் சொல்லிவிட்டேன். ஏடணையின் (வித்வேசணம்) மூலிகை கூறுகின்றேன்.

கருங்காக்கணம் மூலத்தை கடகராசியில் சூரியன் பிரவேசிக்கும் போது "வாவித்து வேட்சணாயா வரவா" என்ற மந்திரத்தைச் சொல்லி

35. வாவெனவே பிடுங்கிவந்து குளிச மாடி
மாகாளி கொட்டத்தில் புதைத்த போது
கோவென்ற மன்னர்வித்து வேதனையு மாகுங்
கூறான வெள்ளைகாக் கணையை வாங்கப்
பாவென்ற மந்திரந்தான் நிற்சுளி வேஷனா
யாபாசுவாகா வென்றுபூர ணத்தில் வாங்கி
தேவென்ற நெய்வித்து வேஷணையு மாகுஞ்
சிவசிவா அருக்கினிலே திருகுக் கள்ளியாமே.

(இ-ள்.) பிடுங்கி வந்து குளிசத்தில் வைத்து வீட்டில் புதைத்து விட அதுவே அரச வித்துவேடணையுமாகும். வெள்ளைக் காக்கணையை வாங்க "நிற்சுளிவேஷணா யாபா சுவாகா" என்று சொல்லி எடுத்து நெய்யுடன் குளிசமாட வித்வேஷணமாகும். ஞாயிறு தினங்களில் திருகுக்கள்ளியை எடுக்க உத்தமம்.

36. கள்ளியென்ற திருகுக்கள்ளி தணிந்து: நின்றால்
காப்பதற்குக் கட்டியே அடவாய் வாங்கி
ஒள்ளியதோர் குக்குடந்தான் பலி கொடுத்து
உருவேத்து சோரசோரபூத உச்சாடனக்க ஸ்ரீதி சுவாகா
யுள்ளியே சொல்லியே குளித மாட
ஓடுமடா பூதமொடு யெட்சணையு மாகும்
வள்ளியெனும் செங்கத் தாரி வாங்க
மைந்தனே செவ்வாயில் காப்புக் கட்டே..

(இ-ள்.) தாழ்ந்து நிற்கின்ற திருகுக்கள்ளிக்கு காப்புக் கட்டி கோழியைப் பலிகொடுத்து ";சோரசோர பூத உச்சாடணக்க ஸ்ரீதி சுவாகா' என்ற மந்திரத்தை உருவேத்தி எடுத்து குளிசமாட பூத பிசாசங்கள் ஓடும். இதுவே எட்சனியுமாகும். செங்கத்தாரி சமூலம் எடுக்க செவ்வாய்க் கிழமையில் காப்புக்கட்டி

37. கட்டியே செம்மறியே பலி கொடுத்து
கடிசுக்ர வாரத்தில் மந்திரந்தான் கேளு
கொட்டிரத்த வாதிரத்த சாமுண்டி
நாவிக்கோத் தெட்சனாய் சுவாகா வென்று
வெட்டியே பிடுங்கியதை வைத்துக் கொண்டு
வீறாகத் தலைமாட்டில் புதைத்தால் போகும்
மாட்டியே யாருமில்லை காட்டேரண்ட மூலி
வெட்டிக் குழிரொம்பக் கோசலத்தை வாரே.

(இ-ள்.) செம்மறி ஆடு பலி கொடுத்து சுக்கிரவாரத்தில் "ரெத்தவாதி ரத்தசாமுண்டி நாவிகோத் தெட்சணாய் சுவாகா" என்று மந்திரம் செபித்து ஏரண்டம் பிடுங்கி வைத்துக் கொண்டு தலைமாட்டில் புதைத்து வைத்தால் யாரும் இல்லாமல் போகும். ஏரண்ட மூலியின் அருகில் குழி வெட்டி அதில் நிரம்ப கோமூத்திரம் விடவும். (ஏரண்டம் = ஏரழிஞ்சில்)

38. வார்த்ததற்கு மத்திரந்தான் நொண்டி யிந்து
வாள்முகியீ சுபரி சறுவ பூதம்
பார்த்ததற்குப் பட்சிவித்து வேட்சினையா வென்று
பருவேரை வாங்கியே குளிச மாடி
கோர்த்ததற்குக் கட்டவேப் பூதப் பிரேதங்
கொத்தோடே காடுவிட்டு ஓடிப் போகும்
கார்த்ததற்கு கீழ்க்காய்க்குக் காப்புக் கட்டி
கடியபுதன் கிழமையிலே கட்டு கட்டே.

(இ-ள்.) "நொண்டியிந்து வாள் முசியீ சுபரி பூதம் பட்சி வித்து வேட்சணைய" என்ற மந்திரம் செபித்து பெரிய வேரை வாங்கி குளிசம் கட்டிக் கோர்த்துக் கட்டி விட பூதப் பிரேதம் கொத்தோடு காட்டைவிட்டு ஓடிப்போகும். கீழ்க்காய் நெல்லிக்கு புதன் கிழமையில் காப்புக் கட்டவும்.

39. கிளமையென்றால் குருநாளில் பிடுங்கும் போது
கிளிர்தேங்காய் உடைத்தங்கே மந்திரந்தான் ஓது
ஆள்மையென்று பூமித் தெட்சனி
அஞ்சன மூலிச் சகல சருவப்
பளமைபல பதாரந்தெரியச் சுவாகா வென்று
பகராமல் கருக்கியே முன்தேங்காய் நெய்யில்
வளமைபெறக் குளப்பியே முன்கையில் போட
மண்ணிற் புதைத்தபொருள் காணும் மறந்திடாயே.

(இ-ள்.) குரு வாரத்தில் பிடுங்கும் போது தேங்காய் உடைத்து "பூமிதெட்சணி அஞ்சனமூலி சகலசருவப் பதாலஞ்தெரியச் சுவாகா" என்ற மந்திரம் செபித்து பிடுங்கி எடுத்து அதனைக் கருக்கி தேங்காய் நெய்யில் குழப்பி முன் கையில் போட மண்ணில் புதைத்த பொருள் தோன்றும் என்பதனை மறவாதே.

40. மறைந்திட ஆடுதின்னாப் பாளை வாங்கி
மைந்தனால் காப்புவைத்து அருக் கனாளில்
குறைத்திடா துள்ளுமறி பொலி கொடுத்து
சூரசருவ வித்துவேஷணி யாதாரந் தன்னை
அறைந்திடாத் தெரிச் சுவாகா வென்று
வோதியே வெட்டுண்ணி ஓடு தன்னை
அறைந்திடாப் பொடிசெய்து தீண்டாப் பாளை
அப்பனே சட்டியிற்குள் கருக்கி டாயே.

(இ-ள்.) ஆடு தீண்டாப் பாளை வேரை வாங்கி ஞாயிறு தினத்தில் காப்பு வைத்து துள்ளுகின்ற செம்மறி ஆட்டுக் குட்டியைப் பொலி கொடுத்து "சடர சருவ வித்துவேஷணி யாதாரந் தன்னைத் தெரிச் சுசவாகா" என்று செபித்து வெட்டுக்கிளி ஓட்டை பொடி செய்து அதனையும் மேற்கண்ட ஆடுதீண்டாப்பாளைக் காப்புதனையும் சட்டியிலிட்டு கருக்கிடவும்.

41. வைத்ததனைப் புத்துத்தேன் கொண்டு ஆட்டி
வாள்கரத்தில் திலதந்தீட்டிடவே சறுவ அஞ்சனமுமாகும்
வைத்ததனை ஆனைக்காஞ் சொரியை வாங்கி
மாவெலியின் பாசாணம் நேரா யாட்டி
வைத்ததனைப் புருவெலும்பு போட்டோ யானால்
வளவளமனையை விட்டேகிப் போவார் பின்னும்
வைத்ததனைக் குஷ்டநோய்க் கீந்தா யானால்
மைந்தனே பதினெட்டுக்குஷ்டந் தீருங் காணே.

(இ-ள்.) அதனை புதிய தேன் கொண்டு அரைத்து கையில் திலதந்தீட்டிட சர்வ அஞ்சனமுமாகும். அதனுடன் ஆனைக் காஞ்சொரியையும் எலிப்பாடாணமும் சமனாய் சேர்த்து அரைத்து வைத்துக்கொள்ளவும். அதனை புறாவெலும்புடன் தடவிப் போட்டால் வீட்டைவிட்டு வெளியில் போய்விடுவார்கள். வீடு பாழடைந்து விடும். அதனைக் குஷ்ட நோய் பதினெட்டுக்கும் மருந்தாகவும் பயன்படுத்த நோய் தீரும்.

42. காணவே மூலிகைகணைக்கு மெட்டுஞ் சொன்னேன்
காசினியி லாசிரிசின மூலி கேளு
தோணவே துடரிக்குள் எருக்க நாளில்
சோமிறுகே சுபரிபுகள்சுவாகா வென்று பிடுங்கிவந்து
யூணவே மோதிரம்போல் போட்டுக் கொண்டு
ஓம்வரு மிருகத்தை வாவா வென்னே.

(இ-ள்.) எட்டு வித மூலிகைகளையும் கூறிவிட்டேன். மேலும், லாகிரிசினமூலி (ஆகருடணம்) மூலிகையைக் கூறுகின்றேன். கேட்பாயாக. இண்டு என்கின்ற (துடரி) மூலிகையை ஞாயிறு தினங்களில் "சோமிறுகே சுபரிபுகள் சுவாகா" என செபித்துப் பிடுங்கி வந்து மோதிரம் போல் செய்து போட்டுக் கொண்டு மிருகத்தை ஓம் வாவென அழைக்கவும்.

43. வாவென்றால் மிருகசுவாகா கிருஷ்ணமு மாகும்
வளர்செவ் வாயிலே காப்புக் கட்டிப்
பாவென்ற பதினைந்து தினமும் நிதானப்
பண்பாகப் பூசித்து வரவு நாளில்

கோவென்ற வுள்ளோட்டி பிறவோட்டித் தன்னை
குளிரவே பொங்கலிட்டு மந்திரஞ் சொல்லித்
தேவென்ற குக்குடத்தைப் பலிக் கொடுத்து
திறவிடைய சுரோணத்தே செப்பு றேனே.

உள்ளொட்டி- பிசினொட்டியிலை ஆகருஷண மூலி.

(இ-ள்.) கிருஷ்ண பட்சமாகிய தேய்பிறை செவ்வாய் அன்று காப்புக்கட்டி பதினைந்து தினம் "மிறுக சுவாகா" எனப் பூசித்து வந்து ஆகிருஷ்ண மூலியாகிய உள்ளொட்டி (பிசினொட்டியிலை), புறவொட்டி இவ்விரண்டு மூலிகைகளையும் பொங்கலிட்டு மந்திரம் சொல்லி கோழியைப் பலி கொடுத்து வேரை வாங்கி,

44. சுரோணிதஞ்சேர் சேலையிலே வைத்து வேரை
சுருளாமல் திரியாக்கி நிம்ப நெய்யில்
சுரோணிதஞ்சேர் விளக்கேத்தி சாம மட்டுந்
தோகையரை வாவென்று நினைத்த போது
சுரணைதப்பி தன்னிடத்தே வந்து சேர்வாள்
சுருதியுறச் சிறுமுன்னை மூலம் வாங்கச்
சுரோணிதஞ்சேர் கூழ்ப்பாண்டம் தனைக் கொடுத்து
சோமனுட கிரணத்தில் தியானங் கேளே.

(இ-ள்.) இரத்தம் தோய்ந்த துணியில் வேரை வைத்து திரியாகச் செய்து வேப்பெண்ணையில் விளக்கேற்றி சாம நேரம் வரை தோகையரை நினைத்த போது நினைவு இழந்து தன்னிடம் வந்து சேருவாள். சிறு முன்னை வேரை வாங்க பூசணிக்காய் பலி கொடுத்து சந்திர கிரணத்தில் தியானம் கேள்.

45. கேள்சறு கருஷணி சுவாகா வென்று
கிரகித்து நிழலுலர்த்தித் தூளா யாட்டி
வெள்ளெருக்கம் பஞ்சில் வைத்து
விளக்கேத்திபா பார்த்திருக்க நினைத்த தெல்லாம்
வாளப்பா அவருடைய வாகனமு மேறி
வந்துநிற்கும் முன்னேதான் மைந்தா பாரு
ஆளப்பா யார்வந்து பார்த்தாலுந் தான்
தோற்றுமடா அவரவர்கள் முன்னே தானே.

(இ-ள்.) " சறுகருஷணி சுவாகா" என்று சொல்லி எடுத்து நிழலில் உலர்த்தி தூளாயாட்டி வெள்ளெறுக்கம் பஞ்சில் வைத்து விளக்கேற்றி பார்த்திருக்க நினைத்த தெய்வங்கள் அவைகளுடைய வாகனங்களில் ஏறி முன்னதாக வந்து நின்று தோற்றமளிக்கும்.

46. தோற்றுமடா திருமேனி தனித்து நின்றால்
சுத்திசெய்து பால்பொங்க லிட்டுப் பின்னு
மாற்றமுடன் கலங்கொம்பால் கெல்லிக் கொண்டு
மந்திரந்தான் துட்டமிருகா கருஷணி
ஏற்றமுயர் விச்சுவாகா திவாததாச் சுவாகா
வென்றுசொல்லி வாங்கியே வாயில் போட
ஆத்தமுடன் மிருகங்கள் தன்னை நோக்கி
அழைத்துடனே வருமிருகா கருஷணமு மாமே.

(இ-ள்.) குப்பைமேனி தனியாக (செடிகளுடன் சேர்ந்திராத) வளர்ந்திருப்பதனைப் பார்த்து அதன்மீது தண்ணீர் தெளித்து சுத்தம் செய்து பால் பொங்கலிட்டு படைத்துப் பின்னர் கலைமான் கொம்பினால் கொல்லிக் கொண்டு "துட்டமிருகா கருஷணி விச்சுவாகா திரவாததாச் சுவாகா" என்று மந்திரம் சொல்லி வேரை வாங்கி வாயில் போட்டுக்கொண்டு மிருகங்களை நோக்கி வாவென அழைத்தால் அவைகள் மயங்கி வரும், இதுவே மிருகா கருஷணமுமாகும்.

47. ஆமப்பா கோகில அஷ்டமி நாளில்
வெள்ளிஆம் கிருஷ்ணன் பிறந்த வாரம்
மோமப்பா இன்னாளில் தொட்ட தெல்லாம்
உதவுமடா யுடன் சித்திக் காப்புக் கட்டி
வேமப்பா மறுபக்கம் அஷ்டமி நன்று
விளம்புகிற மந்திரந்தான் விளம்பக்கேளு
சேமப்பா பட்சிபட்சி ஓம்பட்சி சிவபட்சி ரோஷபட்சி
செய்ராச கருஷணிருமாதங்கி வாதவாச்சுவாகா
வென்னே.

(இ-ள்.) கிருஷ்ணன் பிறந்த நாளில் வெள்ளியன்றும் தொட்டதெல்லாம் உடன் சித்திக்கும். மறுபக்கம் அஷ்டமி திதி நன்று. இந்நாளில் நீர்முள்ளிக்கு காப்புக் கட்டி" பட்சி பட்சி ஓம் பட்சி சிவபட்சி ரோஷபட்சி செய்ராச கருஷணி மாதங்கி வாதவாச்சுவாகா" என்று.

**குறிப்பு**: கோகிலம் - நீர்முள்ளி எனப் பல இடங்களில் சாம்பசிவம் பிள்ளை அகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. வசிய மூலிகைகளுள் அழுகண்ணி வேளை எனவும் வருகின்றது.

48. வாதமென்று சொல்லியே மூலம் வாங்கி
மைந்தனே சிரசின்மேல் வைத்துக்கொண்டு
வீரத்தில் இராசர்களைக் கையைக் காட்டி
விரும்பியவர் சொன்னபணி ஏவல் கேட்பார்
பாரத்த சிறியாநங்கை சமூலம் வாங்கப்
பாராமல்யுனென்று பேதனமாம் மூலிதன்னை
உரைக்கிறேன் கோழியாவாரையை வாங்க
வானென்ற சோதிநாள் காப்புக் கட்டி
மாறாத சித்திரையில் வாங்கும் போது
தேனென்ற மந்திரந்தான் அரியதேவி பிர்மதேவி
சருவதே பேரிநமா வென்று வாங்கே.

(இ-ள்.) சொல்லி வேரை வாங்கி சிரசின் மீது வைத்துக் கொண்டு அரசர்களை கையைக் காட்டிக் கூப்பிட அவர்கள் வந்து பணியாளர் போல் சொன்ன வேலைகளைச் செய்வர். சிறியா நங்கை சமூலம் வாங்க,

49. கொண்டுவந்து மனையில் வைக்கத்தெய்வ பேதங்
கூறாகச் சிரசில்வைக்கத் தலங்கள் பேத
மாண்டுபுரி செம்பசளை வாங்கும்போது
திருவாதிரையி னன்றுகாப்பு கட்டி

சென்றுபுரி ஸ்ரீயுஞ்ஸ்ரீ யுமென்று
சிறக்கவே மூலமது வாங்கி வந்து
உண்டுபார் பட்சமொன்று சாயம் பேத
உத்தமனே வைத்திருந்தா லுடன்பேதம் பாரே.

(இ-ள்.) குடியிருக்கும் மனையில் வைக்கத் தெய்வ பேதங்கள் உண்டாகும். சிரசில் வைக்க இடபேதங்கள் உண்டாகும். அழுகண்ணி வாங்கும்போது திருவாதிரை நட்சத்திரத்தில் காப்பு கட்டி "சென்றுபுரி ஸ்ரீயும் ஸ்ரீயும்" என்று மந்திரம் சொல்லி வேரை எடுத்து வந்து பதினைந்து தினங்கள் சாப்பிட்டாலும், வைத்திருந்தாலும் உடல் பேதமாகும்.

50. பேதமாம் வட்டத்துத்தி பெரிய மூலிப்
பெருவேரில் காப்புக்கட்டி சோதி நாளில்
மேதநல மந்திரந்தான் லலலலலலலல வென்று
பிடுங்கியதைக் காடியாலாட் டிக்கொண்டு
பேதனந்தான் காலிலே தடவ நீயும்
பெருந்தீயில் மிதித்திட்டு நடக்க லாகும்
பேதனமாஞ் சங்கம்வேர் வெள்ளி யன்று
பிடுங்குதற்கு சாவலங்கே பலியிடாயே.

(இ-ள்.) வட்டத்துத்தியை பெரிய செடியைப் பார்த்து அதன் பெரிய வேரில் காப்புக்கட்டி ஞாயிற்றுக்கிழமை உதயத்தில் லலலலலலலல வென்று மந்திரம் சொல்லி பிடுங்கியெடுத்து காடிவிட்டு அரைத்து காலில் தடவ பேதனமாகும். பெரிய தீயில் நடக்கலாம்.

வெள்ளிக்கிழமையன்று சங்கம் வேர் வாங்குவதற்கு சாவல் கோழியைப் பலியிட்டு,

51. பலியிட்டு தூபமுடன் தீபங் காட்டி
பாலாசம் நேமிச்சுமந் திரத்தைச் சொல்லு
பலியிட்டுப் பூதப்பேதி மாதாபேதி யென்று
பெயரிட்டு வாங்கியே வைத்துக் கொண்டு

கலியிட்ட வேய்பூதம்வா ராதே நின்றால்
காட்டடா பேதனமாய்க் காணாதோடும்
பலியிட்ட மாவிலிங் கைக்கு வட்சித்து
காப்புக்கட்டி வாங்கியே மதுவொடு சாத்தி.

(இ-ள்.) தூபதீபங் காட்டி 'லலலலலலலல" மந்திரம் சொல்லிப் பலியிட்டு "பூதப்பேதி மாதாபேதி" யென்று பெயரிட்டு வாங்கி வைத்துக்கொண்டு காட்ட காணாதோடும்.

மாவிலிங்கின் மூலத்திற்குக் காப்புக் கட்டி, மது முதலியன வைத்து,

52. சிரசில்வைக்க ஐயன்முதல் துர்க்கைக் காளி
சேரவிழுந் தோடுமடா திக்கு கெட்டு
நிரையுற்ற நீர்மேல் நெருப்பு வாங்க
நீமகனே கண்ணிநூல் காப்புக்கட்டி
பசையுற்ற தினைமாவுந் தேனும் நல்கிப்
பலிசெஞ் சாவல்மந் திரமோ கேளு
சாசக்கினி ரூபிஅக்னிரூபி அக்னி உத்சரி
சர்வருக்கி ரகவாணிசர்வேஷபரி நமாவென்று சாத்தே.

(இ-ள்.) சிரசில் வைத்துக் கொள்ள ஐயன் முதல் காளி, துர்க்கை, வரை முதலியன திக்கு கெட்டு ஓடும். நீர்மேல் நெருப்பு வாங்க முசுச்சு கட்டி நூலால் காப்புக்கட்டி தினை மாவும், தேனும் பிசைந்து வைத்து சிவப்பு சாவல் பலி கொடுத்து "சாசக்கினி ரூபி அக்கினிரூபி அக்னிஉத்சரி சர்வருக்கிரக வாணி சர்வேஷ பரிணாமா" வென்று மந்திரஞ் சொல்லி

53. நமாவென்று கட்டவே சத்துருவி மாளும்
நன்றாகவறுமை எல்லாம் நாச மாகும்
நமாவென்று சீந்திதன் மூலங் கொள்ள
நாட்டுகிறேன் முறைதன்னை நன்றாய்க் கேளு

நமாவென்று சிந்திக்கும் வெள்ளி நாளில்
நாட்டுவாய் காப்பங்கே நாட்டிப் பின்னும்
நமாவென்று மந்திரந்தான் ரரரரரர வென்று
நாலிரண்டாம் வாரத்தில் குளிதமாடே.

(இ-ள்.) குளிசமாகக் கட்டிவிட விரோதிகள் மாண்டு போவார். வறுமை நீங்கும். சீந்தில் மூலம் எடுக்க வெள்ளியன்று காப்புக் கட்டி "ரரரரரர" வென்று மந்திரம் சொல்லி எட்டாவது வாரத்தில் குளிசமாகக் கட்டவும்.

54. குளிசமிட்டு மூலிகைதான் சிரசில் வைத்துக்
கூசாமல் சத்துருவை எதிரே பேசக்
குளிசமிட்ட தன்மைபோல் வணங்கி நிற்பார்
குணமுடனே கூசியே நின்று தானும்
குளிசமிட்டக் குளிராட்டிப் பறந்து போவார்
கூசாமல் பாதிரையினவ் வேர் தோண்டிக்
குளிசமிட்ட நூல்கட்டி விஞ்சை சொல்லுங்
கோழிமுட்டை பலியிட்டுப் போற்றி போற்றே.

(இ-ள்.) குளிசமிட்ட மூலிகையைச் சிரசில் வைத்துக் கொண்டு விரோதிகளிடம் கூசாமல் நின்று பேச வணங்கி நிற்பர். காணாது போவார்கள். பாதிரியின் வேரைக் குளிசமிட்ட நூலைக்கட்டி கோழி முட்டைப் பலியிட்டுப் போற்றி.

55. போற்றி மானதிபர் பேதினி பூறுவ
பார்பதி பஞ்சயி சுவாகா வென்று
போற்றியொரு வெட்டாக வாங்கி வந்து
இளவெந்நீர் தனில்கொள்ளச் சுரங்கள் தீரும்
மாற்றமது பேதனத்தின் மூலி யெட்டும்
வகையுரைத்தேன் மாரணத்தின் மூலி சொல்வேன்
காத்தகுகன் கார்த்திகையின் கிழங்கு வாங்க
கார்த்திகை நாள்தன்னில் பலி செய்வாயே.

(இ-ள்.) "மானதிபர் பேதினி பூறுவ பார்பதி பஞ்சயி சுவாகா" என்று சொல்லி ஒரு துண்டாக கொண்டு வந்து இளவெந்நீரில் கொள்ள சுரங்கள் தீரும். பேதனத்தின் மூலிகை எட்டும் சொன்னேன். மாரணத்தின் மூலம் கூறுகின்றேன். கார்த்திகை கிழங்கு எடுக்க கார்த்திகை நாளில் பலிசெய்து.

56. செய்த சரவணபவா நமா வென்றுத்
திறமாக வாங்கியே வைத்துக்கொண்டு
வெய்தக் கடுவிஷந்தீண்டில் கண்ணில் தீண்டு
மீளுமடா சன்னிவகைகொண்டா யானால்
யெய்யாத விஷமீளும் பின்னை யொன்று
யாரேனும் பேய்பிடித்தால் நாவி போலக்
கோயாத சிறுவுறுப்பண்ணி அய்யன் காலில்
குளித்துவைக்க மாரணமாங் கூடு கூடே.

(இ-ள்.) "சரவணபவா நமா" என்று திறமாக வாங்கி வைத்துக் கொண்டு கடுமையான விஷங்கள் தீண்டினால் கண்ணில் தீண்டவும். சன்னி மீளாத விஷங்கள் மீளும். பேய் பிடித்தவர்கட்கு நாவில் போல சிறிய உருவம் செய்து அதன் காலில் மறைத்து வைக்க மாரணமாங் கூடு.

57. குளித்துவைக்க மந்திரந்தான் அரஹரா வென்று
கூறியே இரண்டுபத்து சகஸ்திர மோதி
வளுத்தி நிற்பளவில் மாரணமு மாகும்
மைந்தனே நிறுவிஷத்தை வியாழ நாளில்
அளுத்தியே வெட்டுண்ணி மண்டை ஓட்டில்
அட்சரந்தான் நிறுவிஷத்தா லரைத்துக் கீற
மளுத்தியே நாமிருகபட்சி தாம மாய்
இனிசுவா காவென்று எழுதி டாயே.

(இ-ள்.) இதற்கு மந்திரம் "அரஹரா" வென்று இருநூறு தடவை ஓதி நிற்க மாரணமாகும். நிறுவிஷத்தை வியாழன் அன்று தோண்டி

மண்டை ஓட்டிடல் அட்சரத்தை நிறுவிஷத்தால் அரைத்துக் கீறி "நாமிருக பட்சி தாமாமாய் இனி சுவாகா" என்று எழுதவும்.

58. எழுதியே கிளைவைத்துத் திரணை போட்டு
இயல்பாக மேலிருந்து மாயானம் செல்வாய்
சுழுதிலி கோரகோர சங்காரராய் வென்று
சாரணையை மாற்றும் போது மைந்தா
தொழுது இருப்பளவில் நினைத்த வண்ணம்
தூளாகி மாண்டுபோம் சொல் லொண்ணாது
அழுது நீ திரியாதே கருஞ்சுரைக் கொள்ளு
ஆச்சரிய நோய்களெல்லாம் மாரணமாமே.

(இ-ள்.) சிறு திரணை போட்டு மேலிருந்து கீழாக மாயானம் செய்யவும், "கோர கோர சங்காரராய்" என்று சாரணையை மாற்றும்போது இருந்த அளவிலேயே நினைத்த வண்ணம் மாண்டு போம். கருஞ்சூரை மூலியைக் கொள்ள ஆச்சரியமாக நோய்களெல்லாம் குணமாகும்.

**குறிப்பு**: கருஞ்சூரை - செங்கத்தாரி

59. மாரணமாம் மோடிவைக்கப் பிரதமை யன்று
மணிதனை நியமித்துக் காப்புக் கட்டி
காரணமா யறுக்கநாளில் தியாச்சி யத்தில்
கவர்ந்து கொண்டு வேர்பிடுங்கி நீரி லாட்டி
வேரணமா மிருகத்தின் பேரைச் சொல்லி
விட்டிடவே மாரணமு மாகுந் தானே
மாரணமாங் கொடுவேலி சித்திரை நாளில்
அப்பனே காப்பிட்டுச் சேதி கேளே.

(இ-ள்.) பிரதமையன்று நேரத்தை குறித்துக் காப்புக் கட்டி ஞாயிறு அன்று தியாச்சியத்தில் குனிந்து கொண்டு வேரைப் பிடுங்கி நீரில் ஆட்டி எடுத்து மிருகத்தின் பெயரைச் சொல்லிவிட மாரணமாகும். சித்ரமூலத்தை சித்திரை நட்சத்திரம் நாளில் காப்புக் கட்டி,

60. சோதியென்று பலியிட்டுப் பூசை செய்து
சொல்லுவேன் மந்திரத்தைச் சூட்சமாக
ஆதியென்ற அக்கினிரூபி அத்தரூபி
அதிகச் சுவாலி யம்மா வென்று
ஓதியே வாங்கிவந்து பாலில் கொள்ள
ஒருமிக்க நோய்தீரும் புண்ணும் தீரும்
வாதியே நச்சுப்புல் அருக்கன் நாளில்
மனமகிழப் பூசித்துக் காப்புக் கட்டே.

(இ-ள்.) பலியிட்டுப் பூசைசெய்து, 'அக்னிரூபி, அத்தரூபி, அதிகச்சுவாலி, அம்மா' வென்று மந்திரம் ஓதி எடுத்துப் பாலில் கொள்ள எல்லாவித நோய்களும் தீரும். புண்கள் ஆறும். நச்சுப் புல்லை ஞாயிறு தினத்தில் பூசை செய்து.

61. பூசையொடு மந்திரந்தான் விரிகினவிசகரி யென்று
போற்றியே மூலத்தைக் குளிச மாடி
ஆசையொடு தீண்டுவிஷமே தானாலு
மடவாகத் தடவிவிட மாரணமுமாகும்
மாசையறு மருதோன்றி வாங்கவே கேள்
வளர்கிராண வேளையிலே காப்புக் கட்டி
காசைவிடும் மோகனத்தில் வெட்டி வந்து
காலரவே யுலர்த்தியதை நொறுக்கி டாயே.

(இ-ள்.) " விரிகின விசகரி" என்று மந்திரம் சொல்லி மூலத்தை எடுத்துக் குளிசமாடி. தீண்டிய விஷம் எதுவாயினும் தடவிவிட மாரணமாகும். மருதோன்றியை வாங்க சந்திர கிரகண வேளையில் காப்புக்கட்டி வெட்டி (சமூலத்துடன்) எடுத்து உலர்த்திச் சிறுக நொறுக்கி எடுத்து

62. நொறுக்கி பாண்டத்தில டைத்து வைத்து
நோற்பமாய் பூத்தைலம் இறக்கி வாங்கி
தருக்கியே குப்பியிலே வைத்துக் கொண்டு
சாற்றுவேன் மந்திரந்தான் ரெண்டு பத்து

புருக்கியே முரகனிசுவாயும் பட்டென்று
போற்றியே தயிலத்தைச் சுற்றி வந்து
மருக்கியே வராகமொடு ஆடு கோழி
வகைவகையாய் பலிகொடுத்து சுத்தி பண்ணே.

(இ-ள்.) ஒரு பாண்டத்தில் முறைப்படி குழித்தைலம் இறக்கி ஒரு புட்டியில் வைத்துக் கொண்டு "முரகனி சுவாயும் பட்" டென்று இருபது தடவை மந்திரம் செபித்து தயிலத்தைச் சுற்றி வந்து பன்றி, ஆடு, கோழி இவைகளை வகை வகையாய் பலி கொடுக்கவும்.

63. சுத்தமுள்ள தலத்திலே அரைத்துக் கொண்டு,
சொல்லுகிறேன் தொட்டனைத் திலதந் தீட்டி
ஏற்றமுள்ள தேவதையாள் படித்தபிரை
யிருமெனவே பார்த்திருக்கப் போறே னென்றுங்
கத்தியே மறைத்துவிடும் சத்துருவைப் பார்த்தால்
கண்கெட்டுப் போய்விடுவர் க்ஷணத்திலே தான்
பற்றியே அறுபத்து நாலு மூலி
பாடினேன் அஷ்ட்டகற்மம் பாடினேனே.

(இ-ள்.) தேவையான இடத்திலேயே தைலத்தைத் தொட்டு திலதந் தீட்டிவிட பேய்ப்பிடித்தவரை இரு என்று சொன்னவுடன் போகிறேன் என்று கூறி மறைந்து விடும். விரோதியைப் பார்த்தால் கண் கெட்டுப் போய்விடுவார். அறுபத்து நாலு மூலிகையும் பாடிவிட்டேன். இதுவே அஷ்ட கற்மம் ஆகும்.

64. பாடினேன் மந்திரதந் திரமுங் கூடப்
பிரியாமை நேமமெல்லாம் பருவமாக
ஊடினேன் திதிராசிநாளுஞ் சொன்னேன்
உற்பணமாம் வேளையுட உறவுஞ் சொன்னேன்
நாடினேன் இதுவெல்லாம் சத்திமார்க்கம்
நலம்பெரிய சிவமார்க்கம் விதியைச் சொல்வோம்
தேடினேன் அண்டபகிரண் டந் தப்பாமல்
சிதம்பர மார்க்கத்துக் கதி காணேனே.

(இ-ள்.) மந்திரம், தந்திரம், நியமங்கள், திதி, ராசி, வேளை இவைகள் எல்லாம் சத்தி மார்க்கங்கள், சிவ மார்க்கம், அண்டபகிரண்டங்களில் சிதம்பர மார்க்கம் காணல்

65. எதிரில்லா ஐந்தெழுத்தும் ஐந்து முகமாகி
ஏகமாய் ஒருநூறு இருபத்தைந்தாம்
எதிரில்லை ரவிஞ்சையாக கலைக்கி யானமாகி
இதமாக இரண்டுக்கும் முன்னே நிற்கும்
எதிரில்லா சிவமார்க்கம் தானுமாகி
எல்லாமு மாகிநிற்கும் தம்மைபாரே
எதிரில்லா மந்திரத்தின் மகிமை தன்னை
ஏற்றுகிறேன் நோவொன்றுக் கிருபத்தைந்தே.

(இ-ள்.) ஐந்தெழுத்துக்களும் ஐந்துமாகி நிற்கும். அதுவே ஒரு நூறும், இருபத்தைந்தாகவும் விரியும். அதுவே கலைக்கியானமாகும். அதுவே ரேசகபூரகம் இரண்டுக்கும் முன்னே நிற்கும். அதுவே சிவமார்க்கமுமாகும். அதுவே தானேயுமாகும். அதுவே மந்திரமுமாகும்.

66. ஐந்துமுக மொவ்வொன்றுக் கிருபத்தைந்து
அறுபத்து நாலுசித்தம் ஆடி நிற்கும்
பஞ்சமுகமே இருந்தபூர ணத்தை சேர்க்கும்
பராபரனாம் வாணாளுமாறு தலமும் பாயுந்
துஞ்சாது ஒருநாளும் வந்து தோன்றும்
சுந்தருக்கு இந்தமுறை துடர்ச்சி யாக்கும்
பிஞ்சாகும் காயாகும் பழமு மாகும்
பேசரிய பலகோடி அண்டமாமே.

(இ-ள்.) ஐந்து முகங்கட்கும் ஒவ்வொன்றுக்கு இருபத்தைந்து நின்று 64 சித்தும் ஆடி நிற்கும். ஐந்து முகமே பூரணத்தை சேர்க்கும் பராபரத்தில் ஆறுதலமும் பாயும். ஒரு நாளைக்கு இவை அனைத்தும் வந்து சேரும்.

67. ஆமப்பா அட்சரங்கள் ஐந்து பின்னே
ஐம்பத்தோ ரட்சரமாய் விரிந்து நிற்கும்
ஓமப்பா ஒவ்வொன்றாய் வழுத்த வென்றால்
உரையேது கரையேது வார்த்தை யேது
உரைப்பார் அறிந்தமட்டும் சொல்லவுங் கேள்
நாதாக்கள் தவறாமல் பார்த்திட்டாரே.

# வைசூரி சாத்திரம்
## (அம்மை நோய்)

1. பூரணமாய் நீயென்ற சோதி பாதம்
போற்றிசெய்து தினம்தினமும் புகழ்ந்து ஏற்றி
காரணமாய் மாலவனுந் தேடி காணாக்
கடவுள்பதம் போற்றிசெய்து கருணை மெத்த
வாரணமால் மருகனெனு முருகன் கந்த
னடியினைப் போற்றிசெய்து அன்பி னாலே
வாரணமு மதம்பொழியும் ஐங்கரனே நித்தியம்
மனோகரமா மறுதினமும் வணங்கி யேத்தே.

(இ-ள்.) பூரணமாகி நின்ற சோதியை தினம் தினம் புகழ்ந்து போற்றி, மாலவனும் காணா கடவுள் பதம் போற்றி, கருணை மிகுந்த முருகன் அடியினைப் பணிந்து போற்றி, அன்பினால் ஐங்கரனாகிய கணபதியைப் போற்றி செய்வோம்.

2. யேத்தியே போற்றிசெய்து பின்புகொள்ள
இதமான வைசூரியென்றும் குருநோ யென்றும்
மாத்தியதோர் போடகமா மறையே என்றும்
மகிழ்வாக நால்வருக்கும் பிறந்த ரோகம்
சாத்தியதோர் சாத்தியமு மாசாத்தியமுங் கூட
தருவாக இவர்களுக்குள் பிறந்து தானே
பாத்திடுகில் அவரவர் பேரே கேட்கில்
பரிவாக இருநான்கு மூன்றுமாமே.

(இ-ள்.) வைசூரி என்றும், குரு நோயென்றும் கூறுவர். இவற்றில் சாத்தியம் அசாத்தியம் அவைகள் பதினொன்றாகும். அவைகளின் பெயர்களைக் கேட்பாயாக.

3. ஆமென்ற வைசூரியது வருவதேது
அழகான காரணங்காண யேதோ வென்னில்
வேமென்ற சரீரத்தில் வேகம் மிஞ்சி
வேட்கையொடு தேகமெல்லாஞ் சூடு மீறி

காமென்ற மூளையது கொதிப்பு மிஞ்சி
கனமான அஸ்தியதை துளைத்துக்கொண்டு
பாமென்ற பதினொன்றே ரோகந்தானும்
பரிவாக தேகத்தில் பிறந்தவாரே.

(இ-ள்.) அம்மை நோய் வருவதற்கு காரணமாவது சரீரத்தில் வேகம் மிகுந்து உடலில் சூடு ஏறி அதிகரித்து மூளையில் கொதிப்பு ஏறி கனமான எலும்பை துளைத்துக் கொண்டு பதினோரு விதமான அம்மை நோயும் பிறந்தது என்பர்.

4. வாறான வைசூரியது கண்ட பேரை
வளமாக மற்றொருத்தன் கண்டு தானே
தேறான பயஞ்செனித்த இருத யத்தில்
திறமாக கலக்கமது தோன்றினாக் கால்
*சீறான வைசூரியது உடனே காணும்*
செப்பமாய் சரீரத்தில் பற்றிக் கொள்ளும்
மாறாமல் பதினொன்றின் பெயரைக் கேட்கில்
வளமாகச் சொல்லுகிறேன் கேளுக் கேளே.

(இ-ள்.) அம்மை நோயுற்றவர்களை மற்றொருவன் பார்த்து பயந்து மனம் கலங்கினால் அவனும் வைசூரிய நோயால் பாதிக்கப் படுவான். பதினொருவித அம்மை நோயின் பெயரைக் கேள்.

5. கேளப்பா பதினொன்றின் பேரைக் கேளு
கிருபயாம் பனைமுகம் பால்கைப் பொன்று
வாளப்பா வரகுதிரி கொள்ளம்மை தானும்
வளமான கல்லுதிரி கடுகம்மை கூட
தோளப்பா மொழுக்கது நடனப்புத்திரி தானும்
திறமான கும்பனச வெந்தயமுஞ் சேர்
பாளப்பா பாசிப்பயத் தம்மை கூட
பதினொன்றின் பேரென வே பகரு வோமே.

(இ-ள்.) பனைமுகரி அம்மை, பாலம்மை, உப்புதிரி அம்மை, வரகுதிரி அம்மை, கொள்ளம்மை, வெந்தய அம்மை, பாசிப்பயறு அம்மை, கல்லுதிரி, கடுகம்மை எனப் பதினொரு அம்மை நோயாகும்,

6. பகரவே இவைகளுட குணத்தைக் கேளு
பரிவான உன்முகரி பரிச்சை தானே
நிகராகக் காய்ச்சலது மிதமாய்க் காயும்
நேரான உடல்கடுக்கும் கண் சிவக்கும்
பகராமல் காலக்கடை வீக்கங் காணும்
பரிவான பெரும்பாடுங் காணும்கண்டீர்
செகமதிலே இதனாலே பித் தெடுத்து
தேகத்திற் சன்னியது சேருங் காணே.

(இ-ள்.) பனைமுகரி அல்லது உன்முகரி அம்மையின் குணமாவது காய்ச்சல் மிதமாக இருக்கும். உடல் கடுக்கும். கண் சிவக்கும். பாதங்கள் வீங்கும். பெரும்பாடு காணும். இவைகளினால் பிதற்றல் கண்டு சன்னி நோய் தோன்றும்.

7. காணப்பா பாலம்மை குணத்தைக் கேளாய்
கடுகவே காய்ச்சல்கண்ட மூன்றாம் நாளில்
தோணப்பா சிரசுதனில் குறுவே காணும்
செப்பரிய உடம்பதுதான் கடுப்புண் டாகும்
யேனப்பா ஏழாநாள் நீரே கட்டி
இயல்பாக ஒன்பதினில் இறங்குங் கண்டாய்
ஆளப்பா பதினைந்து நாளில் தானே
அடவாக ஆரோக்கிய ஸ்நானஞ் செய்யே.

(இ-ள்.) பாலம்மையின் குணமாவது, காய்ச்சல் கண்ட மூன்றாவது நாளில் தலையில் அம்மைக் கொப்புளங்கள் தோன்றும். உடம்பு கடுக்கும். ஏழாவது நாளில் நீர்கட்டி ஒன்பதாவது நாளில் இறங்கும். பதினைந்தாவது நாளில் ஸ்நானம் செய்யலாம்.

8. செய்யப்பா மொழுக்கனுடக் குணத்தைக் கேளாய்
செயமான காய்ச்சலது சீராய்க்காணும்
அய்யப்பா உடம்பெல்லாம் கடுப் பெடுத்து
அழகான இடுப்பதுவும் வழங் காதப்பா
மெய்யப்பா சரீரமெல்லாம் வீக்கங் காணும்
விழுங்கவே ஏழாநாள் கொல்லுந் தானே.

(இ-ள்.) மொழுக்கன் என்ற அம்மையின் குணமாவது சீரான காய்ச்சல் இருக்கும். உடல் முழுவதும் கடுத்து இடுப்பு வழங்காமல் போகும். உடம்பு முழுவதும் வீக்கங் கண்டு ஏழாவது நாளில் கொல்லும்.

9. தானென்ற வரகுதிரி குணத்தைக் கேளு
வாகாக உடல்கடுக்கும் சுரமே காயும்
வானென்ற மூன்றாம்நாள் சிரசில் காணும்
வகையாக வப்பராவ உதிரங் சுக்குந்
பதனென்ற ஏழாநாள் நீரைக் கட்டி
சிறப்பான பதினொன்றில் இறங்குங் காண்பீர்
மானென்ற நீர்த்தாரை ரெத்தங் காணும்
மக்களே இதனுடைய மகிமை தானே.

(இ-ள்.) வரகுதிரி என்ற அம்மை நோயின் குணத்தைக் கேள். உடல் கடுத்து சுரம் காயும். மூன்றாம் நாள் சிரசில் அம்மைக் குறுக்கள் தோன்றும். அவ்வப்போழுது ரெத்த வாந்தி காணும். ஏழாவது நாள் நீர் கட்டும். பதினோறாவது நாள் இறங்கும். நீர்தாரையில் இரத்தம் காணுவது இதனுடைய சிறப்புக் குணமாகும்.

10. மகிமையென்ற கல்லுதிரிக் குணத்தைக் கேளாய்
வளமான காய்ச்சலது நன்றாய்க் காயும்
செகமகிழ வாந்திபண்ணும் பேதியாகுஞ்
சீரான மூன்றாம்நாள் சிரசில் தோன்றும்

மகமகிழ சங்கதனின் கனிபோ லாகும்
அழகான ஏழாநாள் நீரே கட்டி
புகழான பத்தாம் நாள் இறங்கும் கண்டாய்
புண்ணியனே ஆரோக்கிய ஸ்நானஞ் செய்யே.

(இ-ள்.) கல்லுதிரி என்ற அம்மை நோயின் குணமாவது காய்ச்சல்அதிகமாகக் காயும். வாந்தி பண்ணும். பேதியாகும். மூன்றாவது நாள் சிரசில் அம்மை கொப்புளம் தோன்றும். சங்கம் பழம்போல் கொப்புளங்கள் இருக்கும். ஏழாவது நாள் நீர் கட்டும். பத்தாவது நாள் இறக்கம் காணும். ஆரோக்கிய நிலையில் ஸ்நானம் செய்யவும்.

11. செய்யவே உப்புதிரி குணத்தைக் கேளாய்
செயலாகக் காய்ச்சல் கண்ட மூன்றாம் நாளில்
லய்யமாய் சிரசுதன்னில் குருவே கண்டு
அழகான சரீரமெல்லாம் உப்பைப் போலே
பய்யவே ஐந்தாம்நாள் நீரைக் கட்டி
பரிவாக ஏழாம்நாள் இறங்கும் கண்டாய்
நய்யவே பதினொன்றில் ஸ்நானஞ் செய்து
நலமாக அவிழ்தமது நன்றாய் செய்யே.

(இ-ள்.) உப்புதிரி என்ற அம்மையின் குணமாவது, காய்ச்சல் கண்ட மூன்றாவது நாள் சிரசில் அம்மைக் குறு தோன்றி உடல் முழுதும் உப்பை வாரிக் கொட்டியது போல் அம்மைக் கொப்புளங்கள் தோன்றும். ஐந்தாவது நாள் நீர் கட்டும். ஏழாவது நாள் இறக்கம் காணும். பதினொன்றாம் நாள் ஸ்நானம் செய்யலாம். மருந்தும் கொடுக்கலாம்.

12. செய்யவே கடுகம்மை குணத்தைக் கேளு
சிறப்பாக காய்ச்சல்கண்ட மூன்றாம் நாளில்
வய்யப்பா சிரசதிலே கடுகைப் போலே
வளமாகக் குருவதுவும் வகையாய்க் காணும்

மெய்யப்பா உடம்பெல்லாம் வீக்கம் காணும்
விளங்கவே மன்னைகட்டும் குரலும் கம்மும்
மெய்யப்பா சடுதியிலே பேதி காணும்
அழகான கடுகம்மை ஆன்மை தானே.

(இ-ள்.) கடுகம்மையின் குணமாவதுகாய்ச்சல் தோன்றிய மூன்றாவது நாளில் சிரசில் கடுகைப்போல் அம்மைக் குறுக்கள் தோன்றும். உடல் முழுதும் வீக்கம் காணும். தொண்டைக் கட்டும்.குரல் கம்மும். பேதி காணும். கடுகம்மை அசாத்திய நோயாகும்.

13. தானென்ற கரும்பனை குணத்தைக் கேளு
தரியாமல் காய்ச்சல் கண்ட நான்காம் நாளில்
கானென்ற சிரசிலே குருவை காணும்
கைக்கடங்காக் கடுப்பெடுத்து கருகி மேனி
வானென்ற குருவதுவும் உள்ளே வாங்கும்
வளமாக பேதிகண்டு மூர்ச்சை யாகும்
கோனென்றமலசலமும் கட்டிற் றானால்
குறிப்பான பதிமூன்றி லிறங்கும் தானே.

(இ-ள்.) கறும் பனை அம்மையின் குணமாவது, காயசசல கண்ட நாலாவது நாள் சிரசில் அம்மைக் குறு தோன்றும். தாங்க வொண்ணாது உடம்பு கடுக்கும். உடம்பு கருகி அம்மைக்குறுக்கள் உள்ளே வாங்கும். பேதி கண்டு மூர்ச்சையாகும். மலம், சலம் கட்டினால் பதிமூன்றாவது நாள் இறக்கம் காணுவதும் உண்டு.

14. இறங்குமுன்னே உடம்பெல்லாம் விரிந்து போகும்
மிதமாகக் கிருமியது உண்டாம் கண்டீர்
கறங்குபோல் பிறக்கினையும் இல்லையப்பா
கனமாக வாசம்தரும் மேலே காணும்
மறுங்குபுகழ் நாளிருபத்தொன்று சென்றால்
அடவாக ஸ்நானமது அன்பாய் செய்வாய்
திறங்கள்மிகு கடவுள்செயல் உண்டாகுமானால்
திறமாகத் தீருமது திண்ணந் தானே.

(இ-ள்.) இறக்கம் காணாவிடில் உடம்பெல்லாம் விரிந்து போவது போல் இருக்கும். கிருமிகள் உண்டாகும். நினைவு இழந்து போகும். துர்நாற்றம் காணும். இருபத்து ஒரு நாள் சென்றால் பின்னர் ஸ்நானம் செய்யலாம். அசாத்திய நோயாவது உண்டு.

குறிப்பு அம்மை நோய் இறக்கம் கண்டு பின்னர் அதிகமாவதும் உண்டு. இதனை மறுதலிப்பு என்பர்.

15. தானென்ற வெந்தய அம்மை குணத்தைக் கேளாய்
    தருவானக் காய்ச்சல்கண்ட மூன்றாம் நாளில்
கானென்ற சிரசுதனில் குருவே சரணம்
    கண்டபின்பு ஏழாம் நாள் நீரேகட்டி
வேனென்ற ஒன்பதிலே இறங்கும் பாரு
    விபரமாய் பதினைந்தில் ஸ்நானம் செய்து
பானென்ற உடம்பதுவும் லகுவாங் கண்டீர்
    பரிவான வெந்தயத்தின் பரிசி தானே.

(இ-ள்.) வெந்தய அம்மையின் குணம் காய்ச்சல் கண்ட மூன்றாவது நாளில் சிரசில் குறுக்கள் தோன்றும். ஏழாவது நாளில் நீர்கட்டி ஒன்பதாவது நாளில் இறங்கும். பதினைந்தாவது நாளில் ஸ்நானம் செய்யலாம்.

16. பரிசியென்ற பாசிபயத் தம்மை தானும்
    பரிவான காய்ச்சலிலே புறத்தெடுத்து
தரிசென்ற மூன்றாம்நாள் சிரசில் காணும்
    தயவாக ஏழாம்நாள் நீரே கட்டும்
துரிசென்ற ஒன்பதிலே இறங்கிப் போகும்
    சுகமாக பதினேழில் ஸ்நானம் செய்து
பிரிசமுன் சரீரமது பிலக்கத் தானே
    பேறாக நீர்மோரும் சாதம் கொள்ளே.

(இ-ள்.) பாசி பயத்தம்மை காய்ச்சல் அதிகமாகக் காய்ந்து மூன்றாவது நாளில் சிரசில் அம்மைக் கொப்புளம் தோன்றி ஏழாவது

நாள் நீர்கட்டி ஒன்பதாவது நாள் இறங்கிப்போகும். பதினேழாவது நாள் ஸ்நானம் செய்ய சுகமாகும். நீர் மோர் சாதம் சாப்பிடவும்.

17. கொள்ளப்பா கொள்ளன்ற அம்மை தானும்
குறிப்பாகக் காய்ச்சல்கண்டால் பித் தெடுத்து
கள்ளப்பா சன்னியது கூடத் தோன்றும்
கனமான வலியதுவுங் காணுங் கண்டீர்
விள்ளப்பா காய்ச்சல்கண்ட மூன்றாம் நாளில்
விவரமாய்க் குருவதுவும் சிரசில் காணும்
மெள்ளப்பா இந்தவகைக் கண்டபோதே
மேலாக பதிமூன்றி லிறங்குந் தானே.

(இ-ள்.) கொள் அம்மைக்கு காய்ச்சல் கடுமையாக காயும். சன்னி கண்டு பிதற்றும். உடம்பு வலிக்கும். காய்ச்சல் கண்ட மூன்றாம் நாள் சிரசில் குறுக்கள் தோன்றும். பதிமூன்றாம் நாள் இறங்கும்.

18. தானென்ற பதினொன்றின் பேருஞ் சொன்னேன்
தயவாக இவர்களுட குணத்தைச் சொன்னேன்
வேனென்றவிச் சிருப்புநீர்க்குருவான் தானும்
விபரமாய் தவணைகுரு மூன்று பேருங்
கானென்ற இவர்களுட குணத்தைச் சொன்னேன்
கடவுளுட பதம் போற்றிக் கருத்தில் வைத்து
தேனென்ற மொழியக் குமாரி பாதம்
சிந்தையுற்று மனதிலெண்ணி தெரிசித் தேனே.

(இ-ள்.) பதினொன்று அம்மைகளின் பெயரும் குணத்தையும் சொன்னேன். சிறிப்பு, நீர்க்குளுவான், தவணைக் குரு முதலிய இவை மூன்றின் குணத்தைச் சொல்லி குமரி பதம் போற்றுகின்றேன்.

19. தெரிசித்தேன் விச்சிருப்பு குணத்தைக் கேளு
திறமாகக் காய்ச்சல்கண்டு கண் சிவக்கும்
பரிசித்தே **வாந்தி**பண்ணும் பேதிகாணும்
பாவகமாய் மூன்றாம்நாள் சன்னி கண்டு
பெருசித்தே தேகமெல்லாம் முரிபோல் தானே
பலமாக வாரியிட்டு மறைக்குங் கண்டீர்
அரிசித்தே ஏழாநாள் ஸ்நானம் செய்து
ஆனபின்பு வயிற்றளைவு ஆகுந் தானே.

(இ-ள்.) விச்சிருப்பு அம்மையின் குணத்தைக் கேள். காய்ச்சல் கண்டு சிவக்கும். வாந்தி பண்ணும். பேதி காணும். மூன்றாவது நாள் சன்னி கண்டு தேகமெல்லாம் இடம் தெரியாமல் வாரியிட்டு மறைக்கும். ஏழாவது நாள் ஸ்நானம் செய்யவும். பின் வயிற்றளவு காண்பதும் உண்டு.

20. ஆகுமென்ற நீர்க்குளுவான் குணத்தைக் கேளு
அழகாகக் காய்ச்சல் கண்ட மூன்றாம் நாளில்
வாகுமென்ற சங்குதளிர் போலே காணும்
வளமாக ஏழாம்நாள் இறங்கிப் போகும்
தாகுமென்ற ஒன்பதிலே ஸ்நானஞ் செய்து
தருவாகத் தேகத்தைக் குளிர்ச்சி செய்து
பாகுமென்ற பரனையுமோ போற்றி செய்து
பண்பாக மாரிபதம் பணிந்தேத்தே.

(இ-ள்.) நீர்க்குளுவான் குணத்தைக் கேள். காய்ச்சல் கண்ட மூன்றாவதுநாளில் சங்கின் தளிர்போல் அம்மைக் கொப்புளம் தோன்றும். ஏழாம் நாளில் இறங்கிப் போகும். ஒன்பதாவது நாள் ஸ்நானம் செய்யவும். தேகத்தைக் குளிர்ச்சி செய்து பரமனைப் போற்றி துதிக்கவும்.

21. யேத்தியே தவளையென்ற குருதானப்பா
யிதமாகக் காய்ச்சல் கண்டு நடக்கொட்டாது
போத்தியெ சூலையைப்போல் வலியே காணும்
போசனமுஞ் செல்லாது தவறப் பண்ணுஞ்

சாத்தியம்போல் ஒன்பது நாள் ஆனபின்பு
தவறாமல் இறங்குமது தப்பாதப்பா
ஆத்தியதோர் பதினொன்றில் ஸ்நானஞ் செய்து
அனைவர்க்குங் குருபதத்தை அறிந்து யேற்றே.

(இ-ள்.) தவளை என்ற அம்மை நோயால் உடல் முழுவதும் அம்மைக் குருக் கண்டு காய்ச்சல் கண்டு நடக்க முடியாமல் சூலையைப் போல் வலித்து உணவு செல்லாமல் இருந்து இறக்கவும். செய்யும் சில நேரம் சாத்தியமாவதும் உண்டு. ஒன்பது நாள் ஆன பின்பு தவறாமல் இறங்கும். பதினொன்றாவது நாள் ஸ்நானம் செய்யவும்.

22. அறிந்தபின்பு இவர்களுடைய குணந்தானப்பா
அந்தந்த சரீரத்துக் கடுத்தவாறாம்
தெரிந்ததொரு குறிகுணங்கள் தோன்றுமப்பா
திறமான கரும்பனை சையிந்தை சொல்லும்
புரிந்ததொரு கெர்ப்பத்தை அழித்துத் தானே
பண்பாக அவர்களுக்குப் பிள்ளையில்லை
முரிந்ததொரு யிவர்களுட குணத்தைச் சொன்னேன்
முறைமையாய் மருந்துவகைச் சொல்லக் கேளே.

(இ-ள்.) மேற்கண்டவைகளின் குணங்குறிகள் அவரவர் சரீரத்துக்கேற்றாற் போல் தோன்றும் கரும்பனை என்று சொல்லப்படுகின்ற அம்மை நோய் கண்டால் கர்ப்பத்தை அழிக்கும். அவர்களுக்கு குழந்தை பிறக்கவும் செய்யாது.

23. கேளடா ஆள்காட்டிக் குருவி முட்டை
கிரியையாய் பத்தெட்டுக் கொண்டு வந்து
ஆளடா சட்டியிலே உடைத்து ஊற்றி
அழகான புழுங்கரிசி சம்பாவப்பா

வாளடா முட்டைக்கரு நனையு மட்டும்
வகையாக அரிசியதை மிதமாய்ப் போட்டு
தாளடா அடுப்பேற்றி மிதமாய்ப் போட்டு
தறாமல் கருகாமல் எரித்து வாங்கே.

(இ-ள்.) ஆள் காட்டிக் குருவியின் முட்டைகள் பத்தோ அல்லது எட்டோ கொண்டு வந்து ஒருசட்டியில் அவைகளை உடைத்து ஊற்றி சம்பா புழுங்கல் அரிசியை முட்டைக் கரு நனையும் மட்டும் மிதமாகப் போட்டு அடுப்பேற்றி உலர்ந்த பதம் பார்த்து கருகாமல் எடுத்து வைத்து

24. வாங்கியே செப்பதனில் அடைத்துக் கொண்டு
வரிசையாய் காய்ச்சல்கண்ட வுடனே நீதான்
தாங்கியே இடது கையில் வாங்கிக் கொட்டி
தயவாக வலதுகையில் பிடியே அள்ளி
ஏங்கியே திரியாமலுள்ளே கொள்ள
யிதமான அரிசிதுகை யான மட்டும்
பாங்கியே வைசூரியது அதிகம் வாரா
பரிவான தேகத்துக் கழிவோ இல்லை.

(இ-ள்.) சொம்புதனில் வைத்துக் கொண்டு காய்ச்சல் கண்டவுடனே இடதுகையில் வாங்கி கொட்டி வலது கையில் பிடி அள்ளி வாயில் கொட்டித் தேவையான அளவு சாப்பிடவும். வைசூரி நோய் அதிகம் வராது. தேகத்திற்கு அழிவில்லை.

25. இல்லையென்று ஒருநேரங் கொண்டால் போதும்
இயல்பாக அருமருந்து வேறே சொல்வோம்
வல்லமையாய் இம்முறையைச் செய்த பேர்க்கு
வைசூரியது அரிசிதுகை யான மட்டும்
பல்லவமாய் தீங்குமது வாரா தென்று
பாவகமாய் உலகத்தோர் செய்தார் தானே
நல்லவமே தீர்ந்திடுங்காண் வைசூரி தானும்
நமனுமே வாராது நவிலுவோமே.

(இ-ள்.) மேற்கண்ட அரிசியை ஒரு நேரம் கொண்டால் போதும். எந்தத் தீங்கும் வாரா. அரிசி குறைந்தது போல் அம்மையும் மறைந்தொழியும் வைசூரி வராமல் தடுக்கவும் செய்யும்.

26. நவிலுவோம் இவர்களுக்கு மருந்து கேளு
நவமான காய்ச்சல்கண்ட வுடனே நீதான்
புவிதனிலே பழசான பாதரட்சை
புகழாக சுட்டு அதைப் பற்பமாக்கிப்
பலிவாக வெறுகடிதான் வெந்நீர் தன்னில்
பாகமாய்க் கொண்டுவிடு மூன்று நேரம்
தவிறாமல் செய்தபின்பு சொல்லக்கேளு
சாதகமாய்ப் பின்மருந்து மொழியக் கேளே.

(இ-ள்.) வேறு மருந்து கூறுகின்றேன். பழைய செருப்பை சுட்டு பற்பமாக்கி இரண்டு விரலால் எடுத்து வென்னீருடன் மூன்று நேரம் சாப்பிடவும்.

27. மொழிந்த மருந்ததுவும்ம் பாகத் தோடே
முறைமையாய்ச் செய்துகொண்டால் கருமம் நன்றாம்
அழிந்ததொரு வைசூரியெல்லாம் குணமே யாக
அழகான மருந்ததனை அன்பாய்க் கொள்ளு
சழிந்ததொரு கருமங்கள் தீரந்த பின்பு
சாதகமாய் ரோகமது நன்றாய்த் தீரும்
தெளிந்ததொரு வாந்திபண்ண பேதியாக
திறமான நஞ்சுவுராப் பரிச்சான் வேரை.

(இ-ள்.) வைசூரி குணமாக வேறொரு மருந்து கூறுகின்றேன். வாந்தி செய்யவும். பேதியாக்கவும். நஞ்சு முரிச்சான் வேரைக் கொண்டுவந்து

28. வேராகக் கொண்டுவந்து விபரமுடன் நரம்புபோக்கி
சீராக வென்னீர்விட்டுத் திறமுடனே அரைத்துக் கொண்டு
வராக வைசூரிக்காய்ச்சல் வகைபட வந்தபோது
பேராக வென்னீர்தன்னில் புன்னைக்கா யளவு கொள்ளே.

(இ-ள்.) வேரைக் கொண்டு வந்து நரம்புகளைப் போக்கி வென்னீர் விட்டு அரைத்து வைசூரிக் காய்ச்சல் வந்தபோது புன்னைக்காயளவு வென்னீருடன் கொள்ளவும்.

29. கொள்ளுவாய்க் காலமேதான் குணமுடன் வாந்திபேதி
வென்னவே காணுங்கண்டீர் விபரமாய் மத்தியானம்
கேளெனக் கஞ்சிகாய்ச்சித் திறமுடன் கொண்டபின்பு
அள்ளவே மருந்துதானும் அடவுடன் சொல்லக்கேளே.

(இ-ள்.) கொண்டவுடன் வாந்தியும் பேதியும் காணும். மத்தியானம் கஞ்சி உணவு சாப்பிடவும். பின் அருந்துவதற்கு மருந்து கேள்.

30. சொல்லக்கேள் மறுநாள்தன்னில் துலக்கமாய் காலமேதான்
புல்லக்கேள் புளியின்பத்திரி புகழ்கோழி யாவாரைகூட
மெள்ள யீருள்ளிச் சேர்த்து விபரமாய் துவைத்துக்கொண்டு
அள்ளவே நீச்சத்தண்ணீர் அடவுடன் பிசைந்து வாங்கே.

(இ-ள்.) மறுநாள் காலை, புளியிலை, கோழியாவாரை, வெங்காயம் இவைகளை துவைத்து எடுத்து நீராகாரத்துடன் நன்கு பிசைந்து வடித்து வாங்கவும்.

31. வாங்கியே படிகாலாக வகைபட குடிக்கநன்றாய்
யேங்கியே திரியவேண்டாம் இம்முறை மூன்றுநேரம்
பாங்குடன் சாப்பிட்டேதான் பரிவுடன் சென்றபின்பு
தாங்கியே மருந்துசெய்ய தயவுடன் இன்னங்கேளே.

(இ-ள்.) கால்படியளவாக மூன்று நேரம் சாப்பிடவும். இன்னும் மருந்து கூறுகின்றேன் கேட்பாயாக.

32. கேளப்பா பின்புநீதான் கிளர்பிறா யிலையுங்கூட
நாளப்பா மூக்கரட்டை நலமுள்ள வேருங்கூட்டி
தாளப்பா தவசியான முருங்கை சமூலஞ்சேர்த்து
ஆளப்பா நீச்சதண்ணீருடன் பிசைந்து வாங்கே.

(இ-ள்.) பிறா இலை, மூக்கரட்டை வேர், தவசி முருங்கைசமூலம் இவைகளைச் சேர்த்து துவைத்து நீராகாரத்து தண்ணீருடன் பிசைந்து வாங்கவும்.

33. வாங்கியே படிகாலாக வளருஞ் சீரகமும் சேர்த்து
வோங்கி யீருள்ளிசேர்த்து உண்மையாய்க் குடிக்கநன்றாம்
நீங்கியே மூன்றுநேரம் நேர்மையாய்க் கொண்டபின்பு
தாங்கியே மருந்துதானும் தயவுடன் இன்னங்கேளே.

(இ-ள்.) கால்படியளவாக எடுத்து சீரகம் ஈருள்ளிசிறிது சேர்த்து மூன்று நேரம் குடிக்கவும். இன்னமும் மருந்து கூறுகின்றேன் கேள்.

34. தயவுடன் சூரிதானும் தாங்கியுள்ளுக் கிருந்துநின்றான்
நயமுடன் இளநீர்தன்னை நலம்பெற சீவிப்போட்டு
செயமுடன் வென்னீர்தன்னில் திறமதாய் விட்டுவாங்கி
பயமுடன் கண்திறந்து பருவாய் வைத்துக்கொள்ளே.

(இ-ள்.) வைசூரிநோய் வாய், குடல் முதலிய உள்பாகங்களில் பாதித்திருந்தால் இளநீரை வென்னீரில் போட்டு எடுத்து கண் திறந்து வைத்துக்கொண்டு.

35. கொள்ள யிளநீர்க்குள்ளே கொடுத்திடும் மருந்துகேளாய்
நள்ளவே தேத்தான்வித்து நவில்முத்தக் காசுகட்டி
அள்ளு கோரோசனையுங் கூட்டிஅளவு மரைக்காலாகத்
தெள்ளு சீரகமுஞ்சேர்த்து திறமதாய் மருந்து கொள்ளே.

(இ-ள்.) தேத்தான் வித்து, கோரைக்கிழங்கு இரண்டையும் நசுக்கிப் போட்டு தண்ணீரை எடுத்து அதனுடன் கோரோசனையும் கூட்டி சிறிது சீரகமும் சேர்த்து உள்ளுக்குச் சாப்பிடவும்.

36. கொள்ளவே வைகூரிதானும் குணமுடன் கிறாந்தல்தீரும்
வள்ளலே மேதிதானும் வளர்க்கிடாச் சாணப்பாலில்
நள்ளவே பூநாகந்தான் நவின்றதோர் விராகனைந்து
தெள்ளு சீரகமுஞ்சேர்த்து திறமதாய் அரைத்துக்கொண்டு
விள்ளவே கொள்ளும்போது வெகுன்றிடுங் கிறாந்தல்தீரும்.

(இ-ள்.) வைசூரி குணமாகும். உடம்பு மெலிதல் தீரும். மேதி என்கின்ற வெந்தயத்தை சாணிப்பாலில் ஊற வைத்தெடுத்தது. சுத்தி செய்த நாக்குப்பூச்சி, சீரகம் இவை வகைக்கு ஐந்து விராகனிடை எடுத்து நன்றாக அரைத்துச் சாப்பிட அம்மை நோயினால் ஏற்பட்ட உடல் மெலிவு தீரும்.

கிராந்துதல் - உள்ளிருக்கும் நோயால் மெலிதல்.

37. தீரவே கெர்ப்பகல்லை திறமதாய் பாங்காய்வாங்கி
ஆரவே யுடைத்துக்கொண்டு அழகுமான் கொம்பு சேர்த்து
ஊருள்ள காண்டாமிருகம் உற்றதோர் மூன்றுமொன்றாய்
சாரவை யரைத்துக்கொள்ள சடுதியில் கிறாந்தல் போமே.

(இ-ள்.) கெருடக் கல்லை எடுத்து உடைத்துக் கொண்டு, மான் கொம்பு, காண்டா மிருகத்தின் கொம்பு, இம்மூன்றையும் ஒன்றாய் சேர்த்து நன்கு அரைத்துச் சாப்பிட விரைவில் உடல் மெலிவு தீரும்.

**குறிப்பு:** கெர்ப்பக்கல் -கருடக்கல் எனக்கொள்வதே பொருந்தும்.

38. போமென்ற மருந்துவகை சொல்லக் கேளு
புகழான பிறாயிலையைப் பிடுங்கி வந்து
ஊமென்ற புதுச்சட்டி தன்னில் போட்டு
ஊற்றநீர் வெங்காரம்விட்டு ரேசி வாங்கி
பாமென்ற கால்படிதான் உள்ளே கொள்ள
பண்பாக கிறாந்தளது நீரே கொள்ளும்
தேகமென்று இறங்கியது லகுவா யாகுந்
திறமான நோயதுவும் தீரும் தானே.

(இ-ள்.) மேலும் மருந்து வகைக் கூறுகின்றேன். பிறாயிலையைக் கொண்டு வந்து பொன் நிறமாக வறுத்து தண்ணீர் விட்டு பொரித்த வெங்காரத்தையும் போட்டு சுண்டக் காய்ச்சி கால்படியளவு சாப்பிட உள்பக்கம் அம்மை கொப்புளங்கள் உடனே இறங்கி உடல் மெலிவு தீர்ந்து உடம்பு லகுவாகும்.

39. தானென்ற வைசூரியது சரியு முன்பே
தருகாம ல் பேதியது கண்டால் தானே
வூனென்ற விட்சியுட இலை பறித்து
உறவாக சட்டியிலே வுரஞ்சிவாங்க
நீரென்ற நீராகாரம் விட்டு வாங்கி
நினைவாக மூன்றுதினங் கொண்டால் தீரும்
கானென்ற சுக்கும் வேறப் பீர்க்குங்கூட்டி
கனமான எலுமிச்சம் வேருங் கூட்டே.

(இ-ள்.) வைசூரி நோய் இறங்குவதற்கு முன் பேதி கண்டால் விட்சி என்கின்ற செடியின் இலையைப் பறித்து ஒரு சட்டியில் நீராகாரத்துடன் சேர்த்து உறுஞ்சி எடுத்து நீரை நினைவுடன் மூன்று

தினங்கள் கொண்டால் தீரும். (பேதி நிற்கும்) சுக்கு, வேம்பின் ஈற்கு, எலுமிச்சம் வேர் கூட்டி

40. கூட்டியே முக்கியமுட னிள வறுப்பாய்
குணமாக வறுத்ததனை கியாழஞ் செய்து
நாட்டியே குடிக்கஅதி சாரந் தீரும்
நலமாக இன்னுமொரு கியாழஞ் சொல்வோ
மாட்டிதோர் பொன்முசுட்டைக் கிராம்பு தானும்
அழகான வேப்பீர்க்குக் கியாழங் கொண்டு
தாட்டிகமாய் பேதியது தீருங் கண்டாய்
சாதகமாய் இம்மருந்தைச் சார்ந்து கொள்ளே.

(இ-ள்.) இளவறுப்பாக வறுத்து தண்ணீர் விட்டு கியாழமாகச் சுண்டக் காய்ச்சி குடிக்க அதிசாரம் என்கின்ற பேதி தீரும். மேலும் ஒரு கியாழம் கூறுகின்றேன். பொன் முசுட்டை, கிராம்பு வேம்பு ஈற்கு இவைகளைச் சேர்த்து கியாழம் செய்து சாப்பிட பேதி நிற்கும். என்பதனை தெரிந்து கொள்வாயாக!

41. கொள்ளப்பா பலசரக்குக் குடிநீர்தானும்
குணமாகச் சொல்லுகிறேன் கேளு நன்றாய்
விள்ளப்பா ஆலத்தி இத்தி மாவு
மிதமான அரசுடனே ஓதியுங்கூட
மெள்ளப்பா பிச்சிதுத்தி காசா கூட
மேலான சருமமென்ற சுக்குங் கூட்டி
அள்ளப்பா குடிநீராய்ச் செய்து கொண்டா
லதிசாரமுள்ள தெல்லாம் அகன்று போமே.

(இ-ள்.) பல சரக்குக் குடிநீர் சொல்லுகின்றேன். கேட்பாயாக. ஆல், அத்தி, மா, அரசு, ஓதி முதலிய மரங்களின் பட்டை, பிச்சி( மல்லிகை). துத்தி காசான் முதலிய செடிகளின் பட்டை இவற்றை நசுக்கி சுக்கும் கூடசேர்த்து குடிநீராய்ச் செய்து அருந்த அதிசார முதலிய பேதி நிற்கும்.

42. போமென்ற வைசூரியின்மேல் கடுப்புக் கண்டால்
புகழான நாவலுட முத்தப் பட்டை
ஆமென்று துவைத்தாவின் பாலிற் சேர்த்து
அழகாகப் பார்த்துடனே வடியே கட்டி
காமென்ற கால் படிதா னுள்ளே கொள்ள
கடுப்பெடுத்த ரெத்தமது கலங்கிப் போகும்
தேமென்ற இம்மருந்தை செய்த போதே
திறமாகத் தீருமது திருந்தச் செய்யே.

(இ-ள்.) வைசூரியின் போது வயிற்றுக் கடுப்புக் கண்டால் நாவல் மரத்தின் முற்றிய பட்டை எடுத்து நன்கு இடித்து வைத்து பசும்பாலுடன் சேர்த்துப் பிசைந்து வடிகட்டி கால்படி அளவு கொள்ள இரத்தக் கடுப்பு தீரும். மருந்து செய்தவுடனே இரத்தக் கடுப்பு தீரும் என்பதாம்.

## இரத்தக் கடுப்பு நிற்க

43. செய்யவே வன்னத்தின் வேரின் பட்டை
திதறமாக ஈருள்ளி சீரகமும் சேர்த்து
பைய்யவே வெள்ளாட்டின் பாலில் சேர்த்து
பண்பாக அரைத்தருந்த கடுப்புப் போகும்
மெய்யான ஈருள்ளிஆவின் நெய்யில்
விளங்கவே வேகவைத்துக் கொள்ளப் போகும்
கைய்யால் கண்' டதிந்த மருந்தைக் கண்டால்
கடல்கடந்து போகுமடா கடுப்பத் தானே.

(இ-ள்.) வன்னி மரத்தின் வேர்ப்பட்டை, வெங்காயம், சீரகம் இவைகளைச் சேர்த்து அரைத்து வெள்ளாட்டின் பாலுடன் கலந்து சாப்பிட இரத்தக் கடுப்பு தீரும் . வெங்காயத்தை ஆவின் நெய்யில் வேகவைத்துச் சாப்பிடஇரத்தக் கடுப்பு தீரும். இவ்வகை மருந்துகளைக் கண்டால் இரத்தக் கடுப்பு கடல் கடந்து போய்விடும்.

## அதிசாரங்கட்ட (அதிசார பேதிகட்ட)

44. தானென்ற வைசூரிஅதி சாரங் கண்டால்
தயவான சீந்திமுத்தக் காசு சுக்குத்
தேனென்ற மேல்தோலுந் தள்ளிப்போட்டு
திறமாகவே வறுத்துக் கியாழங் கொள்ள
மானென்ற அதிசாரந் தானே நிற்கும்
மகிமையா இம்மருந்து மூன்று நேரம்
கானென்ற கியாழமது கொண்டால் தானே
கலங்குமதி சாரமெல்லாம் கடலிற் போமே.

(இ-ள்.) அம்மை நோயில் பேதி கண்டால் சீந்தில் தண்டு, கோரைக் கிழங்கு, மேல் தோல் சீவிய சுக்கு, இவைகளை வறுத்துக் கியாழமாகச் செய்து மூன்று நேரம் சாப்பிட அதிசாரம் என்ற பேதி நிற்கும்.

45. போமென்ற சிங்கிபற்பம் விராகன் தானும்
புகழான மான்கொண்பு தண்ணீர் வாங்கி
காமென்ற தண்ணீரில் கலக்கிக் கொள்ள
கழிச்சலதி சாரமது கடுகிப் போகும்
வேமென்ற ஈருள்ளிச் சாறுங் கூட்டி
விளங்கவே ஆவின்நெய்யில் விரவிக் கொள்ள
தாமென்ற கடுப்புடனே சீதம் மாற்றுந்
தருகாமல் தீருமிது தன்மை யாமே.

(இ-ள்.) மான் கொம்பு இழைத்த தண்ணீரில் ஒரு விராகனிடை மான் கொம்பு ப ற்பம் கலக்கிச் சாப்பிட அதிசாரம் நிற்கும். அதனுடன் ஈருள்ளிச் சாறும் கூட்டி சிறிது ஆவின் நெய்யும் சேர்த்துச் சாப்பிட சீதம், இரத்தக் கடுப்பு தீரும்.

## மன்னைக் கட்டுக்கு (தொண்டைக் கூட்டுக்கு)

46. தன்மையென்ற வைசூரியது மன்னைக் கட்டில்
தருகாமல் சிலேத்துமந்தான் நெஞ்சில் நின்றால்
வன்மையென்ற கற்பூர வள்ளிச் சாற்றில்
வளமாக கோரோசனையுங் கூட்டி உண்ண
மென்மையென்ற மொழியுண்டாம் கம்மல் வாங்கும்
மெல்லியரே நீயிதனை விரும்பிச் செய்து
கருந்தேனுஞ் சம்பளச்சாறு மூன்று மொன்றாய்.

(இ-ள்.) அம்மை நோயில் தொண்டைகட்டி நெஞ்சில் கபம் தங்கினால் கற்பூர வள்ளிச் சாற்றுடன் கோரோசனையும் சேர்த்து உண்ணத் தீரும். மாதுளம் பூ கியாழம் செய்து தேனும், எலுமிச்சம்பழச் சாறு மூன்றும் ஒன்றாகக் கலந்து.

47. ஒன்றாக மத்தித்துக் கொப்பளித் தால்
ஓகோகோ மன்னைகட்டு உடனே தீரும்
நன்றாகக் கம்மலது வாங்கிப் போகும்
நலமாக உட்கொள்ள லாகாதப்பா
சென்று மலர்க்கொங்கையரே இந்தப் பேர்க்கு
செகத்திலிது உச்சிதமாஞ் செய்வீர் கண்டீர்
மகிமையுட னுரைத்ததிது வாசி .யாமே.

(இ-ள்.) வாய்க் கொப்பளித்தால் தொண்டைக் கட்டு தீரும். குரற்கம்மல் தீரும். பார்வதிக்கு சிவனார் உரைத்த முறையாகும்.

48. ஆமென்ற வைசூரியது சுரமே கண்டால்
அழகாக எலுமிச்சைவேர்ப் பட்டை தானும்
சேமென்ற ஏலமுடன் சீந்தி விலாமிச்சு
திறமான பற்பாடகஞ் சந்த முத்தம்

பாமென்ற வகைக்குஐந்து விராக னாக
பண்பாக கியாழஞ்செய்தேநீர் மூன்று
வாமென்ற குடித்திடவே சுரமுந் தீரும்
வளமாக இம்மருந்தை மகிழ்ந்து செய்யே.

(இ-ள்.) அம்மை நோயுற்ற போது சுரம் விடாதிருந்தால் எலுமிச்சை வேர்ப்பட்டை, ஏலம், சீந்தில், விலாமிச்சவேர், பற்பாடகம், கோரைக்கிழங்கு வகைக்கு ஐந்து விராகனெடை அளவு எடுத்து கியாழம் செய்து மூன்று நேரம் அருந்த சுரம் தீரும்.

49. செய்யப்பா வைசூரி சுரமே கண்டால்
திறமாகச் சொல்லுகிறேன் மகரப் பூத்தான்
பைய்யப்பா விராகனஞ்சா யெடுத்துக் கொண்டு
பாங்காகக் கியாழஞ்செய் நிறுத்துமே தான்
மெய்யடா ஆவின்கோரோ சனை காலாக
விளங்னவே அதிலுரைத்து உள்ளே கொள்ள
தைய்யடா சசுரங்களெல்லாம் தீருமப்பா
நலமாகக் கிறாந்தினது வெளியில் காணும்.

(இ-ள்.) வைசூரி நோயில் சுரம் கண்டால் மகரப் பூவென்றும் மராட்டி மொக்கு ஐந்து விராகனிடை எடுத்துக் கொண்டு கியாழஞ்செய்து வடிகட்டி கோரோசனை கால் வராகனெடை அதில் உரைத்து உள்ளுக்குக் கொடுக்க எல்லா சுரமும் தீரும். உடல் மெலிவு தெரியும்.

50. காணுமடா வைசூரியிலே மலசலமுஞ் சிக்கி
கனமாக தேகமது உப்பிசமு மாகில்
தோணுமடா சகிஷமாய் பேதி கண்டால்
தொல்லுலகில் மருந்தொன்று சொல்லக் கேளு
ஆணுமடா ஈருள்ளி விராகன் ஐந்தாய்
அழகான கற்கண்டு விராகனஞ் சாய்
பூணுமடா ஏரண்டத் தெண்ணை நானும்
புகழாது படிகாலி லரைத்துக் கொள்ளே.

(இ-ள்.) வைசூரி நோயில், மலம் சலம் கட்டி வயிறு உப்பிசமானால் அல்லது மாமிசம் கழுவிய தண்ணீர் போல் பேதி கண்டாலும் வெங்காயம் விராகனெடை ஐந்து, கற்கண்டு ஐந்து விராகனெடை கால்படி விளக்கெண்ணெயில் அரைத்துக்கொண்டு

51. கொள்ளவே மலசலங்கள் கட்டு விட்டு
குறிப்பாக உப்பிசமுங் குணமாய்த் தீரும்
கள்ளமில்லா தேகத்துக் குறுதி யாகும்
கனமான நீரதுவும் இறங்கும் பாரு
மெள்ளவே இம்மருந்து விரும்பிச் செய்ய
மேலான பராபரனை தொழுது போற்றி
இள்ளவே மாரிபதமனு தினமும் போற்றி
அழகான இம்மருந்தை யருள் செய்வீரே.

(இ-ள்.) தக்க அளவில் கொடுக்க, மலம் சலம் பிரிந்து வயிறு உப்பிசம் தீரும். உடம்புக்கு உறுதியளிக்கும். நீர் பிரியும். பரமேஸ்வரனையும், பரமேஸ்வரியையும் தொழுது போற்றி இம்மருந்தைச் செய்வாயாக.

52. அருளான கலங்கொம்பை யூறப்போட்டு
அழகாக கழுவியதை எடுத்துக்கொண்டு
திறளான அரத்தாலே இராவிக் கொண்டு
சேர்ந்த பொடிபலம் இரண்டாய் எடுத்துக்கொண்டு
அருளான வெந்நீரைக் காய்ச்சி நன்றாய்
மகிழ்வாக தாளியிலே ஆற்றிக் கொண்டு
பொருளான மான்கொம்புப் பொடியைத் தானே
புகழாக தாளியிலே ஹறப் போடே.

(இ-ள்.) மான் கொம்பை ஊறப் போட்டு எடுத்து அரத்தாலே ராவிக்கொண்டு எடுத்த பொடி 70 கிராம் தண்ணீரை நன்றாகக் காய்ச்சி ஆற வைத்து ஒரு தாளியில் எடுத்து மேல்கண்ட 70 கிராம் பொடியைப் போட்டு ஊற வைக்க வேண்டும்.

53. போட்ட தண்ணீரதனை யிறுத்துத் தாக்கு
புகழான மருந்துகட்குச் சேர்த்து யுண்ண
ஆட்டமிட்ட வைசூரியது லகுவாங் கண்டீர்
அழகான மூன்றாம்நாள் மறுதண்ணீர்வை
தேட்டமுடன் நோய்தீரும் பருவமட்டுந்
திறமாக இந்தமுறை செய்யத் தீரும்
வாட்டமில்லா நோய்தீருந் தப்பா தப்பா
வாகாக இம்முறையை வணங்கிச் செய்யே.

(இ-ள்.) ஊறிய தண்ணீரை மட்டும் வடித்துக் கொண்டு அதனை தனியாகவும், அம்மை நோய்கட்கு உபயோகிக்கும் மருந்துகளுக்கு துணை மருந்தாகவும் கொடுக்க வைசூரி நோய் குறைந்து விடும். மேற்கண்ட கலங் கொம்பு ஊறிய தண்ணீரை மூன்றாவது நாள் மறுதண்ணீர் ஊற்றி ஊற வைக்க வேண்டும். நோய் தீரும் வரை இம்முறையை தொடர்ந்து செய்தல் வேண்டும்.

## நேத்திர ஒத்தடம்

54. செய்யப்பா நேத்திரத்துக் கொத்தடத்தைக் கேளு
திறமாக சீரகத்தை பொட்டணமே கட்டி
அய்யப்பா முலைப்பாலில் துவைத்துக் கொண்டு
அழகான கண்ணிலேஒத்திடவும் நன்றாம்
நைய்யப்பா சோற்றிலே எண்ணெய் சேர்த்து
நலமாகப் பொட்டணமாய்க கட்டிக் கொண்டு
வைய்யப்பா நீராகாரத்தில் தோய்த்து
வழியொத்த விழிவிதனஞ் தீருந் தானே.

(இ-ள்.) கண்களுக்கு ஒத்தடத்தைக் கூறுகின்றேன். சீரகத்தை பொட்டணம் கட்டி (வெள்ளைத் துணியில் முடிச்சுக் கட்டி) அதனை முலைப் பாலில் துவைத்துக் கொண்டு கண்களில் ஒத்தடமிடவும். சோற்றுடன் ஆமணக்கெண்ணெய் சேர்த்து பொட்டணமாய்க் கட்டிக் கொண்டு நீராகாரத்தில் தோய்த்து கண்களுக்கு ஒத்தடமிட கண்களின் வேதனை தீரும்.

**குறிப்பு**: விதனம் - வேதனை

55. தீருமடா விழியதனில் குரு வாராமல்
செப்புகிறேன் மருந்தொன்று திறமாய்க் கேளு
ஆருமடா வைசூரியது காயும் போது
அழகான உள்ளிப்பூண் டொன்று தானே
பாருமடா மருமனுஷன் வாயிலே மென்று
பதறாமலிருக் கண்ணிலூதத் தானே
காருமடா யிருகண்ணில் குரு வாராது
கருத்தாக இம்முறையைத் கருதிக் கொள்ளே.

(இ-ள்.) அம்மை நோயில் கண்கள் பார்வையற்ற நிலைக்கு பாதிக்கப்படும். ஆதலால் கண்களில் அம்மைக்குரு வராமல் முன் தடுப்பதற்கு மருந்து கூறுகின்றேன். வைசூரி நோயில் காய்ச்சல் வரும்போது பூண்டுப்பல் ஒன்றை ஒருவர் தனது வாயில் மென்று நோயாளியின் இரு கண்களில் ஊத வேண்டும். இம்முறையைச் செய்யக் கண்களில் குருக்கள் வராமல் காப்பாற்றப்படும்.

## வாயில் ரெத்தங் கண்டால்

56. கொள்ளென்ற வைசூரியது கண்ட பேர்க்கு
கொடியதொரு வாய்தனில் உதிரங் கக்கும்
மள்ளென்ற நீர்தாரை யாலே தானும்
அழகான இரத்தமது காணுங் கண்டாய்
விள்ளென்ற இம்முறைக்கும் மருந்து தானே
விபரமாய்ச் சொல்லுகின்றேன் கேளு நன்றாய்
தள்ளென்ற பூநாகம் ஐந் தெடுத்து
தவறாமல் கழுவிநன்றாய் எடுத்துக் கொண்டே.

(இ-ள்.) அம்மை நோயில் வாயில் இரத்தம் கக்குவதும், நீர் தாரையில் இரத்தம் வருவதும் காணுமாகில் அதனை நீக்க

மருந்துகூறுகின்றேன். கேள், நாக்குப் பூச்சி ஐந்து எடுத்து மண் நீங்கக் கழுவி எடுத்துக் கொண்டு,

57. கொண்டதொரு நன்னாரி வேருங் கூட்டி
குறியாக நரம்புதள்ளிமேல் தோலி போக்கி
அண்டதொரு விராகன்ரெண்டாய் நிறுத்துக் கொண்டு
ஆழமாக முன்மருந்து கூடச் சேர்த்து
முண்டதொரு மான்கொம்புச் சாந்து செய்து
முறைமையாய்க் கலங்கொம்பு தண்ணீர் விட்டு
விண்டதொரு மருந்தெல்லாம் சேர்த்துதானே
விபரமாய்க் கொண்டிடவே உதிரம் போமே.

(இ-ள்.) நன்னாரி வேரை உள் நரம்பு நீக்கி, மேல் தோலையும் சீவி எடுத்து இரண்டு விராகனெடை நிறுத்தெடுத்துக் கொள்ளவும். முன் சொன்ன நாக்குப் பூச்சியையும் நன்னாரி வேர்ப்பட்டையையும் நன்கு அரைத்துக் கொண்டு அதனுடன் இழைத்து எடுத்த மான்கொம்பு சாந்தும் கூட்டி, மான் கொம்புப் பொடி ஊறிய தண்ணீருடன் கலந்து கொண்டிட உதிரம் தீரும்.

58. போமென்ற உதிரமது போகும் நன்றாய்
புகழாக மூன்றுதிங்கள் கொண்டால் தீரும்.
காமென்ற சன்னியது கடலில் புக்கும்
அடங்காத தோஷமது கருதி யோடும்
தாமென்ற கிராந்தினது வெளியிற் காணும்
சாதகமா யிறங்கியது சாந்த மாகும்
மாமென்ற இம்மருந்தை யார்க்குஞ் சொன்னோம்
அழகான சித்தருக்கு சொன்னேன் கண்டீர்

(இ-ள்.) மேற்சொன்ன முறை மருந்தை மூன்று திங்கள் கொள்ள உதிரம் தீரும். சன்னி நோய் நீங்கும். நீங்காத முத்தோஷங்களும் நீங்கும். உடல் வெதுப்புத் தணியும். அம்மை நோய் தணிந்து சாந்தமாகும்.

59. கண்டீரே வைசூரயது சூலைக் கட்டில்
கணமாக அவிழ்தமென்று சொல்லக் கேளு
தெண்டிரையில் பழங்கூரை வைக்கல் சேர்த்து
திறமான வேப்பிலையுங் கூடக் கூட்டி
மண்டியே அவித்தெடுத்திட்டு வைத்துக் கட்ட
மகவான சூலையது வாங்கிப் போகும்
பண்டிதரே இந்தமுறை வேது விட்டு
பரிவாக நவதினத்திற் தீருந் தானே.

(இ-ள்.) அம்மை நோயில் சூலைக் கட்டு இருப்பின் மருந்து கூறுகின்றேன். பழங் கூரை வைக்கோலையும், வேப்பிலையும் ஒன்று சேர்த்து அவித்து எடுத்து சூலை கண்ட இடத்தில் வைத்துக் கட்டத் தீரும். இம்முறையை ஒன்பது தினங்கள் செய்யவும்.

## சூலைக் கட்டு

60. தானென்ற வேதுவொன்று சொல்லக் கேளு
தவறாமல் நினைவாகக் கேளு நன்றாய்
வானென்ற வட்டமென்ற துத்தி தானும்
மகிழ்வாக சமூலமது வேதாய வைத்து
நானென்று வொத்திட்டு வோது வார்கள்
நாளுமொரு பதிமூன்றில் சூலை வாங்கும்
மானென்ற விழியணங்கே இந்தப் போர்க்கு
மகிமையில்லாப் பேர்களுக்கு வுரைசெய் யாதே.

(இ-ள்.) வட்ட துத்தி சமூலத்தைக் கொண்டு வந்து இடித்து வேதாய் வைத்து (வேடுகட்டி) அதில் வைத்து அவித்து சூலை கண்ட இடத்தில் ஒத்த வேண்டும். பதிமூன்று தினங்கள் செய்தல் வேண்டும். சூலை நீங்கும்.

## புண் ஆறுவதற்கு

61. செய்யாத வைசூரிப்புண் ஆறா விட்டால்
செயமாக மருந்தொன்று சொல்லக் கேளு
கையாற நெத்தான தேங்காய் தன்னை
கணமாகத் திருகியே பூவை வாங்கி

அய்யான புளியவிரை மேல்தோல் வாங்கி
அழகாகப் பொடிசெய்து அ தனைப் பூவிற்
மெய்யாக பிசைந்துபிழி தைலம் வீழும்
மேவியே இத்தயிலம் புண்ணில் பூசே.

(இ-ள்.) வைசூரி நோயில் ஆறாத புண்களுக்கு மருந்து கூறுகின்றேன். முற்றிய தேங்காயைத் திருகி பூவை எடுத்து அதனில் புளிய விரை மேல் தோலைப் பொடி செய்து தூவிப் பிசைந்து பிழிந்தெடுத்த தைலத்தை புண்களில் பூசத் தீரும்.

62. பூசவே புண்ணாறும் இதனை நன்றாய்
புகழான வீக்கமது பிறண்டே போகும்
அநேகமாய் வைசூரியது சரிந்தேழா நாள்
நினைவாக ஆரோக்கிய ஸ்நானஞ் செய்து
வாசமாய் சொல்லுகிறோம் நன்றாய் கேளு
வகையான பருத்திப்பிஞ் சத்திப் பிஞ்சும்
பாகமாஞ் சாதிக்காய் சீரகமுங் கூட்டி
பரிவாக மோரிலரைத் துள்ளே கொள்ளே.

(இ-ள்.) புண்களில் வீசுகின்ற நாற்றம் நீங்கிப் புண்கள் ஆறும். வைசூரி நோய் குறைந்த ஏழாவது நாள் ஸ்நானம் செய்யவும். பருத்திப் பிஞ்சு, அத்தி பிஞ்சு, சாதிக்காய், சீரகம் இவைகளை மோரில் அரைத்து உள்ளுக்குக் கொடுக்க உள் இரணங்கள் தீரும்

63. கொள்ளடா வேப்பிலையும் மஞ்சள் தானும்
குணமாக மூதண்டம் கூடச் சேர்த்து
விள்ளடா மோர்தனில ரைத்துக் கொண்டு
மேலாக சிரசுக்குத் தேய்த்து தானே
நள்ளடா அடலெல்லாம் நலுங்கே யிட்டு
நன்றாகக் குளிர்ச்சி சலம் சொரி வாயப்பா
தள்ளடா இப்படியே மூன்று முறையப்பா
தயவாக ஒன்றைவிட்டு ஓர்நாள் மூழ்கே.

(இ-ள்.) வேப்பிலை மஞ்சள் (மூதண்டம்) அறுகம்புல் மூன்றையும் வெண்ணெய் போல் மோரில் அரைத்துக் கொண்டு சிரசில் தேய்த்து உடம்பிலும் பூசி வைத்திருந்து குளிர்ந்த தண்ணீரில் ஸ்நானம் செய்விக்கவும். இவ்வாறு ஒன்று விட்டு ஒருநாள் மூழ்விக்கவும்.

64. மூழ்கியபின் வேப்பிலையும் மஞ்சள்தானும்
 முதியாமல ரைத்துடனே புண்ணில் பூச
 ஆழ்கியதோர் தயிர்தேய்த்துத் தண்ணீர் வாரு
 அடவாக ஒன்றைவிட்டு ஓர்நாள் வாரு
 துழிகியபின் ஆவாரையிலை துவைத்து
 தயவாக ஒன்றைவிட்டு ஓர்நாள் மூழ்கு
 பாழ்கியதோர் விளக்கெண்ணெய் தேய்த்து நன்றாய்
 பரிவாக உச்சியிலரைப் பிட்டு மூழ்கே.

(இ-ள்.). பின்னர் வேப்பிலை, மஞ்சள் இவ்விரண்டையும் அரைத்துப் புண்ணில் பூசவும். தயிர் தேய்த்து தண்ணீர் வார்க்கவும்.இவ்வாறு ஒன்றை விட்டு ஒரு நாள்ஸ்நானம் செய்விக்கவும். பின் விளக்கெண்ணெய் தேய்த்து சிரசில் அரைப்பிட்டு தேய்த்து ஸ்நானம் செய்விக்கவும்.

65. மூழ்கியபின் நீர்மோருஞ் சாதம் கொள்ளு
 முசியாம லீருள்ளி கூட்டிஉண்ணு
 ஆழ்கியபின் நல்லநாள் செய்நாள் தொட்டு
 அடவாக இப்படியே யசனம் கொள்ளு
 தழகியபின் தேகமது பிலக்குந் தானே
 தயவாக அசனமது நன்றாய்க் கொள்ளு
 மழகியபின் தேகமது பிலத்துத் தானே
 மன்மதன் போல்தேகமது குளிர்ச்சி யாமே.

(இ-ள்.) பின்னர் நீர் மோருஞ் சாதமும் கொள்ளவும். வெங்காயம் சேர்த்துண்ணலாம். நல்ல உடல் நிலை வரும் வரை இவ்வாறு உணவு கொள்ளுதல் நன்று. உடல் பலம் பெற்ற பின்

வழக்கமான உணவைக் கொள்ள உடல் பலம் பெற்று மன்மதன் போல் குளிர்ச்சியான தேகத்தைப் பெறுவான்.

குறிப்பு அசனம் - சோறு உண்ணல்

66. ஆமென்ற வைசூரியது வந்த பேர்க்கு
அழகாகச் சொல்லுகிறேன் விபரங் கேளு
தாமென்ற ஆறுதிங்கள் செல்ல மட்டும்
சரீரத்தில் பிலனதுவும் நன்றாகாது
வாமென்ற இதுக்குள்ளே ரோகம் வந்தால்
மகத்தான மருந்ததுவும் லகுவாய்ச் செய்யே
தேமென்ற கடுங்காலம் அவிழ்தஞ் செய்தால்
தேகத்தில் பொல்லாப்பூ சேருங்காணே.

(இ-ள்.) வைசூரிகண்ட ஆறுமாதம் வரை உடம்பு பலம் பெறாமல் இருப்பதுவும் உண்டு. இதற்கிடையில் வியாதி காணுமாகில் லகுவான மருந்தைக் கொடுத்தல் வேண்டும். கடுங்காரமான மருந்துகளைக் கொடுத்தால் உடலுக்குக் கெடுதல் நேரும் என்பதனை உணர்க.

67. காணப்பா வைசூரியற்று தண்ணீர் விட்டால்
கனமான மருவுள்ளே வருவ தேது
தோணப்பா வைசூரியது கண்ட நாள் தொட்டு
துலக்கிய நாளொன்பதுவுங் குருவே காணும்
மாணப்பா குருகண்டவொன் பதாம் நாள்
அடவாக நீர்கொண்டு இறங்குங் கண்டீர்
நாணப்பா இளங்குருவில் தண்ணீர் விட்டால்
நலமாக மருஉள்ளே காணுந் தானே.

(இ-ள்.)அம்மை நோய் அற்று தலைமுழுக்கு செய்வித்தால் (மறுதளிப்பு) மீண்டும் அம்மை நோய் உள்ளும் புறமும் வராது. அம்மை கண்டதிலிருந்து ஒன்பது நாள் வரை அம்மைக் குரு தோன்றும். குரு தோன்றிய ஒன்பதாம்நாள் இறக்கம் காணும் இளங்குருக்கள் இருக்கும் போது தண்ணீர் விட்டால் மறுபடியும் குருக்கள் தோன்றி நோய் அதிகரிக்கும் என்பதாம்.

## சுரத்துக்குக் கியாழம்

68. தானென்ற மருமுள்ளே காணும் போது
களவாகச் சரீரத்தில் சுரமே காயும்
மாமென்ற உடலதிலேமரு முள்ளே காணும்
வளமாகப் புடைத்துமரு குருக்காணும்
பானென்ற பலவகையாய புண்ணே யாகும்
பரிவான சுரமதுவுஞ் சொல்லத் தானே
கடவுள்பதம் போற்றியே கேளு கேளு.

(இ-ள்.) மருக்கள் உள்ளே காணும் போது சுரம் காய்ந்து உட்புறத்தில் கண்ட மருக்கள் புடைத்து வெளியில் காணும் சில சமயங்களில் புண்ணாகி விடுவதும் உண்டு.பின்னர் சுரம் நிற்கும்.

69. கேளப்பா சுரமதுவுந் தீரவே தான்
கிருபையாக கியாழமது நன்றாய்ச் சொல்வேன்
வாளப்பா சாதிக்காய் வாழ்த்திடும் நறுக்கு மூலம்
கேளப்பா கிராம்புகூட சீரகமும் கூட்டிக் கொண்டு
நாளப்பா கியாழஞ்செய்து நலம்பெற யிறுத்து வாங்கே.

(இ-ள்.) சுரம் தீர கியாழம் கூறுகின்றேன். சாதிக்காய், திப்பிலி, மூலம், கிராம்பு, சீரகம் இவற்றின் கியாழம் செய்து வடிகட்டி

70. வாங்கிய கியாழந்தன்னில் வளர்நிம்பச் சாறுங் கூட்டி
யோங்கி யீருள்ளிச்சாறு முகந்துடன் சமமாய்க் கூட்டி
பாங்கியே சட்டிகாய்ந்து பரிவுடன் முரித்து வாங்கி
தீங்கில்லாத் தேனுஞ்சேர்த்து திறமுடன் உள்ளுக்கீயே.

(இ-ள்.) எடுத்த கியாழத்துடன் வேப்பம்பட்டைச் சாறும் வெங்காயச் சாறும் கூட்டி ஒரு சட்டியை அடுப்பில் காய வைத்து அதில் ஊற்றி முரித்து எடுத்து தேன் கலந்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

71. ஈந்திட சுரமுந்தீரும் இயல்புடன் இரணமுந் தீரும்
வாய்ந்திட மருந்துதானும் வகையுடன் இன்னங் கேளு
பாய்ந்திட சூடன்தானும் பகரிவட்டத் துத்திச் சாற்றில்
தேய்ந்திட மத்தித்தேதான் திருவிளக்கெண்ணெய் சேர்த்து
சாய்ந்திடு இரணத்திற்பூச சகலபுண் ஆறுந்தானே.

(இ-ள்.) கொடுத்திட அம்மை சுரம், இரணம் இவைகள் தீரும். இன்னொன்று, வட்டத் துத்தியிலைச் சாறறுடன் சூடனை மத்தித்து விளக்கெண்ணெயுடன் கலந்து இரணத்திற்கு மேல் பூச்சாக பூச இரணம் ஆறும்.

## மேதிக் கிடாரி சாணி

72. ஆறியுபுண் வைசூரிவந்து அடுத்திரு மன்றேநீதான்
கூறிய கிடாரிசாணி குறியதுபதி னொன்றுக்கு
தேறியே எடுத்துக்கொண்டு திறமதாய்ச் சீட்டி தன்னில்
பாறிய தண்ணீர்விட்டுப் பாகமாய் கரைத்து வையே.

(இ-ள்.) பதினாறு வகையான அம்மையின் நோயின் குறி குணங்களுக்கும் எருமைக் கிடாரியின் சாணியை எடுத்துவந்து ஒரு சட்டியில் தண்ணீர் விட்டுக் கரைத்து வைக்கவும்.

73. வைத்ததோர் தண்ணீர்தானும் வகைபட சாமஞ்சென்றால்
கயத்ததோர் தெளிவிறுத்து கன்மபெற வுள்ளேகொண்டு
மெய்த்ததோர் மருந்துக்கெல்லாம் மிகைபட வின்னஞ்சேர்த்து
டைய்த்ததோர் மருந்துசெய்தால் பலவைசூரி போமே.

(இ-ள்.) கரைத்து வைத்து தண்ணீரை ஒரு சாமம் சென்று தெளிவு இறுத்து உள்ளுக்குக் கொடுக்கவும். அம்மை நோய்க்குச் செய்யும் மருந்துகளுடன் சேர்த்து செய்யின் பலவிதமான வைசூரி நோய் நீங்கும்.

74. போமென்றால் தானேதோணும் புகழ்பட அன்றன்றைக்கு
தாமென்று புதியதாகச்செய்து தயவாக அருந்துவீராய்
வாமென்ற வைசூரிவந்து வளர்ஸ்நானம் செய்ய மட்டும்
போமென்ற தாகத்துக்கும் பொருந்திய மருந்திற்சேரே.

(இ-ள்.) தினம் தினம் புதியதாகச் செய்து அருந்துதல் வேண்டும். அம்மை நோய் வந்து பின் ஸ்நானம் செய்கின்ற நாள் வரைக்கும் தாகந்தணியவும் கொடுக்கலாம். மருந்துகளுடனும் சேர்க்கலாம்.

## பத்தியம்

75. சேருபத் தியத்தைக்கேளு திறமதாய் சாதஞ் செய்து
ஆருமே ஆறவைத்து அடவுடன் மிளகு நீருங்
காருமே வகையாய்ச் செய்துகனம்பெறக் கொள்ளுநன்றாய்
பாருமே வசூரிதானும் பரிவுடனி றங்கமட்டும்.

(இ-ள்.) சாதத்தைக் குழைவாய்ச் செய்து ஆறவைத்து, மிளகு சேர்த்த ரசம், போன்றவை சாதத்துடன் சேர்த்து உண்ணல் நன்றாம். வைசூரி நோய் இறங்கு மட்டும் இவ்வாறு பத்தியம் கொள்ளவும்.

76. பருவுடனிருந்து பண்டிதஞ் செய்து கொண்டு
நெரிவுடன் சரிந்தபின்பு நீர்மோருஞ் சாதங்கொள்ளு
சரிப்பட எலுமிச்சங்காய் சம்பளபுளி மோராமே
நெரிப்பட செய்துவந்தால் வைசூரிதான் போகுமே.

(இ-ள்.) இறங்கியவுடன் நீர்மோருஞ் சாதமும் கொள்ளலாம் . எலுமிச்சங்காய், பழம், புளி, மோர் இவைகள்

77. காமென்ற கறிவேம்போடு கயக்குளங் கெளுத்திவத்தல்
தாமென்ற குறவைவத்தல் தளர்ப்பாசிப் பயறுங்கூட்டு
வேமென்ற வெள்ளாட்டின் வத்தல் விவரமாய்
கூட்டிக்கொள்ளே.

(இ-ள்.) கறிவேப்பிலை, குளத்துக் கெளுத்திக்கருவாடு குறவை மீன் கருவாடு, பாசிப்பயறு முதலியவை கூட்டிக் கொள்ளலாம். வெள்ளாட்டு வத்தல் சேர்த்துக் கொள்ளவும்.

78. கூட்டலாங் காடையாகுங் குலாவுவெள் ளெலியுமாகும்
தாட்டலாம் உடும்புமாகும் நல்லஹூர் குருவி.யாகும்
வாட்டலாம் வாழைக்கச்சல் வ ளரத்திப் பிஞ்சாகும்
தேட்டலாம் சீனியான கற்கண்டு தேனுமாமே.

(இ-ள்.) காடை. வெள்ளெலி, உடும்பு, ஊர்க்குருவி, வாழைக்கச்சல், அத்திப்பிஞ்சு இவைகளை சேர்க்கலாம். கற்கண்டு, தேன் இவைகள் ஆகும்.

## அவபத்தியம்

79. ஆடுமென்ற இவைஎல்லாம் கூட்டி யுண்ணு
அழகான மற்றொன்று ஆகாதப்பா
வேமென்ற ஆகாத வஸ்து வெல்லாம்
விபரமாய்ச் சொல்லுகிறேன் கேளு நன்றாய்
தாமென்ற மாங்காயுந் தேங்கா யுந்தான்
கருவான இலுப்பைஎண்ணை நல்லெண்ணை ஆகா
வாமென்ற சேர்த்தாவி நெல்லாவியாகா
வளமான கொட்டை எண்ணை ஆவியாகா.

(இ-ள்.) மேற்கண்ட எல்லாம் கூட்டி உண்ணலாம். ஆகாத வஸ்துக்களை கூறுகின்றேன். மாங்காய், தேங்காய், இலுப்பை எண்ணெய், நல்லெண்ணெய் ஆவி, நெல் ஆவி, முத்துக்கொட்டை எண்ணெய் ஆவி இவைகள் ஆகா.

80. ஆகாது கந்தங்கள் பதார்த் தங்கள் வாடை
அழகான புண்ணாக்கு மாகாதப்பா
தேங்காய் கேள்முதுகனி வாடை பட்டால்
தொடுகுறியால் குருச்சூலை தோனும் பாரு
வேகமாய்க் கடுப்பெடுத்துக் கரடு கட்டி
விபரமாய்க் கடுப்பெடுத்துக் கரடு கட்டி
தூகமாய் குணங்கண்டு அவிழ்தஞ் செய்தால்
தப்பாது நோயதுவுஞ் சாந்தமாமே.

(இ-ள்.) வாசனையுள்ள பதார்த்தங்கள் ஆகாது. புண்ணாக்கு ஆகாது. தேங்காய் முதிர்ந்த பழங்களின் வாடை பட்டால் சூலை நோய் தோன்றும். உடல் கடுத்து, கரடு கட்டி, கையும் காலும் முடங்கும். நோயின் குணம் கண்டு மருந்து கொடுத்தால் நோய் சாந்தமாகும்.

81. சாந்தமென்ற விழியதனிற் பூவே வந்தால்
தப்பாது மருந்ததுவுஞ் சாத்தக் கேளாய்
யேந்தலென்ற பனங்குருதேதை நறுக்கித்தானே
இதமாகக் கண்ணிலே பிழியத் தீரும்
பாந்தமென்ற முருங்கைப்பூ நெருஞ்சில் பூவும்
பரிவான நந்தியாவட்டம் பூவும் கூட்டு
சேர்ந்த சீரகங்கூட்டிக் கண்ணில் வார்க்க
திறமான பூவதுவுந் தீருந்தானே.

(இ-ள்.) விழியில் பூ விழுந்தால், பனங் குருத்தை நறுக்கி, கண்களில் பிழிந்து விட குணமாகும். முருங்கைப்பூ, நெருஞ்சில் பூ, நந்தியாவட்டம் பூ இவைகளை ஒன்று சேர்த்துச் சிறிது சீரகமும் சேர்த்து நசுக்கிக் கண்களில் பிழிந்து விடத்தீரும்.

82. தானென்ற வைசூரியது குணமுஞ் சொன்னேன்
தருவான லட்சணமும் அவிழ்தஞ் சொன்னேன்
தேனென்ற சாத்தியமும் அசாத் தியமுஞ் சொன்னேன்
திறமான பத்தியமும் பாகஞ் சொன்னேன்
வானென்ற அன்னமது விபரஞ் சொன்னேன்
வளமாக இந்தமுறை மார்க்க மெல்லாம்
கானென்ற சித்தருக்கு முலகத் தோர்க்கும்
கருத்தாகச் சொல்லிவிட்டேன் வைசூரி முற்றே.

தட்சிணாமூர்த்தி சுவாமி அவர்கள் பாதமே துணை.

ஓம் நமசிவாய குருவே துணை.

ஸ்ரீ ராமஜெயம்

ஹரி ஓம் நன்றாகக் குரு வாழ்க குருவே துணை.